சட்டமன்றத்தில் அண்ணா

வெல்க தமிழ்!

மணிவாசகர் பதிப்பகம்
வழங்கும்
நூற்கொடை

2-2-2002

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம்
படிப்பகம், நூலகம், ஆய்வு நிறுவனங்கள்
முதலிய அமைப்புக்களுக்கு, ஆண்டுதோறும்
அன்பளிப்பாக நூல்வழங்கும் திட்டத்தில்

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

நடத்தும்

மறைமலை அடிகள் நூலகத்திற்கு

வழங்கிய நூல் எண்ணிக்கை 500

மணிவாசகர் பதிப்பகம்
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

DCA.275

சட்டமன்றத்தில் அண்ணா

விடுதலைப் பொன்விழா ஆண்டு வெளியீடு

51138

ந. முடிகோபதி



மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு. பாரிமுனை.
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 1998
திருவள்ளுவர் ஆண்டு : 2029
விலை : ரூ. 60-00
மணிவாசகர் வெளியீட்டு எண் : 629

பதிப்பாசிரியர்

முனைவர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

பல்கலைக்கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினர்.

பல பல்கலைக்கழகங்களில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் சிறப்பாசிரியர்.

பத்து நூல்களின் ஆசிரியர்.

இவர் எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.

குன்றக்குடி அடிகளார் தமிழவேள் என்னும் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

பதிப்புச்செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம் : 30069 சென்னை : 5361039
மதுரை : 622853 கோயமுத்தூர் : 397155
திருச்சி : 706450

ஒளி அச்சு : லட்சுமி லேசர், சென்னை – 600 108.
அச்சிட்டோர் : பீகே ஆப்செட் பிரஸ், சென்னை – 600 013.

முன்னுரை

அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 1957ஆம் ஆண்டும், தமிழக முதலமைச்சராக, மேலவை உறுப்பினராக 1967ஆம் ஆண்டும் விளங்கியபோது சட்டமன்றச் செயலகத்தில் பணிபுரிந்த எனக்கு அவரது சட்டமன்றப் பணிகளைக் கூர்ந்து கவனிக்கும் பெரும்பேறு கிடைத்தது.

மற்றதுறைகளில் விற்பன்னராக விளங்கிய அண்ணா அவர்கள், இந்திய அரசியலமைப்புச் சட்ட நுணுக்கங்களையும் சட்டமன்ற விதிகளையும் மரபுகளையும், கண்ணியத்தையும் சிறப்புரிமைகளையும் தெளிந்துணர்ந்தவர். அவைகளைத் தனது வாதத் திறமை - மனித நேயத்துடன் அவையில் விளக்கிய பாங்கு 'பாராளுமன்றத்தின் தாய்' என்று கருதப்படும் இங்கிலாந்து காமன்ஸ் சபையின் பெருமை மிகு பாராளுமன்ற வாதிகளுக்கொப்ப இந்திய சட்டமன்ற வரலாற்றில் தனியிடத்தைப் பெற்றவராவார்.

இக்கோணத்திலிருந்து அண்ணா அவர்களைப் புதிய பார்வையுடன் நூல் வடிக்க வேண்டுமென்ற அவா பல ஆண்டுகளாக என்னுள்ளத்தை வருடிக் கொண்டிருந்தது.

எனது முதல் நூலான "தமிழ்நாடு சட்டமன்ற மேலவை" குறித்து மணிவாசகர் பதிப்பகப் பதிப்பாசிரியர் டாக்டர் மெய்யப்பனார் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது சட்டமன்றத்தில் அண்ணா பணியாற்றிய விதம் குறித்து நூல் எழுத ஆலோசனை வழங்கிய போது என்னுடைய உள்ளத்தில் நெடுநாளாக நெருடிக் கொண்டிருந்த உள்ளக் கிடக்கைக்கு நூல் வடிவம் கொடுக்கத் தூண்டுதலாக அமைந்தது. அப்பெரியவருக்கு எனது உளமார்ந்த நன்றி.

இப்புத்தகம் எழுதத் துணை புரியும் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், பத்திரிக்கைச் செய்திகள் குறிப்புப் புத்தகங்கள் தந்துதவிய அண்ணா அறிவாலய நூலகர் சி.கே. சுந்தரராசன், சட்டமன்றப் பேரவைச் செயலக சார்புச் செயலாளர் அனிஸ் அகமது, பிரிவு அலுவலர் ருத்ரமணி, நூலகர் வி. அசோக் ஆகியோருக்கு என் நன்றி.

எனது அனைத்து முயற்சிக்கும் ஆதரவு தந்து எனக்கு உறுதுணையாய் செயல்படும் எனது அன்பு நிறை 'தம்பி' பா. நாடிமுத்து, எனது மருமகள் ந. பவானி, எனது மகள் மு. மஞ்சுளா ஆகியோருக்கு எனது பாராட்டுதல்கள்.

ந. முடிகோபதி



சமகாலத்து அரசியல் ஆவணம்

பதிப்புச்செம்மல், தமிழவேள் ச. மெய்யப்பன்

மணிவாசகர் பதிப்பகம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை வரலாற்றை மிகச் சிறந்த ஆராய்ச்சி நூலாக வெளியிட்டது. அது வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது. அந்நூல் தமிழக அரசின் முதல் பரிசைப் பெற்றது. ஆய்வாளர்கள், திறனாய்வாளர்களின் சிறந்த மதிப்புரைகளைப் பெற்றது. அந்த வரிசையில் அண்ணாவின் சட்டசபைப் பொழிவுகளை இரண்டு தொகுதிகளாக 350 பக்க அளவில் வெளியிட்டது. அரசியல் ஆர்வமுள்ளோர் விரும்பி படித்து மகிழ்கின்றனர். இந்த வரிசையில் சட்டமன்றத்தில் அண்ணா என்னும் மிகச் சிறந்த ஆய்வு நூல் தொடர்கிறது. 300 பக்க அளவில் முகிழ்க்கிறது. அறிஞர் அண்ணாவின் அறிவாற்றலை, ஆளுமையை, சொல்லாற்றலை விளக்கும் சிறந்த ஆவணமாகத் திகழ்கிறது.

எதிர்க்கட்சியாக இருந்த காலத்தும் ஆளும் கட்சியாக வீற்றிருந்த காலத்தும் அண்ணா காட்டிய அடக்கமும் மனிதநேயமும் இந்நூலில் ஓவியமாக்கப்படுகிறது. அண்ணா பண்பட்ட அரசியல் அறிஞர் என்பதற்கு இந்நூல் கட்டியங்கூறுகிறது. கூர்ந்து நோக்குகையில் ஒரு நூற்றாண்டுத் தமிழர் எழுச்சியினை அண்ணா உள்வாங்கிக் கொண்டு உரையாற்றியுள்ளார் என்பதனை இந்தச் செப்பேடு செப்புகிறது.

தமிழ்நாடு பெயர்மாற்றம், இந்தி எதிர்ப்பு, தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பாடமொழியாதல், திராவிட இயக்கம், பெரியார் ஆற்றிய பெரும்பணிகள், ஆளுநர் பதவி, தமிழகத்தின் நிதிநிலை, தமிழக வேளாண்மை, கல்வி முன்னேற்றம், தாழ்த்தப்பட்டோர் நிலை, மதுவிலக்கு, பேருந்து நாட்டுடைமையாதல், எதிர்க்கட்சிகள், ஜனநாயகப் பண்பு முதலிய அடிப்படை பிரச்சினைகள் குறித்து அண்ணா ஆற்றிய பேருரைகளும் மிக நுட்பமாக மதிப்பீடு செய்யப்பெற்றுள்ளன. சட்டமன்றத்தில் அண்ணாவின் நுழைவு, முதல் உரை, இறுதி உரை அனைத்தும் வரிசைப்படி வகைப்படுத்தி ஆராயப்பெற்றுள்ளது.

அண்ணா சிந்தனையாளராகவும், இதழாசிரியராகவும் திகழ்ந்தவராதலால் அவர் உரையில் ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்திருக்கும். சொல்வதில் ஒழுங்கு அமைந்திருக்கும். கருத்து வெளிப்பாட்டில் கவிதை நயம் பொங்கும். கருத்துக்கள் கங்கையைப்போல், காவிரியைப்போல் ஊற்றெடுக்கும். அண்ணா பயன்படுத்திய உவமைகளும் உருவகங்களும் அவரின் பேரறிவுத் திறத்தைப் புலப்படுத்தும். அவர் எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் சாலச்சிறந்தவை. அவர் கூறிய உவமைகள் கருத்தை புலப்படுத்துவதுடன் கவிதை அழகோடு ஒளிவீசுவன. தமிழகச் சட்டமன்றமே அவர் காலத்தில் கருத்தாழம் மிக்க அறிவார்ந்த இலக்கியப் பேரவையாக அறிவொளி பரப்பியது என்பதை இந்நூலாசிரியர் நுண்ணாய்வு செய்து நயம்படத் தெரிவிக்கிறார். இந்தியா கண்ட சட்டமன்ற உறுப்பினர்களுள் முதலமைச்சர்களுள் அண்ணாவுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு என்பதை சட்டமன்றத்தில் அண்ணா என்னும் இந்நூல் அருதியிட்டு உறுதி செய்கிறது. எழுப்பப்பட்ட வினாக்கள் அனைத்திற்கும் ஏற்ற விடைதருவதோடு வினா எழுப்பியவரைப் புண்படுத்தாது அண்ணா ஆற்றிய பதிலுரைகள், பண்புரைகள் பார் போற்றும் பொன்னுரைகள். தமிழைக் கையாள்வதில் அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான் என்பதனை எந்தவித வினாவும் எழுப்பாமல் சட்டசபை முழுமனதோடு ஏற்றுக்கொண்டது என்பது வரலாற்று உண்மை.

அண்ணாவின் இத்தனைப் பெருமைக்கும் அவர்தம் கல்விப் பரப்பும் நூலறிவும், நுண்ணறிவும், எழுத்துமொழியும், திறனும், மொழி ஆற்றலும், முற்போக்குச் சிந்தனையும், தொலைநோக்கும், துவளாத கொள்கைப் பிடிப்பும், தளராத உறுதியும், தகைசான்ற மாண்புகளுமே அடிப்படை என்பதனை அண்ணாவின் ஒவ்வொரு உரையும் உணர்த்துகின்றன.

இந்த அரசியல் ஆவணத்தை மிகச் சிறப்பாக எழுதி உதவிய நண்பர் ந. முடிகோபதி வரலாறு உணர்வு உடையவர்கள் செய்தி தொகுப்பதில் வல்லவர்கள். அதனை வகைப்படுத்தி மதிப்பீடு செய்வதில் தனித்திறம் சான்றவர்கள். ஆரவாரமில்லாத அமைதியாக அரும்பணியாற்றும் ஆற்றலாளர் இவர் என்பதை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நூலும், சட்டமன்றத்தில் அண்ணா என்ற இந்த நூலும் இவரை இனங்காட்டுகின்றன. ஆங்கிலத்தைப்போல் அரசியல் விளக்க நூல்கள் தமிழில் வருவதில்லை என்னும் வசைநீங்க இவ்வகை நூல்களை முடிகோபதி தமிழுக்கு முடிமணியாகத் தருகிறார். ஆசிரியர் பண்பில் சிறந்த நனிநாகரிகர். அன்பே உருவான ஆற்றலாளர். அவர்தம் சீரிய முயற்சிகள் சிறந்தோங்க வாழ்த்துகிறேன்.

ந. முடிகோபதி, வேளாண் குடும்பத்தைச் சார்ந்த காட்டூர் வே.மு. நடேச முதலியார் - குப்பம்மாள் தம்பதியருக்கு ஆறாவது மகனாகப் பிறந்தவர். எம்.ஏ. பட்டதாரியான இவர் சட்டமன்ற மேலவை - பேரவைச் செயலகங்களில் 39 ஆண்டுகாலம் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நூலாசிரியர் எவரும் இதுவரை காணாத அண்ணாவின் சட்டமன்றப் பணிகள் பற்றி - ஜனநாயகப் பணிகள் குறித்து - இந்நூலில் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியரின் முதல் நூலான 'தமிழ்நாடு சட்டமன்ற மேலவை', பலத்தலைவர்களாலும், கல்வியாளர்களாலும் பாராட்டு பெற்றது. குறிப்பாக தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் "மேலவையின் கலைக்களஞ்சியம்" எனப் புகழப்பெற்ற நூலாகும்.

நுழைவாயில்

மக்களாட்சி என்பது மக்களுக்காக மக்களால் அமைக்கப்பட்ட மக்கள் அரசு என்று கூறியவரும், துப்பாக்கி தோட்டாவைவிட ஓட்டுச்சீட்டே வலிமையானது என்று பறைசாற்றியவரும், அமெரிக்க நாட்டு அதிபராக விளங்கியவருமான ஆப்ரகாம் லிங்கன் 1809 ஆம் ஆண்டு பிறந்தார். மக்களாட்சித் தத்துவத்தின் ஆணிவேரான வாக்குச் சீட்டில் முழு நம்பிக்கை கொண்டவரும், "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற குறிக்கோளை மக்களிடத்திலே எடுத்து வைத்தவரும், 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' எனும் தாரக மந்திரங்களை ஓலித்து வந்தவரும், சட்டமன்றத்தின் கண்ணியம் காப்பாற்றப்படுவதில்தான் நாட்டின் ஜனநாயகம் பெருமை பெறும் என்பதை உணர்த்தியவரும், சட்ட மன்றத்தின் மூலம் பணியாற்றுவது தான் மக்களாட்சித் தத்துவத்தைப் பேணிக்காக்க வழிவகுக்கும் என்று கூறிய வருமான பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ஆப்ரகாம் லிங்கன் பிறந்து சரியாக நூறாண்டுகளுக்குப் பிறகு 1909 ஆம் ஆண்டு பிறந்தார். இது ஒரு வியத்தகு ஒற்றுமை அல்லவா?

மேலும், இந்தியத் திருநாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்காலத்திலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் இருபது ஆண்டுகள் இடைவெளியில் இந்தியாவில் மூப்பெரும் சமூக விஞ்ஞானிகள் தோன்றினர். இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியடிகள் 1869-ஆம் ஆண்டும், ஆசிய ஜோதி என அழைக்கப்பட்ட பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் 1889ஆம் ஆண்டும், அறிஞர் 'அண்ணா' என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட சி.என். அண்ணாதுரை 1909ஆம் ஆண்டும் பிறந்தனர். இது ஒரு அதிசயம் அல்லவா? அவ்வாண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள், பல்லவத் தலைநகராக விளங்கிய காஞ்சிபுரத்தில் நடராஜ முதலியாருக்கும் பங்காரு அம்மாளுக்கும் மகனாக அண்ணா பிறந்தார். அவரது 'தொத்தா' ராஜாமணி அம்மையாரால் சிராட்டி, பாராட்டி வளர்க்கப்பட்டார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்று, தலைசிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் அருவிபோல் சொற்பொழிவு ஆற்றுவது மட்டுமல்ல, தெளிந்த நீரோடை போன்று எழுதுவதிலும் சிறந்து விளங்கினார்.

பெரியார் பாசறையில் இணைந்து வீரத் தளபதியாகத் திறமையுடன் திகழ்ந்தார். கல்கி வார இதழ் ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் சொற்பொழிவாற்ற அண்ணாவும் வேறு சிலரும் அழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் சில பேச்சாளர்கள் வரவில்லை. அந்தக் கூட்டத்தில் பிறர் பேச வேண்டிய தலைப்பையும், தாம் பேச வேண்டிய தலைப்பையும் எடுத்துக் கொண்டு முன் குறிப்பு ஏதுமின்றி, தங்கு தடையில்லாமல் ஒவ்வொரு தலைப்பிலும் அண்ணா அழகாகப் பேசினார். அவரது ஆற்றலைக் கண்ட கல்கி அவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் 'அறிஞர்' எனும் சிறப்புப் பட்டத்தை அளித்து மகிழ்ந்தார். அன்று முதல் அண்ணா 'அறிஞர் அண்ணா' எனும் சிறப்பு அடை மொழியுடன் பொதுமக்களால் அன்போடு அழைக்கப்பட்டார்.

அண்ணா உணர்வாலும் செயலாலும் ஜனநாயக வாதியாகத் திகழ்ந்தார். அவர் வெற்றி பல பெற்று பெருமை பெற்றதற்குக் காரணம் அவரது 'நா'வும், 'பேனா'வும் தான் என்றால் மிகையாகாது.

1949ஆம் ஆண்டு பெரியார் பிறந்த நாளில், திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார். 1952ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடவில்லை.

1957ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டு சட்டமன்றப் பேரவையில் 15 இடங்களைப் பெற்றது. அண்ணா காஞ்சீபுரம் தொகுதியில் இருந்து பேரவைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பேரவையில் எதிர்க் கட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து பணியாற்றினார். பேரவை விவாதங்களில் பங்கு கொண்டு நாட்டு மக்களுக்கு அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை ஆட்சியாளர் களுக்கு உணர்த்தினார்.

அண்ணா எப்போதும் பேரவை மண்டபத்திற்கு பேரவைத் தலைவரின் இடப்புறமுள்ள வாயில் வழியாகவே உள்ளே நுழைவார். உடனே அனைவரது பார்வையும், பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் பார்வை - அவையில் உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர் பார்வை - அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்கள் பார்வை - அவர்களையும் அறியாமலே அவர் பக்கம் தான் நிலைத்து நிற்கும். அப்படிப்பட்ட வசீகரத் தன்மை படைத்தவர் அறிஞர் அண்ணா. அவரது குள்ளமான உருவம், பட்டன்களை மேலும் கீழுமாகப் போட்டும் போடப்படாமலும் அணிந்திருக்கும் முழுக்கை வெள்ளைச் சட்டை, கருப்பு - சிகப்பு கரை போட்ட கைத்தறிவேட்டி, அதே நிறத்தில் பாதம் வரை தொங்கிய நீண்டமேல் அங்கி, வலது பக்கம் வகிடு எடுத்து வாரப்பட்டும் படாதமுடி, அருள் சொறியும் அழகிய கண்களின் கம்பீரப் பார்வை, வெற்றிலைப் பாக்கு குதப்பிய வாய், சட்டைப்பை நிறைய உரையுடன் கூடிய மூக்குக் கண்ணாடி, வெற்றிலை பாக்கு பொடி டப்பா இத்தியாதியுடன் - இவர்தான் அண்ணா என வர்ணிக்கலாம்.

அவர் அவையினுள்ளே நுழைந்து, அவரது இடத்தில் வந்து நின்று, அவைத் தலைவரை நோக்கி தனது உளப்பூர்வமான வணக்கத்தை முக பாவத்துடன் தெரிவித்து அமர்வார்.

அண்ணா பொடி போடும் பழக்கம் உடையவர். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, அதை அவர் மூக்கருகே கொண்டு போகும் முன்பாகவே, அவரது துண்டு முகத்தருகே செல்லும் --முகத்தைத் துடைப்பது போல் பொடியை உறிஞ்சிடுவார். அதனால் அவரது பேச்சு தடைபடாது. தங்கு தடையின்றி நீரோட்டம் போலச் சென்று கொண்டிருக்கும்.

அவை அறிந்து பேசுவார். சுவையுடன் ரசிக்கலாம். பேச்சிலே சகோதர பாச உணர்ச்சி, குறிப்பாக மனித நேயம்

வெளிப்படும். மனம் நெகிழலாம். உறுப்பினராக இருந்த நேரத்தில் தமது கருத்துக்களை விரிவாகவும் விளக்கமாவும் கூறுவார். தேவையான நேரத்தில் மட்டுமே இடையீடு இருக்கும். சட்ட சபையிலும் மேடையில் பேசுவது போன்றே பேசுவார். இந்த முறைதான் அவை உறுப்பினர்கள் உள்ளத்தைத் தொட்டதாக அவரே கூறுவார்.

பேச்சைத் தொகுத்து வரன்முறைப் படுத்தி மிக நேர்த்தியாகப் பேசுவார். அடுக்கு மொழி, எதுகை மோனை அவரது தமிழ் நடையில் துள்ளிவந்து களிநடம் புரியும். ஆங்கிலத்திலும் அப்படியே. நிறைய உதாரணங்களைக் காட்டியும் மேலைநாட்டு - நம்நாட்டு அறிஞர் பெருமக்கள், அரசியல் விற்பன்னர்கள் ஆகியோரின் உரைகளிலிருந்து மேற்கோள் காட்டியும், தமிழ் இலக்கியங்களிலிருந்தும், - புராண இதிகாசங்களிலிருந்தும் கருத்துரைகளை அவர் எடுத்தாளும் பாங்கு கேட்போர் அனைவரையும் அவர்பால் ஈர்த்துக் கொள்ளும்.

சொற்பொழிவுகள் எளிய நடையில் இருக்கும். மிகமிகச் சாதாரண வார்த்தைகளையே -- மக்கள் வழக்கத்திலுள்ள வார்த்தைகளையே பயன்படுத்துவார். அதே நேரத்தில் இடைஇடையே இலக்கிய நடையும், கற்பனை வளமும் ஊடுருவிப் பாய்ந்து அவரது நடையை மேன்மைப்படுத்தி விடும். ஜனநாயகம் பற்றிப் பேசுவார். அவையின் கண்ணியம் பற்றியும், நடைமுறை விதிகள் குறித்தும், அதற்கான முன்னுதாரணங்களையும், அவையின் சிறப்புரிமைகள் மரபுகள் வழக்காறுகள் குறித்தும், சிலபல புரியாத விஷயங்களை யெல்லாம் கூட தமது அழகு நடையில் எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கூறுவார்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேரவைக்குப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். பின்னர் அதே ஆண்டு பேரவைத் தொகுதியிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநிலங்களவையில் 'நான் திராவிடன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்' என்றுகூறி, திராவிட நாடு தனி நாடாக வேண்டுமென்பதில் அக்கறையுடன் வாதங்கள் பல எடுத்து வைத்தார். மாநிலங்கள் அவையில் ஒரு முறை

பேசும் பொழுது "எங்கள் கழகத்தைச் சட்டத்தின் துணை கொண்டு அழிக்க முற்படாமல் இருந்தால் அடுத்து நடைபெறவிருக்கும் தேர்தலில் தமிழ்நாட்டில் நாங்கள்தான் ஆட்சியை அமைப்போம்" என்று முழங்கினார். காங்கிரசின் பலமே எதிர்க்கட்சிகளின் பலவீனங்களில்தான் இருக்கிறது என்று விளக்கினார்.

தொடர்ந்து 1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியினர் அனைவரையும் ஓரணியில் திரட்டி காங்கிரசுக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட வைத்தார். அந்தத் தேர்தலில் காங்கிரஸ் 49 இடங்களே பெற்று ஆட்சிப் பொறுப்பை இழந்தது. மற்ற இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைச் கட்சிகள் வெற்றி பெற்றன. திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற இடங்கள் 137 ஆகும்.

கழகம், அண்ணாவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. ஆளுநர் உஜ்ஜல்சிங், அண்ணா அவர்களை மந்திரி சபை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனை ஏற்று அண்ணா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட அமைச்சரவை 6-3-1967 அன்று ராஜாஜி மண்டபத்தில் பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். 'தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழகத்தின் முதலமைச்சனாய் வருதல் வேண்டும்' எனும் பாரதிதாசன் கண்ட கனவு நனவாகியது. அவர் முதலமைச்சரானவுடன் பேரவைக்கு பேரவைத் தலைவரின் வலப்புறம் உள்ள வாயில் வழியாக உள்ளே நுழைவார். அண்ணா அந்நாளில் சட்டமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராய் இல்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 164(4)-ன்படி ஆறுமாத கால முடிவுற்குள் சட்டமன்ற இரு அவைகளில் ஓர் அவையில் உறுப்பினர் ஆகவில்லையானால் அவர் முதலமைச்சராக இருக்க முடியாது. அந்தக் கால கட்டத்தில் அண்ணா மக்களவைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். எனவே இரு அவைகளில் ஓர் அவையில் உறுப்பினராகவேண்டும். அப்போது மேலவையில் ஒரு வெற்றிடம் சென்னை மாநகராட்சித் தொகுதியில் இருந்தது. எனவே அந்தத் தொகுதியில் இருந்து போட்டியிட்டு சட்டமன்ற மேலவைக்கு வெற்றி பெற்றார்.

இவர் மேலவை உறுப்பினராகப் பதவிப் பொறுப் பேற்றதால், அவரது மாநிலங்களவை உறுப்பினர் பதவிக் காலம் தாமாகவே முடிவடைந்தது. அண்ணா ஏற்கனவே தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் அல்லவா! அதனை அப்பதவியை ஏற்பதற்கு முன்னரே ராஜினாமா செய்து விட்டார்.

ஒரேஒருவர் ஒரே காலத்தில் மேற்குறிப்பிட்ட நான்கு முக்கிய பொறுப்புக்களைச் சுமக்கும் பொறுப்பை அண்ணா அவர்களுக்கு மக்கள் அளித்தனர். இப்படிப்பட்ட வரலாறு படைத்தவர் அதுநாள்வரை ஏன் இன்றுவரை கூட யாரும் இல்லை. அதிலும் ஒரு சாதனை படைத்தார் அண்ணா.

அண்ணா அமைச்சரவை பதவி ஏற்பு

அண்ணாவின் சாதனைகளை அறிந்து கொள்வதற்கு முன் அவர் முதலமைச்சராகப் பதவி ஏற்ற நிகழ்ச்சியையும் அந்த ஆண்டு பேரவையில் உறுப்பினர்கள் பதவி ஏற்ற நிகழ்ச்சியையும் தெரிந்து கொள்ளலாம்.

6-3-1967 அன்று காலை 11 மணிக்கு ராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் முன்னிலையில் அண்ணா பதவிப் பொறுப்பேற்றுக் கொண்டார். அன்று மலர்த் தோரணங்களால் ராஜாஜி மண்டபம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, காமராஜ் ஆகியோரின் முழு உருவப் படங்கள் மேடையின் பின்னணியாக விளங்கின. மண்டபத்தில் அலங்கார விளக்கு காற்றில் அசைந்தாடியது ஆனந்தக் கூத்தாடியதாக விளங்கியது. கூட்டம் மண்டபத்திலும், மண்டபத்திற்கு வெளியிலும் நிரம்பி இருந்தது.

இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரல் மூதறிஞர் ராஜாஜி, மேலவைத் தலைவர் எம்.ஏ. மாணிக்கவேலு, பேரவைத் தலைவர் எஸ். செல்ல பாண்டியன் - மேலவை - பேரவை உறுப்பினர்கள், நீதிபதிகள், உயர்அதிகாரிகள் அமர்ந்து இருந்தனர். 11 மணிக்கு ஐந்து நிமிடம் இருந்த போது, அண்ணா மண்டபத்தில் நுழைய, அவையினர் அனைவரும் எழுந்துநின்று கையொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

வெளியில் திரளாகக் குழுமியிருந்த மக்கள் அண்ணாவைக் கண்டவுடன் 'அறிஞர் அண்ணா - வாழ்க' என மகிழ்ச்சியுடன் வாழ்த்தொலி எழுப்பினர்.

பின்னர் ஆளுநர் உஜ்ஜல்சிங் காலை 11 மணிக்கு ஒரு நிமிடத்திற்கு முன்பு மண்டபத்தில் நுழைய அவையில் இருந்தோர் அமைதியாக எழுந்து நின்று வரவேற்றனர்.

அரசியலமைப்புச் சட்டம் 164வது பிரிவின்படி அண்ணாவுக்கும், அவரது அமைச்சரவைத் தோழர்களுக்கும் ஆளுநர் பதவிப் பிரமாணமும் ரகசிய பாதுகாப்புப் பிரம்மாணமும் செய்து வைத்தார். ஆளுநர் பதவிப் பிரமாணத்தின் வாசகத்தை ஆங்கிலத்தில் கூற அண்ணாவும் அமைச்சர்களும் தமிழில் மனசாட்சிப்படி கூறி பதவிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர். நூறாண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலத்திலேயே பதவிப் பொறுப்பினை எடுத்துக் கொள்ளும் வழக்கத்தை மாற்றி, தமிழில் எடுத்துக் கொண்டதன் மூலமும் புதிய வரலாறு ஒன்று படைக்கப் பட்டது. அது 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' எனும் முழக்கம் நிலைத்து நிற்கச் செய்த முதல் நிகழ்ச்சியாகும்.

பதவி ஏற்பு நிகழ்ச்சி இதுநாள் வரை ஆளுநர் மாளிகையிலேயே நடைபெற்று வந்தது. அந்த இடம் மாற்றப்பட்டு, ராஜாஜி மண்டபத்தில் பதவிப் பொறுப்பு ஏற்றது ஒரு வித்தியாசமான நடைமுறையாகும்.

பதவி ஏற்பு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் அண்ணா அவர்கள் வெளியில் காத்திருக்கும் மக்களுடன் கை குலுக்கி அவர்களது மகிழ்ச்சியில் பங்கு கொண்ட பிறகு கோட்டைக்குச் சென்று அமைச்சர்களை அவரவர்களது அறையில் அமர்த்திவிட்டு வந்து முதலமைச்சர் அறையில் அமர்ந்து சிலகோப்புகளைப் பார்த்துக் கையொப்பமிட்டு, நாட்டு மக்களுக்கு நற்சேவை புரியத் தொடங்கினார். பதவி ஏற்கும் முன்னாள் இரவு முழுவதும் தாம் உறங்கவில்லை என்றும், பின்னரும் ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் தான் உறங்கியதாகவும், அவரே கூறியவாறு, மக்கள் பணியே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, திறமை. மிக்க முதலமைச்சராக, மனித நேய மிக்க முதலமைச்சராகப் பணியாற்றினார்.

பதவி ஏற்புக்குப் பின்னர் அண்ணா கூறுகையில், "இன்று எனக்கு ஏற்பட்டுள்ள அடக்க உணர்ச்சியை என் வாழ்நாளில் என்றும் நான் கொண்டிருக்கவில்லை. இருபதாண்டு காலம் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சி நொடிப் பொழுதில் நடந்து விட்டது என்கிற விஷயத்தை நாங்கள் ஒரு அரிய பாடமாகவே எண்ணி அடக்கத்துடன் பணியாற்றுவோம். எப்போதும் ஒரு நாட்டு நிர்வாகத்தில் ஒரு சர்க்கார் மாறி இன்னொரு சர்க்கார் வருவது என்பது 66-வது பக்கம் முடிந்து 67-வது பக்கத்திற்குப் போவதைப் போன்றே தவிர, ஒரு புத்தகத்தை மூடி வைத்துவிட்டு இன்னொரு புத்தகத்தை எடுத்துக் கொள்வது என்று அர்த்தமல்ல" என்றார்.

இதற்கு முன் நடந்த ஓர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முன் நிகழ்வினை நாம் பார்க்கலாம். வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் 1920ஆம் ஆண்டு நீதிக்கட்சி அரியணை ஏறியது. சென்னை ராஜ்யத்தின் முதலமைச்சராக ஏ. சுப்பராயலு ரெட்டியார் பதவிப் பொறுப்பேற்றார். அப்போது நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவரும், மேலவை உறுப்பினருமான சர்.ஏ. இராமசாமி முதலியார் "புதியதாகப் பொறுப்பேற்கும் அமைச்சர்கள் தற்போது கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு மாறுதல் ஏதும் நேராமல் தொடர்ந்து அந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பார்கள்" என்றார். நீதிக் கட்சியின் வழித்தோன்றலான அண்ணா - திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட அண்ணா -- தம் கட்சி அரியணை ஏறியவுடன் மேற்கண்டவாறு கூறியதை அவரது புகழ்மிக்க வாசகமாக எடுத்துக் கொள்ளலாம். பெருந்தன்மைக்குப் பெயர் பெற்ற பெருந்தகையாளரின் எண்ணம் என்னவென்றால் நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் செயல்முறைத் தொடர்புகள் அறுந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதில் அண்ணா மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

இத்தகைய பெருந்தகை அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் நிகழ்த்திய பல சாதனைகளை அனைவரும் அறிந்து வியக்கச் செய்வதே இந்நூலின் நோக்கமாகும்.

அவர்களின் சட்டமன்ற மாண்பினைக் குறிப்பிட்டு விளக்கும் போது மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பணியுடன் ஒப்பீடு செய்யும் எண்ணம் எழலாம்.

தாம் கொண்ட கொள்கையை உயிரெனமதித்து அரசியல் வாழ்வினை அதற்காக அர்ப்பணிக்கும் வண்ணம் அவர் கொண்ட கொள்கைகளில், தமிழ்நாடு பிரச்சினை, தமிழ் வளர்ச்சிப் பணி, திராவிட நாடு பிரச்சினை, இந்தி எதிர்ப்புக் கொள்கை ஆகியவைகளைக் குறிப்பிடலாம். மேற்கண்ட பிரச்சினைகளின் தன்மையையும், அவற்றின் நியாயத்தையும் தங்கு தடையின்றித் தெளிவாகச் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளின் பகுதிகள் தொடக்கத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற நடைமுறைகள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியும், அதனையொட்டி வரையறுக்கப்பட்ட விதிகளின்படியும் மரபுகளின்படியும் நடைபெற்று வருகின்றன. இந்நடைமுறைகளை யொட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆற்ற வேண்டியதாகக், கருதப்படும் - எதிர்பார்க்கப்படும் கடமைகளையும் அண்ணா திறம்பட செய்தார். தமது எதிர்பார்ப்புகளை ஜனநாயக முறையில் எடுத்துக் காட்டியதும், தம் பொருளாதார சமூக சிந்தனைகளையும் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு ஆலோசகராக இருந்து வெளிப்படுத்தியதும் அதைத் தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன.

அண்ணா அவர்கள் குறித்த சில சுவையான செய்திகள், முக்கிய பிரச்சினைகளில் அவர் கையாண்ட முறைகள், மற்றும் நாட்டு மக்கள் நலனே தமது வாழ்வின் குறிக்கோள், மனித நேயமே தமது உள்ளக் கிடக்கை, என்பதை அவர் வார்த்தைகளைக் கொண்டே தொகுத்த செய்திகள் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

இவ்வறிமுகத்துடன் நம் நாட்டு 'உதயசூரியன்' (எழுஞாயிறு) அறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய பணிகள் குறித்து சுவைத்து ரசிக்க, ஆழ்ந்து சிந்திக்க, அரசியலை நெறிமுறைப்படுத்த அன்புடன் அழைக்கின்றோம்.

பொருளடக்கம்

முன்னுரை

நுழைவாயில்

1. புதியபொலிவுடன் திகழ்ந்த பேரவை 17
2. தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் 20
3. தமிழ் வளர்ச்சி 38
4. இந்தி எதிர்ப்பு 49
5. திராவிட நாடு 60
6. குருபக்தி - பெரியார் சட்டம் 113
7. சுயமரியாதைத் திருமணச் சட்டம் 127
8. ஆளுநர் பேருரை 132
9. ஆளுநர் பேருரைப் புறக்கணிப்பு 141
10. நிதிநிலை அறிக்கை 161
    (அ) வேளாண்மை முன்னேற்றம் 163
    (ஆ) தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் 172
    (இ) மாவட்ட நிர்வாகம் 178
    (ஈ) கல்வி முன்னேற்றம் 181
    (உ) காவல் துறை 188
11. அண்ணாவின் உணர்ச்சிமிகுஉரை 193
12. கேள்வி நேரம் 200
13. குறுக்கீடுகள் 218
14. அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் 225
    அண்ணா இன்னமுமா இருக்கிறாய் 237
15. சுவையான உரைகள் 249
16. மதுவிலக்குக் கொள்கை 253
17. பேருந்துப் போக்குவரத்தினை நாட்டுடமையாக்குதல் 258
18. உலகத் தமிழ்மாநாடு 261
19. உதகையில் சட்டமன்றக் கூட்டம் 266
20. மேலவை தேவை 271
21. மேலவை முனைவர் 273
22. நேருவுக்குக் கருப்புக் கொடி 276
23. சீனப் பிரச்சினை 281
24. டாக்டர் பட்டம் பெற்ற அண்ணா 287
25. எதிர்க் கட்சியைப் பாராட்டும் பண்பு 290
26. உணர்வாலும் செயலாலும் ஜனநாயகவாதியே 293
27. முதலுரையும் முடிவுரையும் 296

1

புதிய பொலிவுடன் திகழ்ந்த பேரவை

பேரவையின் முதல் நாள் கூட்டம் 16.3.1967 அன்று ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களால் அரசியலமைப்புச் சட்டம் 174வது பிரிவின்கீழ் கூட்டப்பட்டது. அன்று அவை புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. பேரவை உறுப்பினர்களில் பெரும்பாலோர் கருப்பு சிகப்புக் கரை போட்ட வெள்ளை வேட்டியுடனும், அதே நிறத்தில் மேல் துண்டுடனும் வெள்ளைச் சட்டை அணிந்து பிரகாசமாய் இருந்தனர். பெரும்பாலும் கதராடையே கண்டு வந்தப் பேரவை கரைபோட்ட கைத்தறியாடையுடன் மிளிர்ந்ததைப் பார்க்க் பரவசமாய் இருந்தது. அது மட்டுமின்றி கைத்தறி துணியணிந்தவர் ஆளும் வரிசையில் அமரவும் கதர் அணிந்தவர் எதிர் வரிசைக்கும் மாற்றப்பட்ட நிகழ்வு நடந்தேறியது. உறுப்பினர்களில் அநேகம் பேர் இளவயதினர், சாமானியர்கள், ஏழை எளியோராவர். சாமானியர்கள் நாட்டையாளும் காலம் வரும் என்று அண்ணா கண்ட கனவு நிறைவேறியதை காண முடிந்தது. அன்று பார்வையாளர் மாடம் நிரம்பி வழிந்தது.

காலை 11 மணிக்குக் கூடிய கூட்டத்தில், தற்காலிகத் தலைவராக — மூத்த உறுப்பினரும் சுதந்திரா கட்சியின் தலைவருமான — பி.கே. மூக்கையத் தேவர் தலைமை தாங்கினார். அவர் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கும், பேரவைத் தலைவர் தேர்தலை நடத்து வதற்கும் மட்டுமே ஆளுநரால் தற்காலிகமாகத் தலைவராக

நியமனம் செய்யப்பட்டார். தற்காலிகத் தலைவர் ஆளுநர் மாளிகையில் தமது பதவிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.

சபையின் மரபுப்படி முதலில் அமைச்சர்களையும், கட்சித் தலைவர்களையும், முன்னாள் அமைச்சர்களையும் அடுத்து மற்ற உறுப்பினர்களையும் அகர வரிசைப்படி செயலாளர் அழைத்தார். பேரவை உறுப்பினர்கள் இருவர் இருவராக வந்து பதவி பொறுப்பேற்று பதிவேட்டில் கையொப்பமிட்டு, பின்னர் அவைத் தலைவருடன் கை குலுக்கி, முதலமைச்சர் அண்ணாவை நோக்கி மகிழ்ச்சி யுடன் கூடிய வணக்கத்தைத் தெரிவித்து அவையில் அமர்ந்தனர்.

முதலில் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதியும் மனசாட்சிப் படி உறுதி மொழியைத் தமிழில் கூறி பதவி ஏற்றனர். பிறகு பதிவேட்டில் கையொப்பமிட்டனர். அன்று அண்ணா உறுதி மொழி எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் அவர் உறுப்பினராய் இல்லை.

அன்று பதவி ஏற்றவர்களில் மனசாட்சிப்படி பொறுப்பேற்றோரே அதிகமாவர். கடவுள் பெயரால் சத்தியம் செய்து பொறுப்பேற்றவர் குறைந்துவிட்டனர். இந்நிலை மாற்றத்திற்குக் காரணம் அண்ணாவின் தம்பிகளான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 137 பேர்கள் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டதுதான்.

அடுத்தநாள் காலை கூடிய கூட்டத்தில் பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. அப் பதவிக்கு தி.மு.க. சார்பில் சி.பா. ஆதித்தனார் மற்றும் சுதந்திரா கட்சியின் சார்பில் கே.எஸ். கோதண்ட ராமைய்யா போட்டி யிட்டனர். சி.பா. ஆதித்தனாருக்கு 153 வாக்குகளும் கே.எஸ். கோதண்டராமைய்யாவிற்கு 21 வாக்குகளும் கிடைத்தன. எனவே, சி.பா. ஆதித்தனார் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்,

பின்னர் உறுப்பினர் அனைவரும் எழுந்து நிற்க, பேரவைத் தலைவர் அவர்களை அவை முன்னவர், இரா. நெடுஞ்செழியனும் எதிர்க்கட்சி தலைவர் பி.ஜி. கருத் திருமனும் அழைத்து வந்து அவரது சிம்மாசனத்தில் அமர்த்தினர். உறுப்பினர் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சி.பா. ஆதித்தனார் பேரவைத் துணைத் தலைவர் தேர்தலை நடத்தி புலவர் கா. கோவிந்தன் வெற்றி பெற்றதாக அறிவித்தார். அடுத்து புதியதாக தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுரைகள் பகரப்பட்டன.

அன்று மாலையே ஆளுநர் உஜ்ஜல்சிங் பேரவை – மேலவைச் செயலாளர்கள், பேரவை – மேலவைத் தலைவர்கள் முன்வர ஊர்வலமாக பேரவை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்று ஆளுநரை வரவேற்றனர். ஆளுநர் பேரவைத் தலைவரின் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவரது இடதுபக்கம் மேலவைத் தலைவரும், வலது புறம் பேரவைத் தலைவரும் அமர்ந்தனர். பின்னர் ஆளுநர் அவர்கள் பேரவை-மேலவை உறுப்பினர்கள் இணைந்த கூட்டுக் கூட்டத்தில் தமது உரையினை ஆங்கிலத்தில் படித்து முடிக்கும்போது 'வணக்கம்' என தமிழில் கூறி நிறைவு செய்தார். இது ஒரு புதுமையாகும்.

இத்தகைய சரித்திர மாற்றத்திற்குக் காரணமானவர் "அண்ணா" என்று அகமலர அழைக்கப்படும் — தமிழக மக்களின் அன்புக் கட்டளைக் கிணங்க தமிழக முதல்வராக பதவிப் பொறுப்பேற்ற — சி.என். அண்ணாதுரை அவர்கள் தாம் என்பதை குறிப்பிடுவது சரித்திர ஆசிரியர்களின் கடமையாகும்.

சட்டமன்றத்தில் புதிய பொலிவை, பதவி ஏற்ற முதல் நாளிலேயே ஏற்படுத்திய அண்ணா அவர்கள் பெருமை சேர்க்கும் வகையில் சாதித்த மற்றொரு சரித்திரத்தை — சென்னை இராஜ்யத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்ததை — அடுத்தப் பகுதியில் காண்போம்.

2

தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே" —பாரதியார்

1956ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாள் மாநிலங்கள் புனரமைப்புச் சட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்திலிருந்து கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்கள் பிரிந்து சென்றன. ஏற்கெனவே 1953ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆந்திர மாநிலம் பிரிந்து சென்ற காரணத்தினால் 1.11.1956ல் சென்னை மாநிலம் தனித்துச் செயல்படத் தொடங்கியது.

அதன் தொடர்பாக தமிழ் ஆட்சி மொழி மசோதா, 27.12.56ல் சென்னைச் சட்டப் பேரவையின் கடைசி நாள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அன்று முதல் சென்னை மாகாணத்தில் "தமிழ்" ஆட்சி மொழியாகியது. இத் தருணத்தில் பல உறுப்பினர்கள் சென்னைக்கு தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தத் தொடங்கினர். காங்கிரஸ் அரசு அதற்கு செவி சாய்க்கவில்லை. அப்போது பேரவை உறுப்பினர் திரு. ரத்தினம் என்பவர் பேசுகையில், "என்னுடைய வேண்டு கோள் (தமிழ்நாடு பெயர் மாற்றம்) ஆட்சியாளரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இப்போது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அண்ணா தலைமையில் ஆட்சி அமைக்கப்படும்.

அப்போது சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்படும்" என்றார்.

ஆனால் 1957ஆம் ஆண்டு நடைபெற்றப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 15 உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். அண்ணா அவர்கள் தலைவராகவும், க. அன்பழகன் துணைத் தலைவராகவும், மு. கருணாநிதி கொறடாவாகவும் நியமிக்கப்பட்டனர். இந்த 15 உறுப்பினர்களில், 5 உறுப்பினர்கள் இதழாசிரியர்கள். அண்ணா அவர்கள் "திராவிட நாடு", பத்திரிகைக்கும், க. அன்பழகன், "பொழில்" பத்திரிகைக்கும், மு. கருணாநிதி "முரசொலி" நாளேட்டிற்கும், ஏ.வி.பி. ஆசைத்தம்பி "தனி அரசு" நாளேட்டிற்கும், சத்தியவாணி முத்து "அன்னை" இதழுக்கும் ஆசிரியராக விளங்கினார்கள். அண்ணாவின் தலைமையில் வெற்றி பெற்ற தி.மு.க. உறுப்பினர்களை எல்லாப் பத்திரிக்கைகளும் பாராட்டின. ஆனந்த விகடன் தனது தலையங்கத்தில் கூறியதாவது:

> "தி.மு.க. நடத்தியக் கூட்டங்களில் எல்லாம் கண்ணிய மான முறையே கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. பேசிய தலைவர்கள் எல்லாம் வசைமொழியில் இறங்க வில்லை. தங்களை இடைவிடாமல் தாக்கும் பெரியாரைக் கூட அவர்கள் மரியாதைக் குறையாமல் தான் மதித்து பேசி வந்தனர் என்பதைப் பார்த்து மக்கள் வியந்தார்கள். சட்டசபையிலும், இனி ஒரு புதுவிழிப்பு ஏற்படும். கேள்விகளும் மந்திரிகளின் பதில்களும் காரசாரமாக இருக்கும். அண்ணாதுரை என்ன சொல்கிறார் என்பதை பொது மக்கள் அக்கறையுடன் கவனிப்பார்கள். தமிழர் நலத்துக்கான காரியம் போட்டி போட்டுக் கொண்டு செய்யப்படும். அம்முறையில் அண்ணாதுரையின் வெற்றியை வரவேற்கிறோம்.

ஆளும் கட்சியாரும் நன்றாக வரிந்து கட்டிக் கொண்டு இவரை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்."

மக்களின் எதிர்பார்ப்பின்படி, பேரவையின் முதல் கூட்டத்திலேயே ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு க. அன்பழகன் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அத்திருத்தத்தில் "இம்மாநிலத்திற்கு தமிழ்நாடு என்றப் பெயர் மாற்றம் செய்யப்படாதது வருத்தத்திற்குரியது" என மொழிந்தார். விவாதத்தில் பல உறுப்பினர்கள் சென்னைக்கு தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டுமென வற்புறுத்தினார்கள். அவ்வமயம் அண்ணா அவர்கள் பேசுகையில், "திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட அனைத்துத் திருத்தங்களையும் நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம். ஆனால், 'தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும்' என்ற திருத்தத்தின் மீது மட்டும் ஓட்டெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார். பின்னர், ஓட்டெடுப்பு நடந்தது. ஆதரவாக 42 உறுப்பினர்கள் வாக்களித்தனர். தி.மு.க. ஜனநாயக காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர். காங்கிரஸ் கட்சியினர் 127 பேர் எதிராக வாக்களித்ததால், தி.மு.கவின் தீர்மானம் தோற்றது. அண்ணாவின் முதல் முயற்சி தோல்வியடைந்தாலும், அண்ணா அவர்கள் தம் கோரிக்கையை வலியுறுத்திப் பல கட்டங்களில் பேசி வந்தார்.

இதற்கிடையில் விருதுநகரைச் சேர்ந்த சங்கர லிங்கனார் என்ற முதுபெரும் காங்கிரஸ்காரர் தமிழ்நாடு என்று பெயரிடக் கோரி, தமது எழுபதாவது வயதில் அறுபது நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.

இந்த சூழ்நிலையில், சோஷலிஸ்டு கட்சி உறுப்பினர் ப. சின்னத்துரை சென்னைக்கு தமிழ்நாடு எனப் பெயரிட

வற்புறுத்தும் ஒரு தனி நபர் தீர்மானத்தை தந்திருந்தார். அத்தீர்மானம் விவாதத்திற்கு 30.1.1961ல் எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. அதே நாளில் சர்வோதய தினத்தில் ம.பொ.சி. அவர்கள் தலைமையிலான தமிழரசுக் கழகம் தமிழ்நாடு என்ற பெயர் சூட்ட வேண்டுமென்று போராட்டம் தொடங்கியது. கோட்டையின் முன் தமிழரசுக் கழகத்தினர் கூட்டமாக நின்று, அமைச்சர்களையும் உறுப்பினர்களையும் நிறுத்தி பேரவையில் நடைபெறும் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க கேட்டுக்கொண்டார். முதலமைச்சர் காமராசரும், நிதியமைச்சர் சி. சுப்ரமணியமும் தமது காரில் வராமல் வேறொரு காரில் கோட்டைக்குச் சென்று விட்டனர் என ம.பொ.சி. தெரிவித்தார்.

அண்ணா அவர்கள், மு. கருணாநிதி, ஏ. கோவிந்த சாமி ஆகியோருடன் சென்று போராட்ட வீரர்களை சந்தித்து வாழ்த்துக் கூறி சட்டமன்றத்தில் அவர்கள் எண்ணத்தை எதிரொலிப்பதாக அறிவித்தார்.

தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, "எதிர்பாராத விதமாக" அவை முன்னவர் சி. சுப்பிரமணியம் எழுந்து "தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை வேறொரு நாள் எடுத்துக் கொள்ளலாம்" என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். எதிர் கட்சியினருக்கு அரசின் இந்த முடிவு அதிர்ச்சியைத் தந்தது. சி. சுப்பிரமணியம் பேசுகையில் "இரண்டு தினங்களுக்கு முன் அது குறித்து அரசின் கருத்தை இன்று அறிவிப்பதாக உள்துறை அமைச்சர் கூறியிருந்தார். இது பற்றிய கிளர்ச்சியும் நடைபெறுகிறது. அங்கத்தினர்கள் கூட உள்ளே வரமுடியாதபடி இருக்கிறது. இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் நடைபெறும் வரை அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை அறிவிக்காது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் அடுத்தச் சட்டமன்றக் கூட்டத்தில் சுமுகமான சூழ்நிலையில் இதைப் பற்றி விவாதிக்கலாம். திரு. சின்ன துரை அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன்." ஆனால் அவை முன்னவரின் கோரிக்கையினை எதிர்க்கட்சித் தலைவர்களான வி.கே. இராமசாமி முதலியார், அண்ணா, கல்யாண சுந்தரம், சின்னதுரை ஆகியோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று, அண்ணா பேசியபோது கூறியதாவது:

> "தமிழ்நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு விஷயத்தை கிளர்ச்சி என்றக் காரணத்தைக் காட்டி பேசவேண்டாம் என்பது துரைத் தனத்தாரின் பலகீனத்தைத்தான் காட்டுகிறது. ஜனநாயக நாட்டில் ஜனநாயகக் கட்சி என்று கூறிக் கொள்ளும் கட்சி இப்படிப்பட்ட கிளர்ச்சிகளைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.
>
> தமிழர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த மாமன்றத்தில் தமிழர்கள் வசிக்கும் இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயரிட்டதாக ஆட்சியாளர்கள் ஒரு வார்த்தை உரைப்பார்களேயானால், அது தமிழ் மக்களின் காதுகளில் தேன் பொழிந்தது போன்றிருக்கும். அமைச்சர் அவர்கள் சமீபத்தில் மேல்நாடு சென்று வந்தது இப்படிப்பட்ட தந்திரங்களை கற்று வரத்தானோ என்னவோ? அப்படி இருக்குமேயானால் அவர் சென்றது வீண் என்று கூற விரும்புகிறேன். இவ்விஷயத்தைப் பற்றி இம்மாமன்றத்தில் பேசுவதற்கு அனுமதியளிப்பது தான் அறநெறியாகும் என்று கூறி அனுமதிக்க வேண்டுகிறேன்."

நிதியமைச்சர் சி சுப்ரமணியம் பேசுகையில் "சர்க்காருக்கு பலகீனம் என்று இதை உண்மையில் எண்ண மாட்டார்கள். அவசியமில்லா கிளர்ச்சிகள் மூலம் எதையும் சாதித்து விட முடியாது என்பதை வெளியில் இருப்பவர்கள் உணர வேண்டும். அதற்காகவே இந்த விஷயத்தை பிப்ரவரி மாதம் வைத்துக் கொள்ளலாம்" என்று கூறினார்.

அண்ணா அவர்கள் உடனே எழுந்து, "திரும்பத் திரும்ப எங்களுடைய எண்ணத்தை மாற்றமுயல்வதால்,

நாங்களும் சொன்னதையேத்தான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம். அமைச்சர் அவர்கள் வெளியில் நடை பெறும் கிளர்ச்சியைக் காட்டி, அக்கிளர்ச்சியை மதிக்கத் தயங்குவதால் அவர்கள் ஜனநாயக முறையை மதிக்கத் தயங்குகின்றனர்.

தமிழ்மக்கள் உணர்ச்சியை மதிக்கக்கூட அவர்கள் பெரும்பான்மை எண்ணிக்கையைக் கொண்டிருப்பார்களே யானால், நாங்கள் எங்களுடைய கருத்துக்களுக்கும் தமிழ் மக்களின் கருத்துக்களுக்கும் மாறாக இங்கு இயங்கத் தேவையில்லை. நாங்கள் பத்துப்பேராவது இருக்கிறோம் என்ற நல்ல சொல்லை அறிவிக்க ஏதுவாக நாங்கள் சபையிலிருந்து வெளியேறுகிறோம்'' என்று கூறி தி.மு,கவினரும் மற்ற எதிர் கட்சியினரும் வெளிநடப்பு செய்தனர். மற்றும் அக்கூட்டத்தொடரை புறக்கணித்தனர். சட்டசபை கூட்டம் எதிர்க்கட்சிகள் இல்லாமல் மூன்று நாட்கள் நடந்தது அன்றைய நாளில் ஒரு முக்கியச் செய்தியாகும்.

அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவிற்கு மாறாக இச் செயல் நடைபெற்றதால் அக்குழுவில் இருந்து அனைத்து எதிர்கட்சித் தலைவர்களும் பதவி விலகினர்.

இந்நிகழ்வுகளால் சற்று கலக்கமடைந்த ஆட்சி யாளர்கள் கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்தனர்.

1. மெட்ராஸ் ஸ்டேட் என்பதற்கு சென்னை ராஜ்யம் என்று தமிழில் எழுதப்படும். இனி தமிழில் எழுதும் போது சென்னை ராஜ்யம் என்று எழுதுவதற்குப் பதிலாக தமிழ்நாடு என்று எழுத வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தது.

2. அரசாங்க நிர்வாகக் கடிதப் போக்குவரத்தில், இனி தமிழ்நாடு என்றுதான் எழுதப்படும்.

இந்த அறிவிப்புகள் ஓரளவுக்கு எதிர்க்கட்சிகளால் வரவேற்கப்பட்டன.

அண்ணாவின் மாநிலங்களவை பிரவேசம்

1962ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது பொதுத் தேர்தலில் சட்டமன்றப் பேரவைக்குப் போட்டியிட்ட அண்ணா வெற்றி வாய்ப்பை இழந்தார். தமிழ்நாடே அண்ணாவின் தோல்வியைக் கண்டு கலங்கியது. அந்நிலையில் 4.3.1962ல் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணா பேசுகையில் கூறியதாவது:

> "ஐரோப்பா கண்டத்தில் இஸ்லாமியருக்கும் கிருத்து வர்களுக்கும் புனிதப்போர் நிகழ்ந்தது. ஏசு பிறந்த ஜெருசலேம் நகருக்குள் கிருத்துவர்கள் நுழையக் கூடாது என்று இஸ்லாமியர்கள் கூறியதாலேயே அந்த சண்டை நடைப்பெற்றது. இஸ்லாமியருக்கு தலைமை வகித்துப் போர் நடத்தினான் சாலடி மன்னன்.
>
> ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் மீது போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எல்லா கிருத்துவர்களுக்கும் ஜெருசலேம் செல்லும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால், ஒரு நிபந்தனை என்றான் சாலடி மன்னன். அதாவது கிருத்தவர்கள் தலைவனான ரிச்சர்ட் மட்டும் உள்ளே வரக்கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. அதேபோல் நான் வெளியே நிற்கின்றேன். என் அணிவகுப்பு உள்ளே செல்கிறது,. தலைவன் இல்லாத அணிவகுப்பு அமைக்கமுடியும். ஆனால், அணிவகுப்பு இல்லாத தலைவனை அமைக்க முடியாது. என் தோல்வியைப் பற்றி வருந்துபவர் களுக்கு இதைத்தான் சொல்லிக்கொள்வேன்,"

பின்னர் மார்ச் மாதம் நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலுக்குச் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2.4.1962 முதல் மாநிலங்களவை உறுப்பினராகப் பணியாற்றினார். மாநிலங்களவையில் தனது முதற் பேச்சிலேயே மன்ற

உறுப்பினர்களை மட்டுமின்றி அனைத்து இந்தியர்களையும் தம்பால் ஈர்த்துக் கொண்டார்.

தமிழ்நாடு பெயர் மாற்றத்தில் நாட்டம் கொண்டிருந்த அண்ணா அவர்களுக்கு மாநிலங்களவையில் இதே பொருள் குறித்து பேச ஒரு வாய்ப்பு கிடைத்தபோது அதை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு தமது கொள்கையினை மீண்டும் வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் மீண்டும் தமிழ்நாடு பெயர் மாற்ற விவாதம்

1963ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் உறுப்பினர் பூபேஷ் குப்தா சென்னைக்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென ஒரு சட்ட முன்வடிவினை மாநிலங்களவையில் அறிமுகம் செய்தார். அதன் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, அண்ணா உரையாற்றுகையில் கூறியதாவது:

"பெயர் மாற்றம் பற்றி அதிகாரபூர்வ மசோதா வந்தால் தமிழகத்திலுள்ள லட்சக்கணக்கான தமிழர்கள் மனநிறைவு அடைவார்கள். இச்சட்ட முன்வடிவின் நோக்கத்தை ஏற்கெனவே தமிழக அரசு ஏற்றுள்ளது. அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்யப்படவேண்டும். ஆனால் மாநில அரசு எதிர்க்கிறது. பெயர் மாற்ற சட்ட முன் வடிவை எதிர்த்துப் பேசிய உறுப்பினர்களில் ஒருவர் கூட பூபேஷ் குப்தாவின் வாதத்திற்கு மறு மொழி கூறவில்லை. 1961 ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் பெயர் மாற்றம் குறித்து மக்கள் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது அரசு கட்சித் தலைவராக இருந்த சி. சுப்ரமணியம் அவர்கள் அத்தீர்மானத்தின் நோக்கத்தை ஏற்பதாகக் கூறினார். சென்னை அரசின் தமிழ் வெளியீடுகள் அனைத்தும் இனித் தமிழ்நாடு எனப் பெயர் தாங்கி வெளியாகும் என்று

அப்போது அமைச்சர் கூறினார். இப்போது அவ்வாறு தான் அவை வெளியாகின்றன. அடுத்த ஆண்டு வரவு செலவு திட்டத்தை அளிக்கையில், நான் இப்போது தமிழ்நாடு அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தை அளிக்கின்றேன் என்றார். ஆனால், இதை சட்ட முறையில் மாற்றுவதைத்தான் மாநில அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

சென்னை மாநிலத்தின் மூலப்பெயர் "தமிழ்நாடு" தான் என்பதை விளக்க 2000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களிலும் சான்றுகள் உள்ளன. இச்சட்ட முன் வடிவு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சார தந்திரமே என்று கூறப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகள் ஈடுபடுவதில்லையா? ஆளுங்கட்சியே இம் மசோதாவைக் கொண்டு வந்திருந்தால், நான் மிகவும் பாராட்டியிருப்பேன். தமிழர் களுக்கு தமிழ்நாடு என்றும், அனைத்திந்தியாவிற்கு சென்னை மாநிலம் என்றும் மாநில அரசு பின்பற்றும் கொள்கை "அரசியல் பித்தலாட்டம்" ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் சோஷலிஸ்ட் கட்சி ஆகியவையும், சுதந்திரா கட்சியும் கூட தமிழ்நாடு பெயர் மாற்றத்தை ஏற்றுள்ளன. பெயர் மாற்றப்பட்டால் தமிழக மக்கள் தங்கள் பகுதிக்கு பழைய பெயரே மீண்டும் பெற்றது பற்றி மனநிறைவு அடைவார்கள்"

இடையில் ஒரு உறுப்பினர் குறுக்கிட்டு, சென்னை ராஜ்யத்திற்கு "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றுவதால் என்ன பயன் என்று வினவ அண்ணா கூறிய பதிலாவது:

> "மக்கள் அவை (House of People)யின் பெயரை லோக் சபா என்றும், மாநிலங்களவை (Council of States)யின் பெயரை ராஜ்ய சபா என்றும் குடியரசுத் தலைவர் (President) பெயரை இராஷ்டிரபதி என்றும் மாற்றியதன் மூலம் உங்களுக்கு என்ன பயன்

விளைந்தது என்று கேட்டு, இத்தகைய மாற்றங்கள் "'உணர்ச்சிப் பூர்வமான மனநிறைவை அளிப்பவை" என்று பதிலளித்தார்.

இவ்வளவு சொல்லிய பிறகும், மத்திய அரசும், மாநில அரசும் சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்கு ஒப்பவில்லை.

கொள்கை வீரர் சாதனை வீரரான வரலாறு

மேற்குறிப்பிட்ட பத்திகளில் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக சட்டமன்ற பேரவையிலும் மாநிலங்களவையிலும் தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு ஆற்றிய பணியினை விவரித்தோம். தற்போது தமிழ் மக்களின் கனவு நனவான வரலாற்றினைக் காண்போம்.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க. அண்ணா தலைமையில் வெற்றி வாகை சூடியது. அவ்வமயம் அண்ணா அவர்கள் "எங்கள் தோளில் சுமத்தப்பட்டுள்ள சிலுவையை இறுதி வரை கொண்டு சேர்ப்போம்" என்ற மகிழ்ச்சிச் செய்தியை தந்தார். பத்தாண்டுகட்கு முன் உரையாற்றிய ரத்தினம் அவர்கள் கூறிய ஆருடம் பலித்தது.

அண்ணா பதவியேற்றவுடன் கூடிய முதல் கூட்டத் தொடரிலேயே தமிழ்நாடு என்று பெயரிடப்படவேண்டும் எனும் தீர்மானத்தை முன் மொழிந்தார். நீண்டப் போராட்டத்திற்குபின் வெற்றி வாகை சூடிய மாவீரனாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அத்தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய உரை:

"இது தமிழுக்கு வெற்றி! தமிழ் வரலாற்றுக்கு வெற்றி! தமிழ் நாட்டுக்கு வெற்றி!

சேர சோழ பாண்டியரையும், சிலப்பதிகாரத்தையும், குறளையும், சீவக சிந்தாமணியையும், அகநானூறு, புறநானூறு மற்றவற்றையும் உலகம் தெரிந்து கொள்ள செய்தது. ஈராயிரம் ஆண்டுகள் எழிலோடு இருந்த தமிழ்

மரபை உலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதன் நோக்கம்தான் இந்தத் தீர்மானம். சென்னை ராஜ்யம் தான் சிறந்த நிர்வாகம் என்று வெளிநாட்டினருக்குத் தெரியலாம். நிர்வாகச் சிறப்பு மட்டுமல்ல. கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் கூட நினைவுக்கு வரலாம். செயின்ட் ஜார்ஜ் கோட்டை நினைவுக்கு வரலாம். அத்துடன் நிர்வாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த சேர சோழ பாண்டிய மன்னரை யும் தமிழ் மரபையும் மறந்து விடக் கூடாது என்பதற்குத் தான் இத்தீர்மானம்" என்று முழக்கமிட்டார்.

பேரவையிலுள்ள எல்லாக் கட்சியினரும் இப்பெயர் மாற்றப் பிரச்சினையை ஆதரித்துப் பேசினர்.

18.7.1967 அன்று பேரவையில் அண்ணா தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

'இந்த மன்றத்தில் எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற "தமிழ்நாடு" என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த சபையிலே இன்றைய தினம் உறுப்பினர் களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலேயும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் கூட இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார்களே தவிர வேறில்லை. இந்தியப் பேரரசிலே மிகச் செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்க ளுடன் உரையாடுகின்ற வாய்ப்பு கிடைத்த போது இதைப் பற்றி அவர்கள் சொல்லும்போது "தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது" என்பதனை முன்கூட்டியே என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். அதனை அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக்கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க வகையில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த

மாநிலத்தைப் பற்றிப் பேச வேண்டிய வாய்ப்பு கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு சவான் அவர்கள் மெட்ராஸ் ஸ்டேட் என்று பேசிப் பழக்கப் பட்டவர் மிகுந்த அக்கறையோடு 'Tamil Nadu' என்று தான் பேசியிருக்கிறார்.

மதிப்பு மிக்க திரு. ம.பொ.சி அவர்கள் இதிலே மிகுந்த மன எழுச்சி பெற்றது இயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாக "தமிழ் நாடு" என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்படவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு பாடு பட்டவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே "திராவிட" என்பதை நினைத்துக் கொண்டிருப்பதாலே "தமிழ்நாடு" என்பதிலே அக்கரை இல்லாமல் போய்விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில் 'தமிழ்நாடு' என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம்.

காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும், மற்றவர்கள் கொண்டு வருகிறார்கள் என்பதினால் முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தாலும், இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்றுக் கேட்டிருந்தாலும் இன்றைய தினம் அவர்களும் 'தமிழ்நாடு' என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமைக் கொள்கிறார்கள். ஆகையினால் இந்தத் தீர்மானம் எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால் அது இந்த கழகத்திற்கு வெற்றியல்ல. தமிழரசு கழகத்திற்கு வெற்றியல்ல. மற்ற கட்சிகளுக்கு வெற்றியல்ல. இது தமிழுக்கு வெற்றி, தமிழருக்கு வெற்றி, தமிழ் வரலாற்றுக்கு வெற்றி, தமிழ் நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்கு கொள்ள வேண்டும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்கின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். "என்னுடைய பாட்டனார் காலத்தில்தான் நம்முடைய தமிழ் நாட்டுக்கு "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட்டது. எதிர்கட்சியில் உட்கார்ந்திருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்" என்று கருத்திருமன் பேரப்பிள்ளை களும் எங்களுடைய பேரப்பிள்ளைகளும் எதிர் காலத்தில் பேசக் கூடிய நல்ல நிலமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த ஆலோசனையைக் கூட சொல்லாமல் இதை ஏற்றுக் செய்வார்கள் என்பதில் ஒருத்துளியும் ஐயப்பாடு இல்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார் அவர்களால் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது என்று அறிவித்தார்.

பின்னர் அண்ணா அவர்கள் சூளுரைத்ததாவது:

"சட்ட மன்றத் தலைவர் அவர்களே...

வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கின்ற நன்நாளில் "தமிழ்நாடு" என்று நான் சொன்னதும் "வாழ்க" என்று அவை உறுப்பினர்கள் சொல்வதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்" என்றார்.

அண்ணா : தமிழ்நாடு

உறுப்பினர்கள் : வாழ்க!

அண்ணா : தமிழ்நாடு

உறுப்பினர்கள் : வாழ்க!!

அண்ணா : தமிழ்நாடு

உறுப்பினர்கள் : வாழ்க!!!

என்று மூன்று முறை கூறி, முத்தான வரலாற்றுக் காவியத்தைப் படைத்த அண்ணா அவர்களையும் நெஞ்சார வாழ்த்தி, மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக் கிடையே, அவைத்தலைவர், அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து மறுநாள் கூடும் என அறிவித்துச் செல்ல, உறுப்பினர்கள் ஒருவருடன் ஒருவர் தமது மகிழ்ச்சிப் பெருக்கினைப் பங்கிட்டுக் கொண்டு முதலமைச்சர் அண்ணாவுக்கு வாழ்த்துக் கூறி வெற்றிப் பெருமிதத்துடன் கலைந்து சென்றனர்.

மேலவை-பேரவை ஆகிய இரு அவைகளிலும் சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப் படவேண்டும் என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவின்படி அட்டவணையில் விவரிக்கப் பட்டிருக்கும் "சென்னை மாநில (பெயர் மாற்ற) சட்டமுன் வடிவு என்ற தலைப்புள்ள நாடாளுமன்ற சட்ட முன் வடிவை மேலவை-பேரவை ஆகியவைகளின் கருத்தினை யறியும் பொருட்டு அனுப்பி வைத்தார்.

அது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தினை மேலவையில் அண்ணா முன் மொழிந்தார். அதன் மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

டி.கே. சண்முகம் TAMIL NADU என்பதற்குப் பதிலாக TAMIZ NADU என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு திருத்தம் கொணர்ந்தார். இந்த ஆண்டு இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த போது அதில் கலந்து கொண்டு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கெல்லாம் அந்த மாநாட்டிற்கு முத்திரைச் சின்னம் ஒன்றை வழங்கி இருந்தார்கள். அந்த முத்திரைச் சின்னத்திலே நான் இப்போது சொல்லக்கூடிய தமிழ் நாடு என்னும் சின்னம் பொறிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த முத்திரைச் சின்னத்திலே பதிக்கப்

பட்டுள்ளச் சொல்தான் இப்போது பயன்படுத்தப்பட வேண்டும். இப்படிப் பயன்படுத்த வில்லையென்று சொன்னால் தமிழுக்கே சிறப்பாக 'ழ' ஒதுக்கப்பட்டு விடுகின்றது என்றார்.

சுதந்திரா கட்சியைச் சார்ந்த சா. கணேசன் கருத்துத் தெரிவிக்கையில் "ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலக்கியங்களிலும் பட்டயங்களிலும் கல்வெட்டுகளிலும் தமிழ் நாடு, தமிழகம், தமிழ் நாட்டகம் என்ற சொற்களே பயிலப் பெற்று வந்து இருந்தும் ஏதோ பல காரணங்களால் 'Madras' என்ற சொல் புகுத்தப்பட்டு அந்த சொல்லே 'Presidency' ஆக இருந்த காலத்திலேயும் சரி, ஸ்டேட்டாக மாறிய காலத்திலேயும் சரி வழங்கப் பெற்று வந்தது. இதற்காக எத்தனையோ போராட்டங்கள் எல்லாம் நடந்து இருக்கின்றன என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்.ஆர். தியாகராஜன் பேசுகையில் இந்தத் தீர்மானத்தினை மனப்பூர்வமாக ஆதரிப்பதாகக் கூறினார். இன்று நேற்றல்ல. புறநானூற்றிலேயே தமிழகம் என்றுதான் வருகிறது. பதிற்றுப்பத்திலும், தமிழகம் என்று குறிப்பிட்டு இருப்பதைக் காணலாம். அது மட்டுமல்ல தொல்காப்பியத்திலே தமிழ்நாடு என்றால் பாண்டிய நாடு என்று குறிப்பிடப் பெற்றுள்ளது என்றார்.

அண்ணா விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது.

"இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் அமைய வேண்டும். ஏற்கெனவே நாம் நிறைவேற்றிய தீர்மானம் டில்லி பேரரசுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் அரசியல் சட்ட ரீதியாக அதற்காக ஒரு மசோதா தயாரித்து அதை நம் கருத்தறிய அனுப்பி இருக்கிறார்கள். தமிழ்நாடு என்ற பெயர் முன்னாலேயே வைக்கவில்லை. இப்போது தான் அமைந்து இருக்கிறது. இதற்கு யார் காரணம் என்பது எல்லாம் தேவையில்லை.

உண்மையிலேயே நாம் ஒன்று பட்டு நிறைவேற்றக் கூடிய தீர்மானங்கள் இப்படி ஒன்று இரண்டாகிலும் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருதடவை கிடைக்குமானால் உண்மையிலேயே ஜனநாயக பண்புகளை வளர்ப்பதற்கு அவை உறுதுணையாக இருக்கும். தமிழ் ஒன்றுதான் இப்படி நம்மை இணைத்து வைத்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் தியாகராஜன் இவ்வளவு தமிழ் செய்யுட்களைச் சொல்லி இதுவரை நான் கேட்ட தில்லை. சட்டசபையில் நானும் அவரும் ஒன்றாக இருந்த போது நம்முடைய மாண்புமிகு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் திருவாய்மொழியில் செய்யுட்களைச் சொல்லு வார்கள். நம்முடைய தியாகராஜன் அவர்களுடைய தமிழ் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இருக்கும். இன்றைய தினம் தமிழ் என்ற உணர்ச்சி அவர்களை சங்க இலக்கியத் திலிருந்து தொல்காப்பியம் லெமூரியாக் கண்டம் வரைக்கும் கொண்டுப் போய்க் கடைசியாக அவர் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்து இது ஏற்றதுதான் என்று சொன்னார்.

தமிழ் என்பது ஏல்லோருடைய உள்ளத்திலேயும் இத்தகைய அரிய உணர்ச்சியைத் ஏற்படுத்துகிறது என்ற உண்மையை இது எடுத்துக்காட்டுகிறது. அதிலிருந்து தமிழ்நாடு எனவும் மாநிலத்திற்குப் பெயர் வைப்பதும் ஒரு நல்ல உணர்ச்சியை ஏற்படுத்தும் என்று தெரிகிறது. நாங்கள் வந்திருக்கும் நேரத்தில் அது நிறைவேற்றப்பட்டிருப்பதை வைதிக பாஷையில் குறிப்பிட வேண்டுமென்றால் நாங்கள் கொடுத்து வைத்தவர்கள். அந்தப் பெயர் எனக்கு வரவேண்டும் என்பதற்காக முன்பு இருந்தவர்கள் அதை விட்டுக் கொடுத்திருக்கலாம் என்று கருதுகிறேன்.

அவர்கள் பல விஷயங்களில் நல்ல பெயர் எடுத்த காரணத்தால் இந்தப் பெயர் வைப்பதை விட்டு விட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசு நடத்துகிற

நேரத்தில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் எல்லாக் கட்சியினரும் இதில் ஒத்துழைத்தது வரவேற்கத் தக்க நிகழ்ச்சியாகும் என்று கூறி அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இப்போது நாம் அடைந்திருக்கும் வெற்றி இது வரையில் சென்னை ராஜ்யம் என்றும் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் இருந்தது. இப்போது தமிழ்நாடு எனும் சிறப்புப் பெயரை, அரசியல் சட்டரீதியாகப் பெறுவதில் நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அந்த மகிழ்ச்சியில் நாட்டு மக்கள் அனைவரும் பங்குக் கொள்வார்கள். அதில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பது தமிழ் நாட்டு மக்களுக்கு புதிய உற்சாகத்தைக் கொடுக்கும். நல்லவற்றிற்கு இவர்கள் எல்லாம் ஒன்று கூடுவார் போல் இருக்கிறதே என்ற நம்பிக்கை ஏற்படும்" என்று கூறினார்.

பின்னர் சட்டமுன் வடிவு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டதாக எம்.ஏ. மாணிக்கவேலு, மேலவைத் தலைவர், அறிவித்தவுடன் உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக மேஜையைத் தட்டி வரவேற்றனர்.

அச்சட்ட முன்வடிவு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் அச்சட்ட முன்வடிவிற்கு தமது இசைவினை 20.12.1968 அன்று அளித்தார். பொங்கல் திருநாளான 14.1.,1969 அன்று சென்னை என்பது "தமிழ்நாடு" என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றது.

அண்ணா பல ஆண்டுகாலமாக - எதிர்க்கட்சித் தலைவராக - மாநிலங்களவை உறுப்பினராக - இருந்த போது மேற்கண்ட அவைகளில் எழுப்பி வந்த "தமிழ்நாடு" என்று பெயரிடப் படவேண்டும் எனும் முழக்கம் அவரது காலத்திலேயே, அவராலேயே, முதலமைச்சராக இருந்து "தமிழ்நாடு" எனும் இலக்கியப் பெயரைப் பெற்றுத் தந்து பெருமை பெற்ற பெருந்தகையாளராவார். அவரது பகழ்

இந்திய வரலாற்றில் - இலக்கிய வரலாற்றில் - அரசியல் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். தமிழ்நாடு என பெயரிட்டது குறித்து அண்ணா கூறியதாவது.

"என்னுடைய வாழ்க்கையில் - ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் - நான் மூன்று முறை மகிழ்ச்சியடைந்தேன்.

முதன்முதலில் - இந்த நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்ற பெயர் சூட்டி - அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி - கட்சிப் பாகுபாடின்றி அனைவரும் சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு வாழ்க' என்று முழக்கம் செய்தபோது என் 58 ஆண்டு காலத்திலும் கேட்டறியாத கீதத்தை - செவியில் பாயாத செந்தேனை - பார்த்தறியாத காட்சியை நான் உணர்ந்தேன். இரண்டாவதாக - சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த போது மகிழ்ந்தேன். மூன்றாவதாக - இனி தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி இல்லை என்று அறிவித்த போது மகிழ்ந்தேன்" என்று அண்ணா அவர்கள் உளம் திறந்து கூறினார்.

இன்றைய இளைய தலைமுறையினருக்கு நாட்டுப் பற்றூட்டும் நிகழ்ச்சியாக இது அமையும்.

தமிழ்நாடு எனப் பெயரிட்டு வெற்றி கண்ட அண்ணா, தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை இனி காண்போம்.

3

தமிழ் வளர்ச்சி

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

–பாரதிதாசன்

1956ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பபட்டு சென்னை மாகாணத்தில் தமிழ் ஆட்சி மொழியாகியது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடை முறைக்கு வந்த 15 ஆண்டுகளில் கட்டாயமாக இந்தி ஆட்சி மொழியாகும் என்று வரையறுக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் பிரதமர் பண்டித நேரு இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் தொடர்புமொழியாக இருக்கும் என அறிவித்தார்.

ஆயினும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்தான் ஆட்சி மொழி. ஆங்கிலம் இணைப்பு மொழி என்று அண்ணா பல காலமாகக் கூறிவந்தார். அதே போன்று தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். அவற்றை ஈண்டு நோக்குவோம்.

23.1.1968 அன்று முதலமைச்சர் அண்ணா அவர்களால் மொழியப்பட்ட மொழித் தீர்மானத்தின் மீது அவர் பேசுகையில்—

"தமிழ் பாட மொழி பயிற்று மொழி என்றப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் பல்வேறு கருத்துக்கள்

சொல்லப்பட்டன. நான் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிற வனில்லை. ஆனால் ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் தமிழ் அதற்குரிய இடத்தைப் பெற வேண்டாம் என்ற எண்ணம் கொண்டவனும் அல்ல. ஆங்கிலம் எந்தெந்த காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ, அந்தக் காரியங்களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதியுள்ள மொழி என்றால், அது 'தமிழ், தமிழ்' என்று சொல்லத் தயங்கமாட்டேன். அவ்வளவு வளமுள்ள மொழி.

ஐந்தாண்டுகளுக்குள் தமிழகத்தில் எல்லாக் கல்லூரி களிலும் தமிழை பாட மொழியாகவும் பயிற்று மொழியாக வும் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். நடவடிக்கை எடுத்துக் கொள்வது மட்டுமல்ல. அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ் பாட மொழியாகும்." என்று கூறினார்.

இதற்கிடையில் சட்டமன்றப் பேரவையில் 29.11.1967ல் சுதந்திரா கட்சி உறுப்பினர் டாக்டர் எச்.வி. ஹண்டே கல்லூரிகளில் தமிழோடு ஆங்கிலமும் பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்று கோரி தனி உறுப்பினர் தீர்மானம் ஒன்று கொண்டு வந்தார். இத்தீர்மானத்திற்கு தி.மு.க. உறுப்பினர் வேழவேந்தன் ஒரு திருத்தம் தந்தார்.

இத்தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்ற நாளன்று தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. உடல்நிலை சரியில்லாத போதிலும் அவையில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அண்ணா விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் –

"டாக்டர் ஹண்டே அவர்கள் மிக நீண்ட காலமாக ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கப் போவது உறுதிபடுத்தப்பட்டபிறகு அந்த ஆங்கிலத்தில் போதுமான புலமை பெற வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் செய்கிற தவறு எதில் இருக்கிறது என்றால் ஆங்கிலப் புலமை வேண்டும் என்பதில் அல்ல. போதனா மொழி



ஆங்கிலமாக இருந்தால்தான் அந்தப் புலமை வரும் என்று சொல்லுவதில்தான்.

இப்போது என்னிடத்திலோ, நான் சார்ந்திருக்கிற அரசினிடத்திலோ "ஆங்கிலத்தில் புலமை வேண்டுமா என்று கேட்டால், "ஆம்" என்று சொல்லுவோம். அந்தப் புலமை பெறத்தக்க அளவுக்கு வழிவகை செய்யப் போகிறீர்களா? என்றால் செய்யப் போகிறோம் என்று சொல்வோம். அந்தப் புலமையைப் பெறுவதற்காக ஆங்கிலம் போதனா மொழியாக இருக்க வேண்டாமா? என்றால் இருக்கவேண்டியதில்லை என்று சொல்வோம். ஏனென்றால் போதனா மொழியாக இல்லாமலேயே ஆங்கிலத்தில் புலமை பெறமுடியும். போதனா மொழியாக ஆங்கிலத்தை வைத்துக்கொண்டே அம் மொழியில் புலமை பெறாதவர்களும் உண்டு. ஆகவே ஆங்கிலத்தில் புலமை பெற அது போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பது முக்கியமல்ல.

இப்போது ஆங்கிலம் மட்டுமே போதனா மொழி என்று இருக்கிறது. அடுத்து, தமிழும் போதனா மொழியாக இருக்கலாம் என்ற கட்டத்துக்குச் சென்று, மூன்றாவதாக தமிழ்தான் போதனா மொழியாக இருக்கும் என்ற கட்டத்துக்கு நாம் செல்லவேண்டும். இடையிலுள்ள தமிழும் பாடமொழியாக இருக்கின்ற கட்டம் பூரணமாக திருப்தியை கொடுப்பது அல்ல. அதில் கிட்டத்தட்ட எனக்கும் ம.பொ.சி. அவர்களுக்கும் உணர்ச்சி ஒற்றுமை இருக்கிறது.

ம.பொ.சி. அவர்கள் எடுத்துக் காட்டியபடி தமிழும் பாடமொழியாக இருக்கும். ஆங்கிலமும் பாட மொழியாக இருக்கும் என்றால் நூற்றுக்கு அறுபது மாணவர்களுக்கு மேல் ஆங்கிலப் பாடமொழிக்கு செல்வதற்குத்தான் தூண்டுதல் அளிக்கும். அதை அறிந்த நமது கல்வி அமைச்சர் அவர்கள் இன்னொரு தூண்டுதல் காட்டி "தமிழைப் பாடமொழியாக எடுத்துக் கொள்ளுங்கள்,

உங்களுக்கு உத்தியோகங்களில் சலுகைகள் கிடைக்கும்" என்று சொல்லி இருக்கிறார்கள்.

தமிழ் பாட மொழியாக இருக்க வேண்டும் என்று நண்பர் ம.பொ.சி. அவர்கள் கேட்பது அதிலிருந்து நாம் பெரிய பலனைப் பெற வேண்டும் என்பதற்காகக் கூட அல்ல. அவர்கள் பேசிய வார்த்தைகளை கவனித்து இருப்பீர்கள் என்று நமபுகிறேன். "அது நம் உரிமை" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த உரிமையின் அடிப்படையில்தான் தமிழ்தான் பாட மொழியாக இருக்க வேண்டும் என்பது இந்த அரசின் அழுத்தந்திருத்தமான நம்பிக்கை. ஆனால் நம்பிக்கைக்கும் நடவடிக்கைக்கும் இடையிலே சில மாற்றங்கள் ஏற்படலாம். அப்படிப்பட்ட தடுமாற்றங்களை தடுத்து நிறுத்துகிற முறையிலே ம.பொ.சி அவர்களின் உரை இன்றைய தினம் அமைந்து இருக்கிறது.

ஆனால் இதில் இந்த அரசுக்குத் தடுமாற்றம் இல்லை. இப்போது ஆங்கிலத்தில் எல்லாப் பாடங்களையும் படித்து போதனா மொழியாகக் கொண்டு படித்து - வெளிவந்த அத்தனைப் பேரும் ஆங்கிலத்தில் புலமை பெற்றிட வில்லை என்று நான் முன்னாலேயே எடுத்துச் சொன்னேன். அதைப் போலவே ஆங்கிலமே படிக்காமல் தமிழ் மட்டும் தான் தெரியும் என்று சொல்லுகின்ற எல்லோருமே திரு ம.பொ.சி போல் தமிழிலே பேசமுடியவில்லை. எனக்குத் தெரிந்தது தமிழ்தான் என்று சொல்லி விடுவோர் பேசுவது தமிழ் மொழிக்கு ஊறுநேரிட தக்க வகையில் இருக்குமானால், அவர்கள் வேறுமொழி பயிலாததால் நஷ்டம் ஏதுமில்லை.

பயின்ற ஒரு மொழியில் புலமை இருக்க வேண்டும். திரு. ம.பொ.சி அவர்கள் தமிழிலே புலமை பெற்று இருக்கிறார். வடக்கேயுள்ள சேத் கோவிந்தாஸ் போல, வேறுத் தலைவர்கள் போல, ஆங்கிலம், அறவேக் கூடாதென்று அவர் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டார். ஏனென்றால் தன் மொழியினிடத்தில்

பற்றிருக்கும் போது, பிற மொழியைப் பழிக்கத் தேவை யில்லை என்ற பெருங் கோட்பாடு அவருக்கு உண்டு என்பதை நானறிவேன். ஒரு சிலர் இந்திக்கு வாதாடுவதற் காக இங்கேத் தமிழைப் புகுத்தி ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமென்று கூறுகிறார் என்று தப்பாகச் சொன்னார்கள். அதற்கு ம.பொ.சி. தகுந்த விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்திதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தவில்லை.

தமிழ்பாட மொழியாவதற்கு இன்னும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திரு ம.பொ.சி. அவர்களது உரை பெரிதும் துணையாக இருக்குமென்றுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முன்னாலே குறிப்பிட்டபடி ஆங்கிலமே பாட மொழி என்று இருந்தது மாறி, தமிழும் பாட மொழி எனும் கட்டம் வந்து, பின்னர் தமிழேப் பாடமொழி எனும் இறுதிக் கட்டம் பிறக்கவேண்டும். அந்த இறுதிக் கட்டம் சில ஆண்டுகளிலேயே வருமானால் என்னைவிட மகிழக் கூடியவர்கள் யாரும் இருக்கமுடியாது" என்று கூறினார்.

அண்ணா கடைசியில் முத்தாய்ப்பாக கூறிய மொழிகள் தான் அவருடைய சொற்பொழிவின் கருத்துரை யாகும். எவ்வளவு அழகாக நளினமாக தமிழே பாட மொழி எனும் இறுதிக் கட்டம் பிறக்கவேண்டும் என்று கூறி அது சில ஆண்டுகளில் வருமானால் என்னைவிட மகிழக் கூடியவர்கள் இருக்க மாட்டார்கள் என்றார்.

மேலும் அண்ணா பேசுகையில் மற்றொரு கருத்தையும் தெரிவித்தார்.

"ஆங்கிலம் இருக்கும் இடத்தில் தமிழைக் கொண்டு வந்து பாடமொழியாக்குவதில் இடையிலுள்ள பிரச்சனை களை நாம் நீக்கியாகவேண்டும். இப்போது எடுத்துக் காட்டாக சொல்லுவதானால் இரண்டு மாதங்களுக்கு முன்னால் (செப்டம்பர் 1967 அநேகமாக அவரது பிறந்த நாளாக இருக்கும்.) நான் வீட்டிலிருந்து புறப்படுங்கால்,

"இன்றைய தினம் முதற்கொண்டு சர்க்கார் உத்தரவுகளிலும் மற்றவைகளிலும் நாம் கையெழுத்துப் போடும் போது தமிழில்தான் போடவேண்டும்'' என்ற உறுதியோடு வந்தேன். மிக வேகமாக நான்கு காகிதங்களில் தமிழில் கையெழுத்து இட்டேன். ஐந்தாவது காகிதம் வருகிற போது என்னையும் அறியாமலேயே ஆங்கிலத்தில் கையெழுத்து இட்டுவிட்டேன். வெட்கமாகக் கூட இருந்தது. அதற்குப் பிறகு மறுபடியும் தமிழில் போட ஆரம்பித்தேன். அப்படிப் பட்ட தொடர்புடையது அது.

ஒவ்வொரு நாளும் நான் எடுக்கிற அந்த உறுதியில் இருந்து அடிக்கடி தவறிப் போகிற நிலை வருவதற்குக் காரணம் ஆங்கில மொழியோடு நமக்கு ஏற்பட்டிருக்கிற தொடர்பு அந்த அளவுக்கு இருப்பதுதான். விரைவிலேயே அதிலிருந்து விடுபட முடியவில்லை என்பதை நான் வெட்கப்படாமல் ஒப்புக் கொள்கிறேன்" என்றார்.

இப்படி வெளிப்படையாக மனம் திறந்து பேசுபவர் அண்ணா ஒருவர் மட்டுமே என்றால் அது மிகையாகாது.

குறள் முழக்கம்

இதுநாள் வரை 'ஹானரபில் ஸ்பீக்கர்' என்று பேரவைத் தலைவர் பேரவை மண்டபத்தினுள் நுழையும் போது, சார்ஜெண்ட் கட்டியங் கூறுவார். அந்த ஆங்கில வார்த்தைக்கு தமிழாக அக்காலத்தில் 'சபாநாயகர்' என்று குறிக்கப் பெற்று வழக்கில் இருந்தது. அண்ணாவின் காலத்தில் அந்நிலை மாறியது. 'ஹானரபில் ஸ்பீக்கர்' என ஆங்கிலத்தில் கூறி வந்ததற்குப் பதிலாக தமிழில் "மாண்புமிகு பேரவைத் தலைவர்" என மாண்புமிகு தலைவரை, அவரது அறையில் இருந்து பேரவை மண்டபத்திற்கு அழைத்து வரும் சார்ஜெண்ட் கட்டியங் கூற அவையிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று தலைவருக்கு வணக்கம் கூறத் தலைவர் அதனை ஏற்றுக்கொண்டு அவைத் தலைவர் சிம்மாசனத்தில்

அமர்ந்தவுடன் உறுப்பினர்கள் இருக்கையில் அமர்வர், தொடர்ந்து அவை நிகழ்ச்சிகள் அலுவல் பட்டியலில் உள்ளவாறு நடைபெறும்.

அது மட்டுமன்று அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் திருக்குறள் பட்டிதொட்டிகளில் மட்டு மல்ல, பஸ் போக்குவரத்தில் மட்டுமல்ல பேரவை யிலும் எதிரொலிக்கத் தொடங்கியது. சி.பா. ஆதித்தனார் பேரவைத் தலைவராக இருந்த நேரத்தில் முதன் முதல் 17.6.1967 அன்று முதலமைச்சர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை அளித்த நாளில் பேரவைத் தலைவர் திருக்குறளின் முதற்குறளை அவையில் கூறி பின்னர் அவை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினார்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எனும் திருக்குறளை அவர் உள்ளஉவகையுடன் கூற அதை உறுப்பினர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர் என்பதை உறுப்பினர்களின் முகமலர்ச்சியில் இருந்தே காண முடிந்தது.

அதன்பிறகு மொழித்தீர்மானம் அண்ணா அவர் களால் மொழியப் பட்ட நாளான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 23.1.1968 அன்று பேரவைத் தலைவரால் கூறப்பட்டது. அக்குறளாவது —

"தூங்காமை, கல்வி, துணிஉடமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு"

அன்று முதல் தொடர்ந்து தினந்தோறும் அவை நிகழ்ச்சிகள் தொடங்கும் போது குறள் கூறி தொடங்குவது மரபானது.

பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார் இங்கிலாந் தில் பார் அட் லா படித்தவர். அவர் சட்டப் பேரவையில் பார் அட் லா உடையுடன் நுழைவது கம்பீரமாக இருக்கும்.

அந்த உடையில் அவையினருக்கு குறள் முழக்கம் செய்து நிகழ்ச்சிகளைத் தொடங்குவார்.

கீழ்ச்சபை, 'சட்டமன்றப் பேரவையாகவும்' மேல்சபை 'சட்டமன்ற மேலவையாகவும்' 1967ஆம் ஆண்டு மொழி மாற்றம் செய்யப்பட்டாலும் அந்தப் பெயரை பெறுவதற்கு முன்பு அதனுடைய பரிணாம வளர்ச்சி என்ன என்பதைப் பார்ப்போம் அப்போதுதான் அண்ணாவின் தமிழார்வம், மொழிப்பற்று விளங்கும்.

1862ஆம் ஆண்டு "கவுன்சில்" தோற்றுவிக்கப்பட்ட நேரத்தில் அவ்வவை தமிழில் "சட்ட நிரூபண சபை" என்று அழைக்கப்பட்டு வந்தது. அம் மொழி பெயர்ப்பு 1937 வரை நிலைத்து இருந்தது.

உதாரணமாக 1892ஆம் ஆண்டு மேலவைக்கு தேர்தல் நடைபெற்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சுதேசமித்திரன் இதழ் தனது 5.8.1893 தேதியிட்ட தலையங்கத்தில் "சட்ட நிரூபண சபை" என்று குறிப்பிட்டு எழுதியது.

"இப்போது புதிய நிபந்தனைகளின்படி இச்சென்னை சட்ட நிரூபண சபைக்கு மெம்பராக வேண்டுமென்று பிரயத்தனப்படும் சுதேசிகள் அநேகமாய் எவரும் வக்கீல்களே. வடக்கே சுப்பாராவும் சபாபதி முதலியாரும் வக்கீல்களே. தஞ்சை ஜில்லா சாமிநாத ஐயரும், கல்யாண சுந்தர ஐயரும் வக்கீல்களே. சென்னை முனிசிபாலிடியின் ரங்கய்ய நாயுடுவும் வக்கீலே. இப்படி வெறும் வக்கீல்கள் அச்சபைக்கு நியமிக்கப்பட்டு வந்தால் கௌரவம் அச்சபைக்குக் குறைவுபடும். மேலும் கவர்ன்மெண்டார் இங்கு ஜனங்களுக்காக செய்யப்படும் வேலைகள் எல்லாம் வக்கீல்களே செய்து முடிக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள், இச்சமயத்தில் அங்கும் இங்குமுள்ள மற்றத் தொழிலாளர்களை நமது தேசத்தார் சட்ட நிரூபண சபைக்கு நியமிக்கவேண்டும்" என்று எழுதியது.

1937ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு இரு அவைகள் தோற்றுவிக்கப்பட்டபோது அசெம்பிளிக்கு "கீழ்சபை (Lower House) என்றும், கவுன்சிலுக்கு "மேல் சபை" (Upper House) என்றும் மொழி பெயர்க்கப்பட்டு அச்சொற்கள் அவை நிகழ்ச்சிகளில் கையாளப்பட்டன.

அண்ணா காலத்தில் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை எனும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சட்டமன்றங்களின் தனித்தன்மையை உயர்த்திக் காட்டின. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் அதிக உறுப்பினர் களைக் கொண்டும் விளங்குவதால் சட்டசபை 'பேரவை' ஆயிற்று. அதேபோன்று ஆன்றோர் சான்றோர் கொண்டு விளங்கிய மேல்சபை — "மேலோர் சபை" மேலவை ஆயிற்று.

இரண்டும் சேர்ந்தது 'சட்டமன்றம்' என்றும் நல்ல தமிழில் வழங்கத் தொடங்கியது. அது மட்டுமின்றி சபா நாயகர் என இதுவரை அழைக்கப்பட்டு வந்தது பெயர் மாற்றம் பெற்று 'பேரவைத் தலைவராகவும்', சேர்மேன் என்பது 'மேலவைத் தலைவராகவும்' வழங்கத் தலைப் பட்டன. கவர்னர் 'ஆளுநர்' ஆனார்.

அங்கத்தினர் 'உறுப்பினர்' என்றும், மந்திரி 'அமைச்சர்' என்றும், கனம் 'மாண்பாகவும்' மாறியது. மசோதா 'சட்ட முன்வடிவு' எனவும், பிரேரணை 'தீர்மானம்' எனவும் ஆகியது. நல்ல தூய தமிழ்ச் சொற்கள் பேரவையிலும் மேலவையிலும் எதிரொலிக்கத் தொடங்கின. அதற்கு பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனாரின் பேரவை விதிகளின் மொழி பெயர்ப்பும் காரணமாகும்.

அழகு தமிழில் 'அவை'களின் பெயரை அமைத்தது வருங்கால தலைமுறையினர், அண்ணா அடிக்கடி கூறுவது போல் "நம் பேரக் குழந்தைகள், எனது தாத்தாவின் காலத்தில் இப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று பெருமை பேசவேண்டும்" என்ற வகையில் அமைந்தது.

1956ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் அமலுக்கு வந்தபோது சில தமிழ்ச்சொற்கள் புகுத்தப் பட்டன. உதாரணமாக பட்ஜெட் "நிதிநிலை அறிக்கை" என்றாயிற்று. இருப்பினும் சட்டமுன் வடிவுகளும் மற்றவையும் அவையின் முடிவுக்கு விடப்படும் போது ஆங்கில வார்த்தையிலேயே சொல்லப்பட்டு வந்தன. சில நேரங்களில் தமிழிலும் சொல்லத் தலைப்பட்டனர்.

இருப்பினும் அண்ணா பொறுப்பேற்ற பிறகுதான் இம்முறை மாற்றப்பட்டு தமிழிலேயே கூறி வாக்கெடுப்புக்கு விடப்படும் நிலை ஏற்பட்டது. "Ayes" என்பதற்கு ஏற்போர் என்றும் "Noes" என்பதற்கு மறுப்போர் என்றும் "Neutral" என்பதற்கு நடுநிலை வகிப்போர் எனவும் மொழி பெயர்க்கப்பட்டு, பேரவைத் தலைவர், தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்க. தீர்மானத்தை எதிர்ப்போர் 'இல்லை' என்க என்று கூறியவுடன் உறுப்பினரின் குர்லொலியை கொண்டு "ஏற்போரே" அதிகம் என்று கருதுகிறேன். ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது என்று கூறும் அளவுக்கு பேரவை மேலவை நிகழ்ச்சிகளில் தமிழ் ஆட்சி செலுத்தியது. இது ஒரு பெரிய மாற்றமாகும்.

கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் வழக்கம் ஏற்பட்டு சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் அருளிய பன்னிரு திருமுறை தேவாரப் பதிகங்கள் மற்றும் ஆழ்வார் பாசுரங்கள் ஓதப்பட்டன.

சென்னை அரசு சின்னத்திலுள்ள "சத்தியமே ஜெயதே" எனும் வாக்கியம் தூய தமிழில் "வாய்மையே வெல்லும்" என்று மாற்றப்பட்டது. அதன் விபரம் கேள்வி பதில் பகுதியில் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. (ப. 203–207)

சென்னை மாகாணம் "தமிழ்நாடு" எனும் பழம் பெரும் பெயரைப் பெற்று வெற்றி நடை போட்டு வருகிறது. அதற்கு காரணகர்த்தா நமது அறிஞர் அண்ணா ஆவார்கள். இது பற்றிய முழு விவரம் முதல் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

17.8.1968 அன்று முதல் துணை விவர அறிக்கையினை அளித்து அண்ணா உரையாற்றுகையில் "உயரிய கலைத் திறனும் தொழில் நுட்பத் திறனும் வாய்ந்தத் தமிழ் படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் முழு நீளத் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிய இம்மன்றத்தினர் களிப்படை வார்கள் என நம்புகிறேன்.

1967ல் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுக்கு நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் அளவிற்கு சிறு சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் பரிசுகள் அளிக்கப் படும். நமது மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சி களை சித்தரிக்கின்ற செய்திக் கதிர் ஒன்றை திங்கள் தோறும் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றையும் அரசுத் தொடங்கி யுள்ளது" என்றும் அண்ணா கூறினார்.

தமிழ் வளர்ச்சியில் அக்கரை காட்டிய அண்ணாவிற்கு இந்தித் திணிப்பில் இருந்து மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பையும் மக்கள் அண்ணாவின் தலையில் சுமத்தினர். தமிழக அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் ஒருமைப்படுத்தி இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில் வெற்றி கண்டார். இந்தித் திணிப்பில் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அண்ணா எடுத்த முடிவின் பயனேயாகும். இது குறித்து விரிவாக இப்போது காணலாம்.



அண்ணா முதலமைச்சராக ஆளுநர் உஜ்ஜல் சிங் முன்பு பதவி ஏற்பு (6-3-67)



தமிழக முதலமைச்சர் அண்ணாவின் அமைச்சரவை : அமர்ந்திருப்போர் கே.ஏ. மதியழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணா, ஆளுநர் உஜ்ஜல் சிங், திருமதி உஜ்ஜல் சிங், கலைஞர் மு. கருணாநிதி, சத்தியவாணி முத்து.

நிற்போர் : எஸ். மாதவன், எஸ்.ஜே. சாதிக் பாட்சா, மா. முத்துசாமி, கே. கோவிந்தசாமி

முதலமைச்சர் அறையில் அணணா



படியரிசித் திட்டத்தைத் தொடங்கி வைத்தல் (15.5.67)

யேல் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம்



போப் அவர்களை வாடிகன் நகரில் சந்தித்தல்



அண்ணா மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்பு (24.4.68)

முதலமைச்சர் அண்ணா, சார்ஜெண்ட் கோபாலகிருஷ்ணன்,
ந. முடிகோபதி (நூலாசிரியர்), கி.கு. அழகர்சாமி (மேலவைச் செயலாளர்),
எம்.ஏ. மாணிக்கவேலு (மேலவைத் தலைவர்)

பேரவையில் அண்ணா நிதிநிலை அறிக்கையினை அளித்தல்

4

இந்தி எதிர்ப்பு

"இனி இந்தியில்லை - மும்மொழி திட்டம் இல்லை" என்ற தீர்மானத்தை சட்டமன்றத்தில் நான் படித்தபோது என்னுடைய உள்ளத்தில் பழைய நினைவுகள் எல்லாம் பொங்கிக் கொந்தளித்தன. அனாதைப் பிள்ளைகளாக நாங்கள் இந்தியை எதிர்த்து அலைந்த காட்சிகள் என் நினைவுக்கு வந்தன. எங்களால் மட்டுமே அந்த மகிழ்ச்சியை உணரமுடியும்.

தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகாலமாக இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக செய்யப்பட்ட தியாகமெல்லாம் ஒரு வடிவம் எடுத்து வெற்றியைத் தேடித் தந்த நிலை இது. அந்த நாள்தான் எங்கள் இன்பக்கனவுகள் நனவான நாள்" **- அண்ணா**

சுதந்திரப் போராட்ட காலங்களிலிருந்தே வட இந்தியர் இந்தி மொழியினை தமிழ்நாட்டில் திணிக்க முயன்றதும், தமிழ் நாட்டில் இருந்த அரசியல் தலைவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தொடர்ந்து போராடி வந்ததும் யாவரும் அறிந்ததே. அதிலும், தந்தை பெரியார் அவர்களும் அண்ணா அவர்களும் திராவிட கழகத் தொண்டர்களும் இந்தி எதிர்ப்புப் போரில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டு வந்தனர். திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த திராவிட முன்னேற்றக்

கழகமும் இதேக் கொள்கையை கடைபிடித்து வந்தது. இந்தி மொழி வேண்டாம் என்பதில் அண்ணா அவர்கள் உறுதியாக இருந்தார். இக்கொள்கையை மாநிலங்களவை உறுப்பினராக இருந்த போதும், பேரவை, மேலவை விவாதங்களிலும் வலியுறுத்திப் பேசி வந்தார்.

அண்ணா அவர்கள் 2.5.1963 அன்று மாநிலங்கள வையில் ஆற்றிய உரை வருமாறு:

"இம்மொழிப் பிரச்சினையில் எடுக்கப்படக் கூடிய முடிவின் மீதுதான் பொதுவாக தென்னகத்தின் குறிப்பாகத் தமிழகத்தின் எதிர்கால அரசியல் பிணைக்கப்பட்டிருக் கிறது. இந்தியாவில் வழங்கபட்டு வருகின்ற மொழிகளில் ஏதாவது ஒரு மொழி இந்தியாவில் பொது மொழியாக இருக்கவேண்டும் என்ற கருத்துக்கு நான் உட்ன்பட்வில்லை. இந்தியா ஒரே நாடு என்ற நிலையில் இருப்பதல்ல. அது ஒரு ஐக்கிய நாடு என்ற அமைப்புடன் விளங்கி வருவதாகும். இதுவுமன்றி இந்திய சமூகம் பல்வேறு இனங்களைக் கொண்டிருக்கும் ஒன்றாகும். நமது அரசியல மைப்பு பலவற்றை இணைத்திருக்கக் கூடிய இணைப்பு முறையாகும்.

பல இன மக்களைக் கொண்ட சமூக அமைப்பிலும், இணைப்பு முறை அரசியலமைப்பிலும் ஒரே ஒரு பொது மொழி தேவை என வாதாடுவது, நமது சமூகத்தின் சில பகுதி மக்களுக்கு எதிர்பாராத அநீதியையும் இக்கட்டுகளை யும் ஏற்படுத்திவிடும். பலப்பல இன மக்களையும், மொழி வழி மக்களையும் கொண்டிருக்கின்ற நாடு இந்தியா. இந்தியா ஒரு துணைக் கண்ட்ம் என மிகப் பொருத்தமாகப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே ஆட்சி மொழியைப் பொறுத்த வரையில் செயல் படத்தக்க ஒரு பொது மொழியை உருவாக்கிக் கொள்ள நம்மால் இயலவில்லை.

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தியாவின் இணை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடித்திருக்கும் என

பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு கூறிய உறுதி மொழி மசோதாவில் இல்லை. இம் மசோதா முழுமை யானதாக இல்லை. இரு பொருள் கொள்ளும் படியாக இது அமைந்துள்ளது. வெறுப்பும் பகைமையும் வளராமல் தடுக்க மொழிச் சிக்கல் குறித்து மீண்டும் சிந்தித்து மறு ஆய்வு செய்ய வேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் இப்போதுள்ள நிலையே நீட்டிக்கச் செய்யவேண்டும். நமது அரசியல் சட்டம் வளைந்து கொடுக்கும் தன்மையது. நமது அரசியல் முறை ஜனநாயகமே.

தொன்மையான மொழி படைத்த தமிழ் நாட்டு மக்களின் உணர்ச்சிகளை மதிக்க வேண்டும். ஆட்சி மொழியாக இந்தியைத் திணித்தால் அரசியல் கொந்தளிப்பு ஏற்படும் என்றே தமிழர்கள் அனைவரும் கருதுகின்றார்கள்.

இந்தி மொழி திணிக்கப்பட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்து முழு மூச்சாக ஓயாமல் போராடும். ஓயாமல் கடுமையாக கிளர்ச்சிகள் நடத்தும். அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் எதுவாக இருந்தாலும், சரி - நாங்கள் ஓயாமல் போராடுவோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி என்று அல்லாமல், இந்தித் தொல்லையையும், அதன் விளைவுகளையும் உணர்ந்த தென்னக மக்களின் அதிகார பற்றற்ற தூதுவன் என்கிற முறையில் பேசுவதாக கொண்டு உள்துறை அமைச்சர் ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

ஆங்கில மொழி வசதியான சாதனமாகவும் அறிவின் திறவுகோலாகவும் திகழ்கிறது. எனவே, அது நீடிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக தமிழ் இருப்பதைக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். இங்கேதான் நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். என் மாநிலத்தில் நான் தமிழில் தான் எழுதவும், பேசவும் செய்கிறேன்.

தமிழின் தொன்மையை இந்தியோடு ஒப்பிட்டால், தமிழ் எவ்வளவு பெருமை படைத்தது என்பதையறியலாம். தமிழ் 5000 ஆண்டுகட்கு முந்தியது. 5000 ஆண்டுகளுக்குப் பழமையான தொல்காப்பியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை அண்மையில் குடியரசுத் தலைவர் வெளியிட்டார். தமிழர்கள் சிறந்த பாரம்பர்யம் உள்ள வர்கள்.

ஆங்கில மொழி மீது கொண்டுள்ள அளவுக்கு அதிகமான மோகத்தினாலோ, எனது தாய் மொழியை ஆங்கிலத்திற்கு உயர்ந்த இடம் அளிக்கவேண்டுமென்ற விருப்பத்தினாலோ? ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆங்கிலம் இன்றும் மிகவும் வசதியான ஊடக மொழியாக இருப்பதனால்தான் நான் இவ்விதம் கூறுகின்றேன். எனவே ஆங்கிலமே ஆட்சி மொழியாக தொடர்ந்து இருக்க வேண்டும்."

ஆட்சி மொழி குறித்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில், பிரதமர் நேரு பேசுகையில், "திரு. அண்ணா துரையின் கருத்தை நான் முழுக்க ஒப்புக் கொள்கிறேன்." என்றார்.

அப்போதும் இந்தி வராது என்று உறுதி மொழி தரப்படவில்லை.

மக்களவையில் ஆட்சி மொழி சட்ட முன்வடிவு 27.11.67ல் மொழியப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. அறிமுக நிலையிலேயே அதற்கு பெரிய எதிர்ப்பு இருந்தது. காங்கிரசில் இருந்து சிலர் எதிர்த்து ஓட்டளிப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஓட்டளிப்பின்போது குழப்பத்தின் உச்சக்கட்டம் காரணமாகவோ என்னவோ பிரதமர் இந்திராகாந்தி தனது சொந்த விருப்பத்திற்கு மாறாக மின் சார பொத்தானை அழுத்தி மசோதாவிற்கு எதிராக வாக்களித்தார்.

பின்னர் சட்டமுன்முடிவு அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் இந்தி மொழியுடன் ஆங்கிலமும் ஆட்சி

மொழியாக காலவரம்பின்றி நீடிக்க வகை செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்தி மட்டுமே பயின்றோர் மத்திய அரசு அலுவலராக வருவதற்கு வழிசெய்யும் உத்தியோகப் பற்றற்றத் தீர்மானம் ஒன்றும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் தமிழ் நாட்டில் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடு பட்டனர்.

இந்த வரிசையில்தான் அண்ணா அவர்கள் 23.1.1968ல் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து உரையாற்றினார். மொழிப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காகவே சட்டமன்றம் தனி ஒரு நாளில் கூடியது.

அன்று அண்ணா ஆற்றிய உரை வரலாற்று சிறப்பு மிக்க உரையாகும். அது வருமாறு:

...வாருங்கள் 1937க்கு. இந்திக்குத் தொடர்பு மொழி என்றா பெயர்? மதிப்பிற்குரியவர் எல்லாத் தகுதிகளும் உடையவர் என்று ஒப்புக் கொள்ளப்பட்டவர் அன்று இந்தியை தேசிய மொழி என்று சொன்னார்கள். கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று சொன்னார்கள்... அதைப் படித்தால்தான் இந்தியாவில் வாழலாம் என்றார்கள். அதைப் படிக்காதவர்கள் தேசத் துரோகிகள் என்றார்கள்.

தேசிய மொழி என்று கருதப்பட்ட இந்தி காங்கிரசினாலே புகுத்தப்பட்டது. உங்களால் ஏன் அதிலிருந்து விலக முடியவில்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தியை சுயராஜ்யம் வருவதற்கு முன்னாலே இருந்து ஆதரித்து வந்திருக்கிறீர்கள். மகாத்மா காந்தியின் தேசிய நிர்மாணத் திட்டங்களில் அது ஒன்று. அப்போது நான் எட்டாவது ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது 'இந்தி தமிழ் சுய போதினி' என்ற புத்தகம் இருக்கும். அதைக் கையில் வைத்துக்கொண்டு இருப்பதும், ஒரு காலணாவில் ஓட்டை

போட்டு ஒரு குச்சியைச் சொருகி தக்ளி வைத்துக் கொண்டிருப்பதும் நம்மாலான தேசபக்தி என்று கருதி மாணவர்கள் எல்லாம் வைத்துக் கொள்வார்கள். நானும் வைத்துக் கொண்டேன்.

தமிழ்நாட்டுப் புலவர்கள், பெரும் பேராசிரியர்கள், மறைந்த சோமசுந்தர பாரதியார், மறைந்த சேதுப்பிள்ளை, மறைந்த உமா மகேசுவரம் பிள்ளை, மறைந்த மறைமலை யடிகள் இன்னும் நல்ல வேளையாக நம்மிடையே இருந்து வரும் பெரியார் இராமசாமி ஆகிய இப்படிப் பட்டவர்கள் எல்லாம் சேர்ந்த அந்த நாட்களில் இந்தியை எதிர்த்து ஆயிரம் பேர் சிறை சென்றார்கள். அதிலே இரண்டு பேர் மருத்துவமனையில் இறந்து பட்டார்கள்.

அதற்குப் பிறகு கட்டாய இந்தி என்பது எடுபட்டு விருப்பப் பாடம் என்றாயிற்று. மறுபடியும் ஓமந்தூர் இராசாமி ரெட்டியார் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் முதலமைச்சராக வந்தபோது மறுபடியும் இந்தி புகுத்தப் பட்டது. நாங்கள் மறுபடியும் போராட்டத்தைத் துவக்கினோம். பலர் சிறைச்சாலைக்குச் சென்றார்கள்.

பின்னர் இந்திக்கு இந்திய அரசாங்கத்தில் தேசிய மொழிகள் என்று சொல்லுவதற்குப் பதிலாக ஆட்சி மொழி என்று பெயர் கொடுக்கப்பட்டது. "ஆட்சி மொழி" என்றால் இந்திக்காரர்கள் தானா எங்களை ஆள வேண்டும் என்ற அரசியல் கிளர்ச்சி எழுந்த காரணத்தால் ஆட்சி மொழி ஏன்பதையும் மாற்றி "இது ஆட்சி மொழி என்பது கூட அல்ல, இது முனைப்பு மொழி என்ற பெயர் கொடுக்கப் பட்டது.

இப்போது பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இந்தி மட்டும் தான் இணைப்பு மொழி என்று சொல்லவில்லை. இந்தி இந்தியாவுக்குள் இணைப்பு மொழி, ஆங்கிலம் உலகத்திற்கு இணைப்புமொழி என்று இணைப்பு மொழியை இரண்டாகச் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தை

மற்றவர்கள் எல்லாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒவவொரு கட்டத்தைக் குறிப்பதாகும்.

நாங்கள் அதற்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில், நொந்து போனவர்கள் என்ற முறையில், கொடுமைகளைத் தாங்கிக் கொண்டவர்கள் என்ற முறையில் இன்றைய தினம் 'இந்திப்பாடம் இனி இல்லை' என்று நான் தீர்மானத்தைப் படித்தபோது அதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் தான் உணர்ந்து கொள்ளமுடியுமே தவிர, அதற்காக கஷ்டப்படாதவர் களால் உணர்ந்து கொள்ள முடியாது.

இந்திய அரசியல் சட்டத்தில் இந்தியைப் புகுத்தியது காங்கிரஸ். அன்று முதற்கொண்டு எதிர்த்துக் கொண்டு வருகிறோம். அதுபற்றி நேரு உறுதி மொழியளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக அப்போது வர இருந்த குடியரசுத் தலைவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டும் நம்முடைய மனக்கொதிப்பை தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு குடியரசுத் தலைவரைப் பார்த்து உறுதி மொழி தருவதாக அவர் சொல்லிய பிறகு, நாங்கள் அதற்கு மேல் அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டாமென்று முடிவு செய்தோம். அதற்குப் பிறகு நேருவுடைய உறுதிமொழி சீனப்படையெடுப்பு நேரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது.

அப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சென்னைக் கடற் கரையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. ராஜாஜியும் நானும் கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் அவர்கள் சொன்னார்கள். "பல பேர் ஆச்சரியப்படுகிறார்கள் நானும் காமராஜரும் ஒன்றாக உட்கார்ந்திருக்க வேண்டியிருக்க, நானும் அண்ணாத்துரையும் பக்கத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருப்பதைக் கண்டு ஊரே ஆச்சரியப் படுகிறது. ஆனால் அதிலே உண்மையான பாடம் இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் "English unites and

Hindi divides" என்பதை புரிந்து கொள்ளவேண்டும் என்று ராஜாஜி அவர்கள் சொன்னார்கள். "இந்திப் பிரச்சினையில் காமராஜ் பிரிய வேண்டிவந்தது, ஆங்கிலம் எங்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்த்தது என்றார்கள்.

அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவச்சலம் அவர்கள் நாங்கள் எல்லாம் "may, shall" என்பதற்காக தகராறு இட்டுக் கொண்டிருந்த நேரத்தில், டில்லி பட்டணத்திற்கு வந்து பத்திரிக்கை நிருபர்களை சந்தித்த போது 'may' இருந்தாலே போதும். அதுவே பூரண திருப்தியை அளிக்கிறது என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். (அப்போது அண்ணா நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லியில் இருந்தார்.)

அதைத் தொடர்ந்து 1965ல் மாணவர்கள் கிளர்ச்சி நடைபெற்றது. மாணவர்கள் கிளர்ச்சி என்றவுடன் 1965ல் நடந்த மாணவர்கள் கிளர்ச்சிக்கும் இப்போது நடப்பதற்கும் இடையே இருக்கின்ற வேற்றுமைகளை நாம் மறந்து விடுகின்றோம். 1965ல் மாணவர்கள் கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவிக்கவில்லை. ஜனவரி 25ஆம் தேதி மட்டும் இந்தி புகுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் துக்கநாளாகக் கொண்டாட வேண்டுமென்று அறிவித்தார்கள். நாங்கள் ஜனவரி 26ஆம் தேதி குடியரசு தினமாக இருந்தாலும் அன்றைய தினம்தான் இந்தி புகுத்தப்பட்ட காரணத்தால் அந்த ஆண்டு அந்த நாள் துக்க தினமாகக் கொண்டாடப்படவேண்டும் என்று பகிரங்கமாகச் சொன்னோம்.

எங்களுடைய வீடுகள் தாக்கப்பட்டன. எங்களுடைய பத்திரிக்கை நிலையங்கள் சூறையாடப்பட்டன. ஒரு குற்றமும் சுமத்த முடியாத நிலையில் கருணாநிதி அவர்களை பாளையங்கோட்டை சிறையிலே அடைத் தார்கள். லாரியில் அழைத்துச் சென்றதாக திரு ஆதிமூலம் அவர்கள் சொல்லுகிறார்கள். மோட்டார் இல்லாத குறையாக இருக்கலாம். அல்லது அவர் அவ்வளவுக்குத்

தான் லாயக்கு என்று எண்ணி இருக்கலாம். இப்போது நான் அதற்காக குறைபட்டுக் கொள்ளவில்லை. லாரி கூட ஒரு வாகனந்தான்.

இதற்கிடையில் 25ஆம் தேதியன்று மாணவர்கள் மதுரையில் ஊர்வலமாக வந்தபோது அர்பன் காங்கிரஸ் கமிட்டி ஆபிசில் இருந்து ஒருவர் ஓடிவந்து கத்தியால் குத்தினார். சிதம்பரத்தில் மாணவர்கள் ஊர்வலமாக வந்த போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு ராஜேந்திரன் என்னும் மாணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சென்னையில் மாணவர்கள் ஊர்வலமாக வந்து முதலமைச்சர் பக்தவச்சலத்தைப் பேட்டி காணவேண்டு மென்று வந்த நேரத்தில் அவர் பார்ப்பதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார். இதற்கிடையில் ஒவ்வொரு ஊரிலும் தி.மு.க. தோழர்கள்-என் நினைவு சரியாக இருக்குமானால் 5000 பேராவது சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டனர். முதல் நாளே துப்பாக்கிப் பிரயோகம். முதல் நாளே வேட்டை.

1965ம்..1967ம்

அப்போது நம் மாணவ நண்பர்கள் திரு பக்தவத்சலம் அவர்களைப் பார்க்கவேண்டும் என்றுச் சொன்னதற்கு பேட்டி கிடைக்கவில்லை. எனக்கிருக்கிற நிலை சில மாணவர்களை நான் பார்க்கவேண்டும் என்று நினைக்கிறேன். அவர்கள் எனக்குப் பேட்டி கொடுக்க மறுக்கிறார்கள்.

இதுவரை ஐந்து இரவுகளாவது மாணவர்களிடம் பேசுவதில் செலவழித்து இருப்பேன். காங்கிரஸ் மேடையிலே பேசும் மாணவர்களும் கூட வந்தார்கள். 20, 25 தோழர்கள் வந்தார்கள்.

என்னைப் பார்த்து 10, 15 ஆண்டுகள் அமைச்சராக இருந்து டிபார்ட்மெண்ட் தலைவர்களைக் கூப்பிட்டு அது என்னவாயிற்று, இது என்னவாயிற்று என்று கேட்பது போல்

உங்கள் மொழிக் கொள்கை என்ன? இது பற்றி உங்கள் திட்டம் என்ன? தெளிவாகச் சொல்லுங்கள் என்றார்கள். நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால் அவர்கள் நாளைக்கு ஒரு வேலைக்குப் போய் அவர்களை மேலதிகாரிகள் இதே குரலில் கேட்டால் அன்று நினைவிற்கு வரும் என்று நான் கேட்டுக் கொண்டு இருந்தேன். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் விளக்கங்களைக் கொடுத்தேன். இதுதான் 65ல் இருந்த நிலைக்கும் 67ல் உள்ள நிலைக்கும் உள்ள வித்தியாசம்.

அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவா மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள். திரு கருத்திருமன் அவர்கள் மும்மொழி திட்டம் என்று சொல்லுகிறீர்கள். மாணவர்களுக்காகவா இதைச் செய்வது? என்று கேட்கிறார்கள். மாணவர்கள் யார்? "அவர்கள் நம் ரத்தத்தின் ரத்தம். அவர்களை நம் குடும்பத்துப் பிள்ளைகள். அவர்கள் நம் எதிர்காலத்தின் உருவங்கள். அவர்கள் ஒன்றை விரும்புகிறார்கள் என்றால் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயகக் கடமை என்று கருதுகிறேன்."

பின்னர் அரசுத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. உடன் உறுப்பினர்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் கையொலி எழுப்ப ஆரவாரப் பேரொலிக்கிடையே தீர்மானம் நிறைவேறியது.

இது குறித்து அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "நான் என்னாலானதைச் செய்தேன். டெல்லி அரசு தன்னாலானதைச் செய்யட்டும்" என்று கூறினார். இந்தி ஒழிப்புப் பற்றிய புதியத் தீர்மானம் தமிழக அரசுக்கும் - டெல்லி அரசுக்கும் ஊறுவிளைக்குமா, இதற்காக எந்தச் சட்டப்படி நம்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று அங்குள்ள நிபுணர்கள் ஆலோசிக்கக் கூடும். மத்திய அரசு நடவடிக்கை எடுக்க விரும்பினால்

அது, எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் தயாராக இருக்கிறேன், அவர்கள் என்ன செய்திட முடியும் சிறையில் தள்ளக் கூடும். சிறை எனக்குப் புதியது அல்ல. நான் எம்.ஏ. படித்த இளைஞனாக இருந்தபோதும் சிறை சென்றிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினனாக இருந்தபோதும் சிறை சென்றிருக்கிறேன். இப்பொழுது அமைச்சனாக இருக்கும் பொழுதும் காங்கிரஸ் நண்பர்களால் சிறை செல்லும் வாய்ப்பு கிடைக்கும் என்றால் மிக்க மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக் கொள்வேன். அது என் வாழ்க்கை வரலாற்றிலேயே சிகரமான அத்தியாயமாக இருக்கும்.

அவர்கள் இன்னொன்றும் செய்யக்கூடும். இந்தியைப் பள்ளிகளிலிருந்து அகற்றியது அரசியல் சட்டத்திற்கும் உட்பட்டதல்ல என்று சொல்லி தமிழக அரசைக் கலைக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் முயன்றால் அதற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன்.

1937ஆம் ஆண்டு தொடங்கிய இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் தான் இப்பொழுது சட்ட மன்றத்தில், இரு மொழி திட்டத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே ஒருமுறை கூறியபடி ஒவ்வொருவருக்கும் ஒருமுறை தான் உயிர் போகும் இரு முறை போகாது. அதிலும் இந்தக் காரியத்திற்காக நம்முடைய உயிர் போவதானால் நல்ல காரியத்திற்கு நம்முடைய உயிர் போகிறது என்று நிச்சயம் மகிழ்ச்சி அடைவோம்" என்று வீர உரையினை ஒரு பொதுக் கூட்டத்தில் ஆற்றினார்.

5

திராவிட நாடு

"என்னுடைய இயற்கையான சுபாவமே பல காரியங்களை செய்யாது விடுவேனே தவிர, செய்கிற காரியம் நல்லதாக அமையவும். செய்கிற காரியம் தவறாக இருக்கக் கூடாது என்பதிலும் நான் பயிற்சி பெற்றவன்."

– அண்ணா

வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே திராவிட நாடு பிரச்சினைக்கு வித்தூரண்றப்பட்டது. 11.9.1938ல் தமிழ்நாடு தமிழருக்கே என்ற போர் பரணி பாடப்பட்டது. அதே ஆண்டு சென்னையில் நீதிக்கட்சியின் மாகாண மாநாட்டில் தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது. அதற்கு அடுத்த டிசம்பர் மாதம் தமிழ்நாடு தமிழருக்கே என்ற திட்டத்தை நாட்டு மக்களுக்கு விளக்க ஒரு பெரிய விழாவே எடுக்கப்பட்டது. 1940ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2-ந் தேதி அண்ணாவின் பிறப்பிடமான காஞ்சிபுரத்தில் திராவிட நாடு பிரிவினை மாநாடு நடத்தப் பட்டது. பின்னர் பிரிவினைக் குழு ஒன்று அமைக்கப் பட்டது.

ஆயினும் 24.8.1940 மற்றும் 25.8.1940ல்தான் திருவாரூரில் கூடிய மாகாண மாநாட்டில் திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்ற திட்டம் தீர்மான வடிவில் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தினை முன் மொழிந்து உரையாற்றியவர் அறிஞர் அண்ணா ஆவார்கள்.

நான்கு ஆண்டுகள் கழித்து நடைபெற்ற சேலம் மாநாட்டில் திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்பது திராவிடர் கழகத்தின் மூலாதார திட்டம் ஆக்கப் பட்டதுடன் கட்சியின் பெயரே திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டது. 21.9.1945ல் நடைபெற்ற திருச்சி மாகாண மாநாட்டில் திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டது. 1.7.1947 அன்று, சுதந்திரம் அடைவதற்கு 45 நாட்களுக்கு முன்பு திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாட்டம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு ஈராண்டு கழித்து, பெரியார் பிறந்த நாளில், அதாவது, 17.9.1949 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்தது.

பேரறிஞர் அண்ணா அதன் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரியார் இருக்கும் வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தலைவராக யாரும் இருக்கக் கூடாது என்பது அறிஞர் அண்ணாவின் பிரதிங் ஜையாகும். பெரியார் தான் தலைவர் என்ற அளவில் பெரியாரிடம் பற்றும் பாசமும் கடைசி வரை வைத்திருந்தவர் அண்ணா ஆவார்கள். சென்னை ராபின் சன் பூங்காவில் கொட்டும் மழையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்கி வைத்து அண்ணா 90 நிமிடங்கள் பேசினார்.

1952ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் நடை பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அத்தேர்தலில் போட்டியிடவில்லை.

1956ல் நடைபெற்ற திருச்சி மாநாட்டில் தி.மு.க தேர்தலில் போட்டியிடலாமா வேண்டாமா என்ற கோரிக்கை வைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும் பான்மையான மக்கள் இரண்டாவது பொதுத் தேர்தலில் கழகம் போட்டியிடலாம் என்று முடிவு செய்தனர். அம்முடிவிற்கிணங்க, கழகம் சட்டமன்ற பேரவைக்கு

போட்டியிட்டு 15 இடங்களிலும் மக்களவைக்கு போட்டியிட்டு இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றது. தமிழ்நாடு சட்டமன்ற கட்சித் தலைவராக அண்ணா தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அண்ணா 1957க்கும் 1962க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டு காலங்களில் சட்டசபையில் பலமுறை திராவிட நாடு கோரிக்கையை பற்றிப் பேசினார். இதுநாள் வரை பட்டி தொட்டி எங்கும் மக்கள் மன்றத்தில் ரீங்காரம் இட்டுக் கொண்டிருந்த திராவிட நாடு எனும் பிரச்சினை இப்பொழுது சட்டமன்றத்திலும் எதிரொலிக்க ஆரம்பித்தது. அண்ணாவின் ஆற்றல் மிகு பேச்சினை கேட்ட நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் ஒருமுறை இன்னும் 15 ஆண்டுகள் நமது நாட்டு பொருளாதாரத்தை உயர்த்த ஒன்று சேர்ந்து பாடுபடுவோமாக. அதன் பிறகும் பொருளாதார மேம்பாடு அடைய முடியவில்லை யென்றால் நானும் திராவிட நாடு கோரிக்கைக்கு ஆதரவு தருகிறேன் என்ற வகையில் கூறினார். அப்போது அவர் ஆற்றிய உரை.

"இன்றைய தமிழக மக்களின் பிரச்சினைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் உணருவார்களேயானால் தனி நாடு வேண்டும் என்ற உங்கள் கோரிக்கை இப்போது முக்கியமான பிரச்சினையல்ல. நாம் எல்லோரும் ஒரு ஐக்கிய இந்தியாவின் அங்கமாக இருக்க சம்மதித்து ஒன்று பட்டு ஒற்றுமையையும், ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முயற்சித்தால் அன்றி குறுகிய காலத்தில் நாட்டு மக்களை எதிர் நோக்கியிருக்கும் எந்தப் பிரச்சினையையும் நாம் தீர்க்க முடியாது.

குறைந்த பட்சம் இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாடு மேலும் துண்டாடப்பட மாட்டாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தவர் உணருவது நல்லது. எத்தனைத் தான் உரத்துக் கூவினாலும், கிளர்ச்சி செய்தாலும் நாட்டுப்

பிரிவினையை யாரும் அனுமதிக்கப் போவதில்லை, எனவே இந்த குறிப்பிட்ட கால கட்டத்தில் திராவிட நாடு வேண்டும் என்ற உங்கள். கோரிக்கை சாத்தியமானதல்ல. இருந்தும் நீங்கள் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபடுவதாகக் கருதினால் நாம் நமது சக்திகளை பாழாக்கிக் கொள்கிறோம் என்றே பொருள்படும்.

ஒரு பத்தாண்டு காலம் இந்தக் கோரிக்கையை மறந்து விடுங்கள். நாம் ஒன்றுபட்டு வேலை செய்யலாம். அந்த பத்தாண்டு கால முடிவில் வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பதை நாங்கள் உணருமாறு செய்தால் பின்னர் நாம் எல்லோரும் கூட்டாகவே, அப்போது நிர்ணயித்துக் கொள்கிற லட்சியத்திற்கு பாடுபடுவோம்.

இக்கருத்துக்கு வேறோர் இடத்தில் அண்ணா அளித்த பதிலுரையாவது:

"நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்குச் சொல்வேன். 10 வருடத்திற்கு சும்மா இருக்கவேண்டுமென்று சொல்லுகிறாரே அவருக்கு நான் பணிவன்போடு சொல்லிக் கொள்வேன். "திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பணி இந்த 10 ஆண்டுகாலத்திலேதான் மிகத் தீவிரம்ாக இருக்கப் போகிறது. இருக்கவேண்டும். ஏட்டிக்குப் போட்டியாக சொல்லுகிறேன் என்று கருதவேண்டாம். துவக்கத்திலேயே சொன்னேன். அவரிடத்திலே எனக்கு நல்ல மதிப்பு இருக்கிறது.

இந்த பத்து வருடத்திலே ஏன் அதிக வேலை யிருக்கிறது என்றால் இந்த 10 வருடத்திற்குப் பிறகு நேரு பண்டிதருடைய கரத்தினுடைய வலிவு எந்த அளவுக்கு இதே நிலையிலே இருக்குமென்று நம்மாலே சொல்ல முடியாது. இன்னும் ஒரு பத்து வருடத்திற்குள் - நேரு பண்டிதருடைய காலத்திற்குள்ளாகவே திராவிட் நாட்டைப் பெற்றால்தான் சமாதானத்தோடு பெறமுடியும். நேருவுக்குப் பிறகு திராவிட நாட்டைப் பெறுவதென்றால் - நண்பர்களே நீங்கள் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்

பலாத்கார வெறிச் செயலுக்குப் பிறகுதான் திராவிட நாடு கிடைக்கும்.

பலாத்கார வெறிச்செயலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நம்பிக்கையோ நாட்டமோ இல்லாத காரணத்தினாலேதான் உலகத்திற்கெல்லாம் நீதி போதிக்கின்றவர் - பஞ்சசீலத்தைப் பாருக்கெல்லாம் அளிக்கின்றவர் - ரஷ்யாவும் அமெரிக்காவும் மோதிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்கின்றவர் - அங்கோரியில் நடைபெற்ற அக்ரமத்தைக் கண்டிக்கின்றவர் - பர்மாவில் நடைபெறும் அமளியை வேண்டாமென்று சொல்லுகின்றவர் - இப்படிப்பட்ட ஒரு நல்லவர் டெல்லியிலே ஆட்சியிலே இருக்கின்ற இந்த காலத்திலேதான் நம்முடைய குறைகளை எடுத்துச்சொல்லி நம்முடைய நாட்டினுடைய விடுதலையை கோருகிறோமே தவிர, இந்தப் பத்து வருடம் சும்மா இருந்துவிட்டு அதற்குப் பிறகு வட நாட்டிலே பிற் காலத்திலே வரக்கூடிய ஒரு இந்து மத மொழி வெறியன் எவனாவது பதவிக்கு வந்து பக்கத்தில் இருக்கிற பாகிஸ்தான் பேரில் வம்புக்காக அவன் படையெடுத்துச் சென்று அவன் நாட்டிலே ஒரு பெரிய அமளியை உண்டியான பிறகு நீங்களும் நானும் திராவிட நாட்டைப் பற்றி நியாயம் கேட்டால் எப்படி கிடைக்கும்?" என்றார்.

1962ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முதல் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் "தாம் ஒரு திராவிடன் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைவ தாகவும், இந்தியாவில் இருந்து தமது மாநிலம் தனித்து இயங்க உரிமை வேண்டுமெனவும் எடுத்து வைத்து வாதாடினார்.

தமது வாதத் திறமையால் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவை முழுவதையுமே தம் வயமாக்கிக்

கொண்டார். அதன் பிறகு நடைபெற்ற விவாதத்தில் குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தை விடுத்து உறுப்பினர் அனைவரும் அண்ணாவின் உரை மீதே தமது வாதப் பிரதிவாதங்களை எடுத்து வைத்தனர். ஒருவரும் பிரிவினையை ஆதரிப்பதாக இல்லை. அனைவரும் எதிர்த்தே பேசினார்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உமா தேவி என்னும் உறுப்பினர் பேசும் போது உயிர் கொடுத்தேனும் பிரிவினையைத் தடுப்போம் என வீராவேசமாகப் பேசினார்.

ஜனசங்க உறுப்பினர் வாஜ்பாய் பேசுகையில் பிரிவினை என்பது இந்தியாவின் அழிவு எனலாம். முஸ்லிம் லீகின் இரண்டு தேசக் கொள்கையைப் போன்றே இது இருக்கிறது என்றார்.

இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்று கூறுவோரிடம் எந்தவித சமரசமும் தேவை இல்லை. இந்தியா முழுவதும் இதை எதிர்த்துப் போரிடவேண்டும். பிரிவினை கேட்பது சட்டப்படி குற்றமாக்கப்பட்டு சரியாக தண்டிக்கப் படவேண்டும் என்று சாடினார்.

அண்ணா உரையாற்றுகையில் "காங்கிரஸ் கட்சியின் பலம் அதனிடத்தில் இல்லை. எதிர்க்கட்சியின் பலவீனத்தில்தான் காங்கிரஸ் கட்சி பலம் இருக்கிறது. எனவே மூன்றாவது பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியில் பெருமிதம் கொள்வதைக் காட்டிலும், ஆளும் கட்சி பணிவையும் ஜனநாயகத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று யோசனை கூறிவிட்டு குடியரசுத் தலைவரின் உரையில் மூன்று முக்கியத் தத்துவங்கள், மிளிர்வதைக் காண்கிறேன் என்றார். ஜனநாயகம், சோஷலிசம், தேசீயம் என்பவையே அவை என்றார். இம்மூன்று தத்துவங்கள் மீதும் தமது கருத்தைத் தெரிவிக்க முற்பட்ட அண்ணா ஜனநாயகத் தத்துவத்தையும் சோஷலிச தத்துவத்தையும் சிறிது நேரம் பல உதாரணங்களைக் காட்டி விளக்கிவிட்டு

தமது பேச்சின் பெரும் பகுதியை தேசியம் என்ற தத்துவத்திற்கே ஒதுக்கி ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார்.

இப்படி தமது கருத்தை ஒன்று இரண்டு மூன்று என்று வரையறுத்துப் பேசும் பழக்கம் உள்ளவர் அண்ணா. இது அவரது தனிசிறப்பியல்பு ஆகும்.

1958ஆம் ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் – எதிர்க்கட்சியின் தலைவர் என்ற வகையில் – "இது வரையில் பேசிய அனைத்து உறுப்பினர் களும் மூன்றுப் பெரியவர்களைப் பற்றி மட்டுமே தமது உரையில் கோடிட்டுக் காண்பித்தனர். 'ஒன்று முன்னாள் கவர்னர்–ஜெனரல் ராஜாஜி பற்றியது. இரண்டாவது பண்டித நேரு பற்றிப் பேசிய கருத்துக்கள். அப்படிப்பட்ட இரண்டு பெரிய தலைவர்களுடன் என்னையும் மூன்றாவதாக இணைத்துப் பேசியது என்று' ஒருவார காலமாக ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசிய உறுப்பினர்களின் கருத்தைத் தொகுத்து அந்தப் பொருள்களின் மீதான விளக்கத்தை வரிசைப்படுத்தி ஒரு மணி நேரம் உரையாற்றினார். இது பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி.

அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு 1967ஆம் ஆண்டு சர்தார் உஜ்ஜல்சிங் ஆளுநராக இருந்த போது ஆற்றிய உரையின் மீது முதலமைச்சர் என்ற வகையில் அண்ணா பதிலளிக்கக்கூடிய பொறுப்பு இருந்தது.

அவ்விவாதத்தின் மீதான பதிலுரையிலும் அண்ணா பேரவையின் உறுப்பினர்களின் பேச்சுக்களை ஒன்பதுப் பிரிவுகளாக பிரித்துக்கொண்டார். அவையாவன:

"கவர்னர் உரை மீதுள்ள விவாதத்தில், உரையாற்றிய வர்களில் பெரும்பாலானவர்கள், அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் பெரும்பாலோர் முதலில் கவர்னரைப் பற்றி பேசியிருக்கிறார்கள். இரண்டாவது

என்னைப் பற்றி பேசியிருக்கிறார்கள். மூன்றாவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேசியிருக் கிறார்கள். நான்காவதாக அந்த உரையிலே எதுவுமே இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள். ஐந்தாவதாக அதிலே புரட்சிகரமான திட்டங்கள் இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள். ஆறாவதாக தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் என்னவாயிற்று என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஏழாவதாக உணவுப் பிரச்சினை பற்றி பேசியிருக் கிறார்கள். எட்டாவதாக கொள்முதல் பற்றி பேசியிருக் கிறார்கள். ஒன்பதாவதாக எங்களுக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ளத் தொடர்பைப் பற்றி பேசியிருக்கிறார்கள் என்று வகைபடுத்திக் கொண்டார்.

இப்படித்தான் லாஸ்கி இங்கிலாந்துப் பாராளு மன்றத்தில் உரையாற்றுவார். அவரது ஆற்றல் என்ன வெனில் தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை ஒன்று இரண்டு மூன்று என்று வரையறுத்து வெளியிடுதலாகும். லாஸ்கி அவர்கள் இங்கிலாந்தின் தொழிற் கட்சித் தலைவர். அவர் சோவியத் நாட்டிலுள்ள மாஸ்கோ, அமெரிக்க நாட்டிலுள்ள யேல், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் வரலாற்றுத்துறை பேராசிரியராகப் பணியாற்றியவர். அரசியல் தொடர்பாக பல நூல்கள் எழுதியவர். அவரது "அரசியல் இலக்கணம்" எனும் நூல் உலக பிரசித்தி பெற்ற நூலாகும்.

இப்படிப்பட்ட வகையில் அண்ணா வகைப்படுத்திப் பேசுவது அவருக்கே உள்ள — இந்திய வரலாற்றில் வேறு எந்தத் தலைவரும் கடைபிடிக்காதத் — தனித்தன்மை யாகும். அவர் ஒரு பிரச்சினையில் எந்த அளவுக்குத் தீவிரமாக இருந்து, ஆழமாக படித்து, கவனித்துப் பேசுகிறார் என்பது இதனால் விளங்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு தமது உரையினை பேரவையில் ஆற்றவேண்டும்,

அதன் தலைவர்கள் எப்படி தொகுத்துப் பேசவேண்டும் என்பதையெல்லாம் அண்ணாவின் உரையைப் படித்து பார்ப்பவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களின் எண்ணங்களை அவையில் எதிரொலிப்பவர்கள். அவர்களுக்கு அவையில் அவைத்தலைவர் ஒதுக்கும் நேரத்தில் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள், மக்களின் உள்ளக் கிடக்கையை எடுத்து இயம்பும்போது இப்படி வகுத்துக்கொண்டு, பிரித்துக் கொண்டு பேசினால் பல விஷயங்களை வேகமாகவும், விரிவாகவும் சொல்லமுடியும். அதன்மூலம் அவையின் கண்ணியத்தையும், அவை உறுப்பினரின் சிறப்புரிமையையும் காக்க ஏதுவாக அமையும். தேவை யில்லாத பிரச்சினைகள் கட்சிமாச்சர்யங்கள் தலை எடுக்காது. அவையின் நிகழ்ச்சிகள் செவ்வனே நடை பெறும். உறுப்பினர்கள் சிறந்த பாராளுமன்றவாதியாகத் திகழ வாய்ப்பு ஏற்படும்.

அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் ஆற்றிய உரையை இனிக் காண்போம்.

"....மூன்றாவது தேசியம். எந்தக் கட்சியை சார்ந்திருக்க நான் பெருமை கொள்கிறேனோ, அந்தக் கட்சிக்கு இது மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். தென்னகத்தி லிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து வந்திருக்கும் நாங்கள் ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்கள் இந்தியில் பேசுவதும் கேள்வி கேட்பதும் பதில் பெறுவதையும் பார்க்கிறோம். இப்போது இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கிற நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன். நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன். நான் என்னை திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் பெருமையடைகிறேன். இப்படிக் கூறுவதால் நான் வங்காளிக்கோ, மராட்டியருக்கோ, குஜராத்தியருக்கோ எதிர்ப்பானவன் அல்ல. ராபர்ட் பர்னஸ் சொன்னது போல் "மனிதன் எப்படி இருந்தாலும் மனிதன் தான்."

நான் என்னை திராவிட இனத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும்போது, திராவிடனிடம் இந்த உலகத்திற்கு வழங்க திட்டவட்டமான - தெளிவான மற்றவைகளிடமிருந்து வேறுபட்ட சில இருக்கின்றன என்று கருதுகின்றேன். அதனால் எங்களுக்கு சுய நிர்ணய உரிமை தேவை என்று விரும்புகிறோம்.

கனம் உறுப்பினர்களின் அன்பை இங்கு பல தடவை கண்டேன். நான் இங்கு வந்து இவ்வளவு அன்பைப் பெறுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. சில இந்திக்காரர் களால் ஏற்படுத்தப்படும் விரும்பத்தகாத செயல்களை இது மறக்கடிக்க முயல்கிறது. நாங்கள் ஒரே உலகத்தை விரும்புகிறோம். ஆகவே நாங்கள் தேசிய எல்லைகளை மறக்கத் தயாராக இல்லை.

எனது தமிழக மாநிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வகையிலும் அது பிரத்தியேகமானது. இங்கே உங்களுக்கு நான்கு எஃகு ஆலைகள். பத்தாண்டுகளுக்கு மேலாக ஒரு எஃகு ஆலை அமைக்கவேண்டுமென்று கூக்குரலிட்டு வந்துள்ளோம். இவர்கள் என்ன தந்தார்கள்? கனரக யந்திர இலாகாவை எங்கள் மந்திரிக்குத் தந்தார்கள்? தொழிற் சாலையையல்ல.

கனம் சுப்பிரமணியம் இங்கு வராமல் இருந்தால் எஃகு ஆலை அமைக்கவேண்டுமென்று அங்கிருந்து வலியுறுத்திக் கொண்டிருப்பார், இதுதான் ராஜதந்திரமா? விவேகமா? அரசியல் யுக்தியா? எதுவென்று எனக்குப் புரியவில்லை. அவரை இங்கு அழைத்து வந்து தென்னகத்து கோரிக்கைக்கு அவரையே பதில் சொல்ல வைத்து இருக்கிறார்கள். பிரி. ஆள், பண்டமாற்று நடத்திப் பணம் வாங்கி புள்ளி விவரங்களை வீசி வாதத்தைக் கெடு என்பன போன்ற பிரிட்டீஷ் ராஜதந்திரத்தை போன்றுதான் இதுவும் இருக்கிறது.

எங்கள் பிரிவினை பாகிஸ்தான் பிரிவினையில் இருந்து மாறுபட்டது. எங்கள் லட்சியம் பரிசீலனை

செய்யப்பட்டால் அனுதாபத்தோடு அது கவனிக்கப் பட்டால் அப்போது நம் இரு சாராரிடையே குரோத உணர்ச்சி ஏற்படுவதற்கு அவசியம் இருக்காது. அப்போது பின் விளைவுகள் ஏதும் இருக்காது. நல்லவேளையாக தெற்கு ஒரு பூகோள அமைப்பு கொண்டது. அதனை நாம் தக்கண பீடபூமி என்றும் தக்கண தீபகற்பம் என்றும் அழைக்கிறோம்.

ஜோசப் மேத்தன் தென்னகத்தின் மொழி எதுவாக இருக்கும் என்று வினவ, அண்ணா: "மொழி மற்றும் இதர விவரங்கள் அரசியல் நிர்ணய சபையில் தீர்மானிக்கப் படும்" என்றார்.

"புதிய தொழிற்சாலைகளை உடனே ஏற்படுத்த முடியாததற்கு சில இயற்கையான காரணங்கள் இருக்கலாம். ஆனால் எந்த வினாடி இரும்பாலை சேலத்தில் வைக்க மறுக்கப்படுகிறதோ எந்த வினாடி புதிய ரயில் பாதை போட மறுக்கப்படுகிறதோ – அந்த விநாடியே தென்னகத்து வீதியோர மனிதன் உடனே எழுந்து கூறுகிறான். இது தான் டெல்லியின் போக்கு வடக்கு ஏகாதி பத்தியத்தின் போக்கு இப்படித்தான். அந்த ஏகாதி பத்தியத்திலிருந்து வெளியேறாத வரை உங்கள் நாட்டை நீங்கள் பாதுகாப்பாக செழிப்பாக முன்னேற்றமாக வைத்திருக்க முடியாது. எனவே நான் இந்த சபையில் பிரிவினையைப் பற்றிப் பேசுகிறேன் என்றால் விழிப்புற்ற வர்கள் சார்பில் பேசுகிறேன்.

பிரிவினைத் தத்துவம் அதற்குரிய சரியான மொழியில் கூற வேண்டுமென்றால் சுயநிர்ணய உரிமை உலகப் புகழ்ப் பெற்ற தலைவர்களால் – ஏன் இந்த உப கண்டத்தில் நமது பிரதம மந்திரியாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. என் நினைவு சரியாக இருக்கு மானால் கபூர்தாலா மைதானத்தில் நேரு அதிகார பூர்வமாகக் கூறினார்.

ஒரு நிறுவனம் என்ற முறையில் காங்கிரஸ் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் இந்திய யூனியனில் இருக்க வேண்டுமென்றே முயற்சி செய்யும். ஆனால் ஏதாவது ஒரு பகுதி பிரிந்து போக வேண்டுமென்றால் அதற்குக் காங்கிரஸ் சம்மதம் தரும் என்று இந்த வகையில் காங்கிரஸ் சுய நிர்ணய உரிமையை ஒப்புக் கொண்டுள்ளது.

பிரதம மந்திரியானவுடன் நேருவிடம் இந்த தாராள சிந்தையும் ஜனநாயக உணர்வும் நெஞ்சில் இன்னும் கனன்று கொண்டு இருப்பதாக நினைத்து இந்தத் துணிவான வேண்டுகோளை விடுக்கிறேன்,. பிரிவினையால் இந்தியா தரித்திர நாடாகிவிடாது என்று உறுதி இருக்கும் போது ஏன் தீபகற்பத்திற்கு சுயநிர்ணய உரிமை தரக்கூடாது அப்படி முடிவு எடுப்பது இந்தியாவின் தரத்தை உயர்த்துவதாக இருக்கும்.

எனவே இந்தப் பிரச்சினையை தெளிவாகவே பார்க்க வேண்டுமென்று இந்த சபையைக் கேட்டுக் கொள்கிறேன். நான் எங்கிருந்து வந்தேனோ அந்த திராவிட பூபாகத்திற்கு சுய நிர்ணய உரிமை கேட்கிறேன். அதன் மூலம் அந்நாடு உலகிற்கு தன் பங்கை செலுத்தவிருக்கிறது.

ஐயா, எங்களுக்கென்று ஒரு தனிக் கலாச்சாரம் உண்டு. திராவிட நாட்டில் இருக்கும் கலாச்சாரத்திற்கும் பிற பகுதிகளிலுள்ள கலாச்சாரத்திற்கும் மேலெழுந்த வாரியாக ஒற்றுமை நிலவலாம்.

மன்றத்தலைவர் அவர்களே, (அப்போது சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன், துணை ஜனாதிபதி, தலைவர் நாற்காலியில் அமர்ந்திருந்தார்) கன்னியாகுமரியிலிருந்து இமாலயம் வரை ராமனும் கிருஷ்ணனும் தொழப் படுவதால் இந்தியா ஒற்றுமைபட்டுள்ளது என்று தாங்கள் முன்பொரு தடவை கூறிய பாண்டித்திய மிக்க வாசகங்கள் என் நினைவிற்கு வருகிறது. அதே போல உலக முழுவதும் மரியாதையுடனும், பயத்துடனும் ஏசுநாதர் தொழப் படுகிறார். இருந்தாலும் ஐரோப்பாவில் பலப்பல தேசிய

நாடுகள் இருக்கின்றன. புதிய புதிய தேசிய நாடுகள் வந்து கொண்டே இருக்கின்றன.

ஆகையால் தென்னகத்தில் கொதித்து எழும் புதிய தேசிய இனம் பற்றி குடியரசுத் தலைவர் எதுவும் குறிப்பிடாதது பற்றி நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

ஜனநாயகம், சோஷலிசம், தேசியம், ஆகிய இந்த மூன்றில் ஜனநாயகம் உருக்குலைக்கப்பட்டிருக்கிறது. சோஷலிசம் சாரமற்றதாக்கப்பட்டிருக்கிறது. தேசியம் தவறான பொருளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டுகளில் புதிய எண்ண ஓட்டத்தின் விளைவாக தென்னகத்தின் தேவையும் தத்துவமும் புனராலோசனை செய்யப்படும் என்று நினைக்கிறேன். நான் சார்ந்திருக்கும் திராவிட நாட்டிற்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்படும் என்று கருதுகிறேன்' என்று கர்ஜித்தார்.

பிரதமர் ஜவஹர்லால் நேரு அவையில் இருந்து அண்ணாவின் முழுப்பேச்சையும் ஆவலுடன் கவனித்து வந்தார். பின்னர் பிரதம மந்திரி எதிர்த்துப் பேசுகையில் இந்தியாவை விட்டுப் பிரிந்துவிடவேண்டும் எனத் தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பற்று இரைந்து பேசி வருகிறது. இந்தக் கட்சிக்கு பேரறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டியவர்கள் ஆதரவு காட்டுவது துரதிருஷ்டமாகும்.

பிரிவினை கோருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சில கட்சிகள் ஆதரிப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இவ்வாறு ஆதரிப்பவர்களின் சிந்தனா சக்தி முழு அளவில் பழுதுபட்டுப் போய் இருக்கிறது. இக்கோரிக்கையை சிந்தித்தேயாக வேண்டும். இவை அடிப்படைக் கோரிக்கைகளாகும்.

இங்கு (பேரரசால்) ஏற்றுக்கொள்ள முடியாத சில கோரிக்கைகள் உள்ளன. போர் என்றால் போர் வரட்டும். இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இக்கோரிக்கை அடிப்படையிலேயே தவறு உடையது ஆகும். இதை ஒவ்வொரு இந்தியனும் ஆட்சேபிக்க வேண்டும்" என்றார்.

அண்ணாவின் இந்த கருத்து மிக்க உரை பத்திரிகை களால் பாராட்டப்பட்டன. 'இந்து'ப் பத்திரிகை கருத்துத் தெரிவிக்கையில், "கொள்கையிலே கொண்ட உண்மையான பிடிப்பாலும் தனது சக்தி வாய்ந்த பேச்சுத் திறமையாலும் அண்ணாதுரை சந்தேகமின்றி ராஜ்யசபாவைக் கவர்ந்து விட்டார்.

டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை "பிரிந்துபோக வேண்டுமென்ற குரல் முதன்முதலாக சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றத்தில் இன்று ஒலித்தது. இந்த முழக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாதுரை இன்று மாநிலங்கள் அவையில் முழங்கினார். இந்திய யூனியனிலிருந்து தென்னகம் பிரிந்து போக வேண்டுமென்ற அண்ணாதுரையின் வாதம் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது என்று எழுதியது.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கை தனது தலையங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு சி.என். அண்ணாதுரை தென்னகத்திற்கு சுய நிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கையை தெளிவாக எடுத்துரைத்தார். மாநிலங்களவை இன்று கூடியிருந்து திராவிட நாட்டின் கொள்கைக்காக பாடுபடும் சொல்லாற்றல் மிக்கத் தலைவரின் பேச்சைக் கேட்டது" என்று கூறி பெருமைப்படுத்தியது. தேசியத்திற்கு அண்ணா துரை ஒரு புதிய விதியைத் தந்தார் என்றும் கூறியது.

ஆட்சி அமைப்பு முறையின் எதிரி என்ற அளவில் அறியப்பட்ட அண்ணாதுரையின் சொற்பொழிவு என்ன இருந்தாலும் பல முறை - குறிப்பாக வட இந்தியாவில் இருந்து வந்திருந்த பல உறுப்பினர்களை வியப்பில் ஆழ்த்தாமல் இருக்கவில்லை. சிறந்த பேச்சாளர் என்றுள்ள நிலையில் நிறைந்த பெயர் பெற்றுள்ள அண்ணாதுரை

அன்று மாநிலங்கள் அவையில் தன் திறமை முழுவதையும் வெளிப்படுத்தினார் என்று கூறியது.

அண்ணாவின் மேற்குறிப்பிட்ட பேச்சு வட இந்தியர் களைப் பெரிதும் பாதித்தது எனலாம். ஆட்சியாளர்கள் மிகவும் யோசிக்கத் தொடங்கினர். வாஜ்பாய் கூறியது போன்று பிரிவினை கேட்பது சட்டப்படி குற்றமாக்கப் பட்டு சரியானபடி தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல் அதிகார வர்க்கத்தினரின் காதுகளுக்கு இதமாக இருந்தது. உடனே தேசிய ஒருமைப்பாட்டுக் குழு ஒன்று சர். சி.பி. இராமசாமி ஐயர் தலைமையில் அமைக்கப்பட்டது.

அக்குழு இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பேட்டி கண்டது. ஆயினும் தமிழ் நாடு வந்த போது திராவிட நாடு கோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை கண்டு பேசத் துணியவில்லை. அதற்குக் குழுவினர் கூறிய காரணம் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிறையில் இருந்தனர். எனவே சந்திக்க இயலவில்லை எனக் கூறப்பட்டது.

இவை எதையும் செய்யாமல் எங்களைச் சந்திக்காமலே அறிக்கையினைத் தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்தது.

அவ்வறிக்கையை அடிப்படையாக வைத்து அரசியல மைப்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தினை அரசு கொணர்ந்தது. லால் பகதூர் சாஸ்திரி உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இதனைக் கொண்டு வந்தார்.

இத்திருத்தத்தினை அறிஞர் அண்ணா ஒருவர் மட்டுமே வியூகம் அமைத்து - அபிமன்யுவாக இருந்து எதிர்த்தார். எதிர்கால தலைமுறையினருக்கு பயன்படும் உரையாகும் இது. அவ் உரையை முழுமையாகத் தருகிறோம்.

"*சமரசம் பேசுவதற்காக சீன ஆக்ரமிப்பாளருடன் மேஜை முன் அமர நமது விருப்பத்தையும், சம்மதத்தையும் தெரிவித்தான உடனே, எதிரியை அல்ல, ஒரு லட்சியத்திற் காக பணியாற்றுபவனை அழிக்க, சர்க்காருக்கு ஒரு புதிய ஆயுதத்தைத் தருவதற்காக அரசியல் சட்டத்திற்குக் கொண்டு வரப்படும் ஒரு திருத்தம் பற்றி நாம் இன்று விவாதித்துக் கொண்டு இருப்பது வேதனையுள்ள விசித்திரம் போலும்,

மன்றத்தின் இரண்டு தரப்புகளில் இருந்தும் கூறப்பட்ட பலக் கருத்துக்களை நான் மிகுந்த அக்கரை யுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். சட்டத்தைத் துணைக் கொண்டு அடக்கி விட நீங்கள் முயலும் அந்த லட்சிய எண்ணத்தைப் புகுத்தியவன் என்ற முறையில், என் நோக்கத்தை மீண்டும் விளக்க அல்ல, ஆனால் எமது கோரிக்கை குறித்து ஏற்பட்டுள்ள தப்பர்த்தங்களைப் போக்க, அந்த லட்சியம் பற்றிய விளக்கத்தையும் வரலாற்றையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் ஒருவர் பிசோ கேட்டதைக் கண்டு, அல்லது அதைத் தொடர்ந்து திராவிடஸ்தான் கேட்கப்படு கிறது என்று கூறினார். உண்மை அதற்கு வெகு தூரத்தில் இருக்கிறது. சுதந்திரம் வந்த பிறகு இப்படிப்பட்ட பிரிவினை உணர்ச்சிகள் கிளம்பின என்று மற்றோர் உறுப்பினர் கூறினார். இது உண்மைக்கு நெருங்கி வருவதாகும். ஆனால் உண்மை இதுவல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த அமைப்பு திராவிடர் கழகம் சுதந்திரத்துக்கு மிக நீண்ட காலத்துக்கு முன்பே இருந்து வந்திருக்கிறது. எதிர்கால அரசியல் முறை அமைப்பு பற்றி சர்ச்சைகள், பிரச்சினைகள் கொள்கைகள் எழுந்த போது, திராவிடர் கழகம் - அந்த அமைப்பின் பொதுச்

* ஆங்கில உரை அண்ணா அவர்களாலேயே "திராவிட நாடு" இதழுக்காக மொழி பெயர்க்கப்பட்டது இவ்வுரைக்கு கிடைத்த மற்றொரு சிறப்பு.

செயலாளராக நான் இருந்திருக்கிறேன் — தென்னகத்துக்கு ஒரு அரசியல் ஏற்பாடு பற்றி திட்டம் அறிவித்தது. அதனுடைய தொடர்பாகத்தான் திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் அந்த லட்சியத்தை எடுத்து விளக்கிக் கொண்டு வருகிறது.

எனவே இது ஆளும் கட்சியின் செயல்கள் அல்லது செயலாற்றாத தன்மை ஆகியவைகளைப் பொறுத்ததாக அமையவில்லை. நாட்டின் வேறு இடங்களிலே உள்ள இது போன்ற அல்லது இதை விடப் பயங்கரமான எந்தப் பிரச்சினைகளுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. பிரச்சினையின் மீது பாய்வதற்கு முன்பு, கனம் உறுப்பினர்கள், பிரச்சினையை அலசியாவது பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஒரு ஆக்ரமிப்பாளனை சந்தித்து சமரசம் பேச சம்மதத்தைத் தெரிவித்த சீக்கிரத்தில், பெருமை மிக்க நாட்டு மக்கள் என்ற முறையில், எங்கள் பிரச்சாரத்தை தடை போட்டு நிறுத்துவதற்கு முன்பு, எங்களைப் புரிந்து கொள்ளவாவது முயலக்கூடாதா, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் என்ன அவ்வளவு தாழ்ந்து போய் விட்டவர்களா? அரசியல் அரங்கத்திலே எங்களைத் தீண்டப்படாதவர்கள் போல நடத்துவதற்கு! எங்கள் கோரிக்கை மிக முக்கியமான தல்லவா! நீங்கள் எங்கள் மனத்தைத் திருப்திப்படுத்தவும்., மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையை மேற்கொள்ள வும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டாமா? காரண காரிய விளக்கங்களைக் கேட்க ஒருப்படாதவர்களா நாங்கள்? அந்த முயற்சி செய்து பார்த்தீர்களா? இந்த மன்றத்தில் இதுதான் என் முறையீடு. கட்சித் தொடர்புகள் பற்றிக் கவலையின்றி, இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இந்த அம்சம் பற்றித் தங்கள் சீரிய கவனத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

எங்களைக் கலந்து பேசிக் கருத்தறிந்தார்களா? பிரச்சினையை அலசிப் பார்க்க ஆளும் கட்சி சிரமம் எடுத்துக் கொண்டதா? நான் ஆளும் கட்சி என்று ஏன் குறிப்பிடுகிறேன், எதிர்க்கட்சிகள் பலவும் பிரச்சினையை அலசிப் பார்க்க முயற்சிகள் எடுத்துக் கொண்டன. அதனால் இன்று காலை ஓர் உறுப்பினர் இந்தப் பிரச்சினையில் கம்யூனிஸ்ட் கட்சி எங்களுடன் நேசத் தொடர்பு கொண்டிருந்தது என்று சொன்னார்.

எங்கள் கொள்கையை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டபோது, முடியாது என்று கம்யூனிஸ்ட் கட்சி கூறியது. பெருமைப்படத்தக்க வகையில் துணிவுடன் கூறிற்று. இலட்சியங்களுக்கும் தேர்தல் தொடர்புகள் உடன்பாடுகள் ஆகியவற்றுக்கும் சம்பந்தம் இல்லை. எனவே நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியையோ, வேறு கட்சியையோ, கொள்கை அடிப்படை வைத்து அல்ல. அரசியல் நேசத் தொடர்புகள் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் அணுகி இருந்து இருக்கின்றோம். இப்போது கூட, இன்றுகூட, சென்னை மேயர் சம்பந்தமாக சென்னை காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஓர் ஏற்பாட்டில் இணைந்துள்ளன.* இந்த மன்றம் இதை அறிய அக்கரை காட்டும் என்று எண்ணுகிறேன். எனவே அரசியல் நேசத்தொடர்பு என்பது ஒரு விஷயம். தேர்தல் நேசத் தொடர்பு என்பது மற்றொன்று. இலட்சியம் முற்றிலும் வேறான விஷயமாகும்.

கோபர்கட (மராட்டிய மாநிலம்). அப்படியானால் காங்கிரஸே பிளந்து போவதை ஆதரிக்கிறது.

---

* இவ்வேற்பாட்டின் படி, திரு. சிவசங்கர மேத்தா, தி.மு.க. துணையுடன் சென்னை மேயராகப் பொறுப்பேற்றார். ஆனால், அவர் அதே நாளில் மேயர் அறையை அலங்கரித்த அண்ணா படத்தை நீக்கிவிட்டார். இருப்பினும் அண்ணா அதனைப் பொருட்படுத்தவில்லை.

அண்ணா: அதனால் தான் சொல்லுகிறேன். தேர்தல் நேசத் தொடர்பு என்றால் இலட்சியத்தை இழந்து விட்ட தாகப் பொருள் இல்லை என்று. தன் இலட்சியத்தைக் காத்திடும் வலிவு சென்னை காங்கிரசுக்கு இருக்கிறது. காங்கிரஸ் இலட்சியத்திலே சென்னை முதலமைச்சருக்கு வலிவான நம்பிக்கை இருக்கிறது. நமது விவாதங்களில் சென்னை காங்கிரஸ் பற்றியோ, முதலமைச்சர் பற்றியோ தப்பான வியாக்யானங்கள் கொள்வதை நான் விரும்ப வில்லை. தம்முடைய லட்சியங்களை விட்டுக் கொடுக்காமலேயே தேர்தல் நேசத் தொடர்புகள் கொள்ள முடியும் என்பதைக் குறிப்பிட்டே இதைச் சொல்கிறேன். ஆனால் நாம் லட்சியத்தை உணரவேண்டும். அலசிப் பார்க்கவேண்டும். ஆய்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இந்த மசோதா, இந்தியாவுடைய அரசு உரிமையையும், பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க, நிலை நிறுத்தக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த அரசுரி மைக்கு என்ன ஆபத்து வந்திருக்கிறது. எனக்குத் தெரியாது. எனக்கு தெரிவிக்கவும் இல்லை. ஒரு சமயம் சட்ட மந்திரி புதிய சட்டம் ஏதாவதுதயாரித்துக் கொண்டிருப்பார் போல் இருக்கிறது. அதனால்தான் சபையில் இல்லை. அவர் இங்கு இருந்து இருப்பாரேயானால், திரும்பிப் பார்த்துச் சொல்லுவார். நாட்டிலே பிளவு சக்திகள் உள்ளனவே. அறிவாயா? இந்தக் காரியத்துக்காகவே தேசிய ஒருமைப்பாடு கமிட்டி அமைத்தோம் அறியாயா? தேசிய ஒருமைப்பாட்டு கமிட்டி கூறிய யோசனைகளை ஒட்டியே நடவடிக்கை எடுத்து இருக்கிறோம், தெரியாதா என்றெல் லாம் கேட்பார்.

சி.பி.ஆர். கமிட்டி அழிவு வேலைக்கே

துணைத் தலைவர் அவர்களே, தேசிய ஒருமைப்பாடு கமிட்டி திறமை மிக்க டாக்டர் சி.பி.இராமசாமி ஐயர்

தலைமையில் அமைக்கப்பட்டதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். இந்தியாவின் வல்லமை அல்லது அரசுரிமை, பிரதேச ஒற்றுமை என்று வந்தால் திடமான நம்பிக்கையுடன் பாடுபட்டுப் போரிடத் தக்க வீரர்! எந்த அளவுக்கு நம்பிக்கையுள்ள வீரர் என்றால், திருவதாங்கூர் திவான் என்ற முறையில், திருவதாங்கூர் தனிச் சுதந்திர நாடாகி விட்டதாகப் பிரகடனம் செய்தவர்! பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக அறிவித்தவர்! இன்று காங்கிரசின் அதிர்ஷ்டம், அவர் கூட்டுச் சேரா கொள்கையினர். எனவே அவரை நீங்கள் கமிட்டி தலைவராக ஆக்கிக் கொண்டீர்கள். இந்த கமிட்டி எவ்விதம் பணியாற்றிற்று என்பதை அலசிப் பார்க்கும்படி இந்த அவை உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த சிறந்த வழி என்ன என்பதை கூறும்படி இந்த கமிட்டி பணிக்கப் பட்டது. பிரிவினை பிரச்சாரத்தை ஒடுக்கிவிட மட்டுமல்ல. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த சிறந்த வழி என்ன என்பதை கண்டறியும் வேலை அதற்குத் தரப்பட்டது. ஆக்க வேலைக்காக அது தந்த யோசனைகள் யாவை? ஆக்க வேலைக்கான திட்டங்கள் யாவை? தேசிய ஒருமைப் பாட்டுக் கமிட்டியினுடைய யோசனைகளிலிருந்து பிறந்துள்ள, தடைச்சட்டம் தவிர, துணைத்தலைவர் அவர்களே, தேசிய ஒருமைப்பாட்டு கமிட்டி இந்தியா முழுவதும் உலா வந்தது. எங்கள் மாநிலத்திற்கும் வரவேண்டும் என்று மரியாதை காட்டிற்று.

பல்வேறு அரசியல் கட்சியினரின் கருத்தறிந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்க்க இயலவில்லை. ஏனெனில், அதற்கிடையில் எங்களுக்கு எங்கள் மாநில அரசு வேலூர் மத்திய சிறையிலே அறை கொடுத்துவிட்டது. எங்களை சந்திக்காததற்கு கமிட்டி கூறிய காரணம் இதுதான்.

ஆனால் அப்போது தேசிய ஒருமைப்பாடு கமிட்டி எங்கள் நோக்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தால், தொடர்பு கொள்ள வேண்டுமென்று விரும்பி இருந்தால், எங்கள் அமைப்பு செயலாளர் என்.வி. நடராசன், ஜெயிலுக்கு வெளியேதான் இருந்தார். இராசராம், எம்.பி. வெளியில் தான் இருந்தார். இவர்களில் யாராவது ஒருவரைக் கண்டிருக்க முடியும்.

டாக்டர் இராமசாமி ஐயர் ஜெயிலுக்கு வந்து எங்களைப் பார்த்திருக்கவேண்டும் என்று நான் கூற மாட்டேன். மற்றவர்களை ஜெயிலுக்கு அனுப்பி அனுபவம் பெற்றவர் அவர். ஜெயிலுக்கு அவர் போனதில்லை. ஆகவே அவர் நெடுந்தொலைவுக் கடந்து ஜெயிலுக்கு வந்து எங்களைப் பார்க்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்க வில்லை. நாங்கள் சாமானியர்கள். அப்படிப்பட்ட பெரியவர்களைக் கொண்ட கமிட்டி, அத்தகைய தாராளத்தனம் காட்டியிருக்கவேண்டும் என விரும்ப வில்லை. ஆனால் வெளியே இருந்த சிலருடன் தொடர்பு கொள்ள சிரமம் எடுத்துக்கொண்டு இருக்கலாம்.

மன்றத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். ஒரு கணம் எங்கள் கோரிக்கையினுடைய பயங்கரத்தன்மை – அதன் ஆபத்தான விளைவுகள் ஆகியவை பற்றி மறந்துவிடுங்கள். தயவு செய்து இதற்குப் பதில் கூறுங்கள். எனக்கு வார்த்தைகள் கூட வேண்டாம். இலேசான புன்னகை, மகிழ்ச்சியுடன் கண் சிமிட்டல் – நேசப்பான்மையுடன் தலையை அசைத்தல், இவை போதும் – சாதாரண மரியாதைக்காக, மக்களாட்சி முறையின் நாகரிகத் தன்மைக்காவது எங்கள் கட்சியினருடன் இந்தக் கமிட்டி தொடர்பு கொண்டிருந்து இருக்கவேண்டும் அல்லவா? ஆனால் அவர்கள் ஓர் அறிக்கை தந்தனர். இந்த மசோதா வின் விளக்கத்திலும் நோக்கத்திலும் தேசிய ஒருமைப் பாட்டு கமிட்டியின் யோசனையை முற்றிலும் ஒட்டியே

சட்டமுன்வடிவு வருவதாக கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மசோதாவின் பிறப்பே மக்களாட்சி முறைக்கு முற்றிலும் மாறானது. இந்தக் கருத்தை உங்கள் முன் வைக்கவே, உமது பொறுமையை பாதிக்கும் தொல்லையைத் தர நேரிட்டது.

நான், மற்றொரு விஷயத்துக்கு வருகிறேன். திராவிடஸ்தான் கோரிக்கை ஆபத்தானது என்கிறார்கள். தவறாக ஆளும் கட்சி பிரமுகர்கள் பலர் சில மாதங்களுக்கு முன்புகூட, சில வாரங்களுக்கு முன்பு வரை கூட நாங்கள் என்ன கேட்கிறோம் என்பது தங்களுக்குப் புரியவே இல்லை என்று கூறிக் கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் இது ஆபத்து தரத்தக்கது என்பது மட்டும் புரிந்து இருக்கிறது. இது எப்படி பகுத்தறிவாகும்? தத்துவ சாஸ்திர அறிவாகும்? அரசியலாகும். எனக்குப் புரியவில்லை. இந்த மன்றத்திலேயோ, அந்த மன்றத்திலேயோ எனக்கு திட்ட வட்டமாகத் தெரியவில்லை. உள்துறை அமைச்சர் சொல்லி இருக்கிறார். கட்டுக்கடங்காது போனால் குறிப்பிட்ட எல்லையை மீறிப் போனால் பிரிவினை சம்பந்தமான எல்லாப் பிரச்சாரமும் தடுக்கப்படும் என்று எண்ணிக் கொண்டார்கள். இது சில மாதங்களுக்கு முன்பு உள் துறை அமைச்சர் பேசியது. இந்த இடைக்காலத்திலே என்ன நேரிட்டுவிட்டது. நாங்கள் என்ன மண்டை ஓடுகளையும் தலைகளையும் வேட்டையாடிப் பெறுபவர்கள் ஆகி விட்டோமா? இல்லை! மாறாக சீன ஆக்ரமிப்பு ஏற்பட்ட வுடன் தங்குதடையற்ற உள் உணர்ச்சியுடன் கூடிய ஒத்துழைப்புத் தந்தோம், போர் ஆதரவு முயற்சிக்கு, சட்ட மந்திரி இப்போது இங்கு இல்லாதது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றவுடன் ஒரு உறுப்பினர் குறுக்கிட்டு அவருடைய துணை மந்திரி இங்கு இருக்கிறார் என்று கூற அண்ணா பதிலளித்து பேசியதாவது.

ஏனெனில் எங்கள் கட்சியின் தலைவர், அந்த மன்றத்தில் இந்தக் கருத்தைப் பற்றிக் கூறியபோது சட்ட மந்திரி எழுந்து நின்றார். புன்னகையுடன் அல்ல,

கடுமையான பார்வையுடன் - கரங்களை கம்பீரமாக அசைத்தபடி சொன்னார். அதெல்லாம் இந்திய பாதுகாப்புச் சட்டத்தினால் ஏற்பட்ட நிலைமை என்று! சட்ட மந்திரி என்ற நிலையில் சட்டத்துக்குக் கர்த்தா என்ற முறையில் சட்டத்திற்கு உள்ள வீரியம் பற்றித் தூக்கிப் பேசும் உரிமை பெற்றவர் ஆவார்.

ஆனால் சட்டத்தின் சக்தியைப் பெரிதாக்கிப் பேசும் ஆர்வத்தில் அவர் தமது மனத்தில் இருந்து, சாதாரண மரியாதை காட்டும் உணர்ச்சியை துரத்தி அடித்துவிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு சட்ட மந்திரி நல்ல வார்த்தை கூறி சிபாரிசு செய்ய வேண்டும் என்று நான் விரும்பவில்லை. மக்களுடைய நல் ஆதரவு நிரம்ப நாங்கள் பெற்றிருக்கிறோம். சட்டமந்திரியின் நல்லுணர்வு சிபாரிசு ஒன்றும் அதனை மேலும் வலுஉள்ளதாக்கி விட முடியாது. மற்றும் ஒன்று கூறுகிறேன். சட்டத்தின் சக்தியை உயர்த்திக் காட்டவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் மற்றொரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டார்.

நேருவின் நல்லெண்ணம்

இன்று காணப்படும் ஒருமித்த நோக்கம், தேசிய ஆர்வம் எல்லாம், இந்திய பிரதம அமைச்சருடைய திறமையாலும், அவர் கொண்டுள்ள மேலான எண்ணங் களாலும் ஏற்பட்டவை. சட்டங்களை விட வலிவு மிக்கது அவை. சட்டங்கள் தடுக்க, திருத்த, உள்ளவை இதைச் செய்யாதே அதைச் செய்யாதே என்று கூறுகிறது சட்டம்.

கட்சித் தொடர்புகளைக் கடந்து, பல இலட்சக் கணக்கான மக்களின் மனத்தைத் தன் வயப்படுத்தும் தலைமை அமைச்சரின் திறமைக்கு உள்ளது போன்ற வலிவு சட்டத்துக்குக் கிடையாது. சட்டத்தின் வலிவை வலியுறுத்திக் காட்டும் ஆர்வத்தில், சட்டமந்திரி, எதற்காகப் பிரதம மந்திரியின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார், என்று எனக்குப் புரியவில்லை! இன்று

காணப்படும் கூடிப் பணியாற்றும் ஆர்வம் பண்டித ஜவஹர்லால் நேருவின், வசீகரிக்கும் தன்மையாலும், ஜன நாயகப் பண்பாட்டு உணர்ச்சியாலும் விளைந்திருக்கின்றது என்பதை யாவது அவர் சொல்லியிருக்கலாம். மந்திரி சபைக்குள்ளே என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது. வெளியார் எவராவது, சட்ட மந்திரியின் உரையைப் படித்தால், என்ன எண்ணம் ஏற்படும்? நாட்டிலே அமைதி இருக்கிறது! எதனால்? இந்திய பாதுகாப்புச் சட்டத்தினால்!! இல்லை யானால், அனைவரும், தேச விரோதிகளாவர், தேசபக்தி அற்றவர்களாவர், தொல்லை கிளம்பியிருக்கும்! இப்படி எண்ணுவர். அடித்துப் பேச முற்படும்போது, அளவு பொருத்தம் பார்த்துப் பேசும்படி சட்ட மந்திரியை வேண்டிக்கொள்கிறேன். அது நிற்க, இந்திய பாதுகாப்புச் சட்டம், ஒரு நாட்டு மக்களுடைய இதயங்களுக்குப் பாதுகாவலனாக இருக்க முடியாது. ஒரு நாட்டு மக்களுக்குச் சிறைக் காவலனாக மட்டுமே இருக்க முடியும். எனவே, போர் ஆதரவு முயற்சிக்கு, தங்கு தடையற்ற உதவி தர தி.மு.க. முன்வந்தது என்றால், நான் அதற்காகச் சர்க்காரிடமிருந்து நன்னடத்தைச் சீட்டுப் பெற எதிர்ப் பார்க்கவில்லை. பதிலுக்கு நல்லெண்ணம் அளிக்கப்பட வேண்டும் என்று கூட விரும்பவில்லை. ஆனால், எதற்காக இதை எடுத்துக்கூறுகிறேன் என்றால், இதிலிருந்து ஒரு இயற்கையான எண்ணம், தானாக எழுந்துள்ள ஒரு உள் உணர்ச்சி, உங்களுக்குப் புலப்படவில்லையா? அந்த உணர்ச்சி காலத்தால் இயற்கையாக வளரச்செய்திட வேண்டாமா? இந்த மசோதா, அதற்கான உரமா? இது அந்த உணர்ச்சியை அழிக்கக்கூடியது, எரிச்சலூட்டுவது. ஏன் இந்த உள் உணர்ச்சி, இயற்கையான முழு வளர்ச்சி பெற்று, பூத்திடச் செய்யக்கூடாது? இந்த மசோதாவுக்கு என்ன அவசரம் வந்தது? ஏன் இவ்வளவு அவசரப் படுகிறீர்கள்? அதுதான் நான் குறிப்பாகக் கேட்பது. இதை

உங்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் போராதரவு முயற்சிக்கு நாங்கள் ஆதரவு அளித்ததைக் குறிப்பிட்டேன். நான் முன்பு சொன்னபடி, நாங்கள் சாமான்யர்கள், ஆனால், 34 இலட்சம் வாக்காளர்களின் பிரதிநிதிகள்! எந்த 50 இலட்சம் வாக்காளர்கள் எங்கள் இராஜ்யத்தில் காங்கிரசை ஆளும் கட்சி ஆக்கியிருக்கிறார்களோ, அங்கு, ஐம்பது இலட்சத்துக்கும் முப்பது இலட்சத்துக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறித்து நான் அதிகம் வாதாடத் தேவையில்லை என்று நம்புகிறேன். இந்த மன்றத்தின் முன் உறுதி கூறுகிறேன்-எங்கள் முன்னேற்றத்துக்கு அழிவு தேடாதிருந்தால், சட்டத் துணையுடன் அடக்கி அழிக்கும் முறைகளைக் கொண்டுவராதிருந்தால், நாங்கள் தான் சென்னையில், அடுத்து வரப்போகும் ஆளுங்கட்சி—உறுதி அளிக்கிறேன். மத்திய அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம், தமது கோவைப் பேச்சிலே, அன்பழைப்பே விடுத்திருக் கிறார் – "பிரிவினையை விட்டு விடுங்கள்; நீங்கள் மந்திரி சபை அமைப்பதை நான் வரவேற்கிறேன் என்று. அப்படிப்பட்ட ஒரு கட்சிக்குத்தான் நீங்கள் சாதாரண மரியாதை உணர்ச்சி காட்ட ஜனநாயக நாகரிக உணர்ச்சிகாட்ட மறுத்திருக்கிறீர்கள்- தேசிய ஒருமைப் பாட்டுக் கமிட்டி முன்பு எங்கள் நோக்கத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பு அளிக்கவுமில்லை, எங்களை உங்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக்கிக் கொள்ளவு மில்லை.

கம்யூனிஸ்டு கட்சித் தலைவர், என் மதிப்புமிக்க நண்பர், பூபேஷ் குப்தா ஒரு யோசனை கூறினார்-அவர் களை (தி.மு.க.வை) எதிர்த்துப் பிரசாரம் செய்ய ஏன், எல்லா ஜனநாயக சக்திகளும், தேசிய சக்திகளும் ஒன்று படக்கூடாது என்று கேட்டார். நான் அதை வரவேற்கிறேன். மக்கள் என் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா, உங்கள் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா, என்பதைக் கண்டறிய

விரும்புகிறேன். ஏன் அப்படிப்பட்ட தீரமிக்க போட்டியிலிருந்து ஓடிவிடுகிறீர்கள்? பூபேஷ் குப்தாவை, இதையும் கவனிக்கும் படி கேட்டுக்கொள்வேன், எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்கு முன்பு, எங்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்வது நல்ல அரசியல் முறை அல்லவா?

பூபேஷ் குப்தா

அதுதான் நான் சொன்னது. நான் முயல்கிறேன்.

அண்ணா

பூபேஷ்குப்தாவுக்கு என் நன்றி. ஆனால், எங்கள் மனதை மாற்ற அவர் மேற்கொண்டுள்ள முறை பலனளிக்கவில்லையோ, அல்லது அவர் விரும்புகிற அளவு, அது செய்யப்படவில்லையோ, என்னவோ தெரியவில்லை- பலன் காணோம். ஆனால், இந்த மன்றத்தைக் கேட்டுக் கொள்வேன் - எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட கலந்தாலோசிக்கும் கமிட்டி அமைத்து எம்முடன் விவாதிக்க வேண்டும் என்று சர்க்காருக்கு யோசனை கூறுங்கள். தவறு எம்மிடம் என்றால் திருத்துங்கள். உங்களிடம் தக்க காரணம் காட்ட இருந்தால் எங்கள் மனத்தை மாற்றுங்கள். அதை விட்டுவிட்டு, எங்களை வற்புறுத்துகிறீர்கள்! சட்ட விற்பன்னர்கள் நிரம்பியுள்ள இந்த மன்றத்தில் நான் விளக்கத் தேவையில்லை, சட்டத்தைக் கொண்டு வற்புறுத்துவது, கடைகெட்ட வாதிடும் முறையாகும்! பொதுமக்களின் கருத்து எனும் சந்தையில், இரண்டு கருத்துகள் போட்டியிடுகின்றன என்றால், அதிலே ஒரு கருத்துக்குத் தடை போடுகிறீர்கள் என்றால், ஒரு கருத்துக்குப் பின்பலமாக சட்டத்தை நிறுத்துகிறீர்கள் என்றால் கருத்துப்போர் நடத்துவதிலிருந்து நழுவிவிடுகிறீர்கள் என்றுதான் பொருள்படும். திருச்செங்கோடு இடைத்தேர்தல் காலம் வரையில், எங்கள் இராஜ்ய காங்கிரசார், வெளியிட்டுக்கொண்டிருந்த கருத்து என்ன? அவர்கள்

சொன்னார்கள்-இந்த மன்றத்தில்கூட அது திரும்பவும் கூறப்பட்ட-என் நண்பர் புபேஷ்குப்தா சொன்னார்-நான் தன்னந் தனியன், ஒரே ஒருவன் என்றார்! பசி நிறைந்த பார்வை, எனக்கு என்றார்! என் பசி போக்கும் உணவு அளிக்கவில்லை, இவர்கள்!! நான் தனியன், என்று அவர் சொன்னார். மற்றொரு உறுப்பினர், எங்களுக்கு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகியவைகளில் பிடிப்பு இல்லை என்று பேசினார். அந்த உடன்பிறப்பாளர் இராஜ்யங்களிலுள்ள வர்களின் மனத்தை மாற்றிவிட்டதாகவோ, மகிழ்ச் சிதரத்தக்க அளவுள்ள ஆதரவைப் பெற்றுவிட்டதாகவோ, நான் எப்போதும் பாத்யதை கொண்டாடியது இல்லை. நான் குறிப்பிடுவது, நான் இந்த விஷயத்தைக் குறிப்பிடும் போது, அந்த மொழிவாரி இராஜ்யங்களிலும், அதே உணர்ச்சி ஏற்படும் என்பதுதான். நான் என்ன எண்ணு கிறேனோ அதனை அப்படியே, வால்டேரில், ஹைதரா பாத்தில், மைசூரில், அல்லது திருவனந்தபுரத்தில் எண்ணு கிறார்கள் என்று நான் உரிமை கொண்டாடியதில்லை. நான் இந்த இடங்களுக்கெல்லாம் செல்லவுமில்லை. ஹைதரா பாத்தில் நான் ஒரு கூட்டத்திலும் பேசியதுமில்லை. பேச, மைசூருக்கு நான் சென்றதில்லை. அங்கெல்லாம் என்னைப் போக ஏன் அனுதிக்கக்கூடாது-என்னோடு நீங்களும் ஏன் வரக்கூடாது. நான், போட்டிப் பந்தய உணர்ச்சியுடன் ஒரு யோசனை கூடக் கூறுகிறேன். எல்லாக் கட்சியிளரும் கொண்ட, கலந்தாலோசிக்கும் கமிட்டி அமைப்போம்— எல்லோரு மாக நாடு சுற்றி வருவோம்-நாட்டுக்கு என்ன தேவை என்பதைக் கண்டறிவோமாக! மனம் மாறும்படி செய்யுங்கள், பிறகு, நான்கேட்பது, நினைத்துக்கூடப் பார்க்கத் தகாதது என்று சொல்லுங்கள். ஆனால், இந்த மசோதாவைக் கொண்டுவராதீர்கள்—கொண்டுவந்து வைத்துக்கொண்டு, இந்த மசோதாப்பற்றி என்ன செய்யப் போகிறாய் என்று கேட்காதீர்கள். என் நண்பர் புபேஷ் குப்தா சொன்னார், நாங்கள் தலைமறைவாகிவிடுவோம் என்று, நாங்கள் எப்போதும், வெளியில் உலவுபவர்கள்! தலைமறைவாகிவட உத்தேசம் இல்லை. ஆனால், மனம் வெதும்பிய அதிருப்தி மறைவிடம் செல்லும்.

பூபேஷ் குப்தா

அதுதான் நான் சொன்னது.

அண்ணா

மனம் வெதும்பிய அதிருப்தி நிலை, மறைவிடம் செல்லும்; அதனை எந்தச் சட்ட முயற்சியும் ஒன்றும் செய்து விட முடியாது. பல இலட்சக்கணக்கான மக்களின் மனத் திலே கிடக்கும் அதிருப்தியைத் தாக்கி ஒழிக்கும் முறையை, அரசியல் தத்துவமுறை இன்னும் கண்டு பிடித்ததில்லை. எனவே, இந்தச் சட்ட முயற்சியினால், உண்மையான, மனம் வெதும்பும், அதிருப்தியை நீங்கள் மறைவிடத்துக்குத் துரத்துகிறீர்கள்.

அரசியல் சட்டத்தின் பாயிரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது, அரசியல் அரசுரிமை மக்களிடம் இருக்கிறது என்று. சட்டப்படி உள்ள வல்லமையுடைமை அல்லது அரசுரிமை கூட்டாட்சியின் மத்திய அமைப்பிலும், கூட்டாட்சியில் அமையும் இராஜ்ய அரசு அமைப்பிலும், பிரித்துத் தரப்பட்டிருக்கிறது. ஏன், எங்கள் திட்டத்தை, அரசுரிமை பெற்ற இராஜ்ய அமைப்புகள், மேலும் பலன் தரத்தக்க அரசுரிமை பெறுவதற்கான முயற்சி என்று நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது! அந்த முறையிலே சுருதினால் என்ன! திராவிடஸ்தான் கேட்ட உடனே அரசுரிமையின் வேர் வெட்டப்படுகிறது என்று நீங்கள்ஏன் நினைக்கிறீர்கள்? அரசுரிமை முழுவதும் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலே மட்டும் இல்லையே. கூட்டாட்சி முறையல்லவா கொண்டிருக்கிறோம். பல அரசியல் தத்துவவாதிகள் சுட்டிக் காட்டியுள்ளபடி, இந்தியா மிகப்பெரிய அளவுள்ளது; சொல்லப்போனால், அதனை ஒரு துணைக்கண்டம் என்றே வர்ணித்திருக்கிறார்கள்; பல்வேறு விதமான மனப்பான்மைகள், பல்வேறான பாரம்பரிய உணர்ச்சிகள்—வரலாறு வெவ்வேறு

வகையினதாக—இருப்பதானால்தான் இங்கு இரும்புக்கூடு போன்ற ஒரரசு முறை இருக்க முடியாது என்பதால், அரசியல் சட்ட திட்டம் வகுத்தவர்கள் ஒரரசு முறை அமைக்காமல், கூட்டாட்சி முறை அமைத்தனர். எனக்குள்ள குறை என்னவென்றால்—அதற்கு ஆதரவாக, பிரஜா சோஷயலிஸ்டு உறுப்பினர் குருபாத சுவாமியும் மற்றவர்களும் கூறியுள்ளனர். எனவே, அதிகாரம் அதிகம் பெறவேண்டும் என்ற எண்ணம் இயல்பாக எழுகிறது. இத்துடன், பிரதேச வளர்ச்சியிலே வேற்றுமையும் இணைகிறது; மொழிப் பிரச்சினைபற்றிய சிக்கலும் சேருகிறது; அந்நிலையில், என் போன்றவர்களுக்கு, ஏமாற்றம் ஏற்படுவதும், பிரிவினைபற்றி எண்ணுவதும், இயற்கைக்கு மாறானதென்று கருதுகிறீர்களா? எங்களைச் சந்திக்க, பாதி வழி வாருங்கள், வந்து சொல்லுங்கள், இதுவரையில்தான் செல்லலாம், இதற்குமேல் போகக்கூடாது என்று கூறுங்கள். ஆனால், பாதி வழி வந்து எம்மிடம் அதுபோலக் கூறும்போது, எங்களால் அல்ல, இராஜ்யங்களுக்குக் குந்தகம் விளையும் படியான முறையில், அரசியல் சட்ட திட்டத்தை நடத்திச் சென்றதால் உண்டாகிவிட்டிருக்கிற, சிக்கல்களுக்குத் தகுந்த சமாதானம் சொல்லவேண்டும். நிலக்கரிச் சுரங்க சம்பந்தமாக, மேற்குவங்காள சர்க்காரும் மத்திய சர்க்காரும், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகவேண்டி ஏற்பட வில்லையா? சட்ட மந்திரி, மேற்கு வங்காளத்திலிருந்து வந்திருக்கிறார். வங்காளிகள் முழுத் திருப்தி அடைந்துள்ளனரா? அவர்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் என்ற முறையில், சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு இருப்பார்கள். என் நண்பர் புபேஷ் குப்தா, கம்யூனிஸ்டு கொள்கையினராக இல்லாதிருந்திருப்பின், மேற்கு வங்க உரிமைக்காக வாதாடுவதில் முதல்வராக இருந்திருப்பார். வங்காளிகளிடம் உள்ள தேசிய உணர்ச்சிக்கு நான் தலை வணங்குகிறேன்.

பூபேஷ்குப்தா

இங்கு நான் உரிமைக்காகப் போராடினேன். டாக்டர் பி.சி.ராய் அவர்கள் அதை அறிந்திருக்கிறார்.

அண்ணா

ஆனால், போரிலே தோல்வி ஏற்பட்டுவிட்டது, வருந்துகிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இராஜ்யங்கள் மேலும்மேலும் மனம் உடைந்த நிலைக்குச் செல்கின்றன; அரசியல் சட்டதிட்டத்தைத் திரும்ப ஆராயவேண்டும். அரசியல் சட்டதிட்டம் பற்றிய புதிய மதிப்பீடு பெறவேண்டும் என்று மத்திய சர்க்கார் நினைக்கவேண்டும் என்ற கோரிக்கையை (இராஜ்யங்கள்) வலியுறுத்துகின்றன. இதிலே, என் கருத்துக்கு நினைத்த பெரழுது மந்திரிசபையிலிருந்து வெளியேறவும், மீண்டும் நுழையவும் சக்தி பெற்ற ஒரு பிரமுகரின் ஆதரவு இருக்கிறது — பொருளாதார — பாதுகாப்புத்துறை இணைப்பு மந்திரி, கனம் டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரைக் குறிப்பிடுகிறேன். மறைந்த பெரியவர், பெரோஸ்காந்தியின் பெயரால் புதுடில்லியில் அமைந்துள்ள ஒரு மன்றத்தில், 1962, செப்டம்பர் 8-ல் பேசும் போது, அவர், பத்து ஆண்டு களுக்கு ஒருமுறை அரசியல் சட்டதிட்டத்தைப்பற்றிய பரிசீலனை நடத்தவேண்டும் என்ற விதியைப் புகுத்தத் தவறிவிட்டது குறித்துப் பேசினார்—அரசியல் சட்டதிட்டம் தீட்டியவர்களில் ஒருவர் என்ற முறையில். அதுமட்டுமல்ல, இதற்காகப் பொதுமக்களின் கருத்துத் திரண்டெழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார். பொதுமக்களின் கருத்துக்களைப் பாதுகாப்பவர்களில் ஒருவன் என்று என்னைக் கருதி என்னோடு வாருங்கள், இராஜ்யங்களின் மனப்பான்மை என்ன என்பதைக் கண்டறியலாம். ஆளுங்கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினருக்கும், தொல்லையை வருவிக்க நான் விரும்பவில்லை, யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் சொல்லுகிறேன், சென்னையில் ஆளுங்கட்சியில் உள்ளவர்

களிலே பலர், இந்தியா ஒன்று. பிரிக்கப்பட முடியாதது என்று ஆணையிட்டுச் சொல்லக்கூடும், இந்தியாவின் அரசுரிமை மீதும் பிரதேச ஒற்றுமையின்மீதும் ஆணையிடக் கூடும். ஆனால், அவர்களின் ஏற்பாடுகளில் ஒன்று உதாசீனப்படுத்தப்பட்டால், அவர்கள் குறிப்பிடும் திட்டங்களிலே ஏதாவதொன்று எடுத்துக்கொள்ளப்பட வில்லை என்றால் அவர்களுக்குத் தேவையான தொகை அவர்களுக்கென ஒதுக்கப்படவில்லை என்றால், அப்போ தெல்லாம் அவர்கள் என்னைப்பற்றிய நினைவு பெறுகி றார்கள்! இதனால்தான் அண்ணாதுரை பிரிவினை கேட்கிறான் — என்கிறார்கள். சேலத்துக்கு எஃகு ஆலை இல்லை என்று மறுத்துவிடுங்கள்; அங்கு நான் கிளம்புகிறேன்! தூத்துக்குடி அபிவிருத்தி கிடையாது என்று மறுத்துப்பாருங்கள்; தி.மு.க, அங்கு தோன்றுகிறது! எனவே, கூட்டாட்சி முறையை ஓரரசு முறையாக்கும் முயற்சிக்குக் கிளம்பியுள்ள எதிர்ப்பின் ஈட்டிமுனை, தி.மு.க. என்று கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தின் பெரியவர்கள் நீங்கள்! ஏன் இந்தப் பிரச்சினையைக் காட்டுக்கு அழைத்துச் செல்கிறீர்கள்? அரசியல் அரங்கிலே மேலான இடத்துக்கு, பிரச்சினையை உயர்த்துங்கள்; கூட்டாட்சியை உண்மையான கூட்டாட்சி ஆக்குங்கள்.

சில உறுப்பினர்கள் திரும்பி என்னைக் கேட்பார்கள், ஆனால், நீ, பிரிவினை பற்றி அல்லவா பேசிவருகிறாய் என்று நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாதது அது என்றார் புபேஷ்குப்தா. மற்றவர்கள் அறிந்திராவிட்டாலுங்கூட சோவியத் அரசியல் சட்டதிட்டம் புபேஷ்குப்தாவுக்குத் தெரிந்திருக்கவேண்டும். பிரிந்துபோகும் உரிமையை அது அளிக்கிறது; ஆனால், அதனால் அரசுரிமைக்கு ஆபத்து வந்துவிட்டது என்று குய்யோ முறையோ என்று கூச்சலிட்டுக்கொண்டில்லை. புபேஷ்குப்தா, சோவியத் யூனியனிலிருந்து கெட்டவைகளைத்தான் கொள்கிறார் போலும், நல்லவைகள் அல்ல. பிரிவினை கேட்டதுமே

அரசுரிமைக்கு ஆபத்து வரும் என்பது இல்லை, என்று அவருக்கு நான் கூற விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. எங்கள் பிரிவினைப் பிரசாரம், அரசுரிமைக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது என்று வைத்துக்கொண்டே பார்த்தாலும், சர்க்காரை நடத்திச் செல்லும் ஒரு ஜனநாயகக் கட்சி என்ன செய்ய முயலவேண்டும்? அது மக்களிடம் சென்றிருக்க வேண்டாமா? அரசுரிமை மக்களிடம் இருக்கிறது என்று கூறவில்லையா? மக்கள்தான் அரசியல் சட்டதிட்டத்தை ஏற்படுத்தினார்கள். அரசியல் உரிமைகளின் பிறப்பிடமான மக்களிடம்தான், நீங்கள் சென்று முறையிட வேண்டும். நான் நம்பிக்கையுடன் மக்களை அணுகிச் செல்கிறேன். பொது மக்களுக்கு விஷய விளக்கம் அளித்து என்னை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் திறமை, ஆற்றல் எமக்கு உண்டு என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவர்களின் சர்க்காருக்குக் கூறக் கேட்டுக்கொள்கிறேன்.. உங்கள் உரிமையை ஏன் விட்டுக்கொடுத்துவிடுகிறீர்கள்? ஆளுங்கட்சி உறுப்பினர்கள் என்ற முறையிலும், பொதுத்தொண்டாற்றும் பொறுப்பு மிக்கவர் என்ற முறையிலும், நீங்கள் சர்க்காருக்கு "எங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலே, குறுக்கே நிற்க வேண்டாம். அண்ணாதுரை பிரிவினைக்கான பிரசாரம் நடத்துகிறான் என்றால், அதன் ஆபத்தான தன்மையை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். நாங்கள் மக்களைச் சந்தித்து, அந்தப் பிரசாரத்தின் விஷம் நிறைந்த தன்மையை, மக்கள் உணரும்படி செய்வோம்," என்று யோசனை கூறவேண்டும். ஜனநாயகவாதி என்ற முறையில் சாமன்யர்களுக்கு ஓரளவு மதிப்பளிக்க வேண்டும் என்று இந்த மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சாதாரண மக்களை யார் வேண்டுமானாலும் ஏய்த்துவிட முடியும் என்று நினைக்காதீர்கள். சாமான்யன் நிரம்பப் படித்தவனாக இல்லாதிருக்கலாம்—சிறப்பாகச் சட்ட அறிவு பெறாதவனாக இருக்கலாம்—ஆனால், வளமான பொது அறிவு

பெற்றிருக்கிறான், வெண்ணெய் எது, சுண்ணாம்பு எது என்று வித்தியாசம் கண்டறிய அவனுக்குத் தெரியும். நீங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறீர்கள் என்றால், நாட்டு மக்கள் அவ்வளவு பேர்களுடைய பொது அறிவுத் திறனிலும் நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றுகிறீர்கள் என்று ஆகும்! பிரச்சினையை ஏன் பொதுமக்களுக்கு விட்டுவிடக்கூடாது? நானும் விரல்விட்டு எண்ணக்கூடிய என் கட்சியினர் சிலரும் சேர்ந்துகொண்டு பொதுமக்களை ஏய்த்துவிட முடியும் தவறான வழியில் அழைத்துச் செல்ல முடியும் என்று கருதாதீர்கள். சட்டமந்திரி, மற்றோர் மன்றத்தில், பள்ளிச் சிறார்களை மட்டும் மகிழவைக்கும் ஒரு காரணம் காட்டினார்...

கனம் ராமிரெட்டி

தவறான முறை செல்லும் தத்துவ வாதம்.

அண்ணா

என்னுடையதா?

கனம் ராமி ரெட்டி

உம்முடைய தத்துவ வாதம் தவறான வழி அழைத்துச் செல்லக்கூடியது...

கனம் அக்பர் அலிகான்

இந்தியாவின் வரலாற்றில் வகுப்புவாத உணர்ச்சிகள் எந்த முறையிலே வேலை செய்தன, வகுப்புவாத உணர்ச்சி யாலும் வகுப்புவாதத்தின் பேரால் வெளியிடப்பட்ட முறையீடுகளாலும் மக்கள் எப்படி வசப்படுத்தப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும் என்று நான் அண்ணாதுரையைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சந்தோஷ் குமார் பாசு

இந்த விஷயத்தை நேர்த்தியான முறையிலே எடுத்துப் பேசிக்கொண்டு வருகிற அண்ணாதுரையை நான் மற்றும் ஓர் கேள்வி கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்காருக்கு அளவு கடந்த அதிகாரம் இருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கூச்சல் கிளம்பிய பிறகு தான், பாகிஸ்தானுக்கான கூச்சல் கிளப்பப்பட்டது என்பது உண்மையல்லவா?

அண்ணா

துணைத்தலைவர்கள் அவர்களே! நான் சொல்ல வேண்டியவைகளை விளக்கியான பிறகு, தாங்கள் அருள் கூர்ந்து, எனக்கு மேலும் பேச சிறிது நேரம் தந்தால் இதற்கு பதில் அளிக்க முயல்கிறேன்.

துணைத் தலைவர்

இன்னும் சிறிது நேரம் எடுத்துக்கொள்ளலாம்.

அண்ணா

அரசுரிமை மக்களிடம் இருக்கிற வரையில், எந்தப் பிரச்சினைக்கும் தீர்ப்பளிக்க வேண்டிய தகுதிமிக்க அதிகாரம் படைத்தவர்கள் மக்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதுபற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். நான் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தபடி, கூட்டாட்சி அமைப்பு முறை ஒரு குறிப்பிட்ட அளவு கெடுக்கப்பட்டுப் போயிருக்கிற காரணத்தினால், ஓரரசு முறைக்குச் சென்று கொண்டிருப்பதனால், பிரிவினைக்கான கோரிக்கையை, மற்ற இராஜ்ஜியங்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியுடன் சேர்த்துப் பார்த்துக் கவனிக்க வேண்டும் என்று கூறுகிறேன். எங்கள் பிரசாரம் ஆபத்தானது என்று வைத்துக்கொண்டு பார்ப்பதான்னாலும்கூட, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எங்களை எதிர்ப்பிரசாரத்தால் சமாளிக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தேன். அவர்கள்

இந்தத் தமது உரிமையை விட்டுக் கொடுப்பதாக இருந்தாலும், இந்த உரிமையையும் சர்க்காருக்கு, நிர்வாகத் துறையினருக்கு விட்டுவிடுவதாக இருந்தாலும், எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்க, அடிப்படை உரிமைகளைக் குறைக்கவேண்டியது அவசியந்தானா என்பது பற்றி யோசித்துப் பார்க்கும்படி, இந்த மன்றத்து உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வேன். இந்த மன்றம் அதுபற்றி யோசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அடிப்படை உரிமைகள் கட்டுக்கடங்கக் கூடாதவை அல்ல என்பதை நான் தெரிந்திருக்கிறேன், நன்றாக அறிந்திருக்கிறேன் - கட்டுதிட்டங்கள் உள்ளன...

கனம் அக்பர் அலிகான்

மிக உண்மை.

அண்ணா

பார்லிமெண்டுக்கு, அந்த உரிமைகளைக் கட்டுப் படுத்த எல்லா வித அதிகாரமும் உண்டு. இவை எளிதாக உணர்ந்துகொள்ளத்தக்க விஷயங்கள். இவைகளைப் புரிந்துகொள்ள அதிகச் சிரமப்பட வேண்டியதில்லை. ஆனால், முக்கியத்துவம் வாய்ந்தவை கட்டுதிட்டங்கள் அல்ல, உரிமைகள்தாம் என்பதைப் புரிந்துகொள்ளச் சிறிதளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்! ஆகவே தான், நமது அரசியல் சட்டதிட்டத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், உரிமைகளுக்கு விதிக்கப்படும் கட்டுதிட்டங்கள், தக்க காரணங்களுக்காக இருக்க வேண்டும் என்று. இந்தக் கட்டுதிட்டத்துக்குத் தக்க காரணம் இல்லை, என்பது என் பணிவான முறையீடாகும் — தக்க காரணம் இல்லை என்றால், முதலாவதாக, நீங்கள் பிரச்சினையை அலசிப் பார்க்கவில்லை, இரண்டாவதாக, எங்களைப் புரிந்துகொள்ள முயலவில்லை, மூன்றாவதாக நீங்கள் எமக்கு மாற்றுத் திட்டங்களைத் தரவில்லை, நாலாவதாக மக்களை நீங்கள் நம்பிக்கைக்கு உரியவர்

களாகக் கொள்ளவில்லை! சட்டத்துறை முறைப்படி இல்லாதிருக்கக்கூடும், ஆனால், அரசியல்துறை முறைப்படி, நீங்கள் புகுத்தும் கட்டுதிட்டத்துக்குப் போதுமான காரணம் இல்லை.

அடிப்படை உரிமைகளைப்பற்றிப் பேசும்போது, சட்ட மந்திரி அந்த மன்றத்தில் வேடிக்கையான ஒரு வாதம் செய்தார் என்பதுபற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். அடிப்படை உரிமைகளை முழுவதும் அப்படியே பயன் படுத்துவதாக இருந்தால், அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தியே சிலர், சீனர்களையே வரவேற்றிருப்பார்கள் என்று கூறினார். ஆளுங்கட்சியினர், குறிப்பாக மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளக்கூடிய சில உணர்ச்சி களையும் அவர் சேர்த்துக்கொண்டு பேசினார். நான் அதுபற்றிக் கவலை கொள்ளத் தேவை இல்லை. ஆனால், சட்ட மந்திரியாகட்டும், வேறெந்த மந்திரிதானாகட்டும், பொருள்களை அறிந்து தீர்ப்பளிக்கும் திறமை பொது மக்களுக்கு உண்டு என்பதை ஏன் குறைத்து மதிப்பிட வேண்டும்?—இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேடை மீதேறி எவராவது, 'நாங்கள் சீனர்களை வரவேற்கிறோம்' என்று பேசினால், மக்கள் பார்த்துக்கொண்டு சும்மாவா இருப்பார்கள்? இல்லை! நமது மக்கள், அரசியல் சட்ட திட்டத்தின் பகுதிகளும் விதிகளும் கற்றறியாது இருக்கலாம். ஆனால், நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள வித்தி யாசத்தைத் தெரிந்துகொள்ளும் திறம் இருக்கிறது. அதனால் தான், விடுதலைப் போராட்டத்துக்கான அழைப்பு வந்ததும், வலிவுமிக்க ஏகாதிபத்தியம் புகுத்திய அடிமைத் தனம் அவ்வளவு இருந்தபோதிலும், மக்கள் முன்னணியில் வந்து நிற்கத் தயாராக இருந்தனர்! பொதுமக்களிடம் உள்ள நம்பிக்கையைக் குறைத்துக்கொள்ளாதீர்கள்.

அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில், அந்த மன்றத்தில், சட்ட மந்திரி பேசியது, உண்மைக்கு

வெகுதூரம் அப்பாற்பட்டது மட்டுமல்ல, ஆழ்ந்த யோசனை கொண்டதுமல்ல. ஆனால், நான் சொல்லிக் கொண்டு வந்ததுபோல, கட்டுதிட்டங்களைப் புகுத்தலாம். பார்லிமெண்டுக்கு, கட்டுதிட்டம் புகுத்தும் அதிகாரம் இருக்கிறது. ஆனால், இந்தக் கட்டுத்திட்டங்களெல்லாம், கட்டுத்திட்டங்கள் போட்டே ஆகவேண்டும் என்று வலியுறுத்திக் காட்டத்தக்க அசாதாரண நிலைமைகள் ஏற் பட்டுள்ளனவா என்பதைக் கவனித்தே போடப்பட வேண்டும். மோதிலால் நேரு கமிட்டியில் என்று நினைக்கிறேன், 1928–ல் பண்டித ஜவஹர்லால் நேரு சொன்னார் மிகத் தெளிவாக நாம் நமது அடிப்படை உரிமைகளைப் பெறவேண்டும் என்பது மட்டுமல்ல, அந்த அடிப்படை உரிமைகளை எந்த நிலைமை காரணமாகவும் நீக்கிவிட மாட்டோம் என்று நமது மக்களுக்கு உறுதி அளிக்கவேண்டும் என்று கூறினார். என் வார்த்தைகளை நன்கு கவனியுங்கள், துணைத்தலைவர் அவர்களே! தங்கள் மூலமாக, மன்றத்து உறுப்பினர்களையும் இந்த வார்த்தைகளை நன்கு கவனித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன் – எந்த நிலைமை காரணமாகவும்! அதற்குப் பிறகு நாம் வலிவற்றவர்கள் ஆகிவிட்டிருக்கக்கூடும், அதை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால், இந்தக் கட்டு திட்டம் விதிக்க வேண்டிய அளவுக்கு ஏதேனும் அசாதாரண நிலைமையாவது எழும்பி இருக்கிறதா? இல்லை. இப்போது தி.மு.க. சட்ட எல்லைகளை மீறாமல் இருந்திருக்கலாம், ஆனால், விஷமம் செய்யும் தன்மை, ஆபத்து விளைவிக்கும் தன்மை இருக்கிறது, அந்தத் தன்மையை இரும்புக்கரம் கொண்டு ஒழித்துக் கட்டியாக வேண்டும் என்று வாதங்கள் எடுத்துக்கூறப்பட்டன. இந்தத் தன்மை என்ற வார்த்தை பற்றிச் சட்ட விற்பன்னர்கள் தரும் இடம் என்ன, கொள்ளும் பொருள் என்ன என்பது பற்றி எல்லாம் பேச எனக்கு நேரம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால், இதனைக் கூறுவேன்—மிகச் சிறந்த சட்ட விற்பன்னர்களில் ஒருவர், ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரி கூறி

யிருக்கிறார்: சில விஷக் கிளைகள் தழைத்து வளரக்கூட விட்டு வைக்கலாம், அவைகளை எடுத்துப்போடும் முயற்சியில் தருவையே வெட்டி வீழ்த்தி, உயிர்ப்புச் சக்தியையே நாசமாக்குவதைவிட!— என்று அடிப்படை உரிமைகள் பற்றியும், அதற்குப் போடப்படும் கட்டுத்திட்டம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்ட நீதிமானின் கருத்துகளிலே அது ஒன்றாகும். முற்போக்கான தாராளத் தன்மையுள்ள பாரம்பரியத்தைப் பின்பற்ற வேண்டும், அதற்கு ஏற்பவாவது நமது சிந்தனைகள் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக, "எங்களுக்கு அழித்துவிடும் வலிவு இருக்கிறது, எந்த எதிர்க் கட்சியையும் அழிக்கும் வலிவு! இன்று, தி.மு.க; நாளைக்கு கம்யூனிஸ்டு கட்சி; மறுநாள் ஜனசங்கம் — என்று கூறுவதானால், நான் கூறுகிறேன், உங்களிடம் அதிகாரம் இருக்கிறது, செய்துகொள்ளுங்கள்! ஆனால், சட்டத்தின்மூலம் அடக்கு முறை நடத்தி, வலிவும் ஆதிக்கமும் தேடிக் கொண்ட எந்த சர்க்காரும் எங்கு சென்றன. விளைவு என்ன என்பதை நினைவில் கொள்ளுங்கள்; நான் கவனப்படுத்தத் தேவையில்லை. இன்றுகூடப் பார்த்தோம், மன்றத்தின் இந்தப் பகுதியிலே, புபேஷ்குப்தா, தி.மு.கழகத்தை மட்டுமல்ல, ஜனசங்கத்தையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டும், அது வகுப்புவாத அமைப்பு என்று அவர் கருதுவதால் — என்றார். பிரஜா சோஷியலிஸ்டுகள், தி.மு.கழகத்தைவிட அதிக ஆபத்தானது கம்யூனிஸ்டு கட்சி என்று கூறினர். எனவே, நாம் வசதியாகக் கிடைத்து விடுகிறோம் — எதிர்க் கட்சிகளாக உள்ள நாம் —

கனம் யாஜி

இந்தியாவில் பிரிவினை வேண்டும் என்று வாதிடுகிற எந்தக் கட்சிக்கும் பொருந்தக்கூடியது அது—அது கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.கழக மானாலும் சரி.

புபேஷ்குப்தா

அவர்தான், திரு.யாஜி! துணைத்தலைவர் அவர்களே நாம் எல்லோரும் சேர்ந்து யாரையாவது எதிர்த்துச் சமாளிக்க வேண்டும் என்றால், அது, திரு. யாஜியைத்தான்.

கனம் எ.கே.சென் (சட்ட மந்திரி)

துணைத்தலைவர் அவர்களே! நான் இந்த அமைதி இந்திய பாதுகாப்புச் சட்டவிதிகளால் ஏற்பட்டது என்று சொன்னதாகச் சொல்லப்பட்டது, நான் அப்படிச் சொல்லவில்லை. ஓரளவுக்கு, அப்படி, என்று நான் சொன்னேன். தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் களுக்காகத்தான், அந்த விதிகள் ஏற்பட்டுள்ளன. நான் தி.மு. கழகத்துக்காக என்றோ மற்ற யாருக்காகவேனும் என்றோ சொல்லவில்லை. ஓரளவுக்கு, இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இந்திய அமைதிக்குக் காரணம் என்று சொன்னேன். இதில் என்ன தவறு?

அண்ணா

நான் எதைக் குறை கூறினேன் என்றால், அவ்வித மான கருத்துரை, பரிவு காட்டும் உணர்ச்சியல்ல என்பது பற்றித்தான் நான் குறை கூறினேன்.

எ.கே.சென்

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க விரும்புபவர்கள் இருக்கிறார்கள்; தவறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் இருக்கிறார்கள்; நாம் அதனைக் காணாமல் கண்களை மூடிக்கொள்ள முடியுமா? ஆனால், கனம் உறுப்பினர் அதனைத் தமது தலைக்குப் பொருந்தும் குல்லாய் என்று கொள்ளத் தேவையில்லை. நான் அவரையோ, அவருடைய கட்சியையோ குறிப்பிடவில்லை.

துணைத்தலைவர்

அண்ணாதுரை! நீங்கள் மேலாகப் பேசுங்கள். இப்போது விளக்கம் ஏற்பட்டுவிட்டது என்று நம்புகிறேன்.

அண்ணா

ஆளுங்கட்சி பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தும் போக்கிலே சுவை கொள்ளும்படி செய்துவிட்டால், இன்று அது தி.மு. கழகத்தைக் குறியாகக் கொண்டிருக்கலாம், ஆனால், நாளை மற்றக் கட்சிகளின்மீதும் குறி பார்க்கப்படும் என்பதை மறுக்க உத்தரவாதம் என்ன இருக்கிறது? அதற்காக ஆளுங்கட்சி வாதாடத் தேவையில்லை; நாமே அதற்கான விதமாக வாதாடிக்கொள்கிறோம்; கம்யூனிஸ்டுகளை ஒடுக்க வேண்டுமென பிரஜா சோஷிலிஸ்டு வாதாடுகிறது, ஜனசங்கத்தை ஒடுக்க வேண்டுமென கம்யூனிஸ்டு கட்சி வாதாடுகிறது! இது அதிகப்பட அதிகப்பட ஆளுங்கட்சிக்குக் கொண்டாட்டந்தான்; எனவே, மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன் — அடிப்படை உரிமைகளைக் குறைக்கும் பிரச்சினை என்ற முறையில் இதனைக் கவனித்துப் பார்க்க வேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எங்கள் பிரசாரத்தைத் திடமாக எதிர்த்துப் பிரசாரம் செய்யத் தங்களால் முடியும் என்பதையாவது எடுத்துச்சொல்லட்டும். எங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்க முன்வரட்டும், எங்களுக்கு மன மாற்றம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள முன்வரட்டும் — அந்தக் காரணத்துக்காக, இந்த மசோதாவை, முழுவதும் அவர்கள் எதிர்க்க வேண்டும். ஏனெனில், என் நண்பர் புபேஷ் குப்தா சொன்னார், கொள்கை அளவில் இந்த மசோதாவை ஒத்துக்கொள்வதாக, மற்றோர் நண்பர் குரு பாதசாமி இதன் மொத்த நோக்கத்தை ஒத்துக்கொள்வதாகச் சொன்னார்...

புபேஷ் குப்தா

மொத்தமான அரசியல் நோக்கம்...

அண்ணா

அதன் பொருள் என்னவென்றால், இவர்கள் உரிமைக்குப் போடப்படும் கட்டுதிட்டங்களின் விளைவுகள்

பற்றி உணருகிறார்கள் என்பதுதான். எனவே இப்படிப்பட்ட சட்டத்தின் விளைவுகள் பற்றி - அது எந்தக் கட்சியின்மீது ஏவப்படுகிறதோ அதுபற்றி அல்ல - கருதிப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களிடத்திலேயும் மக்களிடத்திலேயும், ஆளுங்கட்சி யினருக்கு நம்பிக்கை இருக்குமானால், ஜனநாயக சமூகத்தில், எண்ண, எடுத்துரைக்க இருக்கும் உரிமை குறைக்கப்படக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

> "மிக முக்கியமான விஷயங்களில், உண்மையைக் கண்டறிவதும், அதனை எடுத்துரைப்பதும், சமுகத்துக்கும் சர்க்காருக்கும் உள்ள மிக முக்கியமான நோக்கமாகும். தங்கு தடையற்ற விதமாக விவாதித்துப் பேசும் முறை மூலமாகவே, இது சாத்தியமாகும். பாகியாட் கூறுகிறபடி, ஏதாவதொரு பக்கத்தில் வன்முறை துணையாக்கப்படுகிறதோ அப்போது, அது உண்மையின் பக்கம் துணை நிற்கிறதா, பொய்யின் பக்கம் துணை நிற்கிறதா என்பது அறுதியிட்டுக் கூற முடியாததாகிவிடுகிறது. கருத்துப் போரில், உண்மை இயற்கையாகப் பெறவேண்டிய சாதகங்களை எல்லாம் இழந்துவிடுகிறது."

வன்முறை மூலம் அமைதியை ஏற்படுத்தாதீர்கள், இதய மொழி பேசி நட்புறவு எழச் செய்யுங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அடிப்படை உரிமைகளின் சார்பில் நிற்கும்படி ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன் — பொது மக்களுக்குக் கருத்து விளக்கம் அளிக்க உங்களுக்கு உள்ள உரிமையை நிலைநிறுத்திக்கொள்ளுங்கள் — கருத்து வேற்றுமைகளை எடுத்துரைக்கும் உரிமை, எண்ணும் உரிமை இல்லாது செய்திடச் சட்டத்தின் துணையைத் தேடுவதற்குப் பதிலாக!

கடைசியாக, எனக்குத் தவறான வழியில் செல்லும் தத்துவ சாஸ்திர முறை இருப்பதாக, ராமி ரெட்டி அவர்கள் சொன்னார்களே...

ராமிரெட்டி

தவறான வழிக்கு அழைத்துச் செல்லும் வாதமுறை.

அண்ணா

எந்த உறுப்பினரும், தவறான வழி அழைத்துச் செல்வதற்கு இணங்கிவிடக்கூடாது! யாரையும் தவறான வழியில் அழைத்துச் செல்லும் திறமை எனக்கு இல்லை. ஒரு வேளை, என்னுடைய தத்துவ சாஸ்திர முறையே தவறானது என்று சொல்லுகிறாரோ என்று நினைத்தேன் — ஏனெனில், அந்த முறை அப்பழுக்கற்றதாக, எனக்கு இருக்கவேண்டும் என்பதிலே நான் மெத்தக் கவலை கொள்பவன். நான் மற்றவர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்பவன் என்று கூறப்பட்ட புகாருக்கு, நான் சொல்ல விரும்புவது, மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லும் வலிவுமிக்கவன் அல்ல நான்!

சாரோகி

துணைத்தலைவர் அவர்களே! கனம் அங்கத்தினர், அவருடைய இராஜ்ய மக்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார். அதனால்தான் இந்த மசோதா நிறைவேற்றப்பட இருக்கிறது.

ஒருவர்

மக்களைக் தவறான வழியில் கொண்டு செல்வீர்கள் — என்பதுதான், உள்ள பயம்.

அக்பர் அலிகான்

வகுப்புவாத காரணங்கள் பற்றி...

துணைத்தலைவர்

சரி, அண்ணாதுரை, தயவுசெய்து பேச்சை முடித்து விடுங்கள். நீங்கள் இராஜ்ய மக்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்வதாகவும், அதற்காகத்தான் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது என்றும் சொன்னார்.

சாரோகி

மக்களுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தூண்டிவிட்டுவிடுகிறீர்கள். அவர்கள் அதற்கேற்ப ஆடுகிறார்கள். அதற்காகத்தான் இந்த மசோதா சட்ட மாக்கப்படுகிறது.

துணைத்தலைவர்

அவர்களும் ஆடிவிட நேரிடுமோ, என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அண்ணா

துணைத்தலைவர் அவர்களே! இந்த அறிவிப்பு, சென்னை காங்கிரசாருக்கு உள்ள திறமையை, ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதாகிறது.

சந்தோஷ்குமார் பாசு

என் நண்பர் சொன்னார், வன்முறை உபயோகிக்கா தீர்கள் என்றார். இந்தச் சட்டம், வன்முறை வலிவைப் புகுத்தும், உங்கள் கொள்கையைத் திணிக்காதபடிசெய்ய. ஆனால், தி.மு.க. வன்முறை வலிவை அறவே நீக்கிவிட்டதா? அல்லது அந்தப் போக்கினருடன் தொடர் பற்று இருக்கிறதா? நீங்கள் எப்போதும், வன்முறை வலிவை நீக்கியிருந்திருக்கிறீர்களா?

அண்ணா

நிச்சயமாக! பலமுறை நாங்கள் அறிவித்திருக்கிறோம், நாங்கள் சட்ட திட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளும் கட்சியினர் என்று.

பாசு

இரயில்வே ஸ்டேஷன்களையும் — பெயர்பலகைகளையும் கொளுத்தியிருந்தாலும்கூட...

அண்ணா

ஸ்டேஷன்களை அல்ல, அரசியல் சட்டத்தை! என் மதிப்புமிக்க நண்பர், திராவிடர் கழக நடவடிக்கைகளை, திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகள் என்று தப்பாகக் கருதிக்கொள்கிறார், தொல்லை இதுதான். மன்றத்துக்கு இதனை நான் கூறுகிறேன், இந்த மசோதாவினால், நீங்கள், தி.மு.கழகத்தைத் தேர்தலில் ஈடுபட ஒட்டாமல் தடுத்துவிடலாம். ஆனால். திராவிடர் கழகம் தேர்தலுக்கு நிற்கும் கட்சி அல்ல; ஆகவே, இந்தச் சட்டம் அவர்களைப் பாதிக்கப் போவதில்லை.

பாசு

எங்களுக்குள்ள கவலை, தி.க.வா, தி.மு.க.வா என்பதல்ல. சட்டம் பற்றித்தான் நாங்கள் கருதுகிறோம் — அது எல்லோருக்கும் பிரயோகிக்கப்படக்கூடியது.

வாஞ்பாய்

ஆனால், தி.க. காங்கிரசுக்குக் கூட்டாளி என்று நம்புகிறேன்.

அண்ணா

அது பற்றி யோசிக்க வேண்டியது, காங்கிரஸ் கட்சி. என் குறிப்பு இதுதான், துணைத்தலைவர் அவர்களே! ஆளுங்கட்சி உறுப்பினர்களை வேண்டுகிறேன், சர்க்காருக்குச் சொல்லுங்கள், இந்த மசோதா தேவையற்றது. ஜனநாயகத்துக்கு விரோதமானது, அடிப்படை உரிமையை வெட்டி வீழ்த்துவது என்பதை, — நான் அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமை பற்றிச் சொல்லவில்லை. காங்கிரசாருக்கு உள்ள அடிப்படை உரிமை

பற்றிச் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சனையிலே அவர்கள் பங்கு பெற்றவராக இல்லை. அவர்களை விலகி நிற்கும்படி சொல்லப்பட்டுவிடுகிறது. இந்த மசோதா சொல்லுகிறது, "அண்ணாதுரையை எதிர்த்துச் சமாளித்தாக வேண்டும்; நீங்கள் அதிலே தோற்றுப்போய்விட்டீர்கள். எனவே, நான் வருகிறேன்–வரவிடுங்கள்!" என்று சொல்லுகிறது! நான் மெத்த மதிப்பு வைத்திருக்கிறேன் சென்னைக் காங்கிரசாரிடம். ஆனால் இது சென்னைக் காங்கிரசாரின் திறமையிலும் ஆற்றலிலும், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றுவது போன்ற மசோதா. நான் மதிக்கிறேன், நீங்கள் அவர்களுடைய முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகிறீர்கள் அதுதான் தொல்லை. எதிர்த்துப் பிரசாரம் செய்து சமாளிக்கும் திறமை அவர்களுக்கு இல்லை என்று நீங்கள் நினைப்பதாகத் தெரிகிறது. வருந்தத்தக்க நிலைமை இதுதான். ஆகவேதான் ஆளுங்கட்சி உறுப்பினர்களை வேண்டுகிறேன், சர்க்காருக்குச் சொல்லுங்கள், "நாங்கள் இருக்கிறோம், வீரமிக்க திடகாத்திரர்கள்! பிளவுப் போக்குகளை எதிர்த்துப் போராட! அண்ணாதுரையைக் கவனித்துக்கொள்கிறோம். எங்களை விடுங்கள்! அவன் நோஞ்சான்! ஒரு பார்வை போதும் அழுத்தமான ஒரு வார்த்தை போதும், அந்தப் பயலைப் பொசுக்கித்தள்ள" -என்று சொல்லுங்கள். உங்கள் கட்சிக்கும், உங்கள் சர்க்காருக்கும் இதுபோலச் சொல்லி, இந்த மசோதாவைத் திரும்பத் பெற்றுக்கொள்ளுங்கள் இல்லையென்றால், இது சட்டப் புத்தகத்தில் ஏறிவிட்டால், இப்போது மட்டுமல்ல, என்றைக்கும் கருதுவர், இந்தியாவிலே ஒரு நிலைமை ஏற்பட்டது, அப்போது ஒரு சிறு கட்சியினரைத் சமாளிக்க–அல்லது, என் நன்பர் புபேஷ் குப்தாவின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதானால், ஒரு தன்னந்தனி ஆளைச் சமாளிக்க –இந்திய அரசியல் சட்டத்துக்கே ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டி நேரிட்டது என்பர்.

பூபேஷ் குப்தா

இல்லை, இல்லை, நான் அதைச் சொல்லவில்லை.

அக்பர் அலிகான்

அண்ணாதுரைக்கு நான் உறுதியாகச் சொல்வேன்- ஒரு தனி ஆளுக்காகவோ, ஒரு தனிக் கட்சிக்காகவோ, இது கொண்டுவரப்படுவதல்ல, பிரிவினைத் தன்மைகள் எங்கு இருந்தாலும், பஞ்சாபில், சென்னையில், நாட்டிலே வேறு எந்தப் பகுதியிலிருந்தாலும் அதனை எதிர்த்துத்தான் இந்த மசோதா—அதுவும் கடந்த 30 ஆண்டுகளாக உள்ள வகுப்புவாதத் தன்மைகள், வகுப்புவாத உணர்ச்சிகள் இவைகளையும் கவனத்தில் வைத்துச் செய்யப்படுவது.

பூபேஷ் குப்தா

துணைத் தலைவர் அவர்களே! நான் அவரை, தனி ஆள், ஒண்டி ஆள் என்று சொல்லவில்லை.

அண்ணா

நான் அவருடைய சொற்களை நன்றியுடன் பெற்றுக் கொண்டேன், கண்டித்து அல்ல, கனம் அக்பர் அலிகான் சொன்னது பற்றிக் கூறுகிறேன்—அவர் தமது வாதத்தைக் கூறும்போது அவருக்கு இருந்த தயக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது—நான் இதைச் சொல்வேன், இந்த மசோதா தி.மு.க மீது மட்டுமல்ல; மற்றும் சிலர் மீதும் குறி பார்த்துத்தான் வருகிறது. நான் எந்தக் கட்சியில் இருக்கிறேனோ, அது சம்பந்தப்பட்ட மட்டில் நான் கருத்துச்செலுத்துகிறேன். வேறு பிரதிநிதிகள் இருந்தால், அவர்களும் இது போலப் பேசியிருப்பார்கள். ஆனால், சுய நலத்துக்காக இத்தகைய இலட்சியத்தை மூழ்கடித்துக் கொண்டவர்கள் இருப்பார்களானால், அவர்கள் பற்றி நான் கருதத் தேவையில்லை. தி.மு.கழகத்தின் நோக்கத்தை எடுத்துக்காட்டுவதுதான் என் நோக்கம். வேறு பலர்மீதும் குறி பார்க்கக்கூடும். ஆனால், நாளிதழ்கள், கிழமை இதழ்களை நீங்கள் பார்ப்பீர்களானால், அரசியல் மேடைப் பேச்சுக்களைக் கேட்கச் சென்றால், அவர்கள் "கேடு கெட்ட தி.மு.க." பற்றித்தான் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதைக்

காணலாம். ஆகவே, தி.மு.கழகத்தைச் சுட்டிக்காட்டுவதனால், கூறப்படும் குற்றச்சாட்டுகளில் சிலவற்றுக்கு நான் பதிலளித்தேன்.

கடைசியாக, மசோதாவைக் கொண்டுவந்தவரை ஜனநாயகத்தின் பேரால், அரசியல் நாகரிக உணர்ச்சியின் பேரால் கேட்டுக்கொள்கிறேன், தீமையை விலக்கிக் கொள்ளும் திறமை மக்களுக்கு உண்டு என்பதிலே தளராத நம்பிக்கை கொண்டு, இந்த மசோதாவை விட்டுவிடுங்கள். அதற்கு இசைவு தர, இயலவில்லையானால், நெருக்கடி நேரத்தை எண்ணி, இதை ஒத்திப் போடவாவது செய்யும் படி அவரைக் கேட்டுக்கொள்கிறேன்—ஏனெனில் கருத்து வேற்றுமைகளுள்ள பிரச்சினைகளைப் பின்னணியில் வைத்திருக்க வேண்டும். அவை பற்றி இப்போது பேசிக்கொண்டிருப்பது கூடாது. இந்த மசோதா கொண்டுவருபவர், இந்த வேண்டுகோளையும் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்றால், துணைத்தலைவர் அவர்களே! ஆளுங்கட்சியுடைய முறைகள், நடவடிக்கை, மசோதா, இவற்றினுக்கு என் கண்டன எதிர்ப்பைப் பதிவு செய்திட அனுமதி கொடுங்கள்.

இச்சட்டமுன்வடிவுமீது கம்யூனிஸ்ட் உறுப்பினர் புபேஷ் குப்தா பொதுவாக ஆதரித்து பேசுகையில் பின் வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

"சட்ட விரோதமாக ஆக்கி வருவது மட்டுமே பிரிவினைக் கோரிக்கையை இல்லாது ஒழித்துவிட முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வெளிப்படையாக குற்றம் சாட்டி விடுவது மட்டுமே அதிக நன்மையை விளைவித்துவிடாது. சென்றப் பொதுத் தேர்தலில் இக்கட்சியை 30 லட்சம் மக்கள் ஆதரித்து வாக்களிக்கத் துணிந்ததற்குரிய அடிப்படைக் காரணத்தையும் ஆராய்ந்தறியவேண்டும்.

மக்களுக்கு இருந்த குறைகளை இந்த அரசியல் வாதிகள் தவறான திசையில் திருப்பி தங்களுக்கு

உடன்பாடாக ஆக்கிக் கொண்டது காரணமாக இருக்கலாம். இந்திய ஒற்றுமைக்கான போராட்டமானது அரசியலில் லட்சிய நிலையாக நின்று போராட வேண்டியது ஆகும். சட்டம் இயற்றியோ அல்லது பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்தியோ பாதுகாப்புக் கைதியாக சிறையில் வைத்து பூட்டியோ வெற்றிபெற்றிட முடியாது அரசியல் களத்தில் இது போராடி வெற்றி பெற்றாக வேண்டிய அரசியல் போராட்டமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினை கோரிக்கைக்கு ஆதரவு காட்டிய மக்களை நம் பக்கம் இழுத்துக் கொள்வதுதான் இதற்காக கைக்கொள்ள வேண்டிய முயற்சிகளில் அடிப்படையானதாகும் என்று கூறினார்.

விவாதத்திற்கு உள்துறை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி பதிலளித்தவுடன் சட்டமுன்வடிவு வாக் கெடுப்புக்கு விடப்பட்ட நேரத்தில் 250 உறுப்பினர்கள் கொண்ட மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா ஒருவர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தார். புபேஷ் குப்தா உட்பட அனைவரும் ஆதரித்தே வாக்களித்தனர்.

சட்டமுன்வடிவு குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்று அரசியலமைப்புச்சட்ட (16வது திருத்தம்) எனப் பெயர் பெற்றது.

இம்மசோதா மீது பேசுகையில் அண்ணா எங்கள் முன்னேற்றத்திற்கு அழிவு தேடாதிருந்தால் சட்டத் துணையுடன் அடக்கி அழிக்கும் முறைகளை கொண்டு வராது இருந்தால் நாங்கள்தான் சென்னையில் ஆட்சி அமைப்போம் என்று பேசியதற்கொப்ப நான்காவது பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று சென்னை மாகாணத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அமைத்துக் காண்பித்தார்.

ஆனால் "நேருவின் காலத்திலேயேதான் திராவிட நாடுபெறவேண்டும் பெறமுடியும் ஏனென்றால் அவர்

தலைசிறந்த ஜனநாயகவாதி. அவருக்குப் பிறகு ஆட்சி அமைப்போர் ஆதரவு காட்டமாட்டார்கள் என அவர் கண்ட கனவு நிறைவேராமல் போய்விட்டது. நேருகாலத்திலேயே திராவிட நாடு கேட்பது குற்றம் என்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

பிரிவினை தடை சட்டமுன்படிவிற்கு குடியரசுத் தலைவர் இசைவு தந்து அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒரு பிரிவாகிவிட்டது. இந்தியாவின் ஒருமைப்பாடு, ஆதிபத்திய உரிமைக்கு எதிரான முறையில் நடப்பவருக்கும் தண்டனையளிக்கப் பிரிவினைத் தடைச் சட்டம் வழிவகை செய்தது.

மாநில சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான உறுப்பினர் தேர்தலில் நிற்க விரும்புகின்றவர்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கும், ஆதிபத்திய உரிமைக்கும் இழுக்கு தேடாமல் அரசியலமைப்பு சட்டத்தின்படி நம்பிக்கை உத்திரவாதம் அளித்தால்தான் இனித் தேர்களில் போட்டியிட முடியும். இத்தகைய தேர்தல் உறுதிமொழிகளை தேர்தல் ஆணையம் குறிப்பிடும் அதிகாரிகள் முன்னிலையில் எடுத்துக் கொள்ள வேண்டும் எனத்தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தான் அண்ணா ஒரு நல்லமுடிவை எடுத்து தாம் ஒரு ஜனநாயக வாதி என்பதை உலகுக்கு மெய்ப்பித்தார். பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கடைபிடிக்கும் ஒருநாட்டில் எந்தக்கட்சியும் பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் அரசியல் செல்வாக்குப் பெறுவது கடினம் என்பதை உணர்ந்தார்.

வீம்பு நடவடிக்கை வீரத்தனமாகாது. மாற்றான் வலிமையறிந்து படைமுகம் அமைப்பதே அரசியல் திறமையாகும் என்று உணர்ந்த அண்ணா, திராவிட நாடு பிரச்சினையா? தாய்க்கழகமா என்ற பிரச்சினையில் கழகம் தான் முக்கியம் என அறிவித்தார். கழகம் வளர்ந்தால்தான்,

திராவிட நாட்டுப் பிரச்சினையை எந்த வடிவிலும் அடையலாம் என்பதை உணர்ந்தார். தாய்க்கழகத்தைத் தாயாக இருந்து — மருத்துவராக இருந்து காப்பாற்றினார். அதை ஓர் அருமையான உதாரணத்தின் மூலம் விளக்கினார்.

"தாய்க்கு பிரசவம் பார்க்கும் நேரத்தில், தாயோ அல்லது குழந்தையோ ஒருவரைத்தான் காப்பாற்ற முடியும் என்கிற நிலை வருமானால், திறமையும் சமயோசித புத்தியும் உள்ள ஒரு டாக்டர் குழந்தையைப் பறி கொடுத்தாவது தாயைத்தான் காப்பாற்றமுயல்வார். அந்த டாக்டரின் காரியத்தைத்தான் நான் செய்தேன்" என்றார்.

அண்ணாவின் ராஜதந்திர வெற்றியாகும் இது.

அண்ணா முதலமைச்சரான பிறகு திராவிட நாடு பிரச்சினை மீண்டும் சட்ட மன்றப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர்களால் எழுப்பப்பட்டது. அதற்கு பதிலுரை அளித்து அண்ணா பேசியதாவது.

"உண்மையைச் சொல்லப்போனால் நான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு குறுக்கிடத் தயாராய் இல்லை. இந்த அரசு மத்திய அரசோடு மோதிக் கொண்டே தீரவேண்டும் என்ற எண்ணத்தில் இல்லவே இல்லை. சிலர் ரொம்ப ஆராய்ந்து உண்மையைக் கண்டுவிட்டவர்கள் போல பேசுகிறார்கள். முன்னாலே நாங்கள் கேட்டுக் கொண்டுவந்த திராவிட நாட்டைத்தான் இன்றைக்கும் மத்திய சர்க்காரோடு சேர்ந்து போராடிபெற்றுவிட சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாக சொல்கிறார்கள். அது தவறு.

நான் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு விட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டு விடவில்லை. அதில் ஒளிவு மறைவு இல்லை. திராவிட நாடு என்று தனியாக இருந்தால் நாம்

தொழில் வளர்ச்சி பெற முடியும் என்று சொன்னோம். அன்றைக்கு இந்த மன்றத்தில் இருந்த திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை எதிர்த்தார்கள். ஆயினும் என்ன சொன்னார்கள். சேர்ந்து இருப்பதனால்தான் தொழில்கள் வரும். ஒன்றாக இருந்து தொழில்துறையில் வளர்ச்சிகாண்போம். பத்துவருடம் கழித்துப்பார்க்கும் போதும் தொழில் துறையில் வளர்ச்சியடையாது இருந்தால், நிச்சயமாக நானே அவர்களோடு சேர்ந்து திராவிட நாடு தனித்து இருக்க வேண்டுமென்று கேட்கிறேன் என்று சொன்னார்கள்.

திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே இங்கே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும். பிராந்திய சமநிலை ஏற்படுவதற்கு புதுப்புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான். அதை நாங்கள் விட்டுவிடவில்லை மத்திய சர்க்காரிடம் அதிகாரம் குவியலாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கேட்டோம். அதை விட்டு விடவில்லை.

மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பலத்துறை களிலும் பெறவேண்டும் என்பதற்காக கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. ஆகவே திராவிடநாடு நாங்கள் கேட்பதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிட வில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அவை நியாயமான காரணங்கள். மனமாற ஏற்றுக் கொண்ட காரணங்கள். நாங்கள் திராவிடநாட்டை விட்டுவிட்டோம்.

திராவிடநாட்டைத் தான் விட்டு விட்டீர்களே ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள் என்று கேட்டால் ஒத்துக்கொள்ள முடியுமா? இந்தி எதிர்ப்பை விட்டுவிட மாட்டோம். திராவிட நாட்டை விட்டுவிட்டதால் எங்களுக்கு சேலம் இரும்பாலை வேண்டாம். ஜாம்ஷெட்பூரிலேயே வையுங்கள் என்று சொல்லிவிடுவோமா? நிச்சயமாக சொல்ல

மாட்டோம். தூத்துக்குடி வேண்டாம். இன்னொரு கண்டாலா கட்டுங்கள். என்று சொல்லுவோமா. நிச்சயமாக சொல்லமாட்டோம். திராவிடநாடு கிடைத்தால் என்னென்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும் இந்திய பூனியனில் இருந்தே பெறலாம். பெறவேண்டும். பெறமுடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர, திராவிட நாட்டுக்கான காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டு விடவில்லை.

நாடு பிளவு படக் கூடாது என்றார்கள். ஒத்துக் கொண்டோம். தனித்திருந்தால் அன்னியத்தலையீடு ஏற்படும் என்றார்கள். உணர்கிறோம்.

திராவிட நாட்டைப் பெறுகின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை உள்ளே இருந்தேபெறலாம் என்றார்கள். அதை நம்புகிறோம். திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள் சேலம் என்றும் தூத்துக்குடி என்றும் பிரதேச மனப்பான்மை காட்டாதீர்கள் என்றால் நாங்கள் ஒத்துக் கொள்ளமாட்டோம். ஆந்திரப் பண்பாடு, கன்னடப் பண்பாடு, வடவர் பண்பாடு தமிழர் பண்பாடு என்றெல்லாம் பிரித்துப் பேசலாமா என்றால் நாங்கள் ஒத்துக்கோள்ளமாட்டோம். திராவிட நாடு எதற்காக வேண்டுமென்றோமோ, அதற்கான காரணங்கள் ஒன்றையும் விட்டுவிடவில்லை. அப்படியே வைத்திருக் கிறோம். திராவிடநாடு பிரிந்துபோக வேண்டுமென்ற அளவில் நான் சொல்லவில்லை. இந்த மன்றத்தின் மூலமாக பொதுமக்களுக்கும் — பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல் மத்திய சர்க்காருக்கும் தெளிவு படுத்துகிறேன். திராவிட நாட்டை விட்டுவிட்டோம் என்றதாலே காரணங்களையும் விட்டுவிட்டோம் என்பது பொருள் அல்ல.

தேர்தலில் கலந்து கொண்டு, வெற்றி பெற்று ஆட்சி அமைத்து அதன்மூலம் நாட்டு மக்களுக்கு நற்பணி யாற்றவே அண்ணா திராவிட நாடு பிரச்சினையை கைவிட்டார். ஆயினும் மத்தியில் ஓராட்சியை எதிர்த்தும்,

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற அண்ணாவின் கருத்துக்கு 1970-71ஆம் ஆண்டுகளிலேயே நற்பலன் கிடைக்கத் தொடங்கியது. மத்தியில் ஆட்சி நிலைக்க வேண்டுமானால் அதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு பெரிதும் தேவைப்பட்டது.

சமீப காலங்களில் இந்தியாவில் ஓராட்சி முறை மாறி, மாநில கட்சிகள் பல ஒன்று சேர்ந்து கூட்டாட்சி முறை உருவாகியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அவதூறு சுமத்தப்பட்டபோது, மத்திய அரசே, பிரதமரே தாமே முன்வந்து அமைச்சரவையே பதவி விலகியது என்றால் அண்ணா அவர்களின் அன்றைய ராஜ தந்திர செயலுக்கு முத்தாரமாக அமைந்தது என்பதை சரித்திர ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுதான் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைக்கும், ஜனநாயகத்தில் அவர் நாட்டம் கொண்டு செயல்பட்ட தன்மைக்கும் உதாரணமாகும்.

எனவே அண்ணாவின் கனவான சுயாட்சி உரிமை, என்பது அரசியல் சூழ்நிலைமாற்றங்களில், முடிந்த ஒன்றாக இல்லாமல், நீருபூத்தநெருப்பாக உள்ளது. அது என்றைக்கு வேண்டுமானாலும் கனன்று எரியலாம் தமிழகம் ஒளிபெறலாம்.

6

குருபக்தி பெரியார் சட்டம்

"இந்த அமைச்சரவையே பெரியாருக்குத் தந்த பரிசு"
– அண்ணா

சட்டமியற்றுதல்

சட்டமியற்றுதல் சட்டமன்றத்தின் பணியாகும். இந்த மொழி 1862 ஆம் ஆண்டு அரசு செயலாளர் அவர்களால் சொல்லப்பட்டதாகும். நமக்கென்று மேலவை தோற்று விக்கப்பட்ட நேரத்தில் சட்டமியற்றுவதற்கு உறுப்பினர் களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. அன்று முதல் அவ் வுரிமை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. சட்ட மன்றத்தின் இறையாண்மை அதன் சட்டம் இயற்றும் அதிகாரத்தில் இருந்துதான் வெளிப்படுகிறது.

மக்களாட்சியில் மக்களுடைய நலன் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களைப் பொறுத்தே இருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமும் சட்டமுன்வடிவாக பேரவை முன் கொண்டுவரப்படும். அச்சு இயந்திரங்கள் வரும்முன் இங்கிலாந்து பாராளு மன்றத்தில் சட்டமுன் வடிவுகள் முழுதுமாக மூன்று முறை வாசிக்கப்பட்டுவந்தன. சட்டமுன் வடிவுகள் அவசரமாக வும் நன்கு பரிசிலிக்கப்படாமலும் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கவே இவ்வாறு மூன்று முறை வாசிப்பது வழக்கமாகக்

கொள்ளப்பட்டது. மெக்காலே அவர்கள் இந்தியாவில் இம்முறையை புகுத்தினார்.

ஆனால் சட்டமுன் வடிவுகள் தற்போது அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதனால் சட்டமுன்வடிவுகளை அவையில் வாசிக்கும் பழக்கமும் இல்லையென்றாலும் முதல் வாசிப்பு, இரண்டாவது வாசிப்பு, மூன்றாவது. வாசிப்பு என்கிற சொற்களால் மூன்று கட்ட பரிசீலனையை குறிக்கும் பழக்கம் இருந்து வருகிறது.

பேரவையில் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்ட பிறகு மேலவைக்கு அனுப்பபடும். மேலவையும் மூன்று கட்ட பரிசீலனையை முடித்த பிறகு ஆளுநருக்கோ குடியரசுத் தலைவருக்கோ அனுப்பி அவர் இசைவு பெற்றவுடன் சட்டமாக அமுலுக்கு வரும்.

சட்டமுன் வடிவில் இந்தச்சட்டம் எந்த காரணத் திற்காக கொண்டுவரப்படுகிறது என்பதை "சட்டம் இயற்றுவதற்கான காரண காரிய விளக்கத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்."

அண்ணா அவர்கள் பேரவை உறுப்பினராக இருந்த நேரத்தில் சட்டமுன் வடிவின் மீதான விவாதங்களில் கலந்து கொண்டு விதிகட்கு உட்பட்டு தமது உரையை சட்டமுன் வடிவின் கூறுகளுக்கு ஏற்ப எடுத்து கூறுவது அனைவரும் அறிந்து பின்பற்ற வேண்டியவையாகும்.

அந்த வகையில் அவர்கள் தேசிய சின்னங்களை அவமதிக்கும் சட்டம் என்று ஒருசட்ட முன் வடிவை அரசு முன் மொழிந்தபோது பெரியார் போராட்டம் குறித்து ஆற்றிய உரை பொருள் பொதிந்ததாகவும் எந்தக் காலத்திற்கும் ஒத்ததாகவும் அமைந்தது.

எனவே அண்ணாவின் பேச்சை கீழே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பெரியார் அவர்கள் சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் சாதி ஒழியவில்லை. அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த ஆட்சியாளர் முன் வரவில்லை. எனவே அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவே தஞ்சையில் கூடிய திராவிடர் கழக மாநாட்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கையெழுத்திடப்பட்ட நாளாகிய நவம்பர் 26ஆம் நாள் அரசியல் சட்டத்தினைக் கொளுத்த முடிவு செய்தார்.

உடனே அரசு விழித்துக் கொண்டு அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதோ, காந்தியடிகளின் படத்தை அல்லது தேசியக் கொடியைக் கொளுத்துவதோ குற்றமாகும். அப்படிப்பட்டக் குற்றங்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று ஒரு சட்ட முன் வடிவினை பேரவை முன் கொண்டு வந்தது.

அண்ணா அவர்கள் அம்மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியது ஒரு சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய செயலாகும். ஒரு சட்ட முன் வடிவை உறுப்பினர்கள் எந்த கோணத்தில் கண்டு விமர்சிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

பெரியாரிடமிருந்து 1947ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் - பெரியார் பிறந்த நாளன்று செப்டம்பர் திங்கள் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அன்று கொட்டும் மழையில் 1½ மணி நேரம் தமது கட்சியின் கொள்கைத் திட்டங்களை அண்ணா எடுத்து விளக்கினார்.

பெரியாரின் கொள்கைகளைப் பற்றியோ அவரைப் பற்றியோ எப்போதும் எதிர்த்து விமர்சனம் செய்தவர் அல்லர் அண்ணா. மாறாக மக்களின் சமுதாய - அரசியல் பிரச்சினையில் திராவிட கழகமும் - திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கி என்பார்.

தேசிய சின்னங்களை அவமதிக்கும் சட்ட முன் வடிவின் மீது அண்ணா ஆற்றிய பேருரை வருமாறு:

"இன்று வரையில் குற்றங்கள் என்று கருதப்படாமல் இருந்து வந்த செயல்கள், இனி மூன்றாண்டுகள் தண்டிக்கத் தக்க கடுமையான குற்றங்கள் என்று தெரிவிக்கும் இந்தச் சபையின் முன்னாலே இருக்கிற இந்த மசோதா தீதானது தேவையற்றது கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது என்று கூறினால், அதன் மூலமாக தேசிய சின்னத்தை தேசிய கௌரவத்தைப் பங்கப்படுத்த வேண்டுமென்று நான் வாதாடுகிறேன் என்று பொருள் அல்ல. தேசிய கௌரவம் என்பது பரம்பரை பரம்பரையாக நாட்டு மக்கள் உள்ளத்திலே ஊடுருவிப் பாய வேண்டிய ஒன்றாகும். சட்டத்தின் மூலம் தேசிய கௌரவத்தை நிலைநிறுத்த முடியாது. ஆகவே, தேசிய கௌரவத்தைப் பாதுகாக்க புதிய சட்டங்கள் தேவை இல்லை"

"நீங்கள் காந்தியாரின் உயிரைக் காப்பாற்றத் தயாராய் இல்லாவிட்டாலும் காந்தியாரின் படத்தைக் காப்பாற்ற வாவது முயற்சி எடுத்துக் கொண்டீர்களே, பெருமைதான்" சாதிவெறியனால்தான் காந்தியார் கோட்சேயால் கொல்லப்பட்டார் என்பதும் சாதி வெறியை அடக்க காந்தியார் முயற்சி எடுத்ததுதான் காந்தியாரின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்தது என்பதும் உலகம் அறிந்த உண்மை.

காந்தியாரின் உயிரையே வாங்கிவிட்ட சாதி வெறியை மதவெறியை அடக்குவதற்கு நாங்கள் சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொன்னால் நான் அதைப் பாராட்டுவேன். காந்தியாரின் சமாதிக்கு மாலை போட்டு விட்டு கதர் கட்டிக் கொண்டிருக்கிற காங்கிரஸ் காரர்கள் தாம் இன்றைக்கு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் பெரியார் மாளிகையில் இருந்தவர்கள் தாம். காந்தி பெரியார் மாளிகையில் தங்கி இருக்கிறார். காந்தியார் இருந்த இந்நாட்டுக்கு "காந்தி நாடு" என்று பெயர் சூட்டச் சொன்னவர் பெரியார். காந்தியார்

நினைவாக தம் பெண்ணுக்கு பெரியார் காந்தி என்றே பெயர் வைத்து இருக்கிறார்கள்.

காந்தியின் படத்தைக் கொளுத்துவேன், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் என்று பெரியார் சொன்னார் என்றால் அவருக்கு அவைகளின் பேரில் இருக்கிற வெறுப்பினால் அல்ல. தேசிய கொடிக்கு தேசிய சட்டத்திற்கு இழுக்கை உண்டாக்க வேண்டும் என்கிற எண்ணத்தினால் அல்ல. இவைகளை எந்தக் காரணத்திற் காக கொளுத்தச் சொல்கிறேன், கிழிக்கச் சொல்லுகிறேன் என அவர் எடுத்துச் சொல்லுகிறாரோ அந்த குறை பாடுகளையெல்லாம் நீக்குவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அவர்களுடைய கவனத்தைக் கவருவதற்காக சொல்லப்படுகிற விஷயங்கள் தான். அவைகளின் பேரில் அவருக்கு வெறுப்பு இல்லை என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். சமுதாய உணர்ச்சி பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமுதாய உணர்ச்சி பற்றி அண்ணா கூறியதாவது:

சமுதாயத்தில் மிகவும் ஊன்றி இருக்கும் படியான உணர்ச்சி மத உணர்ச்சி. யுகம் யுகமாக அநாதி காலம் தொட்டு இருப்பது அவ்வுணர்ச்சி என்று சொல்லலாம். இன்றைக்கு தேசிய சின்னங்களைக் கொளுத்துவதற்கு முன்னர் - அன்றைக்கு மதச் சின்னங்களையும், பிள்ளையார் விக்ரகத்தையும் ராமர் படத்தையும் பெரியார் அவர்கள் உடைத்துக் கொளுத்தினார்களே அந்த நேரத்தில் நீங்கள் என்னச் சொன்னீர்கள். பிள்ளையார் உருவத்தை அவர் உடைக்க உடைக்கத்தான் பிள்ளையாருக்கு அதிக பெருமை உண்டாகிறது என்று ரொம்ப யுக்தியாகச் சொன்ன உங்கள் வாதம் இந்த நேரத்தில் மங்கிப் போய் விட்டதா? அன்று பிள்ளையார் படத்தைப் போட்டு உடைத்து ராமர் படத்தைக் கொளுத்திக் கொண்டிருந்த போது சமுதாய மக்களின் உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்து

இருக்கும்படியான உணர்ச்சி புண்பட்டிருக்காதா? அப்போது அதனால்தான் பிள்ளையார் பெருமை உயர்கிறது என்று சொல்லி சும்மா இருந்த நீங்கள் அந்த தத்துவத்தை உணர்ந்து பேசியிருந்தால் இப்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு அவசியம் என்ன? இதனால் யாருடைய மனம் புண்படும். இந்தக் காரியம் ஏற்கெனவே கண் முன்னால் செய்து காட்டப்பட்டு விட்டது.

நான் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பெரியார் அவர்கள் செயலுக்குப் பின்னால் இருக்கிற நோக்கத்தை தயவு செய்து ஆராய்ந்து பாருங்கள். அந்த நோக்கத்தை வெளிப்படுத்துகிற பெரியாருடைய பழைய கால நடவடிக்கைகளை உங்களுக்கு ஏற்பட்ட தொடர்புகளையும் ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்.

இந்திய அரசியல் சட்டத்தின் கர்த்தாவாகிய காலம் சென்ற டாக்டர் அம்பேத்கார் வெளிப்படையாகச் சொன்னார். "இந்திய அரசியல் சட்டத்தில் பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. இது எரிக்கத் தக்கது" என்று, நீர்தானே இச் சட்டத்தைச் செய்தவர் என்று சிலர் அவரைக் கேட்க, "நீங்கள் சொல்லி செய்யப்பட்டதே தவிர ஏற்றுக் கொள்ள முடியாத மனத்திற்கு ஒவ்வாத பல கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

காமராஜ் பெரியார் உறவு

திரு காமராஜ் அவர்கள் சென்னையில் பெரியார் அவர்களால் நடத்தப்பட்ட ஜாதி ஒழிப்பு மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில், "நான் அதிகாரத்திற்கு வந்தால் நான் செய்யக் கூடிய முதல் காரியம் ஜாதி ஒழிப்பாகத்தான் இருக்கும் என்று பேசினார். இதை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள். நான் கேட்டிருக்கிறேன். ஆகையால் பெரியார் அவர்கள் தன்னுடைய செல்லப் பிள்ளை ஆட்சிக்கு வந்து விடுவார் என்ற நம்பிக்கையில்

இரவு பகல் பாராமல் உழைத்து உங்களை உட்கார வைத்து இருப்பது நீங்கள் ஜாதி ஒழிப்பிற்கு ஆதரவாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தான்.

பெரியார் ராமசாமி அவர்கள் காமராஜ் அவர்களை எந்த வகையில் கருதுகிறார் என்பதை இன்று பார்த்தால் காமராஜ் ஓங்கி அடித்தாலும் காமராஜ் கரம் வலிக்குமே என்றுதான் பெரியார் கருதுவார். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதுபோல் பெரியார் அவர்களும் என்னைத்தான் தாக்குவாரே தவிர காமராஜ் பக்கம் திரும்ப மாட்டார்.

பெரியாரைச் சந்தியுங்கள்

பெரியாரை ஒரு கணம் சந்தித்து சாதி ஒழிப்பு பற்றி இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. நீங்கள் அவரைப் பாராமல் இருக்கிறீர்கள் என்று எடுத்துச் சொல்லி, ஜாதி ஒழிப்பு என்பது தங்களுக்குள்ள பிரத்தியேக உரிமையா? ஜாதி வேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோமா, அது உங்களுக்குத் தெரியாதா? எங்கள் அமைச்சரவையில் சாதி கட்டுப்பாட்டை மீறி கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் இருக்கிறார்களே (உதாரணமாக சி. சுப்பிரமணியம் அவர்கள் பிராமணப் பெண்மணியை மணமுடித்தவர்) என்றெல்லாம் பெரியாரிடம் எடுத்துச் சொல்லி அவரது முறையை மாற்றுவதுதான் ராஜ தந்திரம் ஆகும்.

எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்று, கட்சி பலத்தைக் கொண்டு சட்டம் போட்டுக் கொள்வதில் வியப்பும் இல்லை. அதில் யூகமும் இல்லை. பலமுள்ள அரசியல் கட்சி ராஜ தந்திர முறையில் வெற்றி பெற்றார்கள் என்று உலகிற்கு நீங்கள் அறிவிக்கவேண்டும். ஆகவே பெரியாரை தயவு செய்து சந்தியுங்கள். அவரது மனக் குமுறலை உணர்ந்து கொள்ளுங்கள். அவரது லட்சியமும் உங்களுக்கு உகந்ததுதான். ஆனால் அவரதுமுறை ,தவறு

என்று நீங்கள் கருதுகிறீர்கள் (என்று) நான் கருதுகிறேன். அங்ஙனம் கருதுகிற காரணத்தால் தான் நான் அதில் ஈடுபடாமல் இருக்கிறேன். முறை தவறு என்று கண்டிக்கும் போது, தூய்மையான நோக்கத்தை ஆராய்ந்து பார்த்து அதை நீக்குவதற்கு உங்களுக்கு வழிவகை இருக்குமானால் ஏன் அந்த வாய்ப்பை நீங்கள் இழக்கவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். காமராஜ், பெரியார் சந்திப்பு இப்போது தேவையே அல்லாது புதிய சட்டமல்ல. சட்டத்தை நிறைவேற்றி விடலாம். நிறைவேற்றவும் போகிறீர்கள். நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நம் போலீஸ் அமைச்சர் அவர்கள் இச்சட்டம் குறித்து பேசியபோது மிகவும் உணர்ச்சியோடு பேசினார்கள். அவர் எவ்வளவு உணர்ச்சியோடு பேசியதை நான் இதுவரை பார்த்ததில்லை. நான் கூட நினைத்திருக்கிறேன். போலீஸ் அமைச்சருக்கு உணர்ச்சியே வராதோ என்று அவர் உணர்ச்சியோடு பேசியதற்கு அவரது உணர்ச்சிக்கு நான் மதிப்பளிக்கிறேன். தேசியக்கொடி அவமதிக்கப்பட்டால் அது தன் நெஞ்சில் புண்ணை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அவர்கள் கருதுவது போல் பெரியாரை அடக்குவதற்காக நீங்கள் கடுமையான சட்டம் கொண்டு வந்தால் மனம் புண்படுவார்கள் இன்று தமிழகத்தில் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவை தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்,

சட்டத்திலுள்ள குறைபாடு

சட்டத்தில் 'ஒரு வாசகம்' இல்லை என்பதால் அச் சட்டம் எந்த அளவுக்கு கேலிக் கூத்தாகும் என்பதை ஒரு குழந்தையை உதாரணம் காட்டி தனக்கே உரிய பாணியில் எவர் மனமும் புண்படாதவாறு விளக்குகையில் அண்ணா கூறியதாவது,

"ஒருவரின் ஆறு வயது பையன் காந்தியாரின் படத்தை எடுத்து உடைத்து விட்டால் அக் குழந்தையின் பெற்றோருக்கு வேண்டாத போலீஸ்காரர் இருந்தால் அவர் சட்டப்படி இக்குற்றத்திற்கு ஆளாகலாம். அதற்குப் பிறகுதான் கோர்ட்டுக்குப் போய், நான் அவமானப் படுத்தவில்லை. என் குழந்தை கீழே போட்டு உடைத்து விட்டது என்று சொல்லிதானே விடுதலை பெற்று வரவேண்டும். ஆகவே, நான் சொல்வது, வேண்டுமென்றே செய்யப்பட்டால், பொது வாழ்வில் செய்தால் என்று கூட எழுதாமல் விட்டிருக்கிறீர்களே. காந்தியின் படத்தைத் தொட்டால், அரசியல் சட்டத்தை தீண்டினால் மூன்று வருஷம், இது எதைக் காட்டுகிறது? வாசகங்களை எழுதுவதில் கூட ஏன் இந்த அலங்கோலம் இருக்கவேண்டும். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அதன் வாசகம் எப்படி இருந்தாலும் உங்களுக்கு 150 பேர் இருக்கிறார்கள். மன்னிக்க வேண்டும் இதற்கு மீறி 190 பேர் இருக்கிறார்கள். (அன்றைய நிலையில் திமுக பலம் 15ம் சேர்ந்து மொத்த உறுப்பினர்கள் 205 பேர் பேரவையில் இடம் பெற்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தவிர அனைவரும் இந்தச் சட்டத்தினை ஆதரித்து வரவேற்றனர்.) என்ற நம்பிக்கையின் பேரில் இச்சட்டத்தைக் கொண்டு வருகிறார்களோ பிரச்சினையின் அடிப்படையை ஆராய்ந்து அதன் பின்னால் இருக்கும் பெரியாரின் மனப் போக்கை அறிய நீங்கள் முயற்சி எடுக்கவில்லை.

இப்படிப்பட்ட தேவையற்ற தீதான கொடுங் கோன்மைக்கு வழி செய்யக்கூடிய சர்வாதிகார நாடுகளில் கையாளக் கூடிய முறைகளைக் கையாளாது தேசியக் கொடியின் மாண்புகளையும், அரசியல் சட்டத்தின் மாண்புகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்லி அவைகளுக்கு கௌரவம் தேடுங்கள்... இப்படியெல்லாம் சட்டம் கொண்டு வந்தால் இந்த ஐந்து வருடத்திற்குள் எதிர்க்கட்சியில் இருப்பதே கூடாது என்று சொல்லி சில நாடுகளில் ஒரு கட்சிதான் இருக்கலாம், அதற்குப் பெயரும்

ஜனநாயகம் தான் என்பது போல் நீங்களும் ஒரு கட்சி ஜன நாயகத்தை உண்டாக்க விரும்புகிறீர்கள். நீங்கள் ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரப் பார்வையில் போகிறீர்கள், அதற்கு வேண்டியது அதற்கு உதவக் கூடிய காரியங்களை நீங்கள் செய்கிறீர்கள். தயவு செய்து அருள் கூர்ந்து ஜனநாயக தத்துவத்தை மனதில் கொண்டு, விஷயம் என்னவென்று ஆராய்ந்து பெரியாரை சந்தித்து அதன் மூலம் இந்த நாட்டிலே நன்மை ஏற்பட நீங்கள் வழி செய்து அந்த வகை உங்கள் கௌரவத்திற்கு பாதகம் இல்லை என்று உணரவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இப்போது தேவை சட்டமல்ல, சந்திப்புதான், இப்போது தேவை ஒருவரை ஒருவர் கலந்து பேசுவதே தவிர ஒருவரை ஒருவர் மிரட்டுவதல்ல. இப்போது தேவைப்படுவது அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பேசுவதே தவிர வலுத்தவன் இளைத்தவன் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

சி. சுப்பிரமணியம் நிதி அமைச்சர் பதிலளித்துப் பேசுகையில், "பெரியார் திராவிட நாட்டுத் தந்தை, அண்ணாதுரை திராவிடநாட்டு அண்ணா. "தந்தையும் மகனும் போல் இருக்கிறார்கள். இப்போது ஏதேனும் மனக் குறைகள் ஏற்பட்டு இருக்கலாம். அவர்களுடைய அடிப்படையான தத்துவங்களில் பிரிவில்லை. ஆகை யினால் இன்றைக்குப் பேசிய பேச்சைக் கேட்ட பிறகு பெரியார் அவர்களுடைய கருத்துகளுக்கும்அண்ணா அவர்களுடைய கருத்துகளுக்கும் வித்தியாசம் இல்லை யென்று தெரிகிறது. நான் ஏதோ கோபப்படுகிறேன் என்று சொன்னால் அது ஆச்சர்யப் படுவதற்கு ஒன்றும் இல்லை. உண்மையான சுய ரூபத்தை வெளிப்படுத்தித்தான் தீரவேண்டியிருக்கிறது. ஏதோ நாகரிகமாக பேசிக்கொண்டு இந்த மாதிரி கொள்கைகளில் மழுப்பிவிட்டுப் போக நினைத்தால் அப்படியே நாம் நம்பிக் கொண்டிருக்க முடியாது. அதைக் கிரிப்பார்த்துத் தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

பொதுவாக மூன்றாவது கட்டத்தில் உறுப்பினர்கள் பேசுவது இல்லை. இந்த மசோதாவின் முக்கியத்துவத்தைக் கருதி, அண்ணா மூன்றாவது கட்டத்திலும் தனது கருத்தினை பெரியாருக்கு சாதகமாக எடுத்து வாதிட்டார்.

"திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வெவ்வேறாகப் பிரிந்து இருந்தாலும், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரை கிழிக்கப்பட்டு விட்டது. அவர்களுடைய உண்மை சுயரூபத்தை நாங்கள் கண்டுவிட்டோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கள் சுயரூபத்தை நாங்கள் அவ்வளவு சுலபத்தில் காட்டி விட மாட்டோம் என்றார் அண்ணா.

நான் எழுதுகிற எழுத்துக்களிலும் குறை காணுவதற்கு எதுவுமில்லை என்று எடுத்துச் சொன்னதிலிருந்து நாங்கள் ஒப்புக் கொள்ளத் தக்கக் கொள்கைகளுடன் நல்ல முறையில்

சி. சுப்பிரமணியம்: குறை காண்பதற்காக என்பதற்கு இல்லை. சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அதிலே இடம் இல்லை.

அண்ணா: சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அதில் இடம் இல்லையென்று சொல்லு கிறீர்கள். அது என்னுடைய வாதத்திற்கு வலிவு அளிப்பது தான்.

கல்யாண சுந்தரம் பேசும் போது பகுத்தறிவு என்று குறுக்கு வழியில் போகக் கூடாது என்றார்கள். குறுக்கு வழியில் போவதை மாற்றுவதுதான் பகுத்தறிவு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பாரேயானால் அப்படி சொல்லி இருக்க மாட்டார்கள். வெகு காலத்திற்கு முன்னாலே மார்ட்டின் லூதர் என்பவர் கிறிஸ்தவ உலகம் முழுவதும் மிகவும் புனிதமானது என்று கருதுகிற பைபிள் லத்தீன் மொழியில் இருப்பது கூடாது என்ற ஒரு காரணத்திற்காக பகிரங்கமாக ஐரோப்பாக் கண்டத்திலே

கொளுத்தி இருக்கிறார்கள் என்பதைக் கூறுவேன். ஆகவே இன்றைக்கு அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது என்பது முரண்பட்ட செய்கையோ குறுக்கு வழி செய்கையோ அல்ல.

இன்றைய தினம் காங்கிரஸ் தன் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக தகப்பன் இடத்தில் பிள்ளைப் போவது எத்தனை மனஸ்தாபமாக இருந்தாலும் அதுதான் சரி என்பது போல - காமராஜருக்கு பெரியாரிடத்தில் காதல் இல்லையென்றாலும் கூட பெரியார் தங்களுடைய மாஜித் தலைவர், மாஜித் தோழர் என்கிற முறையிலாவது அவரை அணுகுவது சரியானக் கொள்கைதான் என்று நான் கருதுகிறேன். தன்னுடைய மாஜித் தலைவர் மாஜித் தோழர் இவரைப் பற்றி சபையில் யாராவது ஏதாவது சொன்னால் மனம் புண்படுமே என்பது போலத்தான் இன்றைக்கு சபையில் காமராஜ் இல்லையென்று கருதுகிறேன்.

பெரியாரைச் சந்திக்கிறேன் – சட்டத்தை நிறுத்தி வையுங்கள்

போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசும்போது காமராஜர் போய் சந்திப்பதைக் காட்டிலும் நீங்களே போய்ச் சந்திக்கலாமே. தந்தையும் மகனும் பிரிந்து இருந்தாலும், இந்தக் காரணத்தினாலே சந்திப்பது மிகவும் பொறுத்தமாயிற்றே என்று குறிப்பிட்டார்கள். பிரிந்து விட்டதனால் இழந்து விட்ட லாபத்தைத் திரும்பவும் சந்தித்து ஒட்டிக் கொள்வதின்மூலம் பெற்றுவிடலாம் என்றும் சொன்னார்கள். அவரது நல்லெண்ணத்தின் துணைக் கொண்டு நான் அவரைச் சந்தித்துப் பார்க்கிறேன். அதுவரையில் இந்தச் சட்டத்தை நிறுத்தி வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு அவரைப் போய் சந்திப்பது தூது ஆகாது. இந்தக் குற்றத்தைச்

செய்தால் இத்தனை வருஷம் சிறைத் தண்டனை கிடைக்கும் என்பதை அவரிடத்தில் சென்று சொல்லும் அறிவிப்பாகத் தான் இருக்கும். அதைப் போய் நான் சொல்ல வேண்டாம். பத்திரிகை வாயிலாகவே அவர் பார்த்துக் கொள்வார்.

உண்மையில் நான் அவரைப் போய் இந்தக் காரணமாக சந்திப்பதனால் லாபம் ஏற்படும் என்றால் மகன் தந்தை செய்ததை மறந்து திரும்பவும் அவரிடத்திலே சென்று ஒட்டி சட்டத்தை நிறைவேற்றி விட்டு நான் போய்ப் பேசினால் அவர் என்னச் சொல்வார் என்பது எனக்குத் தெரியும். "எனக்கு எண்பது வயதாகிவிட்டது. மூன்று வருஷம் சிறையில் கிடந்தால் என்ன? முப்பது வருஷம் சிறையில் கிடந்தால் என்ன? எனக்காக யாரும் துக்கப்பட வேண்டாம் எனத் தான் சொல்லுவார் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் இந்த நேரத்திலும் சொல்லிக் கொள்கிறேன். இப்போது வேண்டியது சந்திப்பு. சந்திப்புத் தேவையே தவிர சட்டம் தேவையில்லை என்று கடைசியாகவும் வற்புறுத்திக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

பின்னர் நிதிஅமைச்சர் சி. சுப்பிரமணியம், போலிஸ் அமைச்சர் எம். பக்தவச்சலம் பதிலளித்தனர். மேலவையிலும் சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பட்டு சட்டமாகியது.

திட்டமிட்டபடியே திராவிடர் கழகப் போராட்டம் 20.11.57ல் நடைபெற்றது. அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே பெரியார் அவர்களைக் கைது செய்து திருச்சி சிறையில் அடைத்தனர். போராட்டத்தில் கலந்து கொண்ட குத்தூசி குருசாமி முதலியோர் போராட்டத்தில் ஈடுபட்டதால் மேற்படி சட்டத்தின்கீழ் 9 மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

அண்ணா அவர்கள் பெரியாரைப் பிரிந்து தனிக் கழகம் தோற்றுவித்துப் பணியாற்றினாலும் பெரியாருக்கு எந்த அளவுக்கு மதிப்பு கொடுத்துப் பேரவையில் அவர்

புகழ் பாடினார் என்பதை நினைக்கும் போது, அறிஞர் அண்ணா ஒருவரால் தான் இப்படி செயலாற்ற முடியும் என்பதை அறியமுடிகிறது.

பெரியாரின் கொள்கைகளை செயல் முறையை அவர் இந்நாட்டுக்கு ஆற்றிய தொண்டினை பேரவை நடவடிக்கை குறிப்பில் ஏற்றிவிட்டது வருங்கால மாணவ சமுதாயத்திற்கு அரசியல்வாதிகளுக்கு – பாராளுமன்ற வாதிகளுக்குப் பெரிதும் பயன்படும் என்ற வகையில்தான்.

இது அவர் பேரவை உறுப்பினராக இருந்து பெரியாருக்கு புகழ் சேர்த்த பணியாகும். அந்த உணர்வுடனேயே அவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற வுடன் பெரியாரின் கொள்கையான சுயமரியாதை திருமணத்தைச் செல்லுபடியாக்கும் சட்டத்தை நிறைவேற்றி மேலும் புகழ் மிக்க ஒரு பணியைச் செய்தார்.

அச்சட்டமுன் வடிவின் மீதான அண்ணாவின் கருத்தை ஈண்டு காணலாம்.

7

சுயமரியாதை திருமணச் சட்டம்

"நாட்டு மக்கள் பெருமைப்படும் அளவிற்கு இயற்றப் பட்ட சட்டம் சுயமரியாதைத் திருமணச் சட்டம். இதற்கு நீண்ட நெடியதொரு வரலாற்றுப் பின்னணியுண்டு. தந்தை பெரியார் அவர்களே இந்த சுயமரியாதைத் திருமண முறையை தமிழகத்தில் முதன் முதலாக தவழ விட்ட தாய் எனலாம். புரியாத மொழியில் பகுத்தறிவுக்குப் பொருந்தாத சாத்திரச் சடங்குகளுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த பழைய திருமண முறையைப் புறக்கணித்துவிட்டுப் புரிந்த தாய் மொழியில் வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியை கூறிக்கொண்டு மந்திரம் ஏதும் ஓதாமல் மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டாலே போதும் என்கின்ற புதிய சீர்திருத்த திருமண முறை ஒன்றைத் தோற்றுவித்தார் பெரியார்.

தொடக்கத்தில் இந்தப் புதிய மணமுறைக்கு எழுப்பப்பட்ட தடைக்கற்கள் சொல்லடிகள் கல்லடிகள் ஏராளமாகும். அவற்றையெல்லாம் மீறி பல்லாயிரக் கணக்கான ஆடவரும் பெண்டிரும் சுயமரியாதை திருமண முறைப் படியே தங்கள் இல்லறத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆயின் சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டவர் களுக்கு சட்டப்படி சொத்துரிமை முதலான பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. ஒன்றிரண்டு வழக்குகள் தொடுக்கப் பட்டபோது அத்தகைய திருமணம் செல்லாது எனறு நீதி மன்றம் தீர்ப்பளித்தது. பெரியாரின் வழியில் புதிய மண

முறை தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களுக்கு இது ஒரு பூகம்ப அதிர்ச்சியைத் தந்தது. குறிப்பாக தாய்க்குலத்தினர் தலையில் புழுவென தவித்திடும் நிலை உருவெடுத்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதும் அண்ணா அவர்கள் சுயமரியாதை திருமண முறைக்கு சட்ட வடிவு கொடுக்கவேண்டும் என்பது முக்கிய செயல் திட்டங்களில் ஒன்றாக அமைத்துக் கொண்டார்."

அந்த முடிவின் செயற்பாடுதான் இந்து திருமண (திருத்தச்) சட்டமுன் வடிவாகும்.

18.6.1967 அன்று இந்து திருமண (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன் வடிவினை அறிமுகப்படுத்தி சட்ட அமைச்சர், செ. மாதவன், பேசுகையில்,தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட திருமண முறையை நம்முடைய தமிழர் பண்பாட்டுப் பிரச்சினையாக, கலாச்சாரப் பிரச்சினையாக, திராவிட நாகரிக அமைப்பாகக் கருதி தந்தை ஈ.வெ.ரா. அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பேயே தொடங்கினார்கள். தொடர்ந்து இந்த சுயமரியாதைத் திருமணங்களும் செல்லுபடியாகத் தக்கவை என்று செய்யத்தான் என்றார்.

பொன்னப்ப நாடார் பேசுகையில், சனதான வாதிகள் இதை எள்ளி நகையாடவும் ஒரு சிலர் இந்தத் தீர்மானமானது ஒரு சமங்காரம் என்று வட மொழியிலும், செக்ரமெண்ட் என்று ஆங்கிலத்திலும் சொல்லக்கூடிய தன்மையில் உள்ளவர்கள் என்ற நிலைமை இருக்கிறது.

இதை ஒரு கான்ட்ராக்ட் அல்ல, வாழ்க்கை ஒப்பந்தம் அல்ல என்று வாதாடக் கூடியவர்கள் இருக்கிற காரணத்தாலேயே பெரும்பான்மையாக இருக்கக் கூடிய சமுதாயத்தை இதுப் பார்க்கக் கூடியதாக இருக்கலாம் என்ற காரணத்திலே இதை பொது ஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விவாதத்தின் இடையில் குறிக்கிட்டு அண்ணா பேசுகையில், "இப்பொழுது இருக்கும் பிரச்சினை

யெல்லாம், நம்முடைய டாக்டர் ஹண்டே அவர்கள் திரும்பத் திரும்ப உங்களுக்கு இந்துதான் கிடைத்தானா? அவன் தலையிலேயே குட்டுகிறீர்களே? என்கின்றார். முஸ்லீம்களை திருத்தவேண்டுமென்றால், இஸ்லாமியர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள். அதுவே வரவேற்கத்தக்க தாக இருக்கும். இந்து சமுதாயத்தை மாத்திரம் பிரித்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன வருகிறது என்றால், மற்ற எல்லா மார்க்கங்களையும் விட இந்து மார்க்கத்தில் தத்துவத்தைப் பொறுத்த வரையில் இதில் விடப் பட்டது ஒன்றும் இல்லை. எல்லாத் தத்துவங்களும் இதனிடத்தில் உள்ளன என்றும் இதற்கு இந்து மதத்தின் அழிவற்ற தன்மைதான் காரணம் என்றும் சொல்லுவோரும் இருக்கிறார்கள். அதன் நிர்ணயமற்ற தன்மைதான் காரணம் என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள்.

உண்மையான இந்து, திருத்தத்திற்கு பயப்படக் கூடாது என்று சுவாமி விவேகானந்தர் சொன்னதாக நினைவு. உண்மையான இந்து ஜாதியை ஒத்துக் கொள்ள மாட்டான் என்று இந்து மதத்தைச் சார்ந்தவர்களே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இதை நாங்கள் மிகச் சாதாரணச் சீர்திருத்தம் என்று கருதவில்லை. எத்தனையோ ஆண்டுகளாக எங்கள் உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த எத்தனையோ இரவுகள் எத்தனையோ பகல்கள் இப்படி ஒரு சட்டத்தை உருவாக்கமுடியுமா? என்று எண்ணிக் கொண்டிருந்த எங்கள் எண்ணத்திற்கு மதிப்பு அளிப்பீர்களானால் இப்படி யெல்லாம் நிறைவேற்றமுடியும் என்ற நிலைமையே தோன்றாத நாட்களில் இந்த மாதிரியான திருமண முறையில் பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் செய்து கொண்டவர்களுக்கு எல்லாம் இந்தச் செய்தி பாரதியாருடைய கவிதைப்படி கூறினால் அவர்களுடைய காதில் செந்தேனாகப் பாயும்.

அக்னி சாட்சியாக செய்யும் திருமணங்கள் தான் செல்லும், இது செல்லுமா என்ற கேள்வியை திரு பொன்னப்ப நாடார் எழுப்பிய வினாவிற்கு அண்ணா பதிலளிக்கையில் கூறியதாவது:

அக்னி சாட்சியாக என்று சொல்லுவதில், இந்த நாட்களிலே எவ்வளவு பொருள் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. திருமணத்திற்கே சாட்சி தரத் தக்க அக்னி பகவான் ஏழைகளை என்ன பாடுபடுத்துகிறான் மயிலைப் பகுதியில் என்பதை எண்ணுவது உண்டு. (அந்த கால கட்டத்தில் விஷமிகள் சிலர் குடிசைகளை கொளுத்தி தொல்லை தந்து வந்தனர்.) ஆனால் அவைகளில் எல்லாம் நம்பிக்கை வைத்திருந்த காலத்தில் உலகத்தில் இருந்து வந்த கருத்துக்களுக்கும் இன்று இருக்கிற கருத்துக்களுக்கும் மிகுந்த வித்தியாஸம் இருக்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

தமிழகத்தில் சுயமரியாதை இயக்கக்காரர்களும் தமிழ்ப் பெரும் புலவர்கள், மறைந்த மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தரனார் போன்றவர்கள் இலக்கியச் சான்றுகள் அளித்து, இது தேவை, தீது பயக்காது, காலத்திற்கு ஒத்தது, தமிழ் பண்பாட்டோடு இணைந்தது என்றெல்லாம் ஒப்பம் அளித்து இருக்கிறார்கள். நம்முடைய தமிழகரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்களுடைய இயக்கமும் இதை ஆதரிக்கிறது. ஆகவே இந்தத் திருமணச் சட்டத்தில் எந்தவிதமான அருவருக்கத்தக்க நிலையோ அச்சப்படத்தக்கத் தன்மையோ இல்லை.

இந்தச் சட்டம் நல்ல விதத்தில் அமைவதற்கு ஒத்துழைத்து உருப்படியான சட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்தோம் என்ற பெருமையில் பங்கு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலமைச்சரின் பதிலுரை முடிந்தவுடன் வினாயகம் கூறியதாவது.

முதலமைச்சர் பேசியபிறகு இதிலே சந்தேகத்திற்கு இடமே இல்லை என்று எனக்குப் புரிகிறது. ஆயினும் இந்தக் கொள்கையைப் பரப்புகிற தலைவர்கள் என்று பலர் இருக்கின்றார்கள். எல்லாக் கட்சிகளிலும் அவர்கள் குடும்பங்களில் திருமணம் என்று வரும்போது இந்தக் கொள்கையை அனுசரிப்பதாக இல்லையே அதைப் பற்றி கனம் முதலமைச்சர் என்ன சொல்லப் போகிறார் என்று குறும்புத்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டு மிடுக்காக அமர,

அண்ணா வெடுக்கென்று எழுந்து "தொடர்ந்து நம்முடைய நண்பர் விநாயகத்திற்கு தப்புத் தகவலையே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். (உறுப்பினர் சிரிக்கின்றனர்) அது மட்டுமல்ல, இது திருமணத்தைப் பற்றிய விவகாரம் விநாயகத்திற்கு திருமணம் ஆனதாகக் கதையிலே கூட இல்லை. என்று சட்டம் கொண்டு வந்து விட்டோம் என்று மகிழ்ச்சிக் கடலில் இருந்த அண்ணா கூறியதும் அவையே குலுங்கி குலுங்கி சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

இச்சட்டம் முன் வடிவை சட்டமாக்கியதன் வாயிலாக ஒரு பெரிய சித்தாந்தம், திராவிட கட்சிகளின் சித்தாந்தம், நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் சட்ட மாகியது. அண்ணாவின் சாதனைகளில் இதுவும் ஒன்றாகும். இச்சட்டத்தை அண்ணா பெரியாருக்குக் காணிக்கையாக்குவதாக அறிவித்தார்.

8

ஆளுநர் பேருரை

பொது மக்கள்தான் கடைசி நீதிமன்றம் என்பதை ஏற்றுக் கொள்கிற நேரத்தில் பொதுமக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் இருக்கின்ற சட்டமன்றம் பொது மக்கள் சார்பில் கடைசி நீதிமன்றமாக அமையும். – அண்ணா

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில ஆளுநர் இந்திய குடியரசுத்தலைவர் அவர்களால் நியமிக்கப் படுகிறார். மாநிலத்தின் அனைத்து நிர்வாகப் பொறுப்பு களும் இவருக்கே உரியதாகும். ஆளுநர் பதவியேற்கும் போது, அவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை காக்கவும், அதன் வழி நடக்கவும், அதன் விதிகள் மீறப் படாமல், பாதுகாக்கவும் செயல்படுவதாக உறுதி எடுத்துக் கொள்கிறார்.

மாநில ஆளுநரின் பணிகள் என்னென்ன என்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் முக்கியமாக அவரது பணிகளை மூன்றாகப் பிரித்துக் கொள்ளலாம். முதலாவதாக, அவரை மாநிலத்தின் தலைவராகக் கொள்கிறோம். (Head of the State) இரண்டாவதாக, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இணைப்புப் பாலமாக விளங்க வேண்டும். (As a link with the centre) மூன்றாவதாக, மாநிலத்தில்

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்படும் போது, தலைமை நிர்வாகியாக, செயல்படுவார். (Chief executive during President rule). மாநிலத்தில் நிகழும் நிகச்சிகளை அவ்வப்போது மத்திய அரசுக்கு தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார். இவரே மாநில சட்டமன்றத்தினை ஒரு அங்கமாகவும் கருதப் படுவார்.

சட்டமன்றக் கூட்டத்தொடர்களை கூட்டவும், கூட்டப்பட்டக் கூட்டங்களை முடித்து வைப்பதும் இவரது அரசியலமைப்புப்பணிகளாகும். இதைத்தவிர, ஆண்டுக் கொருமுறை முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரில் உரையாற்றவும் செய்வார். இவ்வுரை அவ்வமயம் பொறுப்பில் உள்ள ஆளுங்கட்சியினரின் கொள்கை விளக்க உரையாகவும் இருக்கும்.

இத்தகைய ஆளுநர் பதவி அவ்வப்போது தேசிய அளவிலும், மாநில அளவிலும், படித்த சான்றோர்கள் அளவிலும் தொடர்ந்து விமர்சிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், முக்கிய எதிர்கட்சியாக விளங்கிய தி.மு.க. கூட ஆளுநர் பதவி அவசியமற்றது என்றேக் கூறிப்பிட்டு வந்தது. எல்லா மாநிலங்களிலும் சட்டமன்றக் கூட்டங்களில் ஆளுநர் உரையின் போது பல சமயங்களிலும் வெளி நடப்புகள், உரிமைப் பிரச்சினைகள் போன்றவை நடக்கும். ஆனால், அண்ணா அவர்கள் இதே பிரச்சினையை எப்படி ஆணித்தரமாகவும், தெளிவாகவும் பிறர் மனத்தினை துன்புறுத்தாமலும் கையாண்டார் என்பதை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டே ஆக வேண்டும்.

1957ஆம் ஆண்டு ஆளுநர் உரைமீதான் விவாதத்தில் அண்ணா கலந்து கொண்டு ஆற்றிய உரையும், ஆளுநர் உரை பகிஷ்கரிப்பு குறித்த முழுவிவரமும் நாம் அறிந்துக் கொள்வது மிகமிக அவசியமான ஒன்றாகும்.

ஆளுநர் பேருரை மீது அண்ணா ஆற்றிய உரை வருமாறு:

ஆளுநர் உரையில் அரசின் கொள்கை விளக்கம் எடுத்து வைக்கப்படவேண்டும். 1957ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் கொள்கை விளக்கம் ஏதும் குறிப்பிடப்பட வில்லை. அதற்கு முதலமைச்சர் காமராஜ் கூறுகையில் தொடர்ந்து ஒரே அரசுதான் பதவி வகிக்கிறது. அதற்கான் கொள்கை விளக்கத்தைத் தனியாக இந்த ஆண்டு கூற வேண்டிய அவசியமில்லை எனும் பொருள்பட பத்திரிகை களுக்கு செய்தியாக வெளிட்டார்.

இந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அண்ணாவே பேசுகையில், ஆளுநர் உரையில் தான் கொள்கை விளக்கம் கோடிட்டுக் காட்டப்பட வேண்டும் என்று கூறுகின்றார். இந்த உரையை திருக்குறளில் இருந்து ஒரு குறளை அதுவும் காதலைப் பற்றிய ஒரு குறளை மேற் கோள் காட்டி தமது உரையைத் துவக்குகின்றார். அக்குறளினை இரு அரசியல் கட்சிகளின் பிணைப்பைப் பற்றியும் அவர்கள் பணியாற்றும் விதத்திற்கும் உதாரண மாகக் கூறுகின்றார். அக்குறளினை இப்போது காண்போம்.

"காலை அரும்பி பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்"

என்று கூறி அவர் கூறுவதாவது:

அரசியல் உலகத்திலே காலையிலே அரும்பி மாலை யிலே மலர்கின்றது. சிலர் இந்தக் கட்சியின் பெயர் மாற்றப் படவேண்டுமென்று சொன்னார்கள். சிலர் பெயரை மட்டும் மாற்றினால் போதாது. இந்தக் கட்சியை அடியோடு அழித்துவிட வேண்டும் என்றும் சொன்னார்கள். இன்னும் சிலர் இந்தக் கட்சித் தனியாக இருப்பானேன் தோளோடு தோள் சேர்ந்து எங்கள் பக்கம் நிற்கலாமென்றும் சொன்னார்கள். தோளோடு தோள் சேர்ந்து நிற்கலாமென்று சொன்ன நேரத்திலே நான் முதலமைச்சர் அவர்களைத்தான் பார்த்தேன். அவரும் நானும், தோளோடு தோள் சேர்ந்து நிற்பது இயற்கையிலேயே முடியாத காரியம். ஆனால் கைகோர்த்துக் கொண்டு

செயலாற்ற முடியும். உருவத்தைப் பற்றிய மட்டிலும் நான் சொல்லவில்லை. உள்ளப்பாங்கைப் பொறுத்த வரையில் பல்வேறு கட்சிகள் தோளோடு தோள் சேர்ந்துப் பணியாற்ற முடியாது. கை கோர்த்துக் கொண்டு பணியாற்றலாம்.

கவர்னர் பெருமானுடைய பேருரை ஆட்சியாளர்கள் இனி செய்யப்போகின்ற காரியங்களையும் கடைபிடிக்க இருக்கின்ற கொள்கைகளின் விளக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாமல் இருப்பது உண்மையில் பெரும் குறையே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக ஆட்சியாளர்களின் கொள்கை திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கைத் திட்டங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே வரவு செலவு திட்டம் என்பது நான் அறிந்தவரை உணர்ந்து இருக்கிறேன். ஆனால் கவர்னர் பேருரையில் குறிப்பிட வேண்டிய கொள்கை விளக்கங்களை நிதி அமைச்சருடைய வரவு செலவு பிரசங்கங்களுக்கு கவர்னர் ஒதுக்கிவிட்டது பெரும் குறை என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

படத்திற்கு சட்டமே தவிர, சட்டத்திற்கு படம் அல்ல

கவர்னர் பெருமகனார் கொள்கை விளக்கத்தை வரவு செலவு திட்டத்தின்போது வைத்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கி விட்டாலும் கூட "வரவு செலவு திட்டம் "புள்ளி விவரக் கணக்கே தவிர அதில் கொள்கை விளக்கத்திற்கு அதிகமாக இடம் இருக்கப் போவதில்லை. இருக்கவும் தேவையில்லை. ''படத்திற்குத்தான் சட்டமே தவிர சட்டத்திற்குப் படம் அல்ல" என்பதுபோல் கொள்கையிலே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவனால் கொள்கைகளை முதலில் பேசிய எதிர்க்கட்சிக்காரர்கள் உண்மையிலேயே மிகவும் குறைந்த எண்ணிக்கையினர் என்றாலும் அவர்கள் சொல்லுகின்ற சில பல நேர்மையான கருத்துக்களையும் அரசியல் பெருந்தன்மையோடு ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டு வரவு செலவு திட்டத்தை தயாரித்துக் கொடுப்பதாக இருந்தால்தான் அந்த வரவு

செலவு திட்டம் பூர்த்தியானதாக இருக்கும். மக்களுடைய கருத்துக்கள் எல்லாம் அதிலே கலந்து பிரதிபலிக்கும். ஆனால் இன்றைக்குக் கொள்கைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்யாமலேயே, ஒரு திங்கள் கழித்து வரப் போகின்ற வரவு செலவு திட்டத்திலே கொள்கைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றால் நம்முடைய கொள்கைகள் ஒரு பக்கம் இருந்தால் வரவு செலவு புள்ளி விவரங்கள் நம்மை வேறு எங்கோ இழுத்துக் கொண்டு போய்விடும் அப்போது கொள்கைகளையெல்லாம் அலசி ஆராய்வதற்கு நேரமும் இருக்காது. அப்படியே அலசி ஆராய்வதாக இருந்தாலும் கொள்கை மாற்றத்துக்குத் தக்கபடி வரவு செலவு திட்டத்தை திருத்தி அமைப்பது என்பது இயலாத காரியம் ஆட்சியாளரை அப்படி திருத்தி அமைக்கக் கூடிய எண்ணிக்கையும் எங்களிடத்தில் இல்லை என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

ஆளும் கட்சி எதிர்க்கட்சியினரை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை பலப்பல உதாரணங்கள் சொல்லி விளக்கிக்கொண்டே செல்கிறார் அண்ணா.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், உண்மை யிலேயே ஆளும் கட்சியினர் எந்த வகையிலே எங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்றால் நாங்கள் அழிந்து விடத் தக்கவர்கள் என்று எங்களைத் தூற்றுவதைப் பற்றி நாங்கள் உண்மையிலேயே கோபித்துக் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் இல்லாத நிலையில், ஒருவரை ஒருவர் இப்படித் தூற்றிக் கொண்டிருப்பது பொதுவாழ்வுத் துறையில் உண்மை யிலேயே சாதாரணமாகி விட்டது. ஆனால் இந்தக் கோட்டைக்குள் நுழைந்து உள்ளே வந்து பார்க்கையில், இப்போதிருக்கும் ஆட்சியாளரை விட பல ஆயிரக் கணக்கான மடங்கு அதிகாரம் படைத்தவர்கள் மக்களுடைய எழுச்சிக் குரலைக் கேட்ட நேரத்தில்

கோட்டையை விட்டுவிட்டு ஓட வேண்டியிருந்தது என்பதை மறந்து விடமுடியவில்லை.

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா ?..

ஆகையால் இன்றைய தினம் பெருவாரியான அளவிலே இருந்து ஆட்சி நடத்தும் கட்சிக்காரர்கள் அவர்களுடைய வக்கீல்கள் என்று நான் சொல்வேன். பீஸ் வாங்காவிட்டாலும் என்ன சொல்கிறார்கள் என்றால் ''அவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் என்ன காரியத்தைச் செய்து விடமுடியும்? என்று,

ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் என்றென்றைக்கும் ஆளும் கட்சியிலேயே இருப்பார்கள். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் என்றென்றைக்கும் ஆளும் கட்சியாக வரமுடியாது என்னும் ஏகாதிபத்திய தத்துவத்தை எழிலான தமிழிலேயே எடுத்துச் சொன்னார்கள். "அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா என்று அழைப்பதற்கு? அத்தைக்கு மீசை முளைக்கப் போவதும் இல்லை, சித்தப்பா என்று அழைக்கப் போவதும் இல்லை" என்று ஓர் உறுப்பினர் எடுத்துச் சொன்னார்.

திருமதி அனந்த நாயகி, பேரவை உறுப்பினர். ஆளுநர் உரைமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையில் தி.முக. ஆளும் கட்சியாக வர இயலாது என்பதை ஓர் உதாரணம் மூலமாக கூறலானார். அதாவது 'அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா!' ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்க இயலாது என்றார்.

மேலும் அண்ணா பதிலளித்து பேசுகையில் - "ஆனால் அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பா என்று அழைக்கிறவர்கள், அண்டைய நாடாகிய கேரளத்தில் என்பதை அம்மையார் மறந்து விட முடியாது. அது மட்டுமல்ல. அத்தைக்கும் சித்தப்பாவுக்கும் மீசை ஒன்றுதான் வித்தியாசம் என்று உலகம் கருதுவது இல்லை. பல அத்தைகளுக்கு மீசை இருக்கின்றன. என்றாலும் நாம்

அத்தை என்றுதான் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எதிர்கட்சியில் இருப்பவர்களை அணைத்துச் செல்லவேண்டுமென்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

செஞ்சிக் கோட்டை ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல

இன்றைய தினம் எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கே ஆளும் கட்சியாக மாறக் கூடும். மாறலாம். இன்றைய தினம் ஆளும் கட்சியில் பெருவாரியாக இருப்பவர்களை எல்லாம் என்னைப் பொறுத்தவரையில் இந்த சபையினுடைய ஒழுங்குமுறைக்கு அது உட்பட்ட தாகத்தான் இருக்கும் என்று கருதுகின்றேன். செஞ்சிக் கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்கள் அல்ல.

காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் வீரதீரமாக சுதந்திரப் போராட்ட காலத்தில் அவர்களே ஈடுபட்டவர்கள் என்று கருதிக்கொண்டு அவர்கள் பிறரைப் பற்றி, "இவர்கள் எல்லாம் பிரிட்டீஷ் ஆட்சிக்கு கால் வருடியவர்கள், வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் தாசர்கள் என்று பழைய வார்த்தையை எடுத்துச் சொல்லும் நேரத்தில் என்னுடைய முகம் சுருங்கவில்லை. ஆனால் அவர்க ளுடைய பகுதியிலுள்ள பலருடைய முகம் சுருங்குகிறது.

இப்படிப் பழைய பரம்பரை பேசிக் கொண்டிருந்த ஜமீந்தார்கள், மிட்டாதார்கள், சிற்றரசர்கள் தங்கள் பட்டம் பதவிகளை விட்டு வெளியேறும் இந்த நேரத்திலே, அரசியலில் மட்டும் இவர்கள் ஜமீந்தாரி முறையை கையாளுவார்களேயானால், இந்த ஜமீந்தாரி முறைக்கும் வெகு விரைவிலேயே இறுதி காலம் வரும் என்று எச்சரிக் கிறேன்.

பாவாடை நாடா பிரச்சினை

சட்டமன்றத்தில் ஒரு காலத்தில் உறுப்பினராக இருந்து பின்னர் அமைச்சராகவும் பணியாற்றியுள்ள திரு ரோச் விக்டோரியா அவர்கள் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்த விஷயத்தை சொல்லும் போது இந்த வாசகங்களைக் குறிப்பிட்டி ருக்கிறார். ஆங்கிலத்திலே உள்ள அந்தக் கருத்தை கொச்சைத் தமிழில் சொல்லவேண்டுமென்றால் - கனம் சபாநாயகர் நான் குறிப்பிடும் பதத்திற்காகச் சற்று மன்னிக்க வேண்டும். மத்திய சர்க்காருடைய பாவாடை நாடாவில் மாகாண சர்க்கார் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கிறது என்று கருத்துப்பட அவர் சொன்னார். அந்த நாடாவை சற்று அவிழ்த்து விட நாங்கள் விரும்புகிறோம். வேறு ஒன்றும் இல்லை. அப்படி அவிழ்த்துவிடாமல் பலவற்றாலும் ஆற்றல் படைத்த அமைச்சர்கள் அமர்ந்திருக்கும் இந்த அமைச்சரவை உண்மையிலேயே நல்ல காரியங்கள் ஆற்றும் என்ற நம்பிக்கையால் நாங்கள் சொல்கிறோமே தவிர, ஆட்சிப் பொறுப்பில் இருந்து அவர்களை விரட்டவேண்டும் என்பதால் அல்ல.

ஆலோசனை குழுக்களை அமைக்க ஆலோசனை

நம் ஜனநாயகத்தில் இருக்கின்ற ஒரு தத்துவத்தை மிகக் குறைந்த நேரத்தில் விளக்கப் பிரியப்படுகிறேன். கனம் அங்கத்தினர் தம்முடைய கருத்துரைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படாதது பற்றி உண்மையிலேயே வருத்தப்பட்டார். ஆனால் அதற்குக் காரணம் புதிதாக வந்திருக்கும் உறுப்பினர்கள் எங்கேயோ அலைந்துவிட்டுப் பிறகுதான் தங்களுடைய விஷயத்திற்கு வருவார்கள் என்பது மட்டுமல்ல. உறுப்பினர்கள் எவ்வளவு காலம் அனுபவம் பெற்றாலும் இப்பொழுது இருக்கும் முறைப்படி எந்த அங்கத்தினரும் தம்முடைய கருத்துக்களை விரிவானமுறையில் எடுத்துச் சொல்வதற்கு சட்ட

மன்றத்திலே உண்மையிலேயே வாய்ப்பு இல்லை, வசதியும் இல்லை என்று நான் கருதுகிறேன். அதற்காக ஜன நாயகத்தில், உண்மையிலேயே ஒரு சிறந்த சட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும், நமக்குள்ளேயே ஒரு ஏற்பாட்டினைச் செய்துகொண்டால், சாலச் சிறப்புடையதாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் விவாதங்கள் செய்கின்ற நேரத்தில் அந்தத் துறைக்குப் பொறுப்பாளராக இருக்கும் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களில் ஆளும் கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் பதின்மர் இருபதின்மர் பதினைந்து பேர்கள், பன்னிரெண்டு பேர்கள் கொண்ட சிறுசிறு ஆலோசனை குழுக்களை வைத்துக் கொண்டால் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு தலைப்பிலே வருகிற விஷயங்களை அந்த ஆலோசனைக் குழுவிலே உண்மையிலேயே நன்றாக விவாதிக்கலாம். அப்படி விவாதிக்கும்போது உண்மையிலேயே பேச்சுப் போட்டிபோல் அமையாமல் கொள்கையை விளக்குகின்ற அளவிலே இந்த சட்டமன்றம் அமையும் என்று நான் கருதுகிறேன். இதற்கு ஆளும் கட்சியினர் ஏதாவது வழி செய்வார்களேயானால் எனக்கு அல்ல - ஜனநாயகத்திற்கு உண்மையிலேயே சேவை செய்தவர்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட அருமையான யோசனையை அண்ணா அளித்தது இம் மாநிலத்தில் ஏற்றுக் கொள்ளப் படவில்லையாயினும் மத்தியில் இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

அண்ணா முதலமைச்சரானவுடன் இப்படிப்பட்ட குழுக்களை அமைக்க முயற்சி மேற்கொண்டார். இனியாவது பலப்பல ஆலோசனைக் குழுக்களை அமைத்து அதில் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் உரிய துணை அமைச்சர்கள் குழுத் தலைவர்களாகவும் இருந்து செயல் பட்டால் நிர்வாகமும் செம்மையடையும். சட்டமன்றத்தின்

பணியும் ஓரளவு குறையும். உறுப்பினர்கள் கடமை மேலும் அதிகரிக்கும். ஜனநாயகம் சிறக்கும்.

பேரழிவுக்குப்பின் பேரெழுச்சி

உணவுப் பிரச்சினையை பொறுத்தவரையிலும் கூட திட்ட கமிஷனின் தலைவர் வி.டி. கிருஷ்ணமாச்சாரியார் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். மாகாண சர்க்கார் தாம் போட்ட திட்டங்களில் இருந்து தவறி இருக்கிறார்கள்." என்று. ஆகவே "இதுவரையில் போட்ட திட்டங்களும் சரியாக நிறைவேற்றப்படவில்லை. எங்கள் கொள்கை களையும் விளக்கமாட்டோம்" என்று சொல்வது நாங்கள் எண்ணிக்கையில் பெருத்தவர்கள். நீங்கள் குறைந்தவர்கள், அடங்கிக் கிடவுங்கள்" என்பதாக இருக்கிறது. அவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் பேரழிவு என்ற ஒன்றுக்குப் பிறகு மக்களுடைய பேரெழுச்சி என்று ஒன்று இருக்கிறது., அது நல்ல தீர்ப்பளிக்கும். அந்தத் தீர்ப்பு காலங் கடந்து கிடைத்தாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அப்படிச் சொல்லுகிறபோது "பேசுகின்ற உரிமை உங்களுக்குத் தந்ததாலே இப்படியெல்லாம் பேசுகின்றீர்கள்? என்று எடுத்துச் சொன்னார்கள். அப்போது என் மனக்கண்முன் ஸ்ரீ சத்தியமூர்த்தி தோன்றுகிறார். பிரிட்டிஷாரின் ஆட்சி நடந்த காலத்தில் தன்னந்தனியனாக நின்று போராடிய நேரத்தில் இதே கோட்டையில் இருந்துதான் "உங்களுக்குப் பேச்சு சுதந்திரம் கொடுத்திருக்கிறோம்; அப்படிப் பேசினீர்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். அதே கோட்டை இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் காரர்களுக்கு வந்திருக்கிறது. "பேச்சுச் சுதந்திரம் கொடுத்தோம். நீங்கள் எங்கள் சுதந்திரத்தைப் பறித்து விட்டீர்கள்" என்று அன்றைக்குச் சொன்ன பிரிட்டீஷ் காரர்கள் தேம்ஸ் கரையில் நிற்கிறார்கள். இங்கு கூவம் நதிக்கரையில் நின்று கொண்டு அதே பழைய தத்துவத்தில் நீங்கள் உழன்று கொண்டிருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு தமது உரையை முடித்தார்.

9

ஆளுநர் பேருரை புறக்கணிப்பு

1959ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பேரவை - மேலவை இணைந்த கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்தவிருந்த ஆளுநர் உரையில் கலந்து கொள்வதில்லை எனத் தெரிவித்தது. அப்போது, கழகத் தலைவர் என்ற முறையில் அண்ணா அவர்கள் வெகு தெளிவாக அதற்கான காரணத்தை "நாங்கள் கையாண்டு வருகின்ற ஓர் அரசியல் தத்துவத்தின்படி., வடநாட்டுச் சர்க்காரால் நியமிக்கப் படுகின்ற கவர்னர் பெருமான் பதவியேற்பு விழா நாள் ஒன்றிலும், அவர் பேருரை ஆற்றுகின்ற நாள் ஒன்றிலும் கலந்து கொள்வதில்லை என்ற ஒரு கருத்து வைத்திருக்கிறோம். அது விசித்திரமான கருத்தாக இருக்கலாம். எத்தகைய விசித்திரமான கருத்தாக இருந்தாலும், அதற்கு கட்டுப்பட்ட முறையில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. அது கவர்னர் பெருமானிடத்தில் நாங்கள் தனிப்பட்ட முறையில் அவமதிப்பு காட்டுவது ஆகாது" என்று ஒரு அறிக்கையில் வெளியிட்டார்.

எடுத்த முடிவின்படி 1959 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் நிகழ்ந்த ஆளுநர் உரையின்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மேலவை - பேரவை இணைந்த கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து டிசம்பர் திங்கள் 11ஆம் நாள் காங்கிரஸ் உறுப்பினர் திரு எஸ். லாசர் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். ஆளுநர் உரையின் போது தி.மு.,க சட்ட மன்ற

உறுப்பினர்கள் கலந்து கொள்ளாதது ஆளுநர் உரையைப் புறக்கணிப்பது ஆகும். சட்டமன்ற உரிமைகளை பாதிப்பதுமாகும். ஆகவே, இதனை உரிமைக்குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை கொணர்ந்தார்,

அவ்வமயம், பேரவைத் தலைவராக விளங்கிய திரு டாக்டர் யூ. கிருஷ்ணாராவ், விதிகளின்படி தம்முடைய தீர்ப்பினை வழங்குவதற்கு முன், கட்சித் தலைவர்களின் கருத்தைக் கேட்டார்.

அவை முன்னவரும், நிதியமைச்சருமான திரு. சி. சுப்பிரமணியம் உரிமைப்பிரச்சினையை ஏற்க வேண்டும் என்று வாதாடினார். அவரது கருத்துக்கள் கீழ் வருமாறு:

"கவர்னர் உரையின்போது சட்டமன்றத்திற்கு வராதது ஒரு போதும் குற்றமாகாது என்பது உண்மை தான். ஆனால் ஒரு குறிப்பிட்ட காரணங்களைக் காட்டி வேண்டுமென்றே வராமல் இருப்பதானது மிகவும் ஆட்சேபகரமானது. இம்மாதிரியான நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டதற்கான காரணம் என்ன என்பதைப் பார்க்கும் போது இவை அரசியல் கூட்டுறவில் அவர்களுக்கு ஒரு துளியும் நம்பிக்கை இல்லை. அரசியல் ஒற்றுமைக்கு இவைகள் இன்றியமையாதவை என்றாலும், அவர்கள் அதிலே மாறுப்பட்டக் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள்.

தென்னிந்தியர்கள் மீது வட நாட்டவர்கள் ஆதிக்கம் செலுத்துவதாக அவர்கள் கருதுகிறார்கள். வட நாட்டவர்களை விரட்டவேண்டும் என்கிற அவர்களுடைய வரையறுத்த கொள்கையானது அரசியல் சட்டத்துக்கே முற்றிலும் முரண்பட்டதாகும். நான் இன்னும் சற்றுத் தெளிவுடன் சொல்ல வேண்டுமானால், வட நாட்டுத் தொடர்பு இல்லாத சுதந்திர திராவிட நாடு பெறுவதும், சுதந்திரம் பெற்ற ஐக்கிய திராவிட கூட்டாட்சியை நிலை நாட்டுவதும்தான் அவர்களுடைய திட்டவட்டமான

வெளிப்படையான கொள்கையாகும். அதையொட்டியே தான் அவர்கள் கவர்னர் உரையின் போது சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, அரசியல் சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தப் பட்டுள்ள இவ்வங்கத்தை எதிர்ப்பது என்பது என்ற மூல காரணத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் 168 வது விதிப்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப்படுவார். அதன்படி அவர் சட்டமன்றத்தோடு இணைந்தவர். 151, 154 விதிகளின்படி இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை சட்ட மன்றத்திற்கு வெளியே உள்ள அரசாங்க நடவடிக்கை களுக்கும் ஆளுநர் பொறுப்புள்ளவராக இருக்கின்றார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 174வது விதிப்படி சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு கவர்னர்தான் முழு அதிகாரத்தைப் பெற்றவராவார். சட்டமன்றத் தலைவருக்கு கூட அந்த அதிகாரம் கிடையாது. என்வே கவர்னர் உரையானது சட்டமன்றத்தின் ஒரு பகுதியாகும். ஆளுநர் உரைதான் ஒரு கூட்டத்திற்கு ஆரம்பம் ஆகும். இந்த நேரத்தில் யார் யார் அங்கே இருப்பது என்ற ஒரு கேள்வி எழுகின்ற நேரத்தில், மேல் சபை கீழ்சபை உறுப்பினர்களும் மேல் சபைத்தலைவர், சட்டமன்றத் தலைவர், சட்டசபை ஆளுங்கட்சித் தலைவர், அமைச்சர்கள், சட்டமன்றச் செயலாளர்கள் ஆகியோர் அங்கு இருப்பார்கள். ஆளுநர் தலைமை வகித்து உரை நிகழ்த்தும் அந்த நேரத்தில் யாராவது உறுப்பினர் தவறாக நடந்து கொண்டால், சபை அடுத்துக் கூடும் போது சட்டசபை விதியின்படி, அவர்மீது நடவடிக்கை எடுக்கின்ற உரிமை சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சட்டசபையில் இணைந்துள்ள ஓர் உறுப்பை அவமதிப்பது சட்டசபையை அவமதிப்பது ஆகும். மற்றும் இந்திய அரசியல் சட்டம் 188வது விதியின்படி, அங்கே உள்ள ஒவ்வொரு உறுப்பினரும், சட்டமன்றத் தலைவர் முன்னிலையில் "நாங்கள் இந்திய அரசாங்கத்திற்கும் அதன் விதிகளுக்கும்

கட்டுப்பட்டு உண்மையாக இருப்போம்" என்று உறுதி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அலட்சியம் செய்தல், உதாசீனம் செய்தல் இன்னது என்றும், உரிமையை மீறுவது என்பது இன்னது என்றும், "மேய்ஸ்" பாராளுமன்ற நடவடிக்கைகளில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஆளுநர் இந்த மாநிலத்தின் தலைவராக இருப்பது மட்டுமல்லாமல், நிர்வாகத்தின் தலைவராகவும் இருக்கிறார். அந்த முறையில் அவரை அவமானத்திற்கு உள்ளாக்குவதை இந்த அவை கவனிப்பதற்கில்லை. ஆனால், ஆளுநர் இந்த அவையில் ஓர் அங்கமாக இருந்து கொண்டு அப்போது அவருக்கு இழுக்கு ஏற்படும் போதுதான் இந்த அவை அதிகாரம் பெறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக சட்டசபைக் கட்சித் தலைவர் அவர்கள், ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது, ஆளுநர் இடத்தில் தனிப்பட்ட முறையில் தனக்கு மரியாதை இருப்பதாகவும், ஆனால் அவர் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சின்னமாக வடநாட்டார்களால் நியமிக்கப்பட்டு இருப்பதால் தங்களுடைய அதிருப்தியை தெரிவிக்கும் பொருட்டு அன்றைய தினம் தி.மு.க. உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தின்படி "ஓர் இந்தியக் குடிமகன் இந்திய எல்லைக்கு உட்பட்ட எந்த மாநிலத்திலும் ஆளுநராக நியமிக்கப்படலாம்" என்று விதி இருக்கிறது. அப்படி இருக்கும் போது "வடநாட்டு கவர்னரை ஏற்றுக் கொள்ள மாட்டோம், புறக்கணிக்கிறோம்" என்பது இன்னொரு வகையில் உரிமையைப் பாதிப்பதோடன்றி அவமதிப்புத் தேடுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். ஆகவே, அவர்கள் அப்படி செய்து இருக்கக் கூடாது. அப்படி அவர்கள் வராமல் இருந்தது வேண்டுமென்றே ஆளுநருக்கு இழிவு தேடியதோடு மட்டுமல்லாமல், ஆளுநரை புறக்கணித்த குற்றத்திற்கும் ஆளாகிறார்கள். எனவே அவர்கள் தனிப்பட்ட முறையில்

அப்படிச் செய்து இருந்தாலும் அல்லது குறிப்பிட்ட சில கொள்கைகளை முன்னிட்டு செய்து இருந்தாலும் சபையின் உரிமையை பாதிக்கக்கூடிய காரியத்தை செய்த குற்றத்திற்கு ஆளாகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர், வி.கே. ராமசாமி முதலியோர் பேசுகையில் சட்டசபையின் கூட்டத்திற்கு வர வேண்டும் என்று எந்த உறுப்பினரையும் வற்புறுத்த முடியாது என்றார். சபைக்கு வராதது சபையை அவமதிப்பது ஆகாது. அதனால் ஆளுநரின் தகுதிக்கோ, மதிப்புக்கோ இழுக்கு ஒன்றும் நேர்ந்திடவில்லை. ஆளுநர், வரும்போது வெளிநடப்பு செய்தால்தான் ஆளுநரை அவமதிப்பது ஆகும் என்றும் ஆனால் அவைக்கு ஒரு கட்சியினர் முன் கூட்டியே வராதபோது அத்தகைய உரிமைப் பிரச்சினை எழுவதற்கு நியாயம் இல்லை என்றும் குறிப்பிட்டு, டில்லி நாடாளும்மன்றத்தில் திரு. மௌலங்கர் தலைவராக இருந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி உரிமைப் பிரச்சினைக்கு எதிராக தம் கருத்தைத் தெரிவித்தார்.

அடுத்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் பேசுகையில், ஆளுநர் பதவிக் குறித்து தி.மு,கவிற்கும் தனக்கும் தனது கட்சிக்கும் (கம்யூனிஸ்ட்) மாறுபட்ட கருத்து இருக்கிறது என்றும், இமயத்திலிருந்து குமரி வரை உள்ள பகுதியில் வாழும் எவரானாலும் ஆளுநர் பதவி வகிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை இலலை என்றும் குறிப்பிட்டார். ஆனால் தற்போது எழுந்துள்ள பிரச்சினையில் தி,மு.கவின் கொள்கைத் திட்டங்கள் எழவில்லை என்றும் குறிப்பிட்டார். மேலும் ஆளுநர் இச்சட்டமன்றத்தின் உறுப்பினர் அல்ல என்று தி.மு.கவினர் கருதிய காரணத்தினால் ஆளுநர் உரையில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆகவே, அது எந்த விஷயத்திலும் உரிமைப்பிரச்சினை ஆகாது என தெளிவு படுத்தினார்.

பிரஜா சோஷலிஷ்ட் கட்சித் தலைவர் திரு பி.எல். சின்னதுரை கருத்துத் தெரிவிக்கையில் "சுதந்திர இந்தியாவில் வாழும் மக்கள் யாவரும் தங்களது கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கும், எழுதுவதற்கும் உரிமை பெற்று இருக்கிறார்கள்.

அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுப் பிரிவினையை ஒரு கொள்கையாக வைத்து, சுதந்திர திராவிடக் கூட்டாட்சிப் பெற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த எண்ணத்தை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே அவர்கள் வெளியிலே எந்தக் கருத்தை வலியுறுத்தி வருகிறார்களோ, அதையே தான் இந்த சட்டமன்றத்திலும் சொல்லுகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் சின்னமாக இருக்கும் ஆளுநர் அவர்களை புறக்கணிப்பது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஜனநாயக நாட்டிலே வாழுகிற குடிமகன் ஒருவர் சட்டமன்ற உறுப்பினரான பிறகு, அந்தக் கருத்தை பறித்து விட முடியாது. அதை மாற்றிக் கொள்ள செய்யவும் யாராலும் முடியாது. எனவே, அவர்கள் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கையானது சபையின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது என்று சொல்லி இதில் உரிமைப் பிரச்சினை எழவில்லை என்று கூறினார்.

இதற்குப் பின்னர், தி.மு.க. தலைவர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையை கவனியுங்கள்.

"ஆளும் கட்சித்தலைவராக இருப்பவர் (திரு, சி. சுப்பிரமணியம்) பேசும்போது, நாங்கள் ஏதோ எங்களுடைய கொள்கையை நிலைநாட்டத் தவறி, அதிலிருந்து நழுவி ஓடி விடுவதாகக் குறிப்பிட்டார்கள். சற்று அவசரப்பட்டு தன்னுடைய பேச்சில் அவ்வாறு குறிப்பிட்டார்கள். நாங்கள் ஒன்றும் நழுவி விடவில்லை; நாங்கள் மேற்கொண்டுள்ள கொள்கையில் அதன் பலன்

எதுவாக இருந்தாலும் கவலைப்படாமல் உறுதியாகத்தான் இருக்கிறோம். தனிப்பட்ட முறையில், ஆளுநர் அவர்களுக்கு இழுக்கு தேடவேண்டும் என்ற குறுகிய நோக்கம் உடையவர்கள் அல்ல நாங்கள். அவரைத் தனிப்பட்ட முறையிலே நாங்கள் மதிக்கிறோம்.

ஆளுநர் அவர்கள் இந்திய நாட்டு குடியர்சுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டவர் அல்ல. அமர்த்தப்பட்டவர். இந்த சபையிலோ அல்லது வேறு சபையிலோ உறுப்பினர் அல்லாதவர் என்பதை நிலைநாட்டவே தான் நாங்கள் ஆளுநர் உரையை புறக்கணித்தோம். எங்கள் கட்சியினர் அதிகார பூர்வமான அறிக்கையிலும், எங்களுடைய சொற்பொழிவுகளிலும் வேண்டுமானால், "நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த, அதாவது தமிழ் மண்ணைச் சார்ந்த ஒரு குடிமகனைத் தலைவராக தேர்ந் தெடுக்கப்படவேண்டும் என்றுதான் கூறி இருக்கிறோம். வட நாட்டார் மீது துவேஷத்தை உண்டாக்குவதாக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள். அப்படி வகுப்பு துவேஷத்தை உண்டாக்குகிறோம் என்று வாதத்திற்கு எடுத்துக் கொண்டாலும், அது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் கீழ்தான் வரமுடியுமே தவிர, இந்த அவைக்கு அது பற்றி தொடர்பு எதும் கிடையாது.

நான் இப்போது உங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட வனாக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பேசும் போது, நாங்கள் வெள்ளையனை எதிர்த்துச் சுதந்திரம் வேண்டிப் போராட்டம் நடத்திய போது எங்களுடைய கொள்கையை நிலைநாட்டினோம். கொள்கையில் இருந்து நழுவி விடவில்லை." என்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே நாங்களும் எங்களுடைய கொள்கையை விட்டு விடவும் இல்லை. பிரச்சினையில் இருந்து நழுவி விடவும் இல்லை. எங்களது அணிவகுப்பில் உள்ள கட்சித் தொண்டர்கள் கூட கொண்ட கொள்கையை விட்டு ஓடி விடுவான் என்று தயவு செய்து நீங்கள் எண்ண வேண்டாம். நாங்கள்

வடநாட்டு ஏகாதிபத்தியத்தைக் குறித்துப் பேசுகிறோம் என்றால் பம்பாயில் உள்ளவர்களைக் குறித்தோ அல்லது கல்கத்தாவில் உள்ளவர்களைக் குறித்தோ அல்லது இராஜஸ்தானில் உள்ளவர்களைக் குறித்தோ நாங்கள் பேசவில்லை. அந்நிய ஏகாதிபத்தியத்தை குறித்துப் பேசிய காங்கிரஸ்காரர்கள் அங்குள்ள ஜான்சனையோ இன்னும் அவர் போன்ற தனிப் பட்டவர்களைக் குறித்தோ பேசவில்லை.. பொதுவாக அந்நிய ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும் என்றுதான் பேசினார்கள். ஆகவே, நானும் என்னைச் சார்ந்த உறுப்பினர்களும் வடநாட்டார் ஒருவரை ஆளுநராக நியமிப்பதன் மூலம் மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது என்று சொல்லுகின்றோமே தவிர, ஆளுநருக்கு இழுக்குத் தேடவேண்டும் அல்லது அவமானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அற்பத் தனமான எண்ணம் எங்களுக்குக் கிடையாது.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசியல் சட்டத்திலே அதற்கான வழி வகைகள் செய்யப் பட்டிருக்கின்றன. எனவே அரசியல் சட்டம் திருத்தப் பட வேண்டும் என்பதற்காக செய்யப்படும் கிளர்ச்சிகள் அரசியல் சட்டத்தை அவமானப்படுத்துவதற்காக செய்யப் படுகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் சட்டம் என்பது கைவைக்க முடியாத புனிதமானது என்று கருதுவதற்கு இல்லை. அரசியல் சட்டங்கள் அனைத்தும் மனிதனால் உண்டாக்கப் பட்டவை; ஆகவே, அதைத் திருத்தி அமைக்கவும், அதற்குப் புதிய உருவம் கொடுக்கவும், வேண்டுமானால் பல பகுதிகளைக் கூட்டவும், குறைக்கவும் அதற்காக வகுக்கப் பட்ட வழி வகைகளின் படி திருத்தங்கள் செய்வதற்கான உரிமைகள் நமக்கு இருக்கின்றது. எனவே, அரசியல் சட்டத்தின்படி உறுதி எடுத்துக் கொண்ட காரணத்தினால், அரசியல் சட்டத்தினைத் திருத்துவதற்கான கிளர்ச்சிகளை

மேற்கொள்ளக் கூடாது என்று நினைப்பதும் சொல்வதும் தவறானது ஆகும்.

எனவே, நான் கவர்னர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இம்மாதிரியான அபாண்டமான எண்ணங்களை உண்டு பண்ணுகிற வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஆளும் கட்சித் தலைவர் மெத்த சிரமப்பட்டு நாங்கள் அவமதிப்பு உண்டாக்கி விட்டதாகவும், கேலி செய்வதாகவும், சுட்டிக் காட்டி இங்கே பேசினார்கள். அரசியல் சட்டத்தை எரிப்போம் என்று ஒரு சாரார் சொல்வதும், அதற்கான தனியானதொரு சட்டம் இந்த சபையில் நிறைவேற்றப் பட்டதுடன் வேறு விதமாய் பேசியவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால், நான் மேற்கொள்ளுகிற நடவடிக்கையின் பலாபலன்களினின்று ஓடுபவனல்ல. நான் இந்தப் பிரச்சினையை மிகவும் முக்கியமானதொன்று என்று கருதுகிறேன். ஆளும் கட்சித் தலைவர் தன்னுடைய வார்த்தையை நிலை நாட்டுவதற்கே இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து 168வது பிரிவு சட்டத்தைப் படித்துக் காட்டி, "இந்த மாநிலத்தின் ஆளுநர் சட்டமன்றத்தின் ஓர் அங்கம்" என்று விவாதித்தார்கள்.

ஆளுநர் அவர்கள் எந்த விதத்திலும் இரண்டு அவையையும் சார்ந்த அங்கமல்ல என்று நான் சொல்லுகின்றேன். அதே இந்திய அரசியல் நிர்ணய சட்டம் 194வது உட்பிரிவு 4ன் படி, ஆளுநர் அவர்கள் சட்டசபையிலும் அல்லது மேல் சபையிலும் பேசலாமே யொழிய சட்டமன்ற நடவடிக்கையில் கலந்து கொள்வதோ அல்லது அங்கே எடுக்கப்படுகின்ற வாக்கெடுப்புகளில் கலந்து கொள்வதோ முடியாதது ஆகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 158வது பிரிவின்படி, ஆளுநர் சட்டமன்றத்திலோ அல்லது மேல் சபையிலோ உறுப்பினராக இருக்கமுடியாது. எனவே ஆளுநர் அவர்கள்

இந்த சபையின் அங்கம் என்று சொல்வதற்கு இல்லை. ஆளுநர் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வது முடியாத ஒன்றாகும்.

அவை முன்னவர், உரிமைப்பிரச்சினை குறித்து தி,மு.க. அரசியல் அமைப்புச் சட்டத்தை இழிவு படுத்த வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே இம்மாதிரி நடவடிக்கைகளில் மேற்கொண்டதாக தமது வாதத்தை முன் வைத்துப் பேசினார். நான் அவருக்கு சொல்லிக் கொள்வேன். எங்கள் முடிவு அதுவாக இருந்தால், வேறு எத்தனையோ சம்பவங்கள் நடந்து இருக்கக் கூடும் என்று.

மேலும் அவை முன்னவர் அவர்கள் நாங்கள் மேற் கொண்ட இந்த நடவடிக்கை குறித்து மக்கள் கவனம் செலுத்தவில்லை என்று சொல்லுவதன் மூலம், நாங்கள் மேற்கொண்டுள்ள தூய பணிகளும் அதன் காரணமாக ஏற்பட்டுவிடும் என்றோ அல்லது அவை நசித்துவிடும் என்றோ எண்ணிக்கொண்டு இருக்கிறார்.

நான் இப்போது சட்டமன்றத்தின் சரித்திரத்தை இணைத்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தின் போது பேசுகையில் ஒரு உறுப்பினர், "செலவினங்களை குறைத்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார். அதற்காக அவருக்கு 1000 பவுன் அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் அபராதம் விதித்தது சரியல்ல என்று கருதி அன்னாருக்கு அந்தத் தொகையைத் திருப்பித் தர செய்தார்கள், இதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அவை முன்னவர் அவர்கள் சட்டமன்றத்தின் 8வது விதியை எடுத்துக்காட்டி பேசினார்கள். அதன்படியே கூட நாங்கள் இந்த சட்டமன்றத்தில் இல்லாத காரணத்தால் அந்தச் சட்டத்தின் கீழும் எங்களைக் கட்டுப்படுத்துவதற்

கில்லை. மேலும், இந்த ஆளுநர் இடத்தில் எங்களைப் போன்றவர்களுக்கு நன் மதிப்பு உண்டு. அவர் அசாம் மாநில முதலமைச்சராக இருந்த போது மாநில சர்க்கார் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு வருவதை வன்மையாகக் கண்டித்து இருக்கிறார்.

எனவே ஆளுநர் பதவி என்ற ஓர் அமைப்பையும், ஆளுநர் நியமிக்கப்படும் முறையையும், அதற்காக வீணாக பணம் செலவழிக்கப்படுவதையும், தேர்தல் மூலம் ஏற்படாத ஆளுநர் என்ற ஒருவரை நியமிப்பதையும் குறித்து எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் பொருட்டுதான் நாங்கள் ஆளுநர் உரையின் போது கலந்து கொள்ளவில்லை என்ற காரணத்தைத் தவிர, வேறு ஒரு காரணமும் கிடையாது.

எனவே, இது குறித்து உரிமைப் பிரச்சினை எழுவதற்கு நியாயமில்லை என்பதோடு இந்த நிகழ்வு அண்மையில் நடந்த நிகழ்வு அல்ல என்பதால் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது உரிமை மீறல் ஏதும் நடைபெற வில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

தலைவர்கள் விளக்கத்தைக் கேட்டவுடன், பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ் உரையாற்றினார். இப்பிரச்சினை ஓர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன்படி பேரவை விதி 185, 188, 189, 192ன் கீழ் நான் நடவடிக்கை எடுக்கவேண்டும். விதி 188ன் கீழ் இப்படிப் பட்ட நிகழ்வு அவை உரிமை மிறிய செயலா என்பதை முடிவு செய்ய வேண்டும். இனீ வேண்டுமானால் நானே உரிமை குழுவிற்கு அனுப்பி வைக்கலாம். இருப்பினும் நான் கட்சித் தலைவர்களின் யோசனையைக் கேட்டேன். நான் பேரவை முன்னவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளை மனதில் கொண்டு பார்க்கும் போது மற்றவர்கள் நான் ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகக் கருதி கொள்ளக் கூடாது.

மற்றொன்றையும் நான் இங்கு விளக்கியாக வேண்டும். என்னை யாராலும் canvass செய்ய முடியாது. எந்த சட்டமன்ற பேச்சும் என்னை canvass செய்யமுடியாது. நான் சுதந்திரமாக முடிவெடுத்து எனது தீர்ப்பினை அளிக்கப் போகிறேன் உறுப்பினர்கள் உள்ளத்தில் அப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக விளக்குகிறேன், இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான சிறப்புரிமை பற்றிய தாகும். அதுவும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கும் அரசியல் கொள்கைகளுக்கும் உள்ள ஓர் உறவு பற்றிய தாகும். இந்தப் பிரச்சினை அவை மீறிய செயலா? ஆளுநர் சட்டமன்றத்தின் பகுதியா? ஆளுநர் உரையாற்றுகையில் உறுப்பினர் கலந்து கொள்ளாதது ஆளுநருக்கு மரியாதை செலுத்தாததாக அமையுமா? அச்செயல் அரசியலமைப்புச் சட்டத்திற்கு குந்தகம் விளைவிப்பதுதானா என்பதை நான் ஆழமாக ஆராய்ந்து அறியவேண்டும். அது குறித்து, நாளையோ அல்லது அடுத்த கூட்டத்தின் முதல் நாளிலேயோ எனது தீர்ப்பினை வழங்குகின்றேன். என் முடிவு சிலருக்கு ஏமாற்றம் தரலாம். எனது தீர்ப்புக்கு இந்த அவை செவிசாய்க்கவில்லை யென்றால் அவர்கள் என்னை பதவியிலிருந்து தூக்கிவிடலாம் என்று கூறினார்.

பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் தீர்ப்பளிக்கையில் பலப்பல முன் உதாரணங்களையும் விதிகளையும் சுட்டிக்காட்டி ஆளுநர் சட்டமன்றப் பேரவை மேலவை கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகையில், திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து சட்டமன்றத்தின் உரிமையை பாதிப்பதாகாது என்று தீர்ப்பு கூறினார். அவர் தனது தீர்ப்பில் —

இங்கிலாந்தில் 'பார்லிமெண்டின் உரிமை' மன்னன் தன் பணியாட்களுக்கு அளித்த பாதுகாப்பிலிருந்து உருவாகியது என்றாலும், இப்போது அது தனிப்பட்ட உரிமையாகக் கொண்டாடப்படுகிறது. காமன்ஸ்சபை

ஆரம்பத்தில் வலுவற்ற ஒரு குழுவாக இருந்ததால், உறுப்பினர்களுடைய உரிமைகளை நிலை நிறுத்த மன்னனையும் நீதிமன்றங்களையும் எதிர்ப்பதோடல்லாமல் பிரபுக்கள் சபையையும் எதிர்த்து தொடர்ந்து உக்கிரமான போராட்டம் நடத்த வேண்டி இருந்தது. எந்த உரிமைகள் மன்னனுக்கு விசேஷப் பாதுகாப்பாகத் தொடங்கினவோ, அவை வாடிக்கையான உரிமைகளாக காமன்ஸ் சபையால் கொண்டாடத் தொடங்கப்பட்டன. இவ் உரிமைகளை நிலை நிறுத்த அடிக்கடி செய்த முயற்சிகளால் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்று தனி உரிமைகளாக உரம் பெற்று உருவாகியிருக்கின்றன, பாராளுமன்ற உரிமைகள் என்பன பாராளுமன்றத்தால் கூட்டாகவும் உறுப்பினர்களால் தனிப்பட்ட முறையிலும் அனுபவிக்கப் படும் 'சிறப்புரிமைகள்' பாராளுமன்றத்தின் அதிகாரங் களை நிறைவேற்ற இத்தகைய உரிமைகள் அத்தியாவசிய மானவை. தனிப்பட்ட உறுப்பினர்களின் தடையற்ற சேவை களன்றி சபையின் பணிகளை செவ்வனே ஆற்ற இயலாத தாகையால், இவ் உரிமைகள் தனிப்பட்ட உறுப்பினர் களைப் பாதுகாப்பதற்கும் தன் செல்வாக்கையும் மதிப்பையும் மெய்ப்பிக்க வேண்டி சபையினாலும் அனுபவிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 194(3)வது பிரிவில் சொல்லப்பட்ட மாநில சட்டமன்றப் பேரவைகளின் உரிமைகளை மனதிற் கொண்டு, திரு. லாசரின் உரிமைப் பிரச்சினையை நான் பரிசீலனை செய்தேன். அரசிய லமைப்புச் சட்டம் இரண்டு உரிமைகளை திட்ட வட்டமாகக் கூறுகிறது. ஒன்று சபையில் பேச்சுரிமை, மற்றொன்று சபையில் பேசிய பேச்சுக்கும் அல்லது சபையின் நிகழ்ச்சிக்கும் பாதுகாப்பு அளிக்கும் உரிமைகள், திரு. லாசர் அவர்களால் சபைமுன் கொண்டு வரப் பட்ட விஷயத்தை - அதாவது ஆளுநர் உரையை புறக்கணித்ததை இந்த இரண்டு உரிமைகளின் கீழ் கொண்டு வருவது சாத்தியமில்லை.

1919ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கவர்னர் ஜெனரல் மத்திய சட்ட சபையில் பேருரை நிகழ்த்த வழி வகை செய்தது. அதற்காக உறுப்பினர்களை பிரசன்ன மாயிருக்கும்படி கோரவும் இடம் இருந்தது. கவர்னர் ஜெனரல் பேருரை நிகழ்த்தும்போது சட்டசபையை, சபையாகக் கருதி பேருரை நிகழ்த்துகிறாரா அல்லது உறுப்பினர்கள் கூட்டமாகக் கருதி பேருரை நிகழ்த்துகிறாரா என்றப் பிரச்சினை அக்காலத்திலேயே கவனிக்கப் பட்டது. மத்திய சட்டசபைத் தலைவர் சர் பிரடரிக் ஒயிட் கருத்துப்படி இது ஒரு சபை கூட்டமல்ல என்பது உறுதியாகிறது.

1936ஆம் ஆண்டில் மத்திய சட்டசபையில் உறுப்பினராக இருந்த ஸ்ரீ பிரகாசா கவர்னர் ஜெனரல் பேருரை சபை நடவடிக்கைகளைச் சார்ந்ததா? என்ற ஓர் ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்பினார். மத்திய சட்ட சபைத் தலைவர் அப்துல் ரகீம் 'கவர்னர்-ஜெனரல்' பேருரை நிகழ்த்தியக் கூட்டம் சபையின் கூட்டமாகாது என்று தீர்ப்பளித்தார். எனவே ஆளுநர் பேருரையை கேட்கக் கூடியிருக்கும் கூட்டம் சட்ட சபைக் கூட்டமாகாது.

மேலும் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் கூறுகையில் உரிமைகள் சபைக்கு உரியனவேயன்றி ஆளுநருக்கு உரியவையல்ல. அண்மையில் பிரிட்டனில் ஒரு கட்சி, பேருரையில் கலந்து கொள்ளவில்லை. அது ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கருதப்படவில்லை.

திரு லாசர் மேலும் கூறுகையில் கனம் உறுப்பினர்கள் திரு. சி.என். அண்ணாதுரையும் திரு மு. கருணாநிதியும் சபையில் பேசிய பேச்சு ஆட்சேபகரமானது என்று கூறினார். நடைமுறை விதிகளுக்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் உட்பட்ட பேச்சு சுதந்திரம் உறுப்பினர் களுக்கு உண்டு. சட்ட சபை விதி 67வது விதியை ஒரு உறுப்பினர் மீறினால் அதனை அவைத் தலைவரின்

கவனத்திற்கு வேறொரு உறுப்பினர் கொண்டு வந்தால் அவைத் தலைவர் அந்த ஆட்சேபனையை பற்றி நடவடிக்கை எடுப்பார்.

1954ஆம் ஆண்டு சட்டசபைத் தலைவர்கள் மாநாட்டில் மக்களவைத் தலைவர். மாவ்லங்கர் கூறியதை மேற்கோள் காட்டி கனம் உறுப்பினரை திரு லாசர் எழுப்பிய பிரச்சனை சபையின் உரிமையை பாதிக்கவில்லை என்றே நான் எண்ணுகிறேன். எனவே மேலெழுந்த வாரியாக பார்க்கும் போது ஆளுநர் உரையை பகிஷ்கரிப்பது உரிமையில் இல்லை என்று தீர்ப்பளித்தார். மாவ்லாங்கர் கூறியதாவது.

"நாம் கடந்த பொதுத் தேர்தல்களை முடிந்து இப்பொழுது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்தான் ஆகின்றன. நம்முடையது போன்று ஒரு பரந்த மட்டில் மக்களிடையே ஒரு குறிப்பிட்ட போக்கு அதிகரிக்கிறதா அல்லது குறைகிறதா என்று இவ்வளவு விரைவில் அறிய முடியாது. சம்பிரதாயங்கள் அல்லது பாராளுமன்ற முறைகள் ஒரே நாளில் ஏற்படுவதில்லை. அவைகளுக்கு ஆண்டாண்டு காலங்களும் சில சமயங்களில் நூற்றாண்டு களும் பிடிக்கின்றன.

நம் நாட்டில் ஒரு காலத்தில் சில மக்கள் நம் கொடியை அங்கீகரிக்க மறுத்தனர். அது இன்னும் நமது நினைவில் பசுமையாக உள்ளது.

ஆனால் இப்பொழுது நமது தேசியக் கொடியின் தேசியத் தன்மையை யாரும் மறுக்கவில்லை. அது போலவே நாட்டின் தலைவரை எல்லாக் கட்சிகளும் மதிக்கக் கூடிய காலம் விரைவிலேயே நாம் எதிர்பார்ப்பதை விட சீக்கிரமே வரக்கூடும்."

மேற்கண்ட கருத்துக்கள் என் இதயத்திலும் பிரதி பலிக்கின்றன. நான் கனம் உறுப்பினர்களை கேட்டுக் கொள்வதெல்லாம் அவரவர்களுடைய அரசியல் சார்புகள்

எதுவாக இருந்தாலும் இச்சட்டப் பேரவையில் ஓர் உறுப்பினராக விளங்கும் ஆளுநருக்கு உரிய மரியாதையைக் காட்டி, பாராளுமன்ற சம்பிரதாயத்தைத் தீவிரமாக கடை பிடித்து இச்சட்டப்பேரவை எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்பதுதான் என்று டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் கூறினார்.

இந்த உரிமைப்பிரச்சனையின் அடிப்படையையும், தலைவர்கள் பேசிய பேச்சின் முழு பகுதியையும் அவர்களுக்கு அண்ணா அளித்த பதிலுரையையும் படித்துப் பார்க்கும் எவர்க்கும் அண்ணா அவர்கள் தம் கட்சிக் கொள்கையினை சட்டமன்றத்தில் ஒரு பிரச்சனையாக எழுப்புவதோடு தம் கொள்கைக்கான காரணங்களை தெளிவாக அவை முன் எடுத்து வைக்கவும் வாய்ப்பாக ஏற்படுத்திக் கொண்டார் என்பது தெளிவாகும். தம் உரையில் தம் வாதத் திறமைகளை சாதுர்யமாக காட்டியதோடல்லாமல் எவருடைய மனமும் புண்படா வண்ணம் அமைத்துக் கொண்டதும் அவருடைய தன்னியல் பேயாகும். அண்ணாவின் நடவடிக்கையில் தவறில்லை என வழங்கிய தீர்ப்புரை முத்தாரமாக அமைந்த அவர் உரைக்கும் தங்கப் பதக்கமாக அமைந்தது எனலாம்.

அன்று அண்ணா எழுப்பிய பிரச்சனையின் காரணங்கள் இன்றும் இருந்தாலும், சில வருடங்களாக ஆளுநர் பதவி நிரப்பப்படும் போது அம் மாநில முதலமைச்சர்கள் ஒப்புதல் பெற்று நியமனம் செய்யப் படுவது ஆறுதல் தரும் செய்தியாகும். இது அவர் புகழுக்கு பெருமை சேர்ப்பது அல்லவா?

விலைவாசி உயர்வை கண்டித்து போராட்டம் நடத்தியதன் விளைவாக அண்ணா சிறையிலடைக்கப் பட்டார். அவர் 24.10.62 அன்று விடுதலையானவுடன் ஓர் அறிக்கையில்

"சீனர்களின் ஆக்கிரமிப்பை ஒரு போதும் சகித்துக் கொண்டிருக்கமாட்டோம். ஆக்ரமிப்பில் ஈடுபட்டிருக்கும்

சீனர்களின் காலடி திருப்பி எடுக்கப்படும் வரை திமுக நேருவின் கரத்தை வலுப்படுத்தும். அன்று நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையையொட்டி திராவிட முன்னேற்றக் கழகம் போக்கிற்கேற்ப 28.1.63 அன்று தமிழக சட்டமன்றத்தில் உரையாற்றும் போது திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற கட்சி கலந்து கொள்ளும் என்று முடிவெடுக்கப்பட்டது.

அம்முடிவிற்கிணங்க திமுக 1963 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற ஆளுநர் நிகழ்த்தும் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொண்டு கொண்டது. 1967 ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சரானவுடன் கவர்னர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வரலாமா என்ற வாதத்தினை காங்கிரஸ் சார்பில் எடுத்து வைக்கப்பட்டது. அதற்கு அண்ணா அழகாக ஆணித்தரமாக தமது மறுமொழியை அளித்தார்.

"கவர்னர் உரையைப் பகிஷ்கரித்ததற்கு காரணங்கள் இரண்டு. ஒன்று கவர்னர் பதவியே தேவையற்றது. இது ஒரு காரணம். இன்னொன்று திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டிருந்த தால் வடநாட்டில் இருந்து வரும் கவர்னரை தமிழகம் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. இந்த இரண்டு காரணங்களால் அப்போது பகிஷ்கரித்தோம். கவர்னர் உரையை பகிஷ்கரித்தோமே தவிர அந்த உரையின் மீது நடந்த விவாதத்திலே நாங்கள் கலந்து கொள்ளத் தவறவில்லை. நீங்கள் எந்தக் காரணத்திற்காக வேண்டு மானாலும் இருக்கட்டும். கவர்னரே வேண்டாமென்று சொன்னீர்கள் அல்லவா?

ஆட்டுக்குக் கழுத்திலே இரண்டு தொங்குகிறதே அது போல இந்த கவர்னர் பதவி என்று சொன்னவர்கள் அல்லவா? என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். ஆனால் அது இந்த அவையிலே பேசி நிறைவேற்றப்பட வேண்டியதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம்

மேடைகளிலும் கூட்டங்களிலும் கொடுத்துள்ள வாக்குறுதி களை இந்த கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும். இந்த சபை மூலமாக நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகள் சில. இந்த சபையால் உங்கள் ஒத்துழைப்போடு நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில. மத்திய சர்க்கார் ஒத்துழைப்புக் கொடுத்தாலும் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தித் தான் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகள் சில, கட்சி வைத்துக்கொண்டிருக்கிற கருத்துக்களை எதை எதை எந்த முறையில் பேசி அதற்கான நடவடிக்கை எடுத்து, அதற்கு தீர்வு காணவேண்டுமோ அதனை மக்களுக்கு அறிவிக்கத் தான் இவ்வளவும் சொல்வதே தவிர, கவர்னரை ஒழிப்பதாகச் சொன்னீர்களே, இந்த உரையில் இல்லையே என்று சொன்னால், இது கவர்னர் உரை: கவர்னரே வந்து உரையாற்றும் போது "கவர்னர் பதவி ஒழிக்கப்படும்! என்று கவர்னரேவா அதைப் படிப்பார்! இதிலே இருக்காது. எங்கள் நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், பாராளுமன்றத்திலே இருக்கிறார்களே, அவர்கள் அங்கே பேசுவார்கள் கவர்னர் தேவையில்லை என்று இங்கே என்ன சொல்லுவோம் என்றால், கவர்னர் உரையிலே இன்னின்ன இருக்க வேண்டும் என்று சொல்லுவோம். கவர்னரே வேண்டாம் என்று சொன்னவர்கள், கவர்னர் உரையை படிக்கலாமா என்று கேட்பது வேறு எதுவும் சொல்வதற்கு இல்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு இது புளியங்கிளையாக அகப்பட்டது என்றால் இதிலே வாதமும் இல்லை, அரசியலும் இல்லை. ஆனால் அவர்களுக்கு (காங்கிரஸ் காரர்களுக்கு) எங்களைப் போல கவர்னர் பதவி வேண்டாம் என்ற எண்ணம் இருக்குமானால், நீங்கள் அதிகாரமற்றத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்று வதாக இருந்தால் அதை நான் மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைக்க தயாராக இருக்கிறேன்.

கவர்னரைப் பற்றி இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளுக்கு மிடையே பலவிதமான கருத்துக்கள் வந்திருக்கின்றன. அந்த

கருத்துக்களிலே சில நல்ல கருத்துக்களை அன்றைய தினம் உறுப்பினர் ம.பொ. சிவஞானம் அவர்கள் சொன்னார்கள். ஏன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கக் கூடாது. அவர்கள் வெளியிடத்தில் இருந்து தான் வர வேண்டுமா? அல்லது தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த தாய் மொழியை அறியாத ஒருவரை நாம் இங்கு அமர வைத்துக் கொண்டிருப்பது சிக்கல்களை உண்டாக்காதா? என்றெல்லாம் கேட்டார்கள். அப்படிப் பட்ட கண்ணோட்டத்தில் சில பேர் இன்றைய தினம் கவர்னரைப் பற்றி, தமிழகத்தில் மட்டுமல்ல, வெளி இடங்களிலும் கூட எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவரே கூட இந்தியில் தான் பேச வேண்டுமே தவிர இந்தியே பேசாத தெரியாத ஒருவர் குடியரசுத் தலைவராக வருவானேன் என்று பாராளு மன்றத்திலே கேட்கிற காலமிது. ஆகையால் இன்றைய தினம் பல்வேறு அரசியல் கட்சியினர்கள் கவர்னர் பதவி இருக்க வேண்டுமா? வேண்டாமா? இருக்க வேண்டு மென்றால் எந்த முறையில் இருக்கவேண்டும். எதற்காக இருக்கவேண்டும் என்னென்ன செய்யவேண்டும்? என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிப்பது மட்டுமல்ல, கவர்னர் பதவியே வேண்டாம் என்று முதன்முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன நேரத்தில் அது ரொம்ப பைத்தியக்காரத்தனம் என்று பேசிக் கொண்டிருந்த அரசியல் வட்டாரத்தில் ஒரு பகுதி இன்றைய தினம் அதே கண்ணோட்டத்திற்கு வந்திருப்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அறிஞர் அண்ணா எண்ணியவாறே பாராளுமன்றத்தில் முதலில் ஆங்கிலத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றிய பிறகு அவ்வுரையின் இந்தியாக்கத்தை மக்களவைத் தலைவர் வாசிப்பார்

அதே போன்று நமது மாநிலத்திலும் ஆங்கிலத்தில், ஆளுநர் உரையாற்றியவுடன் அதன் தமிழாக்கத்தை பேரவைத் தலைவர் படிப்பது நடைமுறையில் இருந்து வருகிறது.

10

நிதிநிலையறிக்கை

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" – திருக்குறள்

"பொருள் வருவாய்க்கான வழிகளை மென்மேலும் இயற்றலும், அவ்வாறு வரும் பொருளைக் திரட்டி சேர்த்தலும், சேர்த்தப் பொருள் விரயமாகாமல் காத்தலும், காத்தவற்றை குடிமக்கள் நலனுக்கு ஏற்ப வகுத்து செலவு செய்தலும் அரசனின் கடமை என வள்ளுவர் கூறினாலும், மக்களாட்சி தத்துவத்தில் இது சட்டமன்றத்தின் கடமையாகிறது.

"பட்ஜெட்" என்ற சொல் அரசியலமைப்பு சட்டத்தில் இடம்பெறவில்லை. இங்கிலாந்தின் பாராளு மன்றத்தில் வரவு செலவுத் திட்டம் பற்றிய அறிக்கையை தோல் பெட்டியொன்றில் வைத்து அந்நாட்டு நிதியமைச்சர் கள் எடுத்து செல்வது வழக்கம் – அத்தோல் பெட்டிக்குத் தான் பட்ஜெட் என்று பெயர். இப்பெயரே நாளடைவில் அதனுள் இருக்கும் அறிக்கைக்கும் பெயராக அமைந்து விட்டது. நம் நாட்டிலும் அதே பெயர் நின்று நிலவிவிட்டது.

அரசியலமைப்பு சட்டத்தின்படி சட்டமன்றத்தில் ஒப்புதல் இன்றி யாதொரு வரியும் விதிக்கப்பட முடியாது. அதே போன்று சட்டமன்றத்தின் ஒப்புதல் இன்றி யாதொரு

செலவும் அரசு செய்ய இயலாது. மேலும், அரசாங்கத்தின் வரவு செலவு ஆண்டுக்கு ஒரு முறை சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஏற்கப்படவேண்டும். ஆளுநர் நியமிக்கும் நாளில் நிதிநிலை அறிக்கை பேரவை – மேலவையில் அளிக்கப்படும். மறுநாளிலிருந்து, இதன் மீதான விவாதம் தொடங்கும். பிறகு. நிதியமைச்சர் பதிலுரையுடன் விவாதம் முடிவுறும்.

பொது விவாதம் முடிந்தவுடன் உறுப்பினர்கள் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டு கருத்துரையாற்றலாம். ஒவ்வொரு மானிய கோரிக்கையையும் உரிய அமைச்சர் மொழியும் பொழுது அம்மானிய கோரிக்கைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை அவைக்கு அளிப்பார். அப்போது உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்கு அமைச்சர் பதிலுரை வழங்குவார். பின்னர் மானிய கோரிக்கை வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும்.

அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் உழவர் பெருமக்கள் முன்னேற்றம் குறித்து நிதிநிலை அறிக்கையை அளித்து பேசிய பேச்சு ஒரு உதாரணத்திற்கு கீழே தரப்பட்டுள்ளது. எந்த அளவுக்கு அப்பிரச்சினையை அறிந்து தெரிந்து உரையாற்றினார் என்பதை அனைவரும் அறிந்துகொள்வது பாராளுமன்றவாதிகளுக்கு உறுதுணை யாக இருக்கும் என்று கருதுவதால் அதை அப்படியே தருகிறோம். அண்ணாவின் சமுதாயப் பிரச்சினையின் தாக்கத்தை இவ்வுரையில் காணலாம்.

(அ). வேளாண்மை முன்னேற்றம்

"நமது உழவர் பெருமக்கள் முற்போக்கு எண்ணம் உடையவர்கள். தூரண்டாமணி விளக்குப் போன்றவர்கள்."
–அண்ணா

வேளாண்மை உயர்வே — முதற்கடமை என அண்ணா தமது நிதிநிலை அறிக்கையினை அளித்துப் பேசினார்.

புத்துயிரும் புதுமெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு உணவுப் பொருள்களின் விலைவாசிக் குறைப்பே திறவுகோலாக அமையும் என்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாளடைவில் விலை வாசிகளின் உயர்வை குறைத்து விடலாம் என்றும், இதற்கு முன் என்றுமே இல்லா வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய வரட்சியே விலை உயர்வுக்குக் காரணம் என்றும் பேசுவது பயனற்ற வாதமாகும். உற்பத்திப் பெருக்கத்தின் வாயிலாகவே நாளா வட்டத்தில் விலைவாசி சிக்கலைத் தீர்க்கமுடியும் என்பதும் எனவே உற்பத்தி பெருக்கத்திற்கான ஏற்பாடுகளில் நமது நாட்டத்தைச் செலுத்தவேண்டும் என்பதும் நாம் அறியாதவையல்ல.

ஆனால் இந்த நீண்ட்கால திட்டங்கள் நல்ல பயனளித்து, அவை இன்றைய இடும்பைத்தீர, நிலையான தீர்வு ஒன்றை காட்டும்வரை நம்மால் பொறுத்திருக்க இயலாது. உணவுப் பண்டங்களின் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க நாம் உறுதியோடு இன்றே, இன்னே செயல்பட வேண்டும். அப்போதுதான் விலைவாசி ஏற்றத்தால் ஆற்றாது அல்லற்படும் மக்களுக்கு அவர்கள் ஏங்கித் தவிக்கும் துயர் தணிப்பு உடனடியாகக் கிட்டும். அத்துடன்

விலை ஏற்றம், செலவேற்றம் என்கிற இந்த நச்சு வட்டத்தின் உயிர்நாடியையும் தகர்த்தெரிய முடியும். தானாகவே நிலைத்துவிடும். இயல்பு வாய்ந்த இன்றைய பணவீக்க மனோசெயலை, இத்தகைய துணிச்சலான கொள்கையின் துணைகொண்டே கடக்கமுடியும்.

கொள்முதல்திட்டம் கோல் கோடியது

உணவு தானியகொள்முதலை மும்முரப்படுத்துவதன் மூலம் சட்டப்பூர்வமாகவோ, அன்றி முறைப்படியின்றியோ உணவு தானியப்பங்கீட்டுப் பொறுப்பினை அரசு ஏற்றுக் கொண்ட பகுதிகளில் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பங்கீட்டுக் கடைகளின் வாயிலாக உணவு தானியங்கள் தங்கு தடையின்றி கிடைக்கும் வகையில் கொள்முதல் மும்முரப்படுத்தபடவேண்டும் என்பதே முதல்பெரிய கொள்கை முடிவாகும். இது எளிதான செயல் அல்ல. ஏனெனில் கொள்முதலுக்கு மிகவும் ஏற்ற காலமான ஜனவரி பிப்ரவரி திங்களிலே உணவு தானிய கொள்முதல், நான் இங்கே எடுத்தியம்பிய விரும்பாத வேண்டாத பற்பல காரணங்களினால் முனைப்பாக நடைபெறவில்லை. சம்பா அறுவடை முடிந்து, நீண்ட நாட்கள் கழிந்த பின்னர், மார்ச் திங்கள் நடுவிலிருந்து, உணவு தானிய பதுக்கலையும் கள்ளக் கடத்தலையும் ஒடுக்க மும்முர நடவடிக்கைகளை மேற் கொண்டதால் நடந்துபோன நாட்களில் கழிந்து போன இழப்பினை எங்களால் மீண்டும் சரிகட்ட முடிந்து கொள்முதல் திட்டத்தை பெருமளவு வெற்றிகரமாய் முடித்து இருக்கிறோம். உழவர்களுக்கு அதிக இன்னல் இழைக்காமலும் "கோல் கோடியது" என்று சுடுமையாக குறைகளைக் கூற இடங் கொடுக்காமலும், 5 லட்சம் டன் உணவு தானியங்களை கொள்முதல் செய்ய முடிந்தது என்றால், பொதுமக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் அரசுடன் ஒத்துழைக்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

சமூகநீதி

ஆட்சி பொறுப்பிலே இன்று அமர்ந்து இருப்பவர்கள் எதிர்கட்சியிலே வீற்றிருந்த காலத்தும், நிலவரிக் கொடுமை களினின்றும் மக்களுக்கு உதவியளிக்க வேண்டிய அவசியத்தை அரசின் நாட்டத்தை ஈர்ப்பதில் முன் நின்றார்கள். இன்றைய அரசின் கொள்கை விளக்கம் குறித்து முதன்முதலாகத் தெரிவித்த கவர்னர் பேருரையிலும், சிறுநிலக் கிழார்களுக்கு பரிகாரம் அளிப்ப தற்கான படிப்படியான திட்டம் ஒன்றை உருவாக்கப் போவ்தாக நாங்கள் தெரிவித்து இருந்தோம்.

வரிகுறைப்பு முறையாயினும் வசதியளிப்பு திட்ட மாயினும் சலுகைகள் தரும் முறையாயினும் சமூகத்தில் குறைந்த வருவாய்த் துறையினரின் நலிவினைப் போக்கும் நோக்குடன் அமைத்திடுவதே சரியான சமூகநீதி என இந்த அரசு திட்டமாகக் கருதுகிறது.

அறம் – பொறுப்பு

தாங்கக்கூடிய தரத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து சமத்துவமாக இத்தகைய சலுகைகள் தந்திடுவது பொருளற்ற போக்காகும். வசதிநிலையில் உள்ளோர், நாட்டின் பொதுநலனுக்காகவும், நலிந்த வாழ்வினரின் நலனுக்காவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக் காகவும், செலவுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியை தந்துதவும் பொறுப்பை மேற்கொள்வதை 'பாரம்' என்று கருதாது 'அறம் - பொறுப்பு' என்று கருதிடவேண்டும் என்றார் அண்ணா.

நிலவரி நீக்கம் பற்றிய அதன் எல்லாக் கூறுகளையும் ஆராய்வதற்கென முந்தைய அரசு நியமித்த அறிக்கைக் கிடைக்கப் பெற்றுள்ளது. குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும். இதற்கிடையில், தற்போதைய ஏற்பாட்டின் பிணைப்பிலிருந்து மக்களில் பலருக்கு இயன்ற அளவிற்கு விலக்கு அளிக்க

வேண்டுமென்ற தனது கொள்கைக்கு இணங்க, புன்செய் எனப் பதிவாகியுள்ள அனைத்து நிலங்களுக்குமுரிய அடிப்படை, தீர்வையை 1967 ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து விட்டுவிட அரசு முடிவு செய்துள்ளது என்றார். இதனால் அரசுக்கு 1 கோடியே 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படும். இம்முடிவு காரணமாய் 1 கோடியே 40 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு வரிவிலக்குக் கிட்டும். நமது மாநிலத்தில் தனிப்பட்டா கூட்டுப்பட்டா ஆகிய இவை இரண்டும் சேர்ந்த ஏறக்குறைய 60 லட்சம் பட்டாக்களில், சுமார் 45 லட்சம் பட்டாக்களாவது புன்செய் நிலங்கள் என நாம் மதிப்பிடலாம். எனவே, அரசு மேற்கொள்கிற இம்முடிவு காரணமாக உழவர் பெருமக்களில் மிகப்பெரும் பகுதியினர் பயனடைவார்களென நம்புகிறேன். இதன் விளைவாக கரும்பு, மஞ்சள், பாக்கு போன்ற மிக ஆதாயம் தரும் வாணிபப் பயிர்களை விளைவிப்போர் உட்பட பல பெருநிலக் கிழார்களும் பயனடைவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

உற்பத்திப் பெருக்கம்

மிகுபயன்தரும் விதைகளைப் பயன்படுத்தும் நிலப் பரப்பை எவ்வளவு விரிவாக்க முடியுமோ அவ்வளவு விரிவாக்கி, உற்பத்தி அளவைப் பெருக்கவே வேளாண்மைத் திட்டத்தின் சிறப்புக் கூறாக அமையும். நமது மாநிலத்தில் 13.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் ADT 27 நெல் ரகத்தைப் பயிரிடுவதோடு CO 25 , CO 29 போன்ற நெல்ரகங்கள் போன்ற புதியரகங்கள் அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படும். மொத்தத்தில், மிகு பயன்தரும் புதிய வித்துக்களைக் கொண்டு பயிரிடும் திட்டம் 17.4 லட்சம் ஏக்கர் நிலங்களில் நிறைவேற்றப்படும்.

இப்போது நிறைவேற்றக் கூடியதை நாம் கருதும் புதியப்பயிர் முறையின்படி சுமார் 3.2 லட்சம் ஏக்கர் பரப்பில் குருவைப் பயிரும், அதையடுத்து தாளடிப் பயிரும்

வழக்கம்போல் விளைவிக்கப்படும். வழக்கமாக சம்பாப் பயிர் விளையும் 9 லட்சம் ஏக்கர் பரப்பில், 3 லட்சம் ஏக்கர் தொடர்ந்து ஒருபோக நிலமாகவே இருந்துவரும். ஏனைய 6 லட்சம் ஏக்கர் பரப்பில் ADT 27 நெற்பயிர் முதற்பயிராக விளைவிக்கப்படும். இதை அறுவடை செய்தபின்னர் ASD5, CO23 நெல் ரகங்கள், 4 லட்சம் ஏக்கர் பரப்பில் இரண்டாவது பயிராகப் பயிரிடப்படும்.

காவிரி கழிமுகத்தில் பயிர் முறையில் செய்யக் கருதியுள்ள இம்மாறுதல், இப்போது ஒருபோகம் மட்டுமே விளைவிக்கப்படும் நிலங்களில் இருபோக பயிர்களை விளைவிக்க நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் மணிமுடியாக அமைந்து நமது உணவு உற்பத்தித்துறையில் புதியதோர் ஒளித் திருப்பத்தை உண்டாக்கும்.

உயிர்தனிச் செம்மொழியால் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாகும். முதன்முதலில் தமிழ் மொழியில் அறிக்கை தயாரிக்கப்பட்டு பின்னர் அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

அண்ணாவினுடைய இந்த நிதிநிலை அறிக்கை பொது மக்களாலும் பொருளாதார மேதைகளாலும் பெரிதும் வரவேற்கப்பட்டன.

கறவை மாடும் – குறைக்கும் அல்சேஷனும்

அண்ணா கடன் வாங்குவது பற்றி கூறியதாவது:

"கடன் வாங்கவேண்டும் என்பதற்கு எதிர்கட்சித் தலைவர், லெனின் அவர்களை சான்றுக்கு அழைத்தார்கள். லெனினை இவ்வளவு சாதாரணமான விஷயத்திற்கா சான்றுக்கு அழைக்கவேண்டும். அவரை மனதிற்கு சிக்கல் ஏற்படும் வேறுபல பிரச்சினைகளுக்கு சான்றுக்கு அழைக்கலாம். ஆகவே கடன் வாங்கலாமா கூடாதா என்பதல்ல கேள்வி.

ஒரு 500 ரூபாய் என்னுடைய நண்பர் கருத்திருமனிடத்தில் கடன் வாங்கி, நான் ஒருபசுமாடு வாங்கி, பால் கறந்து நானும் சாப்பிட்டு மற்றவர்களுக்கும் விற்று கடனை அடைத்தால், நண்பர் கருத்திருமனிடம் வாங்கிய கடனை கொடுக்கின்ற வாய்ப்பு கிடைக்கிறது. அப்படி வாங்கப்படும் கடன் முறையாகப்பெறும்கடன்.

அதற்குபதிலாக எனக்கு வேண்டியவர் கருத்திருமன் என்று ஒரு 500 ரூபாயைக் கடனாகக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி ஒரு அல்சேஷன் நாய்க்குட்டியை வாங்கினேன் என்றால், அது வாங்கக் கூடிய கடனல்ல. அந்தக்கடனை வாங்கினால், திருப்பிக் கொடுக்கமுடியாது. எனக்கு பதில் சொல்லும் வாய்ப்பு இருந்தால், காங்கிரஸ் உறுப்பினர் சிலர் சொல்லலாம். அல்சேஷன் நாய், குட்டி போடாதா, விற்கக் கூடாதா, அதிலிருந்துலாபம் வராதா என்று சொல்லலாம். அவர்கள் அப்படியெல்லாம் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். கேட்பார்கள் என்றால் அதை அல்சேஷன் ஆண்நாய்க்குட்டி என்று சொல்லி விடலாம் என்று கருதுகிறேன்.

ஆக வாங்கப்படும் கடன், பயன்படுத்தப்படும் முறையில், நாம் அதிலிருந்து பெரும் ஆதாயத்தைப் பொறுத்து, போட்டப் பணத்தைத் திருப்பி எடுக்க வேண்டும் என்ற அந்த முறையில் செலவழிக்கப் பட்டதா என்பதைப் பார்த்துத்தான் கடனின் தன்மையை தீர்மானிக்க வேண்டும். கடன்காரர் கடன்காரர் என்றால் அதற்குக்காக கடனே வாங்கக்கூடாது என்று சொல்லுகிறோம் என்று அர்த்தம் இல்லை.

அறிக்கை மீதான விவாதத்தில் அண்ணா பதலளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:

கட்டபொம்மன் கேட்டதை அண்ணா நிறைவேற்றினார்

புஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கிவிட்டு நஞ்சை நிலத்திற்கு வரியை நீக்க வில்லையே என்று சொன்னார்கள்.

நஞ்சை நிலத்திற்கும் வரியை நீக்குவதற்கும் தீவிரமான ஆலோசனையில் இருக்கிறோம் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன். தெரிவித்துக் கொண்டபிறகும் சொல்கிறேன் — எப்படி சர்க்கார் செய்கிற வசதிகள் முதலிலே ஏழைக்கு செய்து கொடுத்துவிட்டு பிறகு கொஞ்சம் வசதியுள்ளவர்களுக்குப் போக வேண்டுமோ அதை போல்தான் நிலத்திலே கூட புஞ்சை என்பது ஏழை. நஞ்சை என்பது கொஞ்சம் வசதியுள்ளது, ஏழைநிலத்திற்கு முதலிலே வரியை நீக்கி விட்டோம். அது கட்டபொம்மன் காலத்திலிருந்து கேட்கப்பட்டுவருகின்ற ஒன்று. 'வானம் பொழியுது', பூமிவிளையுது கும்பினுக்கு ஏன் கப்பம்? என்று கட்டபொம்மன் காலத்திலேயே கேட்கப்பட்டது. அதை இப்போது செய்து இருக்கிறோம்.

கருத்திருமன் பொருளாதாரம்

விவசாயி வருமான வரி கணக்கு வைப்பதிலுள்ள கஷ்டங்களைப் பத்தியெல்லாம் நண்பர்கள் சொன்னார்கள். குறிப்பாக எதிர் கட்சித்தலைவர் கருத்திருமன் அவர்கள் வெகுவிளக்கமாக சொன்னார்கள். அவர் எப்போது பேசினாலும் உற்றுக்கேட்டால் விவசாயிகளுக்காகத்தான் பேசுவார். கட்சி பாகுபாடு என்பது கூட அதிலேஇல்லை. அவரைப் பற்றி நானும் கனம் சுப்பிரமணியம் அவர்களும் வேடிக்கையாகப் பேசிக்கொள்வது வாடிக்கை. "இது கருத்திருமனின் பொருளாதாரம் என்று சொல்லுவோம்".

விவசாயம் செய்பவர்களுக்கு உற்சாகம் அளித்தால் தான் விவசாயம் வளரும். விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமோ, அதை அளிக்க வேண்டும் என்பதையும் ஏத்துக் கொள்கிறேன். ஆனால் கணக்கே வைக்கமுடியாது என்று சொல்லுவது 10 வருஷத்திற்கு முன்னாலே வேண்டுமானால் முடியாது இருக்கலாம். இப்போது கொஞ்சம் வளர்ந்து இருக்கிறோம். இப்போது இருக்கும் சிரமம்கூட அடுத்து ஏற்படாமல் இருக்கலாம். ஒன்றை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். படித்தவர்கள்

வேலைக்குப் போவார்கள். படிக்காதவர்கள் தான் விவசாயம் செய்வார்கள் என்பதை மாற்ற வேண்டும். படித்தவர் பண்ணைக்குச் செல்லும் காலமிது. மதிப்பிற்குரிய நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் பி.எஸ்.ஸி படித்தவர்கள். அவர்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, உத்தியோகத்தை நாடிச் செல்லவில்லை.

பல முற்போக்கான விவசாயிகள் ஒவ்வொரு கிராமத்திலும் நாலைந்து பேர்களாவது உண்டாகிக் கொண்டு வருகிறார்கள். 15 வருடங்களுக்குப்பிறகு கிராமப்புறப் பண்ணைகளுக்குப் போனால் எம்.ஏ. படித்தவர்களும், பி.ஏ. படித்தவர்களும் டிராக்டர்களை ஓட்டிக் கொண்டிருப்பதைப் பார்ப்போம். அப்போதுதான் நம்முடைய நாட்டுக்கு நல்ல காலம் என்று கருதலாம்.

மனமறிந்து நடக்கும் மாண்பு

அப்படிப்பட்ட ஒருவளர்ச்சி விவசாயத்திற்கு இயற்கையாக ஏற்படும் போது கணக்கு எழுதமுடியாது என்பதை அவ்வளவாக ஒத்துக்கொள்வதற்கில்லை. என்றாலும் எதிர் கட்சித்தலைவர் மட்டுமல்லாமல் அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வெகு உருக்கத்தோடு சொன்னார்கள் திரு மாரிமுத்து அவர்களும் சொன்னார்கள். இவர்கள் எல்லாம் என் மனதை வெகுவாக மாற்றிவிட்டார்கள். என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த கம்பவுண்டிங் என்பதை வைத்துக் கொண்டு அதிலே எதிர்பார்க்கின்ற பலனையும் பெறுவதற்கு மாற்று என்னவென்று எதிர்கட்சித்தலைவர் அவர்களைக் கேட்டேன். அவர் விவசாயிகளைக் கலந்து சொல்வதாகச் சொன்னார்கள். அதற்கானமாற்றாக நான் கருதுவது, 12½ ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடிய அந்த அளவைக் குறைத்துப் போடப்பட்டிருக்கும் 5 பைசாவை 15

பைசாவாக்கலாம் என்று உறுப்பினர்கள் பேசினார்கள். அந்த அளவுக்கு வேண்டாம். அந்த விகிதத்தை இரண்டு மடங்கு உயர்த்தி 12½ ஏக்கர் என்பதை ஐந்து ஏக்கர் என்று குறைத்து கம்பவுண்டிங் வைத்துக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலவையில் இதே கம்பவுண்டிங்கு முறை குறித்து அண்ணா பேசுகையில் "பேர்வையிலும் இதை அறிவித்தேன். இந்த கம்பவுண்டிங் முறையை எப்படி கணக்கிடுவது என்பதை இங்கு கனம் பாலசுப்பிரமணிய ஐயர் கூறியதை கருத்தில் கொண்டுதான் விவசாய வருமானவரி கணக்கிடப்படும் என்பதாகக் கூறினார். பேரவையில் பொதுவாகக் கருத்துத் தெரிவித்தாலும் மேலவை உறுப்பினர்கள் உள்ளார்த்தமாக பேசுவது இதிலிருந்து விளங்குகிறது.

இதிலிருந்து நீங்கள் என்னைப்பற்றி மூன்று கருத்துக் களைக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். விவசாயிகள் இடத்தில் அக்கறை இருக்கிறது என்பது ஒன்று. அதே நேரத்திலே சர்க்காருடைய வருமானம் குறையக் கூடாது என்பதிலே உள்ள அக்கறை இரண்டாவது. மூன்றாவது உங்களை எவ்வளவு மதிக்கிறேன் என்பதாகும்.

இதிலே இருந்து நாம் அறிவது அண்ணாவின் உரைக்கு முன்னுரையோ முடிவுரையோ தேவையில்லை. இரண்டுரையும் அவருரையிலேயே உள்ளன என்பதாகும்.

(ஆ). தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்

1958ஆம் ஆண்டு அவர் பேரவை உறுப்பினராக விளங்கிய நேரத்தில் ஹரிஜன முன்னேற்றத்திற்காக கோரப்பட்ட மானியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு வெட்டுத் தீர்மானத்தின் மீது அண்ணாவின் உரை:

ஹரிஜன முன்னேற்றம் என்பது தேசிய பிரச்சினை என்கிற விஷயத்தை ... ஹரிஜனங்கள் என்கிற தாழ்த்தப் பட்ட மக்கள். ஒடுக்கப்பட்ட பெருங்குடி மக்கள். யாரால் தாழ்த்தப்பட்டார்கள் யாரால் ஒடுக்கப்பட்டார்கள் அவர்களைத் தாழ்த்தி ஒடுக்கினவர்கள் யார் என்று அலசிப் பார்க்கிற சமயத்தில் ஒவ்வொரு காலத்தில் நாம் எல்லோருமே அந்தப் பெருங்குற்றத்தைப் புரிந்தவர்களாக இருக்கிறோம் என்கிற மனசாட்சி உறுத்தல் எல்லா சமுகத்தார்க்கும் இருக்கும். ஆகவே. இந்த பெருங் குற்றத்திற்கு அநீதிக்கு கழுவாய்த் தேடுகிற வகையில், பரிகாரம் தேடுகிற வகையில் எல்லாச் சமுகத்தினருக்கும் தம்து சொந்தப் பிரச்சினையாக ஹரிஜன முன்னேற்றப் பிரச்சினையை கவனித்தாக வேண்டும்.

அந்த சமுதாயத்தை திருத்தி அமைப்பதிலே வளர்ச்சி அடையச் செய்வதிலே நாம் இன்னும் என்னென்ன புதுக் காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று கணக்கு எடுத்துக் கொள்வதே உண்மையில் பெருமைக்கு உரியதாகும். அப்படிப் பார்க்கிற காலத்தில், நாட்டுக்குச் சுதந்திரம் வந்து 10 ஆண்டுகள் கழிந்துவிட்ட பிறகும் அவர்களுடைய முன்னேற்றத்தில் பெருமைப்படத்தக்க மாறுதல் இல்லை என்பதை எல்லாக் கட்சியினரும் உணர்வார்கள். ஓரளவு முன்னேற்றம் உண்டு. இந்தப்

பேரவையில் கூட அந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள்... நல்ல ஆர்வமுடைய இளைஞர்கள் உரிமைக் குரலை எழுப்பக் கூடியவர்கள், உள்ளுணர்ச்சி நிறைந்தவர்கள் ஏராளமாக இருப்பதும் தங்கள் சமூக உரிமைகளை காப்பாற்றிக் கொள்ள அவ்வப்போது விழிப்போடு செயலாற்றுவதும் நாம் செலவழிக்கும் ஒரு கோடி, நாட்டுக்கு அளிப்பதை விட அதிகமாக நல்ல பலன் அளித்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

ஹரிஜனம் – பிறஜனம் மாறவேண்டும்

இந்த தலைமுறைதான் கடைசி ஹரிஜன தலைமுறை. ஹரிஜனம் பிறஜனம் என்று இருக்கின்ற சமுதாய அமைப்பை இந்த தலைமுறையோடு விட்டு விடுவதற்கு ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கையை உண்மையிலே எடுத்தாலொழிய. உண்மையில் தனித் தொகுதி போய் விட்டால், தனித் தொகுதி கைவிடப்பட்ட பிறகும் இதனை மக்கள் பொதுத்தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு வருவார்களா என்பது ஐயுருவதற்கு உரியதுதான். இதை எடுத்துச் சொல்ல ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் தங்கள் காலத்தில் செய்யப்பட்ட காரியங்களை எடுத்து விளக்கும் நேரத்தில் பலருக்கு வருத்தமாக இருந்தது. ஆனால் ஒன்றுதான் சொல்லிக் கொள்வேன். இந்த காங்கிரஸ் சர்க்கார் ..... காங்கிரஸ் ஆட்சி ... ஏற்பட்ட பிறகுதான் ஹரி ஜனங்களைப் பற்றி கவனிக்க ஆரம்பித்தார்கள் என்று எடுத்துச் சொல்வது நம்முடைய மாநிலத்தின் அரசியல் வரலாற்றை கூர்ந்து பார்க்காத குறையே என்று உணருகிறேன்.

நீதிக் கட்சியின் சாதனை

இந்த சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டும் என்ற கருத்து 1919லிருந்தே சர்க்கார் அளவுக்கு வந்து அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த முயற்சி எங்கே? இன்றைய தினம் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகள் எங்கே

என்று ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் மலைக்கும் மடுவுக்குமாக வித்தியாசம் இருப்பதை நான் அறிகிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று குறிப்பிட்டு கேட்டிருக்கிற நேரத்தில். ஹரிஜனநலனுக்கு செலவிட என்று கேட்பதைக் காட்டிலும் ஹரிஜனங்களினுடைய நலனுக்காக இன்னின்ன காரியங்களைச் செய்து இருக்கிறோம் செய்யப் போகிறோம் என்பதாக ஆராய்ந்து அலசிக்காட்டி இருக்கலாம். ஹரிஜனங்கள் பெரும் பெரும் தொழில்களிலும் உயர்ந்த உத்தியோகங்களிலும் இருப்பதாகக் காட்டுகின்ற நேரத்திலே காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட நாட்களுக்கு காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா என்று காங்கிரஸ்காரர்களே ஐயுற்றுக் கொண்டிருந்த நீண்ட காலத்திற்கு முன்பே காங்கிரஸ் கட்சி நாட்டைப் மீட்குமா என்று அரசியல் உலகத்தில் ஐயப்பாடு இருக்குமோ இதே மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி வகுப்பைச் சார்ந்த எம். சி. ராஜா மந்திரியாகவும். சிவராஜ் என்ற பெருங்குடி மகன் சட்டக்கல்லூரி பேராசியராகவும் சிவஷண்முகம் வேறு துறையில் நல்ல திறமை பெற்றவராகவும், அகில இந்தியாவுக்கும் - அகில இந்தியா என்ன... உலகம் முழுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அமரராக டாக்டர் அம்பேத்கார் விளங்கி இருப்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

ஹரிஜன பிரச்சனையை கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவருடைய துணையை அவர்கள் நாட வேண்டியிருக்கிறது. ஆங்கில ஆட்சி வந்தவுடன் தான் ஹரிஜனமக்கள் முதன் முதலில் நாகரிகமாக நடத்தப்பட்டார்கள். என்பதை அக்காலத்தில் வெளிவந்த இலக்கியத்தைப் பார்த்தால் தெரியும். அவர்கள் முதன் முதலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தொட்டார்கள். அவர்கள் தொட்டுக் கொடுத்த பண்டங்களை

உண்டார்கள். அதன் மூலமாக அந்த சமூகத்தைப் பிடித்திருந்த கஷ்டம் அந்த காலத்தில் நீங்க வழி ஏற்பட்டது. ஓரளவுக்கு மதிப்பு கிடைத்தது. அதற்கு பிற்பாடு வெள்ளைக்கார ஆட்சியில்தான் நான் முன்பு படித்து காட்டியபடி 1919ல் ஏற்பட்ட லேபர் இலாகாவின் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்குப் பிற்பாடு ஜஸ்டிஸ் ஆட்சி காலத்தில் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சபா நாயகர் மூலமாக இந்த சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த எங்கள் பெருந்தலைவர்களில் ஒருவரான சௌந்திர பாண்டியன் அவர்கள் ஆதிதிராவிடரை பஸ்ஸில் ஏற்றக் கூடாது என்ற கொடிய சட்டத்தை நீக்கி, அவர்களை ஏற்றாவிட்டால் மோட்டார்களுக்கு லைசென்ஸ் தரப்படமாட்டாது என்று ஒரு சட்டத்தை வகுத்தார்கள். அந்தக் காலம் எப்படிப்பட்டது? அந்த காலத்தில் போடப்பட்ட சட்டம் எங்கே? என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரச் சொல்கிறேனே தவிர நாங்கள் ஒன்றும் புதிதாகச் செய்து விட்டோம் எனப் பெருமையடித்துக் கொள்ளச் சொல்லவில்லை.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சரித்திர வரலாறு நினைவுக்கு வருகிறது. பேரரசன் பிரெடெரிக் மக்களுக்குத் தேவையான் நல்ல காரியங்களை செய்து கொண்டு வந்தான் பெருந் தொகையை செலவிட்டான். மக்களோ வறுமையிலே வாடி இருந்தார்கள். ஒரு பெரும் சபை கூடி இருந்த நேரத்தில் பல பிரபுக்கள் வீற்றிருந்த அந்த அவையிலே "நான் ஏராளமான தொகையை செல விடுகிறேனே! ஆனால் மக்கள் வாட்டத்தோடும் வறுமை யோடும் இருக்கிறார்களே! அதன் காரணம் என்ன? என்று பிரடெரிக் பெருமகன் வினவ பிரபுக்களில் ஒருவர் முதியவர் அதற்கு பதில் நான் அளிக்கிறேன் மன்னா? என்று சொல்லி தன் தட்டில் இருந்த பனிக்கட்டி ஒன்றை

எடுத்து இதை மன்னரிடம் அனுப்புங்கள் என பக்கத்தில் இருந்த ஒரு பிரபுவிடம் கொடுக்க, இப்படியாக அந்த பனிக்கட்டி பிரபுக்களின் கைபட்டு பட்டு அரசன் கைக்கு போய் சேர்ந்த காலத்தில் இரண்டு சொட்டு தண்ணீர் தான் மிச்சமாய் இருந்தது. இதுதான் ராஜரீதி மன்னர் என்று முதியவர் சொன்னதான வரலாற்று கதை நினைவுக்கு வருகிறது. அக்கதைபோல் இன்றைக்கு ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்காக ஒரு கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள் என்று சொன்னாலும் அந்த தொகை பிரபுக்களின் கைபட்டுபட்டு சேரிக்கு போகிற நேரத்தில் இரண்டு சொட்டு தண்ணீராக மாறி விடுகிறது எ(ன்று எண்ணுகிறேன். ஆகவே, உண்மையிலையே நம்மால் எ()க்கப்படுகின்ற இந்தத் தொகை எப்படி செலவழிக்கப் படுகிறது என்பதிலே மிக மிக கண்காணிப்பு தேவை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(இ). மாவட்ட நிர்வாகம்

சோழமன்னர்களின் நிர்வாகமே இன்றைய மாவட்ட நிர்வாகம்

மக்களுக்கு நல்ல பல பலன் எப்படி கிடைக்கும் ஆட்சியில் உள்ளவர்கள் எப்படி திட்டம் தீட்டி மக்களுக்குப் போய்ச் சேர வழிவகை செய்யவேண்டும் என்று கூறி கிராமங்கள் வளர்ந்தால் தான் நாடு சிறக்கும் என்று அண்ணா, மாவட்ட நிர்வாகத்திற்கான மானியகோரிக்கை விவாதத்தின் மீது பதிலளிக்கையில் (12-7-1967 அன்று) கூறியதாவது.

"உறுப்பினர்கள் எல்லாம் ஒரு முக்கியமான கருத்தைப் பற்றிக் கூறும்போது "எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் — யார் ஆட்சியில் இருந்தாலும் — மக்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்றால் கிராமத்தின் அடித்தளத்திலுள்ள நிர்வாகம் நல்ல முறையில் இருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். பொதுமக்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுத்தால்தான் இந்த சர்க்காருடைய திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்படும். சர்க்காருக்கும் நல்ல பெயர் கிடைக்கும் எப்படி மனித உடலில் நரம்புகள் ரத்தக்குழாய்கள் சரியான முறையில் இருந்தால்தான், அந்த மனித உடல் செய்ய வேண்டிய காரியங்களை செவ்வனே செய்ய முடியுமோ அதுபோல கிராமப்புறங்கள் — பிர்க்காக்கள் — தாலுக்காக்கள் மாவட்டங்கள் என்ற வரிசைக் கிரமமான முறையில் அமைந்திருக்கின்ற மாவட்ட நிர்வாகம், ரத்தக் குழாய்கள் நரம்புகளைப் போல சரியான முறையில் இயங்குவதற்கு வழி கண்டறிய வேண்டும். மாவட்ட நிர்வாகம் சரியான முறையில் இயங்கினால்

ஒழிய, சர்க்கார் சில திட்டங்களைப் போடுவதால் மட்டும் பலன் கிடைத்துவிட முடியாது.

கனம் உறுப்பினர்கள் சொன்னவற்றிலே ஒரு கருத்து வேறுபாடு எனக்குண்டு. கிராமங்கள், பிர்காக்கள், தாலுக் காக்கள், மாவட்டங்கள் என்று இருக்கிற இந்த அமைப்பு முறையே வெள்ளைக்காரன் ஏற்படுத்திவிட்டுப் போனது. ஆகையினால் இன்றைய தினம் சரியாக நடைபெறாது, அதை நாம் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்று சொல்வது உண்மையில்லை. இந்தியாவைப் பொறுத்த வரையில் தமிழகத்தை எடுத்துக்கொண்டால் சோழமன்னர்களால் அமைக்கப்பட்டிருந்த அமைப்புதான் இப்பொழுதும் ஒருவகையிலே அமலில் இருப்பதாக நாம் கருதிக் கொள்ள வேண்டும்.

கழனிவாரியம் – தோட்டவாரியம்

சோழமன்னர்கள் நாட்டின் நிர்வாகத்திற்கு அடிப்படையாக பல ஊர்களை அமைத்துக்கொண்டு அந்த ஊர்களையெல்லாம் ஒருவாறு இணைத்து கூற்றங்களை அமைத்தார்கள். கோட்டங்களை ஒன்று படுத்தி பல மண்டலங்களை ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட மண்டலங்களையெல்லாம் இணைத்துத்தான் நாடு என்று அமைத்து நிர்வாகத்தை நடத்தினார்கள். அதனாலேதான் தமிழகத்திலே தமிழ் மன்னர்களுடைய ஆட்சி பொதுவாக சிறப்புடையதாக இருந்தாலும் சோழ மன்னர்களுடைய ஆட்சியின் சிறப்பு உடையதாக இருந்தது என்று கூறப் படுகிறது. அவர்கள் நிர்வாக வசதிகளுக்கு ஏற்ற முறையில் பல்வேறு கட்டங்களாகப் பிரித்து ஒரு கட்டத்திற்கும் இன்னொரு கட்டத்திற்கும் இணைப்பு ஏற்படுத்தி, அந்த இணைப்பு ஒழுங்காக இருக்கும்படி பார்த்துக் கொண்ட தால் அவர்களுடைய ஆட்சி சிறந்து விளங்கியது என்று வரலாற்று ஆசிரியர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். நிர்வாகக் கோட்டங்களைப் பலவகையாகப் பிரித்தது

மட்டுமல்ல. பல்வேறு காரியங்களைச் செய்வதற்காக பல வாரியங்கள் அல்லது குழுக்கள் ஏற்படுத்தி இருந்தார்கள்.

கழனிவாரியம், தோட்டவாரியம், நீர்வாரியம், கலிங்கு வாரியம், பொன்வாரியம், கண்க்குவாரியம் என்ற வகையிலே பலவாரியங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இரிகேஷன், ஹைவேஸ் என்று இன்றைய தினம் சொல்லுகிறபொழுது வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டு வரப்பட்டது என்று எண்ணிக் கொண்டிருக் கிறோம். சோழ மன்னர்கள் காலத்திலேயே ஒவ்வொன் றிற்கும் ஒவ்வொரு குழு, வாரியம் என்றெல்லாம் இருந்தன. அதேவிதமான அமைப்புக்கள் இன்றைய தினம் இருந்தாலும் அன்றைய தினம் இருந்த உயிர்ச்சக்தி இன்றைய தினம் இல்லை. அந்த உயிர்ச்சக்தி இன்றைய தினம் இல்லாததற்குக் காரணம், அன்றைய தினம் ஒரு கிராமத்திலே கிராமமக்கள் நிர்வாகத்திலே காட்டிவந்த அக்கறை இன்றைய தினம் கிராமத்திலே காட்டப் படுவதில்லை.

நண்பர் திரு கருத்திருமகன் அவர்களுக்குத் தெரியும். இருபது முப்பது வருடத்திற்கு முன்னாலே எங்கேயாவது ஒருமதகு பழுதாகி விட்டதென்றால் கலெக்டர் போக வேண்டுமென்றோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் செல்ல வேண்டுமென்றோ இல்லாமல், உறுப்பினர்கள் செல்ல வேண்டுமென்றோ இல்லாமல், அன்றைய தினம் கிராமத்து மக்களே குடிமராமத்து வேலைகளை எல்லோரும் கூடி செய்தார்கள். எதற்கும் சர்க்காருடைய மானியங்கள் சர்க்காருடைய உதவிகள், கடன்கள் இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் எல்லாக் காரியங்களும் நடப்பது என்ற நிலை இன்று இருப்பதுபோல் அன்று இருந்தது இல்லை. ஒரு மதகு சீர்படுத்தப்பட வேண்டு மென்றால், அதை யார் வந்து பார்ப்பது என்ற

நிலையில்தான் இன்றைய தினம் போக்கு இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் கிராமமக்கள் அக்கறைக் காட்ட வேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டவேண்டுமென்று உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பண்டைய தமிழகத்தின் அரசியல் முறையை மிக அழகாக விவரித்து வெள்ளையர் காலத்தில் அதன் தாக்கம், தற்போது உள்ள நிலையை படம் பிடித்து காட்டுகிறார். இதுதான் அண்ணாவின் சிறப்பு என்பதாகும்.

(ஈ). கல்வி முன்னேற்றம்

தரம் – தகுதி

கல்வி மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு (25.3.67) அன்று உரையாற்றுகையில் கல்வியின் தரம், மாணவர் தகுதி என்பது பற்றி ஆற்றிய உரை அவர் பிரச்சினைகளை எவ்வாறு கையாளுகின்றார் என்பதற்கு உதாரணமாக விளங்குகின்றன. இங்கும் அவர் 'லாஸ்கியை' வேறொரு கோணத்தில் உபயோகப்படுத்திக் கொள்கிறார்.

இவைகளை உற்றுக் கேட்டபொழுது உள்ளத்தில் ஒரு நெருடல் ஏற்பட்டது. தரம் தகுதி இரண்டு வார்த்தைகளைக் கொண்டே அன்றைய கல்வி மானியத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசினார் என்றால் அவரது பேச்சுத் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அது வருமாறு:

அரசாங்கம் ஏற்பட்டது மனித சமுதாய நலனுக்காகவே. மக்கள் சம்பிரதாயம், அவர்களின் ஒத்துழைப்பு இவைகளின் மேலேயே கட்டப்பட்டது அரசாங்கம். மக்களுடைய அறிவைப் பெருக்கி அவர்களை நல்ல வழியில் நடக்கச் செய்து அதன் மூலம் சமூக நலனை அபிவிருத்தி செய்யவே அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது என்கின்றார் ஜான்ஸ்டூவிர்ட்மில் எனும் அரசியல் அறிஞர்.

மாணவ மணிகள் இக்காலத்தில் எவ்வாறு சிறப்புற்று விளங்குகின்றனர் என்பதை இங்கே அண்ணா குறிப்பிடு கின்றார்.

தரம்

கல்வியின் தரமும், மாணவர்களின் தரமும் வெகுவாகக் குறைந்து விட்டது என்று பல உறுப்பினர்கள்

எடுத்துச் சொல்லி குறை பட்டுக் கொண்டார்கள். தரம் குறைந்து வந்தால் உண்மையிலேயே நான் வருத்தப் படுவேன். தரம் குறைந்து வருகிறது. தரம் குறைந்து வருகிறது என்று சொல்லும் போது, நாம் எதைத் 'தரம்' என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்போமாயானால் என்னைப் பொறுத்தவரையில், நான் மாணவனாக இருந்தபோது பொது அறிவைக் கற்றுக் கொள்வதற்கு இருந்த வாய்ப்புகளை விட, இன்றிருக்கிற மாணவர்களுக்கு பொது அறிவை கற்றுக் கொடுக்கிற வாய்ப்பு அதிகம். பொது அறிவைப் பொறுத்தவரையில் மாணவர்களின் தரம் உயர்ந்தே இருக்கிறது என்று கருதுகிறேனேயொழிய தரம் குறைந்து இருப்பதாக நான் கருதவில்லை.

'ஆங்கிலத்திலே ஒருவிதக் குறையும் இல்லாமல் எழுதினால் நல்ல தரம் என்று சொல்லுவார்கள். பேசுகின்ற போது தாராளமாகப் பேசினால் நல்ல தரமென்று சிலர் சொல்வதுண்டு. ஆசிரியர் பாடம் நடத்தும்போது எழுகின்ற சந்தேகங்களைக் குறுக்கே எழுந்து கேள்வி கேட்காமல் இருந்தால், அதுவும் ஒரு தரம் என்று கருதப்பட்டிருக்கிறது.

நமது உறுப்பினர்கள் எந்த தரத்தை மனதில் வைத்துக் கொண்டு பேசினார்களோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் முந்தைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களைவிட இந்தத் தலைமுறையில் இருக்கிற மாணவர்கள் உலகத்துப் பொது அறிவையெல்லாம் பெற்றுக் கொண்டு, உரிமையுணர்ச்சியுடனும் கடமை உணர்ச்சியுடனும் என்னென்ன நல்ல காரியங்களை யெல்லாம் செய்யலாம் என்ற முற்போக்கு உணர்ச்சியுடன் தரமாகவே இருக்கிறார்கள்.

நீங்கள் எல்லாம் இப்போது எண்ணிக் கொண்டிருப்பது நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு பேசுவதாக. ஆனால் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட நேரத்தில் நமது மாணவர்கள் மிகத்

தரமாக நடந்து கொண்டார்கள். பாகிஸ்தான் தரப்பி லிருந்து ஆக்கிரமிப்பு எழுந்தபோது அதை விடத் தரமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். என்,சி.சி.யில் சேர்ந்தும், ஹோம் கார்டுகளாகவும், பணியாற்றும் நல்ல தரத்தைப் பெற்றிருக்கிறார்கள். எல்லாத் தரத்தையும் விட்டுவிடுங்கள்.

கல்லூரியில் தமிழில் பேசக் கூடாது என்பதாக எங்கள் காலத்தில் இருந்தே இன்னும் விட்ட குறை தொட்ட குறையாக திரு. வினாயகம் இருக்கிறார்களே அந்த மாதிரி இல்லாமல் இப்போது எந்த கல்லூரிக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். அந்த நிலை மாறி எவ்வளவு தரமான தமிழில் பேசுகிறார்கள். எவ்வளவு தரமான தமிழ் நூல்களை எல்லாம் படிக்கிறார்கள். எங்கள் காலத்தில் மாணவர் களுக்குத் தெரியாத சங்க இலக்கியங்கள் எல்லாம் எவ்வளவு ஐயத்திரிபறத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வீர்கள். அப்படித் தரம் உயர்ந்து இருக்கிறது. மாணவர்கள் பேரில் நமக்குள்ள ஏதோ கோபத்தில் தரம் குறைந்து விட்டது. தரம் குறைந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோமே தவிர, அந்தத் தரம் குறைந்து இருப்பதாக நான் கருதவில்லை.

ஆசிரியர்கள்

அப்படியே தரம் குறைந்து இருந்தாலும், மற்றொரு உறுப்பினர் தம் உரையில் சுட்டிக் காட்டினார்கள், "இப்படி ஆசிரியர்களை நீங்கள் அலைக்கழித்துக் கொண்டிருந்தால், அவர்கள் நிம்மதியாக இருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க எங்கே முடியும்? என்று சொன்னார்கள். ஆகையால் எந்தத் தரமும் நிர்வாகத்தில் இருக்கிறது. ஆசிரியர்களின் வாழ்க்கை நல்ல விதத்தில் செப்பனிடப் படுமானால் அவர்களுக்கு ஊதியம், மற்றொரு கனம் உறுப்பினர் சொன்னதைப் போல் ஆங்காங்கே குடியிருக்க வீட்டு வசதிகளை செய்து விட்டோமானால், கல்வியின் தரம் இன்று இருப்பதைவிட மிக நல்ல முறையில் வளரும்.

பொதுவாக கல்வியின் தரம் நல்ல படியாக இன்று உயர்ந்து இருப்பதற்குக் காரணம் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கிற நிலமைகள்தான். என்னை எடுத்துக் கொண்டாலும் எனது நண்பர் திரு கருத்திருமன் அவர்களை எடுத்துக் கொண்டாலும், 'ரேடியோ' என்ற கருவியையோ, 'ரேடியோ' என்ற வார்த்தையையோ எங்களுடைய 25வது அல்லது முப்பதாவது வயதில் காதில் கூட கேட்டிருக்க மாட்டோம். காரணம் அப்போது இந்தக் கருவிகள் இல்லை. இப்போது கருத்திருமன் அவர்கள் வீட்டிற்குப் போனால், அவரது குழந்தை ரேடியா வாங்கி வந்தாயா? என்று கேட்கிறது. சென்னைக்கு எப்போது 'டெலிவிஷன்' வரும்? என்று கேட்கிறது. ''கம்பியில்லா தந்தி என்றால் என்ன?'' அது எவ்வாறு செயல்படுகிறது என்று கேட்கிறது. இந்த அளவுக்கு மாணவர்களிடையே பொது அறிவு வளர்ந்து இருக்கிறது. மறந்தும் கூட குறைத்து மதிப்பிடக்கூடாது. இப்படிச் சொல்வதனால் கல்வியின் தரத்தை உயர்த்தக் கூடாது என்று நான் சொல்வதாக நினைக்காதீர்கள்.

உலக அறிவு

நான் கல்வி விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் இன்னும் அதிக அக்கறை காட்டும் என்று சொன்னது பாட திட்டங்களை மாற்றியமைப்பதன் மூலம் உலக அறிவையும் பொது அறிவையும் அதிகம் கொடுக்கக் கூடிய வகையில் இந்தக் கல்வி மாற்றப்படலாம் என்பதை மனதில் வைத்துத் தான். இப்போது பழைய ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பழைய முறைப்படியே கற்றுக் கொடுத்து வருகிறோம். பாடங்களைக் கூட பார்க்கலாம். நீங்கள் மகாபாரதக் கதையில் இருந்து ''கண்ணன் வெண்ணெய் திருடிய கதை'யை ஒருவர் முதுகின் மேல் ஒருவராக நான்கு பேர்கள் நிற்பதை, அவர்கள் மேல் கண்ணனை நிறுத்தி, - உரி - உரியின்மேல் வெண்ணெய்த் தாழி - அந்தத் தாழியில்

இருக்கிற வெண்ணெயைக் கண்ணன் எடுத்துத் தின்பது போல் படத்தைப் போட்டு அதன் கீழே 'கண்ணன் தின்னும் பண்டம் என்ன?' - வெண்ணெய் - என்று தான் காட்டியிருப்பார்கள். புராணம் கூடாது என்பதற்காக நான் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம். மாலை நேரத்திலே மக்களிடத்திலே சொல்வது, இந்தப் பாடம் சின்ன வயதிலே மாணவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது. பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்துத் தோட்டத்திலே மாங்காய் இருக்குமானால் அதைப் பறிப்பதற்கு ஏமாளியாகிய பையன்களைக் குனிய வைத்து, அவர்கள் மீது ஏறி நின்று கொண்டும், மாங்காய் பறிப்பதற்கு தான் நாம் கற்றுக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட பாட திட்டங்களை திருத்தியமைக்கின்ற விஷயத்தில் இது பகுத்தறிவா - சுய மரியாதையா? என்று பயப்படாமல் உலக அறிவு என்ற வகையில் கவனம் செலுத்தினால் நல்ல பயன் அதிகமாகக் கிடைக்கும்.

தகுதி

முன்னாலே பேசியவர்கள் தரத்தைப் பற்றியும் திரு கருத்திருமன் அவர்கள் மெரிட்டைப் பற்றியும் சொன்னார்கள். தகுதியைப் பார்த்துத்தானா நீங்கள் சேர்த்துக் கொள்வீர்கள் என்று கேட்டார்கள். தகுதி என்பதற்கு தவறான அர்த்தம் புகட்டப்படுகிறது. படிப்புக்குத் தகுதி என்று நான் குறிப்பிடுகின்ற நேரத்தில் எதைக் குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் கவனிக்க வேண்டும்.

படிப்புக்குத் தகுதி என்றால் முன்பு குறிப்பிட்ட குலத்தில் பிறந்தால்தான் தகுதி என்று இருந்தது. அதற்குப் பிறகு தகுதி என்று சொன்னால் பண வசதி படைத்தவர்கள்தான் அதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று இருந்தது. கிராம்த்திலே கூட வேடிக்கையாகச் சொல்லுவார்கள். நீ படித்து என்ன செய்யப் போகிறாய், கலெக்டர் உத்தியோகமா பார்க்கப் போகிறாய் என்று கேட்பார்கள். அந்த அடிப்படையிலேதான் தகுதி அமைந்திருந்தது.

ஆனால் நான் சொல்லுகின்ற தகுதி வகுப்பிலே மிக மிக சுறுசுறுப்பான மாணவனாக இருந்தால் எல்லா வற்றிலும் நல்ல தேர்ச்சி பெற்றவராக இருந்தால் அதுதான் தகுதி. அதைத்தான் நான் தகுதி என்கிறேன். நெடு நாளாக தகுதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை அதையே தகுதி என்று நினைத்துக் கொள்ளலாம்.

நான் கூட படிக்கும் பொழுது ஸ்காலர்ஷிப் பெற்றுத்தான் படித்தேன். நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் தான். வீட்டிலே உள்ளவர்கள் என் படிப்பிற்கு பணம் கொடுத்து உதவ முடியாத நிலைதான். நான் எப்படி ஸ்காலர்ஷிப் பெற்றேன் என்றால், நான் ஆனர்ஸ் எடுக்க மாட்டேன் பி.ஏ. போகிறேன் என்று சொன்ன பொழுது திரு சின்ன தம்பியாப்பிள்ளை அவர்கள் எத்தனையோ ஸ்காலர்ஷிப் இருக்கின்றன. அதிலே நான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறேன் என்று வற்புறுத்திச் சேர்த்தார்கள். ஏழை மக்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் படிக்க முடியாது என்பதை நான் உணர்கிறேன்.

அதே நேரத்தில் தகுதியைப் பற்றியும் நான் மனதிலே வைத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சேர்த்துக் கொள்கின்ற முறை எப்படி இருக்கிறதென்றால் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு 16 சதவிகிதம், பிற்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் பொதுவாக இருப்பவர்களுக்கு 59 சதவிகிதம் என்று இருக்கிறது. இந்த 59 ஐ சேர்ந்தவர்களின் மேல் அதிக அக்கறை கொண்டவர்கள், திரு வினாயகம் அவர்கள். என்னைப் போலவே பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் களின் மேல் அதிக அக்கரை கொண்டவர்கள். அவருக்கும் எனக்கும் மகிழ்ச்சி தருகின்ற செய்தி என்னவென்றால் 100க்கு 25 பேர்கள் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று வைக்கப்பட்டு இருந்த அளவை மீறி அதிகமான அளவுக்கு 100க்கு 47 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.

நான் இந்த பியுசி இலவசக் கல்வியை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி யோசிக்கும் பொழுது தாழ்த்தப் பட்டவர்களிலே 16 சதவிகித்திற்கு 9 சதவிகிதம் தானே வந்திருக்கிறார்கள், அவர்கள் அதிகமாக வராததற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்கு இலவச படிப்பு கொடுப்பதோடல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பாததற்கு காரணமாக என்னென்ன இக்கட்டுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அந்த இக்கட்டுகளை போக்குகின்ற வண்ணம் அவர்கள் தங்கள் பிள்ளைகளை கல்லூரிகளுக்கு அனுப்பினால் அவர்களுக்கு ஏதாவது போனஸ் கொடுக்கலாமா என்பதைப் பற்றியும் நான் யோசிக்கிறேன்.

பதினாறு சதவிகிதம் என்ற அளவுக்கு அவர்கள் வர வேண்டும். அந்த பதினாரைத் தூக்கி தூக்கி 16 போதாது, 26 வேண்டும் பிறகு 26 போதாது என்று இப்படியே தூக்கிக் கொண்டு செல்வதை விட 16 பேர்களும் நல்ல முறையிலே வருவதற்கான வழி வகைகளை செய்தால் நல்லதென்று நினைக்கிறேன்.

அண்ணாவின் இந்த எண்ணம் நன்கு ஆராய்வதற்கு உட்பட்டது. இன்றைய சூழ்நிலையிலும் இப்படிப்பட்ட எண்ணங்களை செயலாற்றினால் பல இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்க்கலாம். 1926-27ஆம் ஆண்டுகளில் வெளியிட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவு தாரதம்யம் நிலை பெற வழிவகுக்கும். தரமான மாணவர்கள் தகுதியான பணியில் அமர்ந்து வாழ்க்கையை தரமாகவும் தகுதியாகவும் ஆக்கிக் கொள்ள ஏதுவாக அமையும்.

அண்ணாவின் தீர்க்கமானக் கருத்துகளின்படி கல்வி முறை சீரமைக்கப்பட்டால், எதிர்கால இளைஞர்கள் வாழ்வில் ஒளி பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

(உ) காவல்துறை

காவல்துறை எப்படி சென்னை மாகாணத்தில் செயல் படுகிறது என்பதை நாட்டு மக்களுக்குப் புரியவைத்து ஆற்றிய உரையாகும் இது. அவர்கள் எப்போதும் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் அரசுடன் ஒத்துப் போவதில்தான் குறியாக இருப்பார்கள் என்பதை விளக்கி ஆற்றிய உரை இதுவாகும்.

வெள்ளைக்காரனின் ஆட்சியில் 'இந்த போலீஸ் காரர்கள் எல்லாம் வெள்ளைக்கார தாசர்கள் வெள்ளைக் காரன் சொற்படி ஆடுபவர்கள் என்று சொல்லப் பட்டார்கள். அப்போது 'போலீஸ்காரர்கள்' என்று கூட சொல்ல மாட்டார்கள். செந்தலைப் பூச்சிகள் என்றுதான் சொல்வார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களை எங்கள் காலின் கீழே போட்டு நசுக்குவோம் என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பேசினார்கள். இந்தப் பேச்சை போலீஸ் காரர்கள் 60 வருடம் கேட்டார்கள். பிறகு காங்கிரஸ் ஆட்சி 20 ஆண்டு நடந்தது. அப்போது 'காங்கிரசின் கையாட்கள்' என்று சொல்லப்பட்டதை கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது கழக ஆட்சியின் மேற்பார்வையில் போலீஸ் துறை இருப்பதாலே 'கழகத்துக்கு வேண்டியவர்கள்' என்கிறார்கள். இதைக் கேட்டு உள்ளுக்குள்ளே போலீஸ் காரர்கள் சிரிக்கிறார்கள். எந்தப் பக்கத்தில் யார் இருந்தாலும் போலீசார் அரசின் பக்கம் தானே இருப்பார்கள்?

இப்போது வந்து 'சட்டம் இருக்கிறதா' சமாதானம் இருக்கிறதா ஒழுக்கம் கெட்டு விட்டது என்று மாலை நேரத்தில் தடித்த குரலில் பேசுகிறார்களே அவர்களுக்காகச் சொல்லுகிறேன்.. உடையார்பாளையம் வேலாயுதம்,

நெல்லிக்குப்பம் மஜித், கோவை ஆரோக்கியசாமி, தூத்துக்குடி கேவிகே சாமி, தூத்துக்குடி தாளமுத்து, மயிலாடி மாரியப்பன், ஆலந்தூர் இன்னான், வடசென்னைப் பாண்டியன் ஆலங்குடி சிதம்பரம் என்று எங்கள் கழகத்துக் காரர்கள் இவ்வளவுபேர் காங்கிரஸ் கட்சி காலத்திலே தான் படுகொலை செய்யப்பட்டார்கள்.

கேவிகே சாமி தவிர, மற்ற எந்த வழக்கிலும் இதுவரை துப்புத் துலக்கப்படவில்லை. நினைவுக்கு வந்த பெயர்களை மட்டும் சொன்னேன். இன்னும் எவ்வளவோ. அப்போ தெல்லாம நாங்கள் சட்டம் கெட்டுவிட்டது, சமாதானம் கெட்டுவிட்டது என்றெல்லாம் பேசவே இல்லை! காங்கிரஸ்காரர்கள் வேண்டுமானால் 'அவர் செத்ததற்கு அது காரணம், இவர் செத்ததற்கு இது காரணம் என்று பேசிக் கொண்டிருந்தார்களே தவிர வழக்கு தண்டனை என்று ஒனறு கூட இல்லை.

காந்தியார் படுகொலை

படுகொலை நடப்பது சில இடங்களில் கொள்ளைகள் கூட நிகழ்வது, கற்பழிப்பது, அடிதடி நடப்பது என்பதெல்லாம், இந்தப் பாவிகள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களே? 1948ல் உங்கள் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது தானே மகாத்மாகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்! நடந்தது உங்கள் ஆட்சி தானே? ஆனால் போலீஸ் துறையே லாயக்கற்றது என்று நீக்கிவிட்டார்களா? எவ்வளவோ பாதுகாப்புடன் இருந்தும் எப்படியோ சுட்டு விட்டான் பாவி' என்று தானே பெருந்தன்மையுடன் நாடு சொல்லிற்று! அப்போது கூட சட்டம் அமைதி கெட்டு விட்டதென்று யாரும் சொல்லவில்லையே!

சட்டம் அமைதி கெட்டுவிட்டது என்று கூப்பாடு போடும் காங்கிரஸ்காரர்களுக்கு மேற்கண்டவாறு அண்ணா பதிலளித்தார். மேலும் அண்ணா கூறுகையில் சட்டம் அமைதியை காப்பது போலீஸ் கடமை மட்டுமல்ல.

ஒவ்வொரு குடிமகனின் கடமையுமாகும் என்று விவரித்தார்.

சட்ட அமைதியை போலீஸ் மட்டும் தனியே எப்படி நிலை நாட்டமுடியும்? எதிர்க்கட்சி கொறடா திரு விநாயகம் அவர்கள் பேசுகிறபோது, மதுவிலக்குக் குற்றம் புரிபவர்களைத் தாம் பார்ப்பதாகச் சொன்னார். 'கண்டு பிடித்தால் கண்டு பிடியுங்கள்' இல்லாவிட்டால் எக்கேடு கெட்டாவது போங்கள் என்று அவர் சொன்னார்.

குற்றங்கள் செய்யப்படுவது தெரிந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியது ஒவ்வொரு குடி மகனுடைய ஜனநாயகக் கடமையாகும். 20 ஆண்டு காலம் ஆட்சி புரிந்து அனுபவம் மிக்கவர்கள் அவர்கள். இதுவரை இல்லாவிட்டாலும், இனியாவது இப்படிப்பட்ட குற்றங்களை காவல் துறையின் கவனத்திற்கு கொண்டு வந்தால் குற்றங்கள் களைய வழி ஏற்படும்.

நான் தூய இதயத்தோடு இந்த மன்றத்திலே சொல்லுகிறேன். நான் காவல் துறையினருக்கு ஏற்கெனவே சொல்லியிருப்பது இதுதான்.

"குற்றம் செய்பவர்களைக் காண்பீர்களானால், குற்ற வாளியின் சட்டை உங்கள் கண்ணுக்குத் தெரியக் கூடாது அவர்களின் குற்றமே கண்ணுக்குத் தெரியவேண்டும்"

ஆட்சிக்கு வந்த நாள் முதலாய் ஏற்பட்ட மன உளைச்சலை - நெருக்கடிக்கு கொஞ்சம் அனுதாபத்தோடு காணுங்கள் என்றார்"

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உடனே பீதியூட்டும் அளவுக்கு சென்னை நகரில் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன. அதற்குப் பிறகு வார்னீஷ் சாவுகள் அதையொட்டி கலவரங்கள், கலகங்கள் பிறகு மொழிக் கிளர்ச்சிகள் பெருமளவில் வெடித்துக் கிளம்பியது. அதைத் தொடர்ந்து சில அசம்பாவிதங்கள் கோவையிலும் பொள்ளாச்சியிலும் நடைபெற்று கடைசியில் எழும்பூர்

நிலையத்தில் தோழர் அன்பழகன் தாக்கப்படும் வரை நடந்தது.

அன்பழகனைத் தாக்கினார்கள் என்று கூட காங்கிரஸ் நண்பர்கள் சொல்லவில்லை. அதை ஏதோ some disturbance என்றுதான் குறிப்பிட்டார்கள்.

கழக ஆட்சி வந்த பிறகு காங்கிரசார் மீது வேண்டு மென்றே வழக்குகள் போடப்படுவதாகச் சொன்னார்கள். மாறாக காங்கிரஸ் ஆட்சி காலத்திலே தான் இந்த மன்றத்திலே விவசாயத்துறை அமைச்சராக வீற்றிருக்கும் திரு கோவிந்தசாமி ஒரு பூக்கடையில் கல்லாவைத் திறந்து கொள்ளையடித்ததாக ஒரு வழக்குப் போடப்பட்டு ஓராண்டு நடைபெற்றது.

சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டது என்று சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களை கையில் விலங்கிட்டு அழைத்துச் சென்றார்கள் என்பதை இங்கே சொன்னார்கள். இதே விவசாய அமைச்சரைக் கை விலங்குப் பூட்டித் தெருக்களில் அழைத்துச் சென்று இருக்கிறார்கள் காங்கிரசார்.

இங்கே அவைத் தலைவராக வீற்றிருப்பவருக்கும் (திரு. சி.பா. ஆதித்தனார்) அந்த ஆபரணம் பூட்டப் பட்டிருக்கிறது.

மேலவை உறுப்பினராக உள்ள எஸ். முத்து அவர்களை கையில் விலங்கிட்டு மதுரை மாநகர் வீதிகளில் அழைத்துச் சென்றிருந்தனர்.

காவல் துறைக்கு அண்ணா பாராட்டு

எதிர் கட்சியில் இவ்வளவு பேர் பேசினார்கள் ஒருவராவது காவல் துறை சேவையைப் பாராட்டியதே இல்லை. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. இலட்சக்கணக்கான மக்கள் தினமும் வந்து சென்றார்கள். ஒரு வண்டி இன்னொரு

வண்டி மீது மோதியதாக தகவல் உண்டா? மக்கள் நெரிசலில் சிக்கினார்களா? இலட்சக்கணக்கான பெண்களும் அதே அளவு ஆண்களும் வந்தார்களே ஒருவரை ஒருவர் கேலி பேசினார்கள் என்று தகவல் உண்டா? எவ்வளவு திறமையாக காவல் துறை அந்த நேரத்தில் சேவை செய்தது"

அடுத்து கும்பகோணத்தில் மகாமகம் நடைபெற்றது. சின்ன அசம்பாவிதம் நடைபெற்றதா? பிறகு நடைபெற்ற உலகமே வியந்து பாராட்டிய தொழிற்கண் காட்சி அதிலே பல்வேறு நாட்டினரும் கலந்து கொண்டு பாராட்டி வாழ்த்தினரே தவிர, தகராறு ஏதாவது உண்டா?

இருந்தும் இந்தக் காவல் துறையை பாராட்டிட ஏனோ அவர்களுக்கு மனம் வரவில்லை.

நாட்டின் சட்ட ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குக் காரணமாகும் காவல்துறையின் மீது சுமத்தப்படும் குற்றசாட்டுகளுக்கு அண்ணா கூறிய பதிலுரை என்றும் பொருந்தக்கூடியதே!

11

அண்ணாவின் உணர்ச்சிமிகு உரை

நிதி ஒதுக்க சட்டமுன் முடிவு மீது அண்ணா உரையாற்றுகையில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்று செயல் படும் விதத்தை விவரிக்கின்றார். அண்ணாவின் அடக்க உணர்வு, ஆட்சி நெறி அதிகார முறை அனைவரையும் கவரும் வகையில் இவ்வுரை அமைந்துள்ளது.

"இந்த நாள் — தனிப்பட்ட முறையில் கவனித்தாலும், எங்களுடைய கட்சி வரலாற்று முறையிலே கவனித்தாலும் — நாங்கள் எல்லாம் மிகவும் பொறுப்போடு கவனிக்க வேண்டிய நாளாகும். ஒரு மாநில அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு சட்டமன்றத்தில் பெருவாரியான இடங்களைப் பெற்று அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே இந்த அரசினுடைய நிர்வாகத்திற்குத் தேவையான நிதி வசதியை சட்டமன்றத்தைக் கேட்டுப் பெறுவது என்ற ஒரு பெரிய காரியத்தின் இறுதி நாளாக இன்று அமைந்திருக்கிறது.

இன்றைய தினம் இந்த நாளினுடைய முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கும் நேரத்தில் எனக்கு நம்முடைய கனம் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எடுத்துச் சொன்ன பல கருத்துக்களை விட, தமிழ் நாட்டு மக்கள் நம்மிடத்திலே ஒப்படைத்து இருக்கும் புதிய பொறுப்பை, அவர்கள் நம்மிடத்திலே தெரிவித்திருக்கும் அளவு கடந்த நம்பிக்கையை அவர்கள் நம்மிடத்திலே எதிர்

பார்க்கும் பல்வேறு வகையான வசதிகளை, பல்வேறு வகையான நன்மைகளை, பல்வேறு வகையான நலங்களை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அறிவாற்றலையும் அதைச் செய்வதற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் மற்றவர்களிடத்திலிருந்து பெறக் கூடிய வாய்ப்புக்கள் நிரம்ப இருக்கவேண்டுமே என்ற எண்ணம் தான் என்னுடைய நெஞ்சத்தை அழுத்திக் கொண்டு இருக்கிறது

இவ்வளவு எண்ணங்களையும் ஒரே வாக்கியத்தில் அண்ணா வெளியிட்டது அவரது தமிழ் உணர்வை, அவரது ஆற்றலை வெளிப்படுத்துவதாக உள்ளது.

தி.மு.க. சாதனை

முதலிலே நான் இந்த அவையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, நாங்கள் மேற் கொண்டுள்ள புதிய பொறுப்பை செம்மையான முறையிலே நிறைவேற்ற பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற எங்களுக்கு எல்லாத் தர்ப்பு மக்களுடைய நல்லெண்ணமும் ஒத்துழைப்பும், வாழ்த்தும் நிரம்ப கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுதான்.

ஒரு மாநிலத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் உண்மையிலேயே எப்படி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம் என்பது பற்றி நம்முடைய காங்கிரஸ் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் வியப்பை விட எனக்கு அது விஷயத்தில், மிகுதியான வியப்பு உண்டு, பத்தாண்டுகளுக்கு முன்னால் இரண்டு முறைகள் சட்டமன்றத்தில் இடம் பெற்று மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகிற அளவுக்கு நாட்டு மக்களின் பேராதரவு கிடைத்து இருக்கிறது, மக்கள் எங்களிடத்தில் காட்டியிருக்கும் அன்பு உணர்ச்சி ஆதரவு உணர்ச்சி வேறு பல கட்சிகளுக்குக் கிடைக்காத

வகையிலும், தன்மையிலும் எங்களுக்குக் கிடைத்திருக்கும் நேரத்தில் எனக்குப் பெருமித உணர்ச்சியல்ல, அடக்க உணர்ச்சி துவக்கநாளில் இருந்து அதிகமாக இருக்கிறது.

காங்கிரஸ் கட்சி அரசாள்வதற்கு முன்னால் உள்ள வரலாறுகளும், அவர்களுக்குக் கிடைத்தத் தலைவர்களும், அவர்கள் நடத்திய போராட்டங்களும், இன்று காங்கிரசில் உள்ள பெரும்பாலானவர்களுக்கு சொந்தம் இல்லை, பந்தம் இல்லை. பற்று இல்லை, பாசம் இல்லை தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட தொடர்புதான் இது.

மக்கள் உத்தரவு

திராவிட முன்னேற்றக் கழகம் பத்து வருஷங்களுக் குள் சட்டமன்றத்திலே இடம் பெறத் தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறது, இதற்கு முன்னாலே இருந்த வரலாற்றின் துணையைக் கொண்டு நாங்கள் பதவிக்கு வந்தவர்கள் அல்லர். நாங்கள் பதவிக்கு வந்திருக்கிறோம். ஒரு வரலாற்றை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஒரு வேகத்தை நம்முடைய எதிர்க்கட்சித் தோழர்கள் உணருவார்களேயானால் இவ்வளவு அதிகமான அளவிற்கு எங்களைப் பற்றித் தாக்கிப் பேசலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு வந்திருக்க முடியாது.

சாதாரணமாக வரலாறு சொல்லுவார்கள். ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் தெரு விளக்கிலே படித்துக் கொண்டே ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனார் என்று. அதைப் போல நாங்கள் ஏற்படுத்தி நடத்திக் கொண்டு வருகிற திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விதமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெறாத நாளிலே இருந்து, பொது மக்களிடத்திலே பெற்றிருந்த தொடர்பு காரணமாகவே, இந்த நிலமைகளுக்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும் நேரத்தில் எப்படி ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் எளிய நிலையிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு வந்த பிறகும் அவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளிலேயே மிகச்

சிலாக்கியமானவர்கள் என்று பெயர் பெற்றாரோ அப்படிப் பட்ட ஒரு நற்பெயர் எடுக்கவேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இயற்கையாக இருக்கிறது.

எங்களுக்கு அந்த நற்பெயர் கிடைக்க வேண்டு மானால், எல்லாக் கட்சிகளினுடைய ஒத்துழைப்பும் எங்களுக்கு நிச்சயமாகத் தேவை. எல்லாக் கட்சிகளி னுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல. அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மிகத் தேவை. அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல. மக்களுடைய பேராதரவு எங்களுக்கு நிரம்பத் தேவை. ஆனால் இவைகளையெல்லாம் கேட்டுவிட்டால் கிடைத்துவிடுமா? என்றால் கேட்டுவிட்டால் மட்டும் கிடைத்து விடாது. நாங்கள் செய்ய வேண்டியவைகளை எடுத்துச் சொல்லி இந்தக் காரியங்களையெல்லாம் நாங்கள் செய்து கொண்டு இருப்பதாலே தொடந்து எங்களுக்கு உங்களுடைய ஆதரவைக் கொடுங்கள் என்று கேட்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது.

ஆகவேதான், இந்த நிதி ஒதுக்கீடு பிரச்சினை வருகின்ற நேரத்தில், நான் உள்ளபடி சிறிதளவு எழுச்சி வயப்பட்டவனாகவே கூட இருக்கிறேன். வழக்கமாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போது நான் செலுத்துகிற அந்த அளவு கவனம் கூட இன்றைய தினம் செலுத்தவில்லை, செலுத்தாதற்குக் காரணம் என்னுடைய உள்ளத்திலே மோதிக் கொண்டிருந்த ஒரு எழுச்சியான மிகப் பெரிய பொறுப்பை இன்றைய தினம் நாங்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமானால், யார் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்களோ அந்த மக்களுக்கு உண்மையுள்ளவர்களாக அந்த நன்மையை எந்த நேரமும் நினைவில் கொள்பவர்களாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் என்னை வேறு எதையும் சிந்திக்க விடாமல் இன்றைய தினம் ஆக்கி வைத்திருக்கிறது.

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவேன்

ஆனால், அந்த மக்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்வேன் - எங்களிடத்தில் இன்றைய தினம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற பொறுப்பின் மூலமாகவும் அந்த பொறுப்பை ஒட்டி இன்றைய தினம் நான் கோருகிற நிதி ஒதுக்கீடு மூலமாகவும் நாங்கள் மக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவைகளில் ஒரு துளியும் தயக்கம் காட்ட மாட்டோம்.

நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகின்றவர்களாக உங்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு எப்போதும் ஆவலுள்ளவர்களாக, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் உள்ளவர்களாக, அந்தப் பிரச்சினைகளுக்கு பல்வேறு முகங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்தவர்களாக மற்றவர்கள் என்னக் கருத்தை அந்தப் பிரச்சினைகளுக்குச் சொல்லுகிறாகள் என்பதைக் கேட்பதில் கனிவு காட்டுபவர்களாக எல்லோருடைய கருத்தையும் கலந்தாலோசித்து அதிலே ஏற்புடைய கருத்துக்களை எடுத்துக் கொள்வதற்கு உண்மையான ஜனநாயக வாதிகளாக உண்மையான தொண்டர்களாக, மக்கள் நலத்திலே உண்மையான அக்கறை கொண்டவர்களாக நாங்கள் நடந்து கொள்ள பழகிக் கொண்டிருக்கிறோம். உங்களுடைய முழு ஒத்துழைப்பையும் கிடைக்க அந்தப் பயிற்சியிலே வெற்றி பெறுவோம்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமான அளவுக்குப் பஞ்சப்படி தரவேண்டிய நிலைமையில் இந்த ஆட்சிப் பொறுப்பை கொடுத்து இருக்கிறார்கள்.

லட்சக்கணக்கான மக்கள் நம்முடைய ரத்தத்தோடு ரத்தம் கலந்தவர்கள், சதையோடு சதை கலந்தவர்கள் பர்மாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் இன்றைக்குத் தாயகம் வந்து கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சில வருடங்களில் பத்து லட்சம் பேர்களுக்கு மேல் இங்கே

வந்தாக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள், ஆனால் அவர்களை வா என்று சொல்லக்கூடிய தைர்யம் இங்குள்ள வர்களுக்கு இல்லை. போ என்று சொன்னால் அவர்களை வரவேற்றுக் கொள்ள நாடு இல்லை. ஆக அந்த பத்து லட்சம் பேர்களுக்கும் தங்க இடமும், வாழ்க்கை வசதியும் நாம் தேடிக் கொடுத்தாக வேண்டும்.

அமைச்சர்கள் தங்களுடைய ஆர்ப்பாட்டங்களையும் சொகுசான வாழ்க்கையையும் குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கைக்கு உட்பட வேண்டும் என்பதாக முதலாவதாக ஏற்படுத்திக் கொண்டோம்.

இரண்டாவதாக கூடுமானவரையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தமிழிலேயே ஆட்சியை நடத்த வெளிப்படையாக சில ஏற்பாடுகளைச் செய்தோம்.

நமதுப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வந்தவுடனே பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று தோன்றி குறைத்து இருக்கிறார்கள். இது ஒரு பெரிய காரியமா என்று அவர்கள் சொல்லலாம். நாங்கள் சாதாரணமாக இருப்பதாலே எங்களைத் தேர்ந்தெடுத்த வர்கள் சாதாரணமாக இருப்பதாலே பஸ் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்று குறைத்து இருக்கிறோம். நிலைதான் நினைப்புக்குக் காரணம்.

மிதிலையை ஜனகன் ஆண்டு கொண்டிருந்த நேரத்தில் அவன் தன்னை எல்லோரும் ராஜாதி ராஜன், ராஜ மார்த்தாண்டன் என்று அழைப்பதை விரும்பவில்லை, ராஜரிஷி என்று அழைப்பதைத்தான் பெருமையாகக் கொண்டான்.

நாங்கள் அமைச்சர்கள் என்ற உணர்வைவிட அலைந்து திரிந்தவர்கள் என்ற உணர்வைத்தான் கொண்டிருக்கிறோம். நாட்டிலே 100க்கு 80 பேர் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதிலே தான் எங்கள் நினைப்பு சென்று கொண்டிருக்கிறது.

புஞ்சை நிலங்களுக்கு வரியை குறைத்து இருக்கிறோம். போதுமான அளவு தண்ணீர் கிடைத்து விட்டது. பூச்சி மருந்துக்கான சப்சிடி கொடுத்து விடுகிறோம்.

விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தினுடைய விளைவை உற்பத்தி செய்து வைத்துக் கொண்டு போதுமான வருவாய் கிடைக்கவில்லை என்னும் படியான நிலைமையில் அவர்களை விட்டுவைக்கமாட்டேன். தகுந்த உதவிகள் தகுந்த நேரத்தில் நிச்சயமாக இந்த அரசு செய்யும். உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார். நாட்டினுடைய உயிர், வாழ்வு உற்பத்தி செய்யக் கூடியவர்களிடந்தான் இருக்கிறது. அவர்களை மனம் நோகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கடுகளவு கூட எனக்குக் கிடையாது என்றார்.

12

கேள்வி நேரம்

"கேள்வி நேரம் என்பது நாட்டின் நடவடிக்கைகளை பொது மக்களின் பார்வைக்குக் கொண்டு வரும் ஒளி விளக்கு" –கென்னத் மெக்கன்ஸி

கேள்விகள் எழுப்பி அரசிடமிருந்து தகவல்களை பெறுகின்ற உரிமையை உறுப்பினர்களுக்கு வழங்கிய நிகழ்வு 1892 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தினால் ஏற்பட்ட முக்கிய நன்மையாகும். 1909 ஆம் ஆண்டிற்குப் பின்தான் துணைக் கேள்விகள் கேட்கும் உரிமை வழங்கப்பட்டது. சட்டமன்ற மேலவை-பேரவைக் கூட்டங்களில் ஒவ்வொரு நாளும் முதல் ஒரு மணி நேரம் கேள்வி பதில் நேரமாக ஒதுக்கப்படுகிறது.

இக்கேள்வி பதில் நேரம் சட்டமன்ற நடவடிக்கை களில் பொழுது போக்கு அம்சம் கலந்து சுவையோடு இருக்கும். அனைத்துத் தலைப்புகளிலும் கேள்விகளும், அதற்கான பதில்களும், அதில் புது செய்திகள், அரசின் புது நடவடிக்கைகள் குறித்த அறிவிப்பும் இருக்கும். உறுப்பினர்களின் குறும்புத்தனமான துணைக் கேள்விகளும், அமைச்சர்களின் நகைச்சுவை கலந்த குறுக்கீடுகளும், பதில்களும் இருக்கும். அதிலும், அண்ணா அவர்களும், கலைஞர் கருணாநிதி அவர்களும் நா நயத்தால் பரவசப்படுத்திய பதில்கள் சொல்லி மாள மாட்டாதவைகளாகும்.

அண்ணா அவர்கள் அவைக்கு நேரம் கழித்தே வருவார். எப்போதும் கேள்வி நேரம் அலுவலில் முதலமைச்சர் பதலளிக்கவேண்டிய கேள்விகள் முதலில் எடுத்துக் கொள்ளப்படும், அண்ணா வரத் தாமதமாவதால், அவர் பதிலளிக்கவேண்டிய கேள்விகளை அவர் வந்தவுடனோ அல்லது கடைசியிலோ எடுத்துக் கொள்ளப் படும். ஒருமுறை இது பற்றி பேரவையில் எழுப்பப்பட்ட போது, அண்ணா அவர்கள் "முதலமைச்சர் கேள்விகளை கடைசியில் சேர்ப்பதில் தமக்கு ஆட்சேபணை இல்லை" என்று கூறி தமது தாமத வருகையைச் சாதுர்யமாக சமாளித்தார்.

அண்ணா அவர்கள் அவைக்கு வந்து பதில் சொல்ல ஆரம்பித்தால் அவை கலகலப்பாக இருக்கும். அமைச்சர்கள் சில சமயங்களில் உறுப்பினர்கள் கேள்விக்குப் பதிலளிக்க இயலாமல் தடுமாறும்போது, அண்ணா அவர்கள் இடையில் புகுந்து வேடிக்கையான பதிலை தந்து அவையை கலகலப்பாக்குவார். இதில் கேள்வி கேட்ட உறுப்பினர் மேற்கொண்டு கேள்விகள் கேட்காமல், அமர்ந்து விடுவார். அமைச்சரும் கேள்விகளிலிருந்து காப்பாற்றப்படுவார்.

ஒருமுறை புளி விலை குறைந்தது குறித்து கேள்வி கேட்கப்பட்டது. அப்போது காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து உத்தரப் பிரதேசத்திலிருந்து புளி வந்ததால்தான் புளி விலை குறைந்ததாக வாதிட்டனர். உணவு அமைச்சரும், ஆளுங் கட்சி உறுப்பினர்களும் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை தான் காரணம் என்று கூறினார்கள். இந்த நேரத்தில் அண்ணா அவர்கள் அமைதியாக எழுந்து, "புளிய மரத்தில் புளியங்காய் நிறைய காய்த்தது, எனவே புளியின் விலை குறைந்தது" என்றவுடன் உறுப்பினர்கள் அனைவரும் குலுங்க குலுங்க சிரித்து விட்டனர். மேற்கொண்டு கேள்விகள் கேட்கப்படவில்லை.

பஸ்களில் குறள்

திரு. கே. வினாயகம்

பஸ்களிலே திருவள்ளுவர் படமும், திருக்குறளும் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, "யாகாவராயினும் நா காக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்றெல்லாம் குறள் எழுதப் பட்டிருக்கிறது. இதன்படி பிரயாணிகள் நடக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா? பஸ்களை ஓட்டுகின்ற கண்டக்டர்கள், டிரைவர்கள் எல்லாம் நடக்கவேண்டும் என்கிறீர்களா?

அண்ணா

நண்பர் ஒரு சிறிய திருத்தத்தை தம் கேள்வியில் செய்து கொள்ள வேண்டும். "பஸ் ஓட்டுகின்ற கண்டக்டர்கள்" என்றார். கண்டக்டர்கள் பஸ் ஓட்ட மாட்டார்கள். (குறுக்கீடுகள்) அவசரத்தில் இப்படி யெல்லாம் கேட்பது வாடிக்கை. இரண்டாவது அந்தக் குறள் யாருக்காக எழுதப்படுகிறது என்றால் நா உள்ளவர்களுக்கு எல்லாம் இது சொல்லப்படுவது.

பண்டமும் பாலமும்

1967ஆம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் அரிசி கொள்முதல் குறைந்தது குறித்து திரு என்.ஆர். தியாகராஜன் கேட்ட கேள்விக்கு உணவு அமைச்சர் மதியழகன் "அது பற்றிய விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது" என பதிலளித்தார். தொடர்ந்து கேட்கப்பட்ட துணைக் கேள்விக்கு பதிலளிக்கையில், உணவு அமைச்சர், "சென்னை நகரத்திற்கு ஒரு நாளைக்கு போதுமான அரிசிதான் இருந்தது" என்று கூறினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் குறுக்கிட்டு "போக்குவரத்து வசதி சென்னை ராஜ்யத்தில் இருப்பதைப் போல், வேறு எந்த

ராஜ்யத்திலும் கிடையாது. இதையொட்டி பல இடங்களில் ஸ்டாக் வைக்கப்பட்டு இருந்தும், பத்திரிகைகளுக்கு குற்றம் குறையாக சொல்வது எந்த விதத்தில் நியாயம்?" என்று கேட்க முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு பதிலளிக்கையில், "எந்த விதத்தில் நியாயம் என்றால், பக்கத்தில் கடைத்தெரு இருந்தாலும் வீட்டில் பாண்டத்தில் பதார்த்தம் இல்லையென்றால், வருத்தப்படத்தான் செய்வார்கள் என்பது போலத்தான்" என்று உண்மை நிலையை உதாரணம் கூறி முடித்தார். அப்போது ராஜ மார்த்தாண்டன் என்ற உறுப்பினர் ஒரு துணைக் கேள்வியில், "சென்னைக்கும் தஞ்சைக்கும் இடையில் ஏதேனும் பாலம் உடைந்து இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறதா?" என்று வினவ, அண்ணா அவர்கள், "பண்டத்தைப் பற்றிய கேள்வியாக இருப்பதால் பாலத்தைப் பற்றிய துணைக் கேள்வியை எதிர்பார்க்க வில்லை" என சுவையாக பதிலுரைத்தார்.

மற்றும் சில சுவையான கேள்வி-பதில்களைப் படியுங்கள்

சம்பந்திகள் சண்டை

திரு. கே வினாயகம்

நான் ஒரு ஆண் சிறுத்தை தந்திருக்கிறேன். நம்முடைய நண்பர் திரு எம்.ஜி.ஆர் ஒரு பெண் சிறுத்தையை கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டும் குடும்பம் நடத்தி குட்டிகள் கூட பெற்றுள்ளன. பெண் சிறுத்தையை மட்டும் கூண்டில் வைத்து வீதிகளில் Presented by M.G.R. என்று போட்டுக் கொண்டு போகிறார்களே. நான் கொடுத்த ஆண் சிறுத்தையை நான், கொடுத்தது என்கிற பலகையைக் கூட எடுத்துவிட்டு அங்கேயே வைத்து இருக்கிறார்களே. இதனால் ஆண் சிறுத்தை தவித்துக் கொண்டு இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

திரு. ஏ. கோவிந்தசாமி (அமைச்சர்)

திரு. வினாயகம் ஆண் சிறுத்தை கொடுத்திருப்பது உண்மைதான். நான் கூடப் பார்த்திருக்கிறேன். அதனால் இப்பொழுது நடக்கக் கூட முடியவில்லை. அதற்கு தீனி வாங்கிக் கொடுக்கக் கனம் அங்கத்தினர் தம் சம்பளத்தில் ஒரு பகுதி கொடுக்கவேண்டும் என்ற நிலை இருப்பதை தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

அண்ணா

"இதிலே சம்பந்திகளே தனியாக கூடிப் பேசிக் கொண்டால் நலமாக இருக்கும்" எனப் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே கூறினார்.

தம்பியின் கோவில்

திரு கே. வினாயகம்

ஐயா, 30 ஆம் தேதி வரும் ஆடிக் கிருத்திகை திருவிழாவிற்கு ஏராளமான யாத்ரீகர்கள் திருத்தணி முருகன் கோவிலுக்கு வருவார்கள். தயவு செய்து குடிநீர்த் திட்டத்தை 30 ஆம் தேதிக்குள் துவக்கி வைக்க முதலமைச்சர் அவர்கள் இசைந்து ஒரு தேதியைச் சொல்வாரா?

அண்ணா

தம்பியின் கோயிலைப் பற்றி அண்ணன் இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

சுதந்திர போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

இது போன்ற சுவையான பதில்கள் பல உண்டு. அவை யாவுமே அண்ணாவின் நியாய உணர்வு, பெரியவர்களை மதிக்கும் தன்மை, நண்பர்களை மறவாமை, நகைச்சுவை உணர்வு தம் வாதத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தும்

மற்றும் பல சமயங்களில் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது விளக்கமான வரலாற்றுச் செய்திகளையும் பதிலில் தருவார். கட்டபொம்மன் பரம்பரைக்கு ஓய்வூதியம் குறித்தப் பதிலில் பல்வேறு வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்துள்ளார். இப்பதிலில் தி.மு.க அரசு சுதந்திர தியாகிகளை நன்றியுடன் நினைத்து உதவிகளை செய்ததில் காங்கிரஸ் கட்சியையும் விஞ்சி நின்ற மனப்பான்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

சென்னை சட்டமன்ற மேலவையில் திரு என் ஆர். தியாகராஜன் கட்டபொம்மன் பரம்பரையினருக்கு ஓய்வூதியம் அளித்தது தொடர்பாக எழுப்பிய வினாவிற்கு அண்ணா அவர்கள் அளித்த பதில் வருமாறு:

"கட்டபொம்மன் குடும்பம், சிறைபட்டபோது, ஆறு பேர்களை கொண்டதாக இருந்தது. அவர்களுக்கு 15 வராகன் (52-8-0) ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அத்தொகை பின்னர் 40 வராகனாக (ரூ. 140) உயர்த்தப்பட்டது. அக்குடும்பத்தில் ஒருவராகிய கம்பெனி செல்வம் ரூ. 52-8-0 பெற்று வந்தார். மற்றப் பங்குகள் அனைத்தும் கால்வழி உரிமை உடையோர் இல்லாத காரணத்தால் நிறுத்தப் பட்டன என்றுத் தோன்றுகிறது. கம்பெனி செல்வம் 1871ல் இறந்த போது அவருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் அவருடைய மூத்த மகன் தளவாய் குமாரசாமி துரைக்கு தொடர்ந்து வழங்கப்பட்டது. அவர் 1920ல் இறந்த போது அவருக்கு வழங்கப்பட்ட உதவி ஊதியத் தொகையான ரூ. 52-8-0 ரூபாய் 50ஆகக் குறைக்கப்பட்டு அவரது மகன் ஜெய வீரராம கம்பெனி செல்லத்துரைக்கு வழங்கப்பட்டது. அவர் 1935ல் இறந்தபோது அந்த ஊதியத் தொகையில் மீண்டும் ரூ. 2-8-0 குறைக்கப்பட்டு ரூ, 47-8-0ஆக மாற்றப்பட்டது,. அத்தொகை அவரது சகோதரர் தளவாய் சுப்ரமணியத் துரைக்கு வழங்கப்பட்டு வந்தது. சுப்ரமணியத் துரைக்கு 1.11.1944லிருந்து திங்களுக்கு 5 ரூபாயாக உதவித்

தொகை தற்காலிகமாக உயர்த்தப்பட்டது. அவர் 1.6.1958ல் இறந்து விட்டார். அந்த உதவித்தொகை அதனைப் பெறுகின்றவர் இறக்கும் போது இறுதி அடைந்து விடத் தக்க ஆயுள் உதவியாகும். எனவே அவருடன் அது (உதவித் தொகை) அடியோடு நிறுத்தப்பட்டது.

காலஞ் சென்ற சுப்ரமணிய துரையின் மகள் திருமதி. பாஞ்சாலியம்மாள் அவரது தந்தை பெற்று வந்த ஊதியத்தைத் தொடர்ந்து வழங்குமாறு அரசாங்கத்தை வேண்டினார். இந்த வேண்டுகோளை இந்திய அரசு மறுத்து விட்டது. திருமதி. பாஞ்சாலியம்மாளிடமிருந்து மேற் கொண்டு வரப்பெற்ற மனுக்களையும் இந்திய அரசாங்கம் நிராகரித்தது.

இந்த கால கட்டத்தில், மத்திய அரசை நடத்திச் சென்றது காங்கிரஸ் அரசாங்கமாகும். மாநிலத்தில் நடை பெற்ற ஆட்சியும் காங்கிரஸ் சர்க்கார்தான். இருப்பினும் கட்டபொம்மன் பரம்பரையினருக்கு முன்னூறு ஆண்டு காலமாக தொடர்ந்து வெள்ளையர் அரசால் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வந்தது. சுதந்திரப் போராட்டத்தின் முதல் சங்கை ஊதியவன் கட்டபொம்மனாகும். அவனது பரம்பரையில் வந்துதித்த பாஞ்சாலியம்மாளுக்கு பலமுறை ஓய்வூதியம் ரூ. 52-8-0 மிக மிகச் சாதாரண ஊதியம் தான். ஒரு பெரியத் தொகையுமல்ல. அதையே காருண்யமிக்க காங்கிரஸ் சர்க்கார் மறுத்துவிட்டது. சுதந்திர போராட்ட காலத்தில் வெள்ளையனுக்கு அடி பணிய மாட்டேன் என்ற வீரக் குரல் எழுப்பியவன் கட்டபொம்மன். ஏனோ சுதந்தி ரத்தைப் பெற்றுத் தந்தோம் என்று மார்தட்டிக் கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் ரூ. 52-8-0 கொடுக்க மறுத்தது ஏன் என்பது புரியவில்லை" என்றார்

இதே போன்று, ஆஷ் துரையை கொன்ற வாஞ்சி நாத ஐயர் குடும்பத்திற்கும் உதவித் தொகை இல்லை என்று கை விரித்தது காங்கிரஸ் சர்க்கார். வாஞ்சிநாத ஐயர் அவர்கள் ஆஷ் துரையைக் கொன்ற பிறகு தன்னைத்தானே மாய்த்துக்

கொண்டதால் அவர் சுதந்திரப் போராட்டத்தில் உயிரிழந்ததாகக் கருத காங்கிரஸ் அரசாங்கம் தயங்கியது. ஆனால் அண்ணா அவர்கள் "அவர் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டாலும், அவர் உயர் நோக்கம் சுதந்திரப் போராட்டம் எனும் காரணத்தால் அவர் விதவையாருக்கு பென்ஷன் அளிக்க வேண்டுமென்று உத்தரவு இட்டு இருக்கிறேன்" என்றார்.

இது போன்ற தகவல்களையும் கேள்வி-பதில்கள் நேரங்களில் அறிய இயலும்.

வாய்மையே வெல்லும்

கே வினாயகம்

எந்த அதிகாரத்தின் கீழ் எந்த விதியின் கீழ் அரசு சின்னத்திலுள்ள சமஸ்கிருதத்திலுள்ள "சத்திய மேவ ஜெயதே" என்னும் சமஸ்கிருத சொல்லை வாய்மையே வெல்லும் என மாற்றினீர்கள் சட்டமன்றம் கலந்து யோசிக்கப்பட்டதா?

அண்ணா

அரசின் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ள 'சத்திய மேவ ஜயதே' என்னும் கொள்கை உரையை அரசு மாற்ற வில்லை. அரசு மேற்கொண்ட "வாய்மையே வெல்லும் என்னும் கொள்கை உரை" தேவ நாகரி எழுத்திலுள்ள "சத்திய மேவ ஜயதே" என்பதற்கு நிகரான தமிழாக்கம் ஆகும். தமிழ் தவிர ஏனைய மொழியறியா இம்மாநில மக்கள் பலர் இதன் விழுமிய பொருளை மேலும் சிறக்க உணர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வக் குறிப்பாலும், ஆட்சி மொழியாம் தமிழை விரைந்து ஆளவேண்டும் எனும் கோட்பாட்டிற்கு இணங்கவும் இவ்வாறு செய்யப் பட்டுள்ளது.

கே. வினாயகம்

தமிழிலே எனக்கு அதிகமாகப் புலமை இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆயினும் சமஸ்கிருதத்தில்

"சத்திய மேவ ஜயதே" என்ற வார்த்தைக்கு நேரடியான பொருள் "வாய்மையே வெல்லும்" அல்லவென்றும், அதற்குப் பதில் "உண்மையே வெல்லும்" என்றால் தான் நேரடியான் பொருள் பிரதிபலிக்கும் என்று கூறப்படுகிறது. வாய்மை என்பது மேலே இருந்து வருகிற வார்த்தை. "உண்மை" என்பது உள்ளே இருந்து வருகின்ற வார்த்தை என்று சொல்லப்படுவது உண்மையா? அது பற்றி ஏன் இந்த சட்டசபையைக் கேட்காமல், யோசிக்காமல் நீங்களே இந்த முடிவுக்கு வந்து இருக்கிறீர்கள் என்பதை சொல்ல முடியுமா?

அண்ணா

கனம் உறுப்பினர் அவர்களே இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை யென்ற முறையில் "தமிழிலே அதிகமான பாண்டித்யம் இல்லையென்று சொன்னார்கள் இருந்தாலும் பதிலளிக்க விரும்புகிறேன். தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டிலும் புலமைப் பெற்றிருக்கிற ராஜாஜி அவர்கள் "சத்திய மேவ ஜயதே" என்ற வட மொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் "வாய்மையே வெல்லும்" என்பதுதான் என்பதற்கு அவர்கள் ஒப்பம் அளித்து எழுதி இருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்களோ, தமிழிலே தனக்கு அவ்வளவு பழக்கம் இல்லையென்று சொல்லிவிட்டார். ராஜாஜி அவர்களுடைய தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும் ஓரளவு உணர்ந்து இருக்கிறேன். இந்த நிலையில் கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்பதை அவர்கள் உணருவார்கள்.

பி.ஜி. கருத்திருமன்

சபாநாயகர் அவர்களே, "சத்தியமேவ ஜெயதே" என்பதற்கு சரியான நேரடியான சொல் "வாய்மையே வெல்லும்" என்ற அளவில் தமிழக சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள். "சத்தியம்" என்பது உண்மை, மெய்மை, வாய்மை,

மூன்றும் சேர்ந்தது ஆகும். சத்தியம் என்பது வட மொழியல்ல. நமது தமிழிலேயே சத்தியம் என்றால், மனம், மொழி, மெய் எனும் மூன்று சேர்ந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே "வாய்மையே வெல்லும்", "உண்மையே வெல்லும்", "மெய்ம்மையே வெல்லும்" என்பதற்கு பதிலாக "சத்தியமே வெல்லும்" என்ற பிரயோகத்தைப் பயன்படுத்த முன்வருவார்களா?

அண்ணா

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறபடி "சத்தியம்" என்பது தமிழ் வரி வடிவத்தைக் கொண்டதே தவிர, தமிழ்ச் சொல் அல்ல. "வாய்மை" என்பது நமது உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல "வாயிலிருந்து வருவதால்" "வாய்மை" யல்ல. தமிழர்கள் வாயிலிருந்து நல்லது தான் வரும் என்று நீண்ட நாட்களாக எண்ணிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் வாயிலிருந்து எதுவும் வரும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். "வாய்மை" என்பதற்கும் "சத்தியம்" என்பதற்கும் தத்துவ ரீதியில் எந்தவிதமான வேறு பாடும் இல்லை.

மீண்டும் வினாயகம் சட்ட மன்றத்தை ஏன் கலந்து முடிவு செய்யவில்லை என்ற வினாவிற்கு அண்ணா "அடிப்படையான விஷயங்களில் எதிர் தரப்பில் இருந்து நிறைய யோசனைப் பெற வேண்டும் என்கிற காரணத்தால் தான் என ஆங்கிலத்தில் பதில் அளித்தார்.

உடனே நாவலர் நெடுஞ்செழியன் குறுக்கிட்டு ஒரு விளக்கத்தை அளித்தார்.

அவைத் தலைவர் அவர்களே ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூற விரும்புகிறேன். "உண்மை என்பதற்கு வாய்மை என்பதற்கும் வேறுபாடு உண்டு. உண்மை என்பது உள்ளபடியே ஒன்று தவறாக இருந்தாலும், கேட இருந்தாலும், நன்மையாக இருந்தாலும், இருக்கின்ற ஒன எடுத்துச் சொல்லுகின்ற ஒன்று உண்மை"

சி.அ.14.

"வாய்மை எனப்படுபவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்"

என்று வள்ளுவர் அதற்கு இலக்கணம் வகுத்துச் சென்றிருக்கிறார், "வாய்மை" என்பது மதிப்பளிக்கக் கூடிய ஒன்று. '"உண்மை" என்பது இருப்பதை உள்ளவாறே எடுத்துச் சொலல். எனவே இரண்டு சொற்களில் "வாய்மை" என்பது தான் பொருந்தி வரக்கூடிய சொல் என்ற கருத்தில் மொழி பெயர்க்கப்பட்டதே தவிர வேறு வகையில் அமைக்கப்பட்டதல்ல. அப்போது உறுப்பினர் ம.பொ.சி. குறுக்கிட்டு நாவலர் கூறிய கருத்துக்கு தமது ஏற்புரையினை அளித்தார். "நான் சொல்ல நினைத்த விளக்கத்தை சர்க்கார் கட்சித் தலைவர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள்" என்று அரசு கருத்துக்கு மேலும் வலிவு சேர்த்தார்.

இதுதான் அண்ணா அவர்களின் பெருந்தன்மை. இந்தக் கேள்விக்கு அண்ணா பதிலளிக்கையில் ராஜாஜி கூறிய கருத்தைத்தான் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்ற உண்மையை வெளிப்படையாக உளம் திறந்து அவருக்கு மரியாதை தெரிவிக்கும் முகத்தான் சட்டமன்ற நிகழ்வுகளில் அதனைப் ஏற்றிவிட்டார். யாரோ சொன்னதை யெல்லாம் எம் கருத்து என அவர் என்றும் நினைத்துப் பார்த்தார் இல்லை. இதனைத்தான் அவர் பல்வேறு இடங்களில் வலியுறுத்தும் போது "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்ற உவமையைக் கூறி விளக்கம் அளிப்பார். அண்ணா ராஜாஜியை புகழ்ந்தார். அண்ணாவை ம.பொ.சி புகழ்ந்தார். இக்கேள்வியில் இவ்விரண்டு செயற்பாடுகளும் வெளிப்படு கின்றன.

இந்தி எதிர்ப்பு சம்பந்தமான கோப்புகளை அழித்தல்

டாக்டர் எச்.வி. அண்டே அவர்கள் இந்தி எதிர்ப்பு சம்பந்தப்பட்ட கோப்புகளை முன்னாள் முதலமைச்சர்

அழித்த கோப்புகளின் பெயர் என்னென்ன என்று வினவ அண்ணா மொத்தம் 13 கோப்புகள் அப்படி அழிக்கப் பட்டன என்றார். அதில் மு. கருணாநிதி சம்பந்தமான கோப்புகள் மூன்றும் பேரவைத் தலைவர் ஆதித்தனார் சம்பந்தப்பட்ட கோப்பு ஒன்றுமாகும்.

அண்ணா மேலும் பதில் கூறும் போது அதை முன்னாள் முதலமைச்சர் கைப்பட எழுதி உத்தரவிட்டார் என்றார்.

ஏ.வி.பி. ஆசைத்தம்பி

தேர்தலில் தோற்று அதற்கு அப்புறம் பதவியில் இருந்த பினாமி சர்க்கார் தஸ்தாவேஜிகளை அழிப்பது சட்டவிரோதமான காரியமல்லவா?

அண்ணா

அந்த உத்தரவைப் போட்டபோது அவர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்.

மூக்கையத் தேவர்

இது பற்றி பரிபூர்ணமாக விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அமைச்சரவைக்கு உத்தேசம் உண்டா?

அண்ணா

இது குறித்து வேதனைப்படுகிற உறுப்பினர்கள் பொது மக்களிடத்தில் இதை விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

க. இராமமூர்த்தி முன்னாள் அமைச்சருக்கு இது பற்றி விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறாரா என்ற வினாவிற்கு அப்படி ஒரு மரபு இல்லை என்றார்.

கே.பி.எஸ். மணி அவர்கள் செய்த குற்றத்தை முதலமைச்சரே மன்னிப்பதாகத் தெரிகிறதே என வினவ அண்ணா இந்த சர்க்கார் மன்னிக்கிறது என்று உபயோகப் படுத்திய வார்த்தை அவ்வளவு ருசிகரமானதாக இல்லை.

ரொம்ப பெரிய மனிதர்கள் செய்ததற்கு நாம் வருந்தலாமே தவிர மன்னிப்பது என்று சொல்லுவது சரியல்ல என்றார்.

பி.ஜி. கருத்திருமன்: முதலமைச்சர் அவர்களுடைய பதிலை நோக்கினால் எந்த பைலை வேண்டுமானாலும் தேவை இல்லாத சமயத்தில் அழிக்கலாம் அல்லது அப்புறப் படுத்தலாம் என்பது சட்டபூர்வமான நடவடிக்கை என்று அறிகிறேன். அப்படி இருந்தும் கூட சில அங்கத்தினர் சதி என்று சொல்வது பொருத்தமா? என்று நல்ல பிள்ளை போல் கேட்ட கேள்வி அண்ணாவை சற்று பதட்ட மடையச் செய்தது. வெகுண்டு அண்ணா விவரமாகவே பதிலளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சர்க்கார் சில பைல்களை அழிப்பதற்கும் அப்புறப்படுத்துவதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள் என்று நான் சொன்னதை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு அவர்கள் அப்படி செய்திருப்பதை சதி என்று சொல்லலாமா என்று கேட்பதால் அதைப் பற்றி நான் சொல்ல வேண்டியிருக் கிறது. அழிக்கப்பட்டிருக்கிற பைல்கள் தேர்தலில் வெற்றி பெற்று அரசை அமைக்கத்தக்க நிலமையில் உள்ளவர்களைப் பற்றிய பைல்கள் ஆகும். நல்ல பண்பாட்டு முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றால், அந்த பைல்கள் அழிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட வேண்டியது நியாயமானதாகும்.

சுதந்திரம் கிடைக்கப் பெற்றவுடன் அப்போதிருந்த காங்கிரஸ் பெரிய தலைவர்களுடைய் பைல்களெல்லாம் எரிக்கப்பட்டன என்றும், அப்புறப்படுத்தப்பட்டன என்றும், பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தப் பைல்களைப் பார்த்தவர்கள் எல்லாம் பின்னால் அவைகளை படித்துப் பார்ப்பவர்கள் வெட்கப்படுவார்கள் என்று அந்த பைல்கள் அழிக்கப்பட்டு விட்டன என்று சொன்னார்கள். இந்தப் பைல்கள் வைக்கப்பட்டிருந்தால் எந்தத் தொந்தரவும் ஏற்பட்டு இருந்து இருக்காது.

நான் குறிப்பிட்டதுபோல், திரு கருணாநிதி அவர்கள் சென்னையில் இருந்து பாளையங்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுது என்ன மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டார், அவர்களுக்கு வழியில் என்ன வாங்கிக் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் தான் இருக்கும். திரு கருணாநிதி அவர்கள் என்னிடம் கூறாமல் மறைத்திருந்த விவரங்கள் கூட அதில் இருந்திருக்கும். வழியிலே அவர்களுக்கு காப்பிகூட வாங்கிக் கொடுக்காமல் வேகமாக மோட்டாரை ஓட்டிக் கொண்டு போனார்கள். மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த கருணாநிதிக்கு மிகத் தொல்லைகள் கொடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் இருந்து இருக்கும் என்று எண்ணுகிறேன். நான் அதைப் படித்துப் பார்த்தால் வருத்தப்படுவேன் என்று அழித்து விட்டார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

பெ. சீனிவாசன் கேட்ட ஒரு கேள்விக்கு கனம் உறுப்பினர் கேட்ட இன்னொரு கேள்வி, 500 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது மறுக்கப்பட்டு இங்கே சொல்லப் பட்டது என்பது. அது பற்றிய விபரம் இதிலே இல்லை. அந்த பைல்கள் சம்பந்தமாக இங்கே விவரம் இல்லை என்றாலும், 500 பேர்களை சுட்டுக் கொல்வதற்கு மனம் வந்தவர்களுக்கு அதை மறைப்பதற்கு மனம் வருவதை நாம் ஆட்சேபித்துக் கொள்வதற்கில்லை.

மீண்டும் எம். சுரேந்திரன் எழுப்பிய ஒரு வினாவிற்கு விடையளிக்கையில், கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன அளவிற்கு நான் போவதற்கு தயாராக இல்லை என்றாலும், இவ்வளவு நேரம் விவாதம் நடந்ததே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை தவறானது என்பதை உணர்த்துவதற்கு போதுமானது என்று கருதுகிறேன் என்றார்.

இந்த பதிலுரை அண்ணாவின் அரசியல் விவேகத்தை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாகும்.

பெரியாருக்கு அமைச்சரவையே பரிசு

தியாகிகளுக்கு நிலம் வழங்குவது குறித்து ஒரு கேள்வி 20.6.1967 அன்று கேட்கப்பட்டது. அதற்கு துணை வினா ஒன்றை முனு ஆதி எழுப்புகையில் வைக்கம் வீரர் பெரியார் அவர்களுக்கு தியாகிகள் நிலம் கொடுக்க முந்திய அரசாங்கம் முன் வந்ததா? அப்படியென்றால் நம் அரசாங்கமாவது கொடுக்க முன் வருமா? என்ற துணை வினாவிற்கு அண்ணா அளித்த பதிலுரை தான் அவர் எந்த அளவு தந்தை பெரியாரிடம் உள்ளன்போடு விளங்கினார் என்பதை பறை சாற்றுகின்றது.

அண்ணா

இந்த அரசாங்கம் அமைந்த பிறகு தியாகிகள் நிலம் பெரியார் அவர்களுக்கு தரப்பட வேண்டும் என்பதல்ல. இந்த அமைச்சரவையே அவருக்குத் தரப்பட்ட பரிசு தான்.

கல்லடி – சொல்லடி

தேர்தல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர் குறித்த கேள்வியின் போது துணை வினா ஒன்று கு.ச. சிவசாமி அவர்களால் கேட்கப்பட்டபோது "தேர்தல் பிரச்சார காலத்திலே இன்றைய முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்மீது கோவை மாவட்டத்திலுள்ள ஒரு காங்கிரஸ் மில் முதலாளியால் தூண்டப்பட்டவர்கள் கல் எறிந்தார் களே. அவர்கள் கைது செய்யப்பட்டார்களா?

அண்ணா

தேர்தல் பிரச்சார காலத்திலே என் மீது கல் எறியப்பட்டது. நடு வழியில் நிறுத்தி மாலைகளும் போடப்பட்டன. நான் இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொண்டேன்.

எப்படிப்பட்ட பதிலுரை. கல்லடி சொல்லடி இரண்டையும் தாங்கிப் பழக்கப்பட்ட அண்ணா தந்த இந்த பதிலுரையினை இதர அமைச்சர்களும் கற்றுத் தெளிய

வேண்டிய ஒரு பதிலுரையாகும். அண்ணா "எதையும் தாங்கும் இதயம்" பெற்றுத் திகழ்ந்தார் என்பது இதன் மூலம் விளங்கும்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ, 6,18,6,28 என்று ஒரு கேளவிக்கு அண்ணா பதிலளித்தார். அரசின் உடமை களுக்கு ஏற்பட்ட விரயத்தை எவ்வகையிலும் வசூலிக்க இயலாது என்றார்.

ஆலடி அருணா

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் (பக்தவச்சலம்) மாணவர்களை சந்திக்க மறுத்ததாலும் நாடெங்கிலும் 144 தடை உத்திரவு போட்ப்பட்டதாலும், ராணுவத்தை அழைத்து காட்டு தர்பார் நடத்தியதாலும் தான் இத்தகைய இழப்புக்கள் ஏற்பட்டன. எனவே முன்னாள் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

அண்ணா

அப்படிப்பட்ட ஒரு கருத்து பரவலாக மக்கள் மத்தியில் இருக்கிறது. அதற்கான நடவடிக்கையினை எடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

க.மு. இராசகோபாலன்

இந்த அரசு முன்னாள் முதலமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறது என்ற கேள்விக்கு

அண்ணா

அஞ்சி நடக்கிறது என்ற பதம் பொருந்தாது அன்போடு நடந்து கொள்கிறது என்ற பதம் பொருந்தும்.

அண்ணா கூறிய பதிலுரை அவரது பெருந் தன்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது

எஸ். இராமச்சந்திரன்

தமிழர்கள் நடத்திய வரலாறு சிறப்புமிக்க நிகழ்ச்சியால் முதலமைச்சர், பேரவைத் தலைவர் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்களும் சிறைவாசம் தடியடி துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றிற்கு உள்ளான விபரங்களையெல்லாம் சேகரித்து புத்தக உருவில் வெளியிடப்படுமா?

அண்ணா

தமிழக மக்கள் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளை அவர்களே தொகுத்து வெளியிட்டுக் கொள்வார்கள்.

வி.கே. கோதண்டராமன்

இந்தி எதிர்ப்புப் போரில் ஈடு பட்டவர்களில் எத்தனை பேர் இறந்தார்கள்? இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு சர்க்கார் உதவித் தொகை கொடுக்க உத்தேசம் உண்டா? இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் (அண்ணா) உயிரோடு இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்று கேட்ட போலீஸ் அதிகாரி யார்?

அண்ணா

முதல் கேள்விக்கு ஏற்கெனவே பதில் அளித்தாகி விட்டது. கேள்வியின் கடைசி பகுதிக்கு பதில் அளிப்பதாக இல்லை.

பீர் முகம்மது

தாய்மொழியைக் காப்பாற்றுவதற்காக தவச் செல்வங்களான மாணவ மணிகள் தங்களுடைய இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். இந்த வீரத் தியாகிகளுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னத்தை நமது அரசாங்கம் ஏற்படுத்துமா?

அண்ணாவின் அருள் உள்ளம் தந்த பதிலுரை

அவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் நம்முடைய இதயத்தில் அவர்களுக்கு மதிப்பான இடத்தை அளிப்பதுதான்.

தமிழில் தேசிய கீதம்

ஏ.ஆர். தாமோதரன்

மற்ற நாடுகளில் செய்வதைப் போல் குடியரசு நாள் சுதந்திர நாள் ஆகிய நாட்களில் மட்டுமே நாட்டுப் பண் பாடவேண்டும். மற்ற விழாக்களிலும் திரைப்படக் காட்சிகளிலும் பாடக் கூடாது என்ற மரபு பின்பற்றப்படுமா?

அண்ணா

குடியரசு நாள் சுதந்திர நாள் போன்ற நாட்களில் மட்டும் நாட்டுப்பண் பாடப்பட வேண்டும் என்பது நல்ல யோசனைதான். ஆனால் துரதிருஷ்டவசமாக இதை திராவிட முன்னேற்றக் கழக அரசு வெளியிடு மானால் அது பற்றி வெளியில் தப்பெண்ணம் தோன்றும்.

டி.கே. சண்முகம் கேட்ட மற்றொரு துணை கேள்விக்கு தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்துப் பாடினால் இன்னும் நல்ல உணர்ச்சிமயமாக இருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் தேசிய கீதத்தை ஒரே மொழியில் ஒரே முறையில்தான் பாடவேண்டும் என்று விதி இருக்கிறதென்று கூறினார்.

13

குறுக்கீடுகள்

நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கே. வினாயகம் பேசும் போது முதலமைச்சர் அவர்களுடைய திறமையைப் பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. பொதுநிதி அதாவது பப்ளிக் பைனான்ஸ் என்கின்ற துறையிலே நன்கு படித்தவர். விஷயம் தெரிந்தவர் கூட. புரஃபஸர் சிக்காவிடமே பாடம் கற்றவர். ஆகவே அந்த விதிகளைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அண்ணா

துவக்கத்திலேயே தலையிட வேண்டியிருப்பதைப் பற்றி வருந்துகிறேன். இரண்டு பேருமே (வினாயகம், அண்ணா) புரபஸர் சிக்காவிடம் படித்தவர்கள்தான். ஆனால் புரபஸர் சிக்கா அவர்கள் பொருளாதார பேராசிரியர் அல்ல.

கே. வினாயகம்

அண்ணா அவர்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ அப்போது தகுந்த பொருளாதார ஆசிரியர் இல்லை. ஆகவே திரு அனந்த நாராயணன் இருந்தார். அவரிடம் இருவருமே கற்றுக் கொண்டோம்.

அண்ணா

கனம் உறுப்பினர் அவர்கள் நான் கூறுவதை எரிச்சலோடு எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்., புரஃபசர் சிக்கா அவர்கள் பொருளாதார

பேராசிரியர் அல்ல. சரித்திர பேராசிரியர். அப்பொழுது திரு அனந்த நாராயணன் அவர்களும் இருந்தார். இப்பொழுது நாடாளுமன்றத்திலே இருக்கின்ற புரபொசர் ரங்கா அவர்களும் இருந்தார்.

கே. வினாயகம்

தலைவர் அவர்களே, ஆகவே விஷயம் தெரிந்து இருக்கிறது. நன்கு படித்தவர் முதலமைச்சராக இருப்பதாலே, இந்த நேரத்திற்குத் தகுந்தாற்போல் சரிவர, ஒரு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை என்று அண்ணா அவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து தொடர்ந்து பேசுகையில்,

அண்ணாவைக் கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு, "ஆட்சியில் இருப்பவர்களைப் பார்த்துக் குறை சொல்வது சுலபம். முன்பு அவர்கள் வரி போடும் போது அநியாயமான வரி போட்டுவிட்டார்கள். மக்கள் வரிச் சுமையைத் தாங்க முடியவில்லை என்றெல்லாம் சொன்னார்கள், கேலியாகக் கூட 'ஜனவரி, பிப்ரவரி'யைத் தவிர மற்ற வரிகளையெல்லாம் போட்டு விட்டார்கள் என்று அடுக்கு மொழியிலே சொல்லி மக்களை நம்ப வைத்தார் என்று கூறும் போது அண்ணா குறுக்கிட்டு நண்பர் அவர்கள் தெரிந்து கொள்வதற்காகச் சொல்லுகிறேன். இதுவரை போடப்படாத வரிகள் ஜனவரி பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்கள் தான் என்று சொன்னது காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்களாவார்" என்றார்.

அதற்கு மீண்டும் கேலியாக கே. வினாயகம் கூறுகையில், அதற்கும் நன்றி எங்களுடைய ஆசிரியருடைய பாடத்தைத் தான் நீங்கள் திருப்பிச் சொல்லி இருக்கிறீர்கள் என்று கூற அண்ணா சத்தியமூர்த்தி அந்தப் பாடத்தைச் சொன்னபோது நானோ நண்பர் திரு வினாயகமோ

அவரிடத்தில் சீடர்கள் இல்லை என்ற உண்மை நிலையை கூறியவுடன் வினாயகம் "ஜோக் அபார்ட்" என்று கூறி நிதி நிலை அறிக்கையின் மீது தொடர்ந்து பேசினார்.

அண்ணாவின் சாதுர்யமும். நினைவாற்றலும் இதில் புலப்படுகிறது. ஜெயராஜ் எனும் உறுப்பினர் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தஞ்சை ஜில்லாவின் நிலப்பரப்பின் பெரும் பகுதி மடாலயங் களுக்கும், தேவாலயங்களுக்கும் சொந்தமாக இருக்கின்றது. அங்கு விவசாயிகளிடமிருந்து குத்தகை என்ற முறையில் எழுதி வாங்கிக் கொண்டு, இரண்டு ஆண்டு காலமாக மழை பெய்யாத காரணத்தால் விளைச்சல், உற்பத்தி அதிகம் இல்லாத நிலையில் குத்தகைக்கு நெல் கொடுக்கவில்லை என்று கூறி அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த விதமான வெளியேற்றமும் கூடாது என்பதற்காக ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக் கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய சந்திரமோகன், நீதி தேவன் மயக்கம் என்னும் நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். அதிலே இந்த குறைபாடுகளை யெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை யெல்லாம் வெறும் நாடகமாக இல்லாமல் நல்ல பலன் தரத் தக்க அளவுக்கு மக்களுக்கு வாக்களித்தது போல் நிறைவேற்றித் தர கோருகிறேன்.

அண்ணா பதிலளிக்கையில் "நண்பர் அவர்கள் நிலப் பிரச்சினைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த தொடர்பில் என்னுடைய இரண்டு நாடகங்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த இரண்டு நாடகங்களிலும் நிலப் பிரச்சினை இல்லை. நிலப்பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு இருக்கிற நாடகம் "சந்திரோதயம்" எனும் நாடகம். அதனை நண்பர் காண்பதற்கேற்ற முறையில் மறுபடியும் நடிப்பதற்கு இல்லையே என்று வருத்தப்படுகிறேன். அவர்கள் பார்க்காத

நாடகம் பற்றி இவ்வளவு அழகாக விமர்சனம் செய்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

இதிலிருந்து அண்ணா அவர்கள் பல காலங்களுக்கு முன்பே நாடகம் மூலமாகவும் சினிமாத்துறை மூலமாகவும் மக்களுக்குக் கூறிய கருத்துக்களை செயலாக்கம் செய்வதில் உறுதியாக இருந்தார் என்பது தெரிகிறது.

காங்கிரஸ் உறுப்பினரான எஸ். இராமலிங்கம் பேசும் போது "அவர்கள் சொன்னார்கள் பராசக்தி என்று எண்ணுகிறேன். எச்சிலை தனிலே எரியும் சோத்துக்கு பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே என்று சித்தரித்துக் காட்டினார்கள். இது அப்போது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கருணாநிதியால் எழுதப்பட்ட வசனமாகும். அவர்கள் வந்தபிறகு ரோட்டிலே பிச்சை எடுப்பதே இருக்காது என்பதற்கு உடனடியாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று பேசிய போது அண்ணா குறுக்கிட்டு 15 வருடங்கள் எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். அந்த நிலமைகளையெல்லாம் மாற்றிக் காட்டுகிறோமா என்பதை அப்போது கேளுங்கள்" என்று கூறினார்.

நான் நாத்திகனா ?

நாத்திகத்தை புகுத்துவதாக குற்றஞ்சாட்டி பேசிய எதிர்க்கட்சித் தலைவருக்கு அண்ணா கூறியதாவது:

அரசாங்க அலுவலகங்களில் கடவுள் படங்கள் மாற்றப்படுவது குறித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர், நாங்கள் ஒரே நாத்திகக் கொள்கையை மக்கள் மீது திணிப்பது போல் பேசினார். அது மட்டுமல்ல. இரணியனுக்கு ஏற்பட்ட கதிதான் எனக்கும் ஏற்படும் என்று ஒரு கதையைச் சொன்னார்.

இரணியன் பிரகலாதன் கதை அவருக்குத் தெரிந்து இருப்பது போலவே எனக்கும் தெரியும் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் உணர்ந்திருப்பார் என்று கருதுகிறேன்.

அந்தக் கதை தெரிந்து இருந்தும் அப்படி நான் செய்வேன் என்று எதிர்பார்க்கிறார் என்றால் அவரது நிலைக்காக மிகவும் பரிதாபப்படுகிறேன்.

ஆத்திகம் என்பது சில இடங்களில் சாமியின் படங்களை மாட்டி வைப்பதாலோ, மாற்றுவதாலோ ஏற்படுவதல்ல. அது உள்ளத்திலேயே ஏற்படுகின்ற உணர்வு. ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

இந்த அரசு ஆத்திக எண்ணம் கொண்டவர்கள் மனம் புண்படும்படியான எந்த ஒரு செயலையும் செய்ததில்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். அது மட்டுமல்ல. ஆத்திக எண்ணம் கொண்டவர்கள் கொண்டாடுகின்ற பல்வேறு திருவிழாக்கள் மகாமகம் போன்ற பண்டிகைகளுக்கு - அரசாங்கம் உதவி புரிந்ததை இந்த நாடறியும். நல்லவர்கள் உணர்வார்கள். ஆகவே அரசாங்க அலுவலகங்களில் கடவுள் படங்களை மாட்டுவதால் இரணியன் போல் ஆகி விடுவேன்" என்று கூறுவது என்பது எப்படியாவது இவன் அழிய மாட்டானா? என்ற அவர்களது ஆசையைத்தான் காட்டுமே தவிர உண்மையில் எங்களை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள்!

நாடோடி நாடாளுவதா ?

அண்ணா ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் விஷமிகள் சிலர் சென்னை நகரிலுள்ள பல குடிசைப் பகுதிகளுக்கு தீ வைத்து கொளுத்தி வரத் தலைப்பட்டனர். இது பற்றிய பிரச்சினையை எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி அடிக்கடி எழுப்பி வந்தது. ஆளும் கட்சி சார்பில் பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இருப்பினும் உறுப்பினர்கள் பல்வேறு நேரங்களில் இதேப் பிரச்சினையை எழுப்பி வந்தனர்.

ஒருநாள் காங்கிரஸ் உறுப்பினர் டீ. மார்ட்டீன் நாடோடி மன்னன் என்னும் திரைப்படத்தில் "குடிசைகள் கொளுத்தப்படும்" எனும் வார்த்தைகளை மட்டும்

வைத்துக் கொண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். எனவே குடிசைகள் கொளுத்தப்படுகின்றனவா எனும் பொருள்பட அந்த வசனத்தைக் குறிப்பிட்டு பேசும்போது அண்ணா அளித்த பதிலுரை அவரது அரசியல் சாதுர்யத்தை எடுத்துக் கூறியது.

டீ. மார்ட்டீன்

நாடோடியாக இருந்தவன் திடீரென்று மன்னனாக வந்தவுடன் அவசர அவசரமாக உத்தரவு இடுகிறான். நிலம் இல்லாதவர்களுக்கு நிலம், வீடு இல்லாதவர்களுக்கு வீடு என்று. இந்த இரண்டு உத்தரவுகளையும் போட்டுவிட்ட பிறகு கூட்டத்தில் இருந்து ஒரு குரல் கேட்கும் குடிசைகள் என்ற குரல், உடனே கொளுத்தப்படும் என்று இருக்கும். நர்டோடியாக இருந்தவன் திடீரென்று மன்னனாக வந்தவுட்ன் குடிசைகளைப் பற்றிய உத்தரவு கொளுத்தப் படும் என்ற உத்தரவு. திடீரென்று வந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக்கும் குடிசைகள் எரிவதற்கும் தொடர்பு இருக்கிறது.

உடனே பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி குறுக்கிட்டு "நாடோடி மன்னன்" படத்திலே குடிசை என்று வந்ததும் கொளுத்தப்படும் என்று வந்ததாக.

மார்ட்டீன்

கொளுத்தப்படும்...

மு. கருணாநிதி

கொளுத்தப்படும் என்று வந்ததாகச் சொன்னீர்கள். அந்த வசனத்தை எழுதியவரே அந்தக் கட்சியின் தளபதியாக இருப்பவர்தான்.

டீ. மார்ட்டீன்

எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதல்ல. திடீரென்று வந்த ஆட்சியில் திடீரென்று ஏற்பட்டிருக்கிறது.

அண்ணா

அதிலே கூட நாடோடியாக இருந்து விட்டு நாடாள வரவில்லை. அதிலே வருகின்ற இருவரும் ஒரே உருவமைப்பு கொண்டிருந்ததால் வருகிறார். நாடோடியாக இருந்ததால் நாடாள வரவில்லை. படம் பார்த்தால் மட்டும் போதாது. புரிந்து கொள்ள வேண்டும்.

மார்ட்டீன்

புரிந்து கொண்டு தான் சொல்லுகிறேன். எல்லோருக்கும் ஆளுவதற்கு அரசியல் சட்டத்திலே இடம் இருக்கிறது என்பதை அறிந்து தான் கூறுகிறேன்.

அண்ணா

அப்படி இருக்கும்போது நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தவர்கள் என்றால் அப்படித் தான் இருக்குமென்று படத்தில் வந்ததைச் சுட்டிக் காட்டிச் சொல்வது பண்பான பேச்சாகத் தோன்றுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

டீ. மார்ட்டீன்

தீப்பிடித்ததைப் பற்றி ஒரு மூதாட்டி கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற போது பட்டத்தில் வந்ததைச் சொல்வதற்கு ஏன் இடம் இல்லை என்று கேட்கிறேன்.

அண்ணா

நாடோடியாக இருந்தவன் நாடாள வந்தான் என்று நாடோடி மன்னன் கதையைக் காட்டி நாடோடியாக இருந்தவர்கள் நாடாள வந்தால் இப்படித் தான் நடக்கும் என்று பொதுப்படையான கருத்தை எங்களை மனதில் வைத்துக் கொண்டு பேசுவது சரிதானா? பண்பான பேச்சுதானா?

மார்ட்டீன்

நான் முதலமைச்சர் அவர்களை நாடோடி என்று குறிப்பிடவில்லை.

அண்ணா

தாங்கள் பேசியதை ஓய்வாக மறுபடியும் படித்துப் பாருங்கள் என்று சொல்லி மேலும் தொடர்ந்து பேசுகையில் "நாடோடிகளாக இருந்தவர்களுக்கு நாடாள்வது பெருமை. நாடாண்டவர்கள் நாடோடி களாவது பெருமையல்ல.

மார்ட்டீன்

மீண்டும் ஒரு நாள் நாடாள வரலாம் என்பதை ஞாபமூட்டுகிறேன்.

அண்ணா

சுக்ர தசை அடித்தால் அப்படி வரக்கூடும் என்று நையாண்டியுடன் அரசியல் ஆருடம் கூறினார்.

இதைத் தொடர்ந்து அண்ணா ஓர் வேண்டுகோள் விடுத்தார். அது அனைத்து உறுப்பினர்களுக்கும் பொருந்தும் அறிவுரையாகும்.

"அவையிலே பேசும் போது பண்பற்ற முறையிலே பேசக் கூடாது., திரு மார்ட்டீன் அவர்கள் சட்டமன்றப் பேச்சாளராக விளங்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இப்பொழுது கையாளுகிற முறைகளால் அப்படி விளங்க முடியாது,

இந்த முறைகளை மாற்றிக் கொள்வார்களேயானால் எந்தப் பக்கத்தில் இருந்தாலும் விளங்கமுடியும். இந்த முறை அல்ப சந்தோஷத்தைத்தான் கொடுக்கும். பேசிவிட்டு வெளியே போனவுடன் முதுகைத் தட்டிக் கொடுக்கலாம். பார்த்தாயா நாடோடி என்று சொன்னேன் என்று திருப்தி அடையலாம். ஆனால் அந்தத் திருப்தி நீண்ட திருப்தியைத் தராது" என்றார்.

ஆண்டுகள் முப்பது உருண்டோடிவிட்டன. சுக்ர தசையும் அடிக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சிக்கும் வரவில்லை,

தி.மு.க.

14

அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

"என்னுடைய மாநிலத்து அமைச்சர்கள் திறமை மிக்கவர்கள் நிர்வாகம் செய்யத் தெரிந்தவர்கள் என்றெல்லாம் நான் பாராட்டியிருக்கிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால் நீங்கள் ஆளத் தகுதியுள்ள வர்கள் என்பதை ஒப்புக்கொண்டு, என்னுடைய அரசியலை நடத்திக் கொண்டிருந்தேன். நீங்கள் "நாங்கள் ஆளத் தகுதியற்றவர்கள்" என்று மனதில் எண்ணத்தை வளர்த்துக் கொண்டு விட்டீர்கள். அதை மாற்றிக் கொள்ளக் கொஞ்ச நாளாகும்"

– அண்ணா

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 164(2)-வது பிரிவின் படி ஒவ்வொரு மாநில அமைச்சரவையும், அம்மாநில சட்டமன்றப் பேரவைக்குப் பொறுப்புடையதாகும். எனவே மாநில அமைச்சரவை மாநில சட்டமன்றப் பேரவையின் நம்பிக்கையை இழந்துவிட்டால், அது பதவியிலிருந்து விலக வேண்டும் என்பது அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டுள்ளது.

அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு தலைவரின் இசைவும் பேரவையின் அனுமதியும் தேவை.. பேரவையின் அனுமதியைப் பெற, பேரவையின் குறைவெண் எண்ணிக்கைக்கு மேற்பட்ட

உறுப்பினர் ஆதரிக்கவேண்டும். அந்த வகையில் நமது சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையில் 24 உறுப்பினர்கள் ஆதரித்தால் போதுமானது. ஆனால் தீர்மானம் வெற்றி பெறுமானால் அவை உறுப்பினரில் பாதி பேருக்கு மேல் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டும். அப்படிப் பார்க்கையில், நம்முடைய சட்டமன்றப் பேரவையில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் 118 உறுப்பினர்களுக்கு மேல் ஆதரவாக வாக்களிக்கவேண்டும்.

நமது சட்டமன்ற வரலாற்றில் நீதிக் கட்சி அமைச்சரவை மிகச் சிறப்பாக செயல்பட்டு பணியாற்றிய நேரத்தில் மக்கள் இரண்டாவது பொதுத் தேர்தலில் அக்கட்சிக்கே ஆதரவு தெரிவித்து 1923 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியில் அமர்த்தினர். அதைக் கண்டு ஒருநாள் கூட பொறாத காங்கிரசார் சுயராஜ்யக் கட்சி என்ற பெயரில் மேலவையில் அமர்ந்து நீதிக் கட்சி ஆட்சியின் மீது — பனகல் அமைச்சரவையின் மீது — நம்பிக்கையில்லாத் தீர்மானம் சி.ஆர். ரெட்டி அவர்களால் கொண்டு வரப் பட்டபோது காங்கிரஸ்காரர்கள் ஆதரித்துப் பேசினர்.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பொது மக்களின் அக்கறை இந்த விவாதத்தில் தூண்டப்பட்டது. பொது மக்களில் பெரும்பாலோருக்கு மேலவையின் உள்ளே செல்ல இடம் இல்லாத காரணத்தால் அனுமதி கிடைக்கவில்லை. அவர்கள் எல்லாம் இத்தீர்மானத்தின் முடிவினை அறிய திரளாக சட்டமன்றத்திற்கு வெளியே கூடியிருந்தனர். இதன்மீதான விவாதம் இரண்டு முழு நாட்கள் நடைபெற்றன. தீர்மானத்திற்கு ஆதரவாக சுய ராஜ்ய உறுப்பினரும் முஸ்லீம் உறுப்பினரும் வாக்களித் தனர். நீதிக்கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் எதிராக வாக்களித்தனர். ஆதரித்தோர் 43 பேர் எதிர்த்தோர் 65 பேர். நடுநிலை வகித்தோர் 10 பேர் என்ற நிலையில் தீர்மானம் தோல்வியுற்றது எனத் தலைவர் அறிவித்தார். ஒருநாள் கூட

நீதிக்கட்சியின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளாமல் அதைத் தோற்கடிக்க காங்கிரஸ் செய்த முயற்சி வெற்றி காண வில்லை. நீதிக்கட்சியின் ஆட்சி தொடர்ந்து பீடு நடை போட்டது. இத்தீர்மானம் பின்னாளில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கு முன்னு தாரணமாகும்.

1958ஆம் ஆண்டு காமராஜர் முதலமைச்சராக இருந்த போது, அவரது அமைச்சரவையின் மீது ஒரு நம்பிக்கை யில்லாத் தீர்மானம் எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டது. விவாதத்தில் உறுப்பினர்கள் பேசிய பிறகு எதிர்க்கட்சித் தலைவர்களான திருவாளர்கள், பா. சின்ன துரை, எம். கல்யாணசுந்தரம், அண்ணா அவர்கள் உரைக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி.கே. ராமசாமி முதலியார் பேசினார்.

விவாதத்தின் இறுதியில் திரு. சி. சுப்ரமணியம், அவை முன்னவர், இரண்டு மணி நேரம் பதிலளித்தார். பின்னர் வாக்கெடுப்பு கேட்கப்பட்டது.

அந்நேரத்தில் அண்ணா அவர்கள் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் தன்னிலை விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே என் கட்சி கலந்து கொண்டு உரையாற்றிய போது இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை ஏற்பாடு செய்ய இந்த சர்க்கார் இணங்க மறுக்கும் போக்கை முக்கியமாக கவனித்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தி.மு.க. ஆதரிக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்தியிருகிறேன். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன் மொழிந்தவர் முன்பும் கூறினார். மீண்டும் இப்போதும் வலியுறுத்திக் கூறுகிறார். இந்த சம்பவங்கள் அவ்வளவுக்கும் காரணமாகவும், தூண்டியவர்களாகவும் உள்ளவர்கள்

முதலமைச்சர் காமராஜரும், போலீஸ் அமைச்சர் பக்த வச்சலமும் தான் என்று, நாங்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதாய் இல்லை. எங்கள் அதிருப்தி அவ்வளவும் நீதி விசாரணை செய்ய இந்த சர்க்கார் இணங்க மறுக்கிறதே என்பதன் பேரில்தான். முக்கியமாக அலுவல் ஆய்வுக்குழு வில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி, நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தத் தேவையில்லை. விவாதித்தாலே போதும் என்று முடிவு செய்து இருந்தோம். இந்த முடிவுக்கு நான் ஒப்பமளித்து இருக்கின்றேன். இந்த சமயத்தில் அந்த ஏற்பாட்டு முறை குலைவது கண்டு நான் வெளிப்படையாக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறி வாக்கெடுப்பு தேவையில்லை. இருப்பினும் நீதி விசாரணைக்கு அரசு இணங்காததால் வெளி நடப்பு செய்வதாகக் கூறி தி.மு.க. உறுப்பினர்களுடன் வெளி நடப்பு செய்தார்.

அண்ணா

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தலில் ஒரு வித்தியாசமான போட்டி தமிழ்நாட்டுத் தலைவர்கள் இடத்தில் காணப் பெற்றது. அகில இந்திய கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து சட்டமன்றப் பேரவைக்குப் போட்டியிட்டார். அதே நேரத்தில் மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து போட்டியிட்டார். இரு பெருந் தலைவர்களில் காமராஜர் தேர்தலில் தோல்வியைத் தழுவினார். அண்ணா மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தி.மு.க. சார்பில் 15 பேர் சட்டப் பேரவைக்குச் சென்ற போதும், 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பேரவையில் பணியாற்றிய போதும் நல்ல எதிர்கட்சியாக திராவிட

முன்னேற்றக் கழகம் விளங்கவில்லை என்று காங்கிரஸ் காரர்கள் கூறி வந்த போதெல்லாம் அண்ணா, "நீங்கள் அடிக்கடி எதிர்க்கட்சி சரியில்லை சரியில்லை என்று சொல்வதைப் பார்த்தால் விரைவில் அந்தக் குறையை நீங்களே போக்கி விடுவீர்கள் என்று எண்ணுகிறேன்" என்பார்.

மேலும் அண்ணா கூறுகையில் "நீங்கள் இப்பொழுது அமர்ந்துள்ள இடத்தில் நாங்களும் அமர வேண்டியவர்கள் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தொலை நோக்கோடு கூறினார்.

அண்ணா கூறியது போன்றே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது. திராவிட முன்னேற்றக் கழகம் 138 இடங்களிலும் காங்கிரஸ் 49 இடங்களிலும் வென்றன.

அண்ணா முதலமைச்சராக 6.3.1967 அன்று பதவிப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் அரசு, மக்களுக்குப் பல நன்மைகள் செய்து வெற்றி நடை போட்டு வந்தது. இந்நிலையில் பேரவையில் காங்கிரசார் 1968 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அண்ணா அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். அதில் 11 குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

தீர்மானத்தை முன் மொழிந்த எதிர்க்கட்சித் தலைவர் ஜி. கருத்திருமன் பல குற்றச்சாட்டுகளை அமைச்சரவை மீது சுமத்தினார். அப்போது அண்ணா பல முறை குறுக்கிட்டு அவர் கூறிய பல தவறான கருத்துக்களுக்கு விளக்கம் அளித்து வந்தார். ஒரு கட்டத்தில் முதலமைச்சர் அண்ணா குறுக்கிட்டு கூறுகையில்–

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறான தகவல்களையே கொடுத்துக் கொண்டு போவதால் குறுக்கிடுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அடிக்கடி குறுக்கிடுவதற்கான நிலையில் என்னுடைய உடல்நிலை

சரியில்லை., விவசாயிகளுக்குக் கட்டுப்படியான முறையில் கொள்முதல் விலை இருக்கவேண்டும் என்பது பொதுத் தத்துவம். நியாயம், அதே நேரத்தில் கொள்முதல் விலையை அதிகப்படுத்திக் கொண்டே போனால் வாங்கி உண்பவர் களுக்கு விலை கூடிக்கொண்டே போகும். வாங்கி உண்பவர்கள் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று வாங்கி சாப்பிட்டாலும் பரவாயில்லை. கொள்முதலுக்கு மட்டும் அதிகமான விலை, கட்டிப்படியாக கூடிய விலை கொடுக்கவேண்டும் என்பது சரியான வாதமாகாது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தினை எதிர்த்து பதிலளிக்கையில் அண்ணா கூறியதாவது;

"அவர்களுக்கு எங்களிடத்திலே நம்பிக்கையில்லை யென்று சொல்லிவிட்ட பிறகு நாங்கள் எடுத்துச் சொல்லுகிற விஷயத்தில் மட்டும் நம்பிக்கை வந்துவிடும் என்று எதிர்பார்ப்பது விந்தையாகும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்களே அவர்கள் என்றைய தினமும் எங்களிடத்திலே நம்பிக்கை வைத்து அரசியலை நடத்தவில்லை. ஆனால் அதற்கு நேர் மாறாக அவர்களிடத்திலே அன்றும் இன்றும் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன குற்றச் சாட்டுக்கள் இன்றைய தினம் மட்டும் புதிதாக சொல்லப் படுகிற குற்றச்சாட்டுகள் அல்ல. ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்ட நாளிலேயே ஒவ்வொரு சந்தர்ப்பம் கிடைக்கிற போதும் சட்டமன்றத்திலேயும் சட்ட மன்றம் கூடாத நாட்களில் வெளியிலேயும் அவர்கள் அடுக்கடுக்காகச் சொல்லிவந்த குற்றச் சாட்டுகளைத்தான் இன்றைய தினம் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார்கள்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் அந்த நேரத்தில் பல்வேறு வகையான குற்றச்சாட்டுக்களை

எடுத்துப் பேசுவதும் ஜனநாயகத்தில் ஒரு மரபாக இருக்கிறது. ஆகையால் இந்த அரசின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வருவதும் அந்த நேரத்தில் பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை எடுத்துப் பேசுவதும் ஜனநாயகத்தில் ஒரு மரபாக இருக்கிறது. ஆகையால் இந்த அரசின் பேரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததனாலே இந்த அரசுக்கோ அல்லது இநத் அரசை நடத்துகின்ற கழகத்திற்கோ எந்த வகையிலும் மாசு வந்து விடும் என்றோ மரு ஏற்பட்டு விடுமென்றோ, இழுக்கு ஏற்பட்டு விடும் என்றோ நான் துளியும் கருதவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவை கொண்டு வரமுடியும். தொடர்ந்து மறுபடியும் 6 மாதம் கழித்த பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவோம் என்று மறைமுகமாக சுட்டிக் காட்டினார்கள். நீங்கள் எத்தனை முறை வேண்டு மானாலும் கொண்டு வாருங்கள்.

மக்கள் நம்பிக்கை எங்களுக்கே

பொது மக்களுக்கு எங்களிடத்தில் நம்பிக்கை இருக்கிற வரையில் பொது மக்கள் எங்களிடத்தில் நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணும் வரையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் எங்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள தொடர்பை ஒரு துளியும் பாதிக்காது என்பதை நாங்கள் மிக நன்றாக அறிந்தவர்கள்.

நான் இடையிடையே அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடையிலேயே குறுக்கிட நேர்ந்தது என்று வருத்தப்படுகிறேன். கவலைப்படுகிறேன். அதனால் மற்ற விவரங்கள் அப்போதைய விஷயங்கள் காதில் விழுந்தவை, யாரோ சொன்னார்கள், எங்கோ கேள்விப் பட்டோம் என்ற மாதிரியான புகார்களை இந்த மன்றத்திலே எடுத்துச்

சொல்லி, அவைகள் எல்லாம் அச்சில் ஏறி, அச்சாகி வெளியிலே பொதுமக்கள் பார்க்கின்ற நேரத்தில் என்ன இவைகளுக்கு அமைச்சரவை யிலே யாரும் பதில் சொல்லவில்லை என்ற நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் உடனுக்குடன் இவை களையெல்லாம் எடுத்துச் சொன்னேன். அவைகளில் பலவற்றை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள். அவைகளுக்குப் பொருந்துமாறு எடுத்துக்காட்டு நான் எடுத்துச் சொன்ன நேரத்தில் அதை ஏற்றுக் கொண்டீர்கள். சில விஷயங் களுக்கு நன்றி தெரிவித்தீர்கள். அது அப்படியானால் ஒப்புக் கொள்கிறேன் என்றீர்கள். இப்படி ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கும் நான் பதில் அளித்த நேரத்தில் நீங்கள் அந்த விளக்கங்களிலேயே பலவற்றை ஏற்றுக்கொண்டீர்கள்.

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க வழி செய்து கொடுப்பேன்

மற்றபடி ஒவ்வொரு குற்றச்சாட்டையும் எடுத்து ஒவ்வொன்றாக பதில் அளிப்பேன் என்று நண்பர்கள் எண்ணிக் கொண்டிருந்தால் அவர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதற்காக வருந்த வேண்டி இருக்கிறது... மொத்தத்தில் எங்களுக்கு இருக்கிற நிலையை உங்களால் தாங்க முடியவில்லை. சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆகையால், இந்த அரசின் மீது மாசு கற்பிக்கவேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எடுத்துச் சொல்லப்பட்ட ஒரு குற்றச்சாட்டுக்கும் போதுமான ஆதாரம் இல்லை. நாங்கள் ஒரு வருடத்திற்கு மேலாகவே வனவாசம் இருந்துவிட்டோம். இனி எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. நீங்கள் எப்படியாகிலும் நாங்கள் வருவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று தனிப்பட்ட முறையில் - நண்பர் என்ற முறையில் அணுகுவார்களானால், அவர்கள் திரும்ப ஆட்சி பீடம் வருவதற்கு மக்கள் அவர்களை மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும் நேரத்தில் நிச்சயமாக வழி செய்து

கொடுப்பேன். ஆனால் நீங்கள் சென்று கொண்டிருக்கிற போக்கு - என்னுடைய இடது சாரி கம்யூனிஸ்ட் தோழர் சொன்னதைப் போல நீங்கள் திரும்பி வருவதற்கான காலத்தை வெகுதூரம் தள்ளிக் கொண்டு செல்கின்றீர்களே தவிர, திரும்ப அழைத்துக் கொள்ளத் தக்கதாக அமைத்துக் கொள்ளவில்லை.

என்னுடைய அரசின் சாதனைப் பட்டியலை வெளியிட்ட பிறகு 1ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வில் 600 பேர்கள் மண்டையில் அடிபட்டார்கள் என்பதற்கு விளக்கம் அளிக்கையில் அதற்கான முழுத் தகவலையும் நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைத் தருவதற்கு முன்னால் நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். 300 பேர்கள் அல்ல மூன்று பேர்கள் அடிபட்டிருந்தாலும் அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அடிபட்டவர்கள் தொகை அதிகமானால் தான் வருத்தப்படவேண்டும். ஓரிருவர் அடிபட்டால் வருத்தப்படவேண்டாம் என்று எண்ணத்தக்க நிலை எங்களுக்கு இல்லை. காரணம் அடிபட்டவர்களின் பட்டியலில் நாங்களும் இருக்கிறோம்.

ஜவஹர்லால் நேரு அவர்கள் இங்கு வந்த நேரத்தில் கோட்டை ரயில்வே நிலையத்தில் கருப்புக் கொடி காட்டியதற்கு சென்ற நேரத்தில் ஒரு பக்கத்தில் முள் வேலி இன்னொரு பக்கத்தில் ரெயில்வே ஓரமாக போடப்பட்ட மதில் சுவர். இந்த இரண்டிற்கும் இடையில் ஓட முடியாத நிலையில் துரத்தித் துரத்தி எங்கள் கழகத் தோழர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்கள் முள் வேலியில் உருட்டித் தள்ளப்பட்டார்கள்.

நீங்கள் கேட்டால் நம்ப மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு மருத்துவமனையில் இடம் கிடைக்கவில்லை. தனிப்பட்ட மருத்துவர்கள் கூட வர மறுத்தார்கள். இன்றைய தினம் பெரிய நிலையிலே இருக்கிற ஒரு தமிழ்ப் பெரும் புலவர் கூட உருட்டி உருட்டித் தாக்கப்பட்டார். அவர்களுக்குக் கூட மருத்துவமனையில்

இடம்தர மறுத்து விட்டார்கள். அப்போது எங்கள் கழகம் தங்க சாலைத் தெருவில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்தது. நாங்கள் தேடித் தேடிப் பிடித்து ஒரு மருத்துவரை அழைத்து வந்து அவர்களுக்கு முதல் சிகிச்சை அளிக்கும்படி சொல்லிவிட்டு நாங்கள் கூட இருந்து கதறினோம். அந்த அனுபவம் இருப்பதால்தான் சொல்லுகிறேன். யார் அடிபட்டாலும் ஈவு இரக்கமின்றி அடிபடட்டுமே என்று எண்ணக் கூடியவர்கள் அல்ல நாங்கள்.

சர்க்கார் – எதிர்கட்சி விளக்கம்

இன்னொன்று ஒரு சர்க்கார் உண்மையிலேயே நேர்மையற்ற சர்க்கார், திறமையற்ற சர்க்கார், நம்பிக்கைக் குரிய சர்க்கார் இல்லை, நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியமில்லாத சர்க்கார் என்பவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்க 14 மாதம், 15 மாதம் போதிய காலம் தானா என்பதை நம்முடைய நண்பர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அதை அறிந்து கொள்ளாமல் அவர்கள் திருக்குறள் பற்றிய புத்தகங்கள் இரண்டு மூன்று வைத்து இருக்கிறார்கள். இப்போது இல்லாவிட்டாலும் இதெல்லாம் முடிந்த பிறகு பார்க்கட்டும். அவற்றைப் பிரித்து அதிலே இடம் அறிதல், காலம் அறிதல், வேலை அறிதல், வகை அறிதல் இவைகள் எல்லாம் தேவை என்பதை திருவள்ளுவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் இடத்தை அறியாமல் 50க்கும் குறைவாக இருப்பதால், எந்த இடத்தில் பேசலாம் என்று வகையறியாமல் அளவு அறியாமல் குற்றச் சாட்டுகள் சொல்வதில் அளவு இருக்கவேண்டுமே என்பதை எண்ணிப் பார்க்காமல் பேசிக் கொண்டே போனீர்களே தவிர, சொல்லப்பட்ட எதையாகிலும் மறுத்துப் பேசாமல் இருந்து இருக்கிறோமா விளக்கம் கொடுக்காமல் இருந்து இருக்கிறோமா என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

விவாதத்திற்கு அண்ணா பதிலளித்து 100 நிமிடங்கள் பேசினார், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விட்ட போது தீர்மானத்திற்கு ஆதரவாக காங்கிரஸ் உறுப்பினர்கள் 37 பேர் மட்டுமே வாக்களித்தனர். காங்கிரசின் அவை மொத்த உறுப்பினர் 49 பேர். அதில் 12 பேர் அன்று கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்திற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரக் கட்சி, வலது கம்யூனிஸ்டு, இடது கம்யூனிஸ்ட் முஸ்லீம் லீக், குடியரசு கட்சி. உறுப்பினர்களும் உட்பட 156 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

காங்கிரஸ் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி கண்டதாக துணைத் தலைவர் புலவர் கே. கோவிந்தன் அறிவித்தவுடன் அவையே ஆர்ப்பரித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

அண்ணா இன்னமுமா இருக்கிறாய்

கருத்திருமன் முன் மொழிந்து பேசிய நேரத்தில் அண்ணா 38 முறை குறுக்கிட்டுப் பேசினார். பின்னர் விவாதத்திற்கு பதிலளித்து கருதிருமன் பேசுகையில் 27 முறை குறுக்கிட்டுப் பேசினார். மேலும் காங்கிரஸ் உறுப்பினர்களான ஆர். பொன்னப்ப நாடார் பேசும் பொழுது 17 முறையும், கே. வினாயகம் பேசும் போது 32 முறையும் ஜி. பூவராகன் பேசுகையில் 28 முறையும் குறுக்கிட்டு விளக்கமளித்தும் தவறை திருத்தியும் பேசினார்.

இதனால்தான் மெயில் பத்திரிக்கை தனது தலையங் கத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் புதுமை இல்லை அண்ணாதுரையின் குறுக்கீடே சுவையூட்டியது என்று எழுதியது. அது வருமாறு. "நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஆளுங்கட்சி மக்கள் கண்களுக்கு மதிப்புக் குறைந்ததாகத் தோன்றச் செய்ய எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்துள்ள ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம் ஆகும். அது நன்கு சிந்தித்து சரியான நேரத்தில் கொண்டு வரப்பட்டதாக இருக்கவேண்டும்.

இது உண்மையிலேயே பயன் அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமானால் பொது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி அவையிலுள்ள கட்சிகளின் ஆதரவினையும் பெறக் கூடியதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அதிகாரத்திலுள்ள கட்சி நிலமையை உணருவதற்கு தலைப்பட்டு, தன் கொள்கைகளைப் பற்றி பரிசீலனை செய்யும்.

எதிர்கட்சியினரின் 11 அம்சக் குற்றச்சாட்டுக்களையும் அதன் மீது கடந்த இரண்டு நாட்களாக நடந்த விவாதங்களையும் கேட்ட யாருக்கும் சுவாரஸ்யமற்ற

உணர்ச்சிதான் ஏற்பட்டிருக்கும். குற்றச்சாட்டுகளிலோ அதற்கு ஆதரவான விவாதங்களிலோ புதுமையே இல்லை என்பதுதான் இதற்குக் காரணம். எனவே விவாதம் உணர்ச்சியை ஏற்படுத்துவதாக இல்லை.

எனினும் முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் காங்கிரஸ் உறுப்பினர் பேசும் போதெல்லாம் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசியது விவாதத்தை சுவை உள்ளதாக்கியது."

முன்நிகழ்வுகள்

தன்னைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு அவதூறாகப் பேசினார்கள் என்பது பற்றி ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அண்ணா பேசுகையில் அண்ணா குறிப்பிட்டதாவது "தரக் குறைவான பிரச்சாரங்களைப் பற்றிப் பேசினார்கள். நான் இந்த மன்றத்தில் முதன் முதலாகச் சொல்கிறேன். இருபது வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சி இருந்தும் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வில்லை. ஆகையால் இந்த ஆட்சி மாற்றப்படவேண்டும் என்று நான் பேசியதற்கு பதில் அளிக்க உங்களுடைய காங்கிரஸ் பேச்சாளர்களில் ஒருவர் மேடையிலே பேசி பத்திரிக்கையிலே வெளிவந்த செய்தியைச் சொல்கிறேன். 'இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியில் பலன் கிடைக்கவில்லை. ஆகையால் மாற்றவேண்டும் என்று' அண்ணாதுரை பேசுகிறானே. இவனுக்குத் திருமணமாகி வருஷங்கள் இருபது ஆகிறது. இன்னும் ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. அப்படியானால் அவன் மனைவி ராணிக்கு வேறு ஒரு கணவனைத் தேடலாமா? இதைக் கூறும் போது உணர்ச்சிவசப்பட்ட அண்ணா சற்று பேச்சை நிறுத்தி பிறகு கூறினார். சகித்துக் கொண்டிருந்தேனே.

மேலும் ஒரு இடத்தில் குறிப்பிடுகையில் "இன்றைய தினம் நீளம் நீளமாகப் பேசுகிறார்கள். பண்பைப் பற்றி நான் குறிப்பிட்ட அந்த வாசகம் காங்கிரஸ் பிரச்சார

மேடைகளில் தடுக்கப்படாமல் போய்விட்டது என்பதை நினைவூட்டுகிறேன். இன்னொன்று கேட்கிறேன். ஒரு நாளாவது ஒரு கூட்டத்திலாவது உங்கள் பேச்சாளர்கள் என்னைப் பற்றிப் பேசும்போது "அவர்" என்று சொல்லியிருக்கிறார்களா? அவன்!... நம்முடைய நண்பர் நான் சொல்லவில்லை என்கிறார்கள். தலை வணக்கம் செய்கிறேன். நீங்களாவது 'அவர்' என்று சொன்னீர்களே' என்று.

ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சியின் போது, திரு வினாயகம் அவர்கள் அண்ணாவைச் சுட்டி, "Your days are numbered" என்றார். அவ்வமயம், அண்ணா அவர்கள் அளித்த பதில் உணர்ச்சிகரமான ஒன்றாகும்.

"நண்பர் வினாயகம் பேசும்போது சொன்னார்கள். "Your days are numbered" என்று. ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து மேற்கோள் காட்டினார் என்று நினைக்கின்றேன். காலேஜில் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் நடித்து இருப்பார் போல் தெரிகிறது. நாங்கள் 6ஆம் தேதி பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர் பேசும் போது உங்கள் காலம் முடியப் போகிறது. (days are numbered) என்று குறிப்பிட்டார்கள். இது ஒத்துழைப்புக்கு அடையாளம் அல்ல. அதை கேட்கும் போது எங்களுக்கு என்ன தோன்றும்? இருக்கப் போகிறதோ கொஞ்ச நாளைக்குத் தான். அதற்குள் நமக்குத் திருப்தி தரக் கூடிய காரியங்களைச் செய்து கொண்டு விட வேண்டும் என்ற நினைப்புத் தோன்றலாம். திருப்திப் படுத்தக் கூடிய காரியங்கள் எது? நம்மைக் கொடுமை செய்தவர்களை கொஞ்சம் பதம் பார்க்கலாம் என்று தான் தோன்றும். அப்படி கருதுகிறவன் நான் அல்ல. சர்க்கார் நிர்வாகம் நிரந்தரமானது. இன்று நான் இருக்கலாம். நாளை மற்றொருவர் வரலாம். நியாயப் பண்பை விட்டுவிட்டு நிர்வாகம் நடக்கக் கூடாது. என்னைப் பொறுத்தவரை

பசையற்று, கட்சி உணர்ச்சியற்று கட்சி மாச்சரியமற்று, இங்கே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்த பண்பு தமிழ் நாட்டிற்கு எத்தனை காலம் தேவையோ, அத்தனை காலம் என்னை வைத்திருங்கள். அந்த பண்பு வேண்டாமென்று எப்பொழுது நினைக்கிறீர்களோ அப்போது என்னை அகற்றி விட்டு யாரையாவது வைத்துக் கொள்ளுங்கள். நண்பர் வினாயகம் இருக்கிறார். நண்பர் கருத்திருமன் இருக்கிறார்., யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். இந்த பத்து நாட்களுக்குள்ளேயே இந்தப் பொறுப்பு சலித்துப் போய் விட்டது. இங்கே இருந்து சாதிக்கக் கூடியதை மிக அதிகமாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். நான் ஏதோ மகிழ்ச்சியில் இருப்பதாக எண்ணிக் கொண்டு Your days are numbered என்று வினாயகம் சொன்னார். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். "My steps are measured. அடிக்கு அடி நான் அளவெடுத்து காலெடுத்து வைக்கிறேன். என்னால் காலெடுத்து வைக்க முடியவில்லையென்றால் கை தட்டி வலிவு உள்ளவர்களைக் கூப்பிட்டு, "என்னால் இனிமேல் செல்லமுடியாது. எங்கள் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள். கணக்கைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று பொறுப்பைக் கொடுத்துப் போயிவிடுவேன்" என்று உணர்ச்சிகரமாக உரைத்தார்.

முத்தாய்ப்பாக வழக்கம் போல் ஒரு கதையைச் சொல்லி அண்ணா தம் உரையை முடிக்கிறார். கதை இதோ;

"ரொம்ப நாள் குழந்தை ஒன்று பேசாமல் இருந்தது. ஒரு சோதிடனை அழைத்துக் கேட்டார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் இந்தக் குழந்தை பேசும் என்று அந்த சோதிடன் சொன்னான். அந்த நாளில் அந்தக் குழந்தையைச் சுற்றி, அதன் தாயும் தகப்பனும் அத்தையும் உட்கார்ந்து கொண்டு குழந்தை பேசாதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாழிகை பிறந்தது.

குழந்தையும் வாய் திறந்தது. அது என்ன பேசப் போகிறது என்று தாய் ஆவலோடு கேட்கிறாள். முதல் தடவையாக வாயைத் திறந்து அந்தக் குழந்தை பேச ஆரம்பித்தது. அம்மா! அத்தை கழுத்து மாதிரி உன் கழுத்து எப்போது இருக்கும்? என்று எடுத்த உடனே கேட்டது. அத்தை கழுத்து என்றால் அத்தை விதவை. அது போல் வேண்டுமென்று சொல்லியதாம் பேசாமல் இருந்த குழந்தை பேசிய போது. இந்தக் குழந்தை "டேய்ஸ் ஆர் நம்பர்ட்" என்று சொல்லியிருக்கிறது. அவர்கள் சொல்லிய கருத்தில் குற்றம் இருக்காது என்று நினைக்கின்றேன்" என்று கூறி கதையை அண்ணா முடித்தார்.

அண்ணாவின் ஆட்சியைப் பொறாத காங்கிரசார் அண்ணா மக்களுக்குச் செய்யும் சேவையை விரும்பாமல் பல குறுக்கு வழியில் அவருக்குத் தொல்லைத் தர முயற்சித்தனர். அதற்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் அண்ணா மிக மிக விளக்கமாக அருமையான உதாரணங்கள் இராமாயணத்தில் இருந்தும் பல வெளி நாட்டுக் கதைகளிலிருந்தும் மற்றும் இக்கால தமிழ் இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி பேசினார். காங்கிரசார் அடங்கிப் போயினர். அந்த உணர்ச்சிமிகு கண்ணீரை வரவழைக்கும் உரையின் பகுதி இது:

1964-65இல் மொழிக் கிளர்ச்சி நடந்த நேரத்தில் இங்கு நடைபெற்ற கொடூரமான செயல்கள் கோரமான சம்பவங்கள், சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள், இவைகளையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று கருதுகிறீர்கள்? எங்களுடைய ஆட்சியிலே பூந்தாழங்குடியிலே நடைபெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டை கம்யூனிஸ்டு நண்பர்கள் கூட மறந்து விடக் கூடாது என்று அடிக்கடி எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறீர்களே, நீங்கள் செய்த அக்கிரமங்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்றா கருதுகிறீர்கள்? அவ்வளவு சாதாரண அக்கிரமமா நீங்கள்

S-A.16.

செய்திருக்கிறீர்கள்? சேலம் சிறைச்சாலையில் 21 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்களே, மக்கள் மறந்து விட்டார்கள் என்றா கருதுகிறீர்கள்? கம்யூனிஸ்டு நண்பர்களை ஓடச் சொல்லி சுட்டுக் கொன்றீர்கள் — தஞ்சையில். மக்கள் மறந்து விடக் கூடிய தவறா செய்தீர்கள் உங்களுக்கு இன்பமான கனவு காண உரிமை உண்டு? நீங்கள் இன்பக் கனவு காணவேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன். எங்கள் தரப்பில் ஒரு உறுப்பினர் "The congress is dead, and gone for ever" என்று கூறினார்கள். நான் அந்தக் கருத்தில் இல்லை. என்னுடைய கட்சியினருக்கும் நான் சொல்லிக் கொள்வேன். எந்தக் கட்சியும் அப்படி மறைந்து விடவேண்டும், இறந்து விடவேண்டும் என்று எண்ணுவது ஜனநாயகப் பண்பாடு அல்ல, காங்கிரஸ் வளர வேண்டும். காங்கிரஸ் வளர்வதன் மூலம் மறுபடியும் ஒருமுறை அது ஆட்சிக்கு வருவதானாலும் நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இராமாயணத்திலே ராமனும் சீதையும் அயோத்தியை விட்டுத் தாண்டிய உடனே "நாதா, காட்டுக்கு வந்து விட்டோமா?" என்று சீதை கேட்டார்கள். காட்டுக்கும் நாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு வளர்ந்ததாலே, நாட்டை விட்டுத் தாண்டியவுடன், இது தான் காடு என்று சீதை எண்ணிக் கேட்டார்கள்.

நீங்கள் நந்தவனத்தில் அல்லவா இருந்தீர்கள்? அரண்மனையில் அல்லவா இருந்தீர்கள்? கூப்பிட்ட குரலுக்கு மகாராஜாவை அல்லவா கண்டீர்கள். தொகைப் போடாத செக்குகளை அல்லவா வாங்கிக் கொண்டு இருந்தீர்கள். வாழ்ந்த வாழ்விற்குக் குறை வந்துவிட்டதால் இந்த 1½ வருட வேதனையைத் தாங்க முடியாமல் சீதா பிராட்டியைப் போல கேட்கிறீர்கள். "அண்ணா இன்னமுமா இருக்கிறாய்?" என்று.

இனி

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன் மொழிந்து எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் பேசுகையில் 1.8.1968 அன்று காங்கிரசார் நடத்திய ஊர்வலத்தில் முதலமைச்சர் சிலைமீது கருப்புத் துண்டுகள் வீசியது தொடர்பாகக் கீழ்க்கண்டவாறு கூற முற்பட்டார்:

முரசொலியில் முதலமைச்சர் அவர்களின் சிலை மீது காலணி வீசப்பட்டது எனவும் எழுதப்பட்டிருக்கிறது. காங்கிரசார் யாராவது அப்படி செய்ய நினைத்திருந்தால் அவர்களை நாங்கள் ஒத்துக் கொள்ள மாட்டோம். அந்தப் பரம்பரையில் நாங்கள் வரவில்லை. அதை நிரூபிக்க முடியுமா? முதல் அமைச்சர் அவர்கள் மீது என்ன கோபமோ தெரியாது. அதை ஏன் அப்படி நுழைத்தார்கள் என்று தெரியவில்லை. எங்கள் அரும் பெரும் தலைவர் திரு காமராஜ் அவர்கள் மௌன ஊர்வலம் நடைபெற்ற போது முதல் அமைச்சர் அவர்கள் சிலை பக்கத்தில் நின்று கொண்டு அமைதி காக்கப்படவேண்டும் என்று செய்தால் ஒரு பத்திரிக்கை எழுதுகிறது. அவரது சிலைக்கு ஆபத்து வந்து விடுமோ என்றுதான் அப்படிப் பார்த்துக் கொண்டாராம் என்று. தனக்குச் சிலை வைக்கப்பட வில்லையே என்று அவர்களின் மேலுள்ள கோபத்தில் இப்படி எழுதியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்,

உடனே கலைஞர் கருணாநிதி குறுக்கிட்டு மௌண்ட் ரோட்டில் இருக்கிற முதலமைச்சர் அவர்களின் சிலை வழியாக போகிற ஊர்வலத்தினர் சிலையின் (அண்ணா சிலை) பக்கத்தில் போனவுடன் முக்காடு போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன.? அந்தச் சிலையைச் சுற்றிக் கருப்புத் துண்டுகளைப் போட்டு விட்டுப் போக வேண்டிய அவசியம் என்ன? அப்போது முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டு வீட்டில் வைத்திய சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அப்போது தலையில் முக்காடு போட்டுக் கொண்டு போனது நாகரிகமா? அது தமிழ்நாட்டு பண்பாடா என்பதை

பொறுப்பு மிகுந்த பண்பாட்டை வளர்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பி.ஜி. கருத்திருமன்: மிக மிக நன்றி! முதலமைச்சர் அவர்கள் நீடூழி வாழவேண்டும் என்று தான் நாங்கள் நினைக்கிறோம். நீங்கள் நேர்மை உள்ளவர்கள். நாணயம் உள்ளவர்கள். ஆனால் உங்களை சுற்றியுள்ளவர் பேச்சைக் கேட்காதீர்கள் என்று எழுதி இருக்கிறார்கள். அவர்களின் பேச்சைக் கேட்டு நடந்தால் உங்கள் ஆட்சியை அடியோடு கவிழ்த்து விடுவார்கள் என்று எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மு. கருணாநிதி: அப்படியானால் அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஊர்வலம் நடத்தி காமராஜ் சிலையின் அருகில் சென்று, ஐயா காமராஜ் அவர்களே தாங்கள் நல்லவர்கள் ஆனால் உங்கள் பக்கத்தில் உள்ளவர்கள் உங்களைக் கவிழ்த்துவிடப் போகிறார்கள் என்பதற்கு அடையாளமாக இதேக் காரியத்தைச் செய்யக் கருதிருமன் அவர்கள் ஒத்துக் கொள்வார்களா?

பி.ஜி. கருத்திருமன்: காமராஜ் அவர்கள் இந்தியப் பிரதமராகவோ அல்லது இம்மாநில முதலமைச்சராகவோ இருந்து இவர்கள் செய்யும்படியான காரியங்களைச் செய்தால் செய்யுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. கருப்புக்கொடி காட்டுவது ஜனநாயக முறைதான். பாதகம் ஏற்படும் வகையில் எதுவும் செய்யவில்லை என்று நான் உறுதியாக கூற விரும்புகிறேன்.

அண்ணா: அந்த ஊர்வலத்தின்போது முக்காடிட்டுக் கொண்டு போனதும், கருப்புத் துண்டுகள் வீசிய போதெல்லாம் நான் ரொம்ப நல்லவன். மற்றவர்கள் அதற்கு விரோதமாக நடக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக என்றதொரு விளக்கத்தை அளித்தார்கள். பொதுவாக முக்காடிட்டுக் கொண்டு போவதும் கருப்புத் துண்டு வீசுவதும் ஒரு இழப்பு நேரத்தில் ஒரு அனுதாப

ஊர்வலத்தில் கருப்புத் துணிகளைக் குத்திச் செல்வார்கள். ஒருவர் இறந்து விட்டு கொண்டு போகிற போதே பல பண்டங்களைக் கீழே, போட்டுக் கொண்டு போவார்கள். அதேபோல் கருப்புத் துண்டுகள் வீசப்பட்டன, எனக்கு மற்றவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக என்ற சமாதானத்தை அவர்கள் சொல்வது என் மனம் புண் படக் கூடாது என்பதற்காக இருக்கலாம். ஆனால் கருப்புத் துண்டுகள் வீசுவது முக்காடிட்டுக் கொண்டு போவது என்பது அனுதாபத்தைத் தெரிவிப்பதற்குத்தான். அந்த அனுதாபத்தை அவர்கள் தெரிவிப்பதாகச் சொன்னால் கூட என்னைப் பொறுத்தவரையில் நான் வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டேன். நான் இறக்கிற நேரத்தில் இவர்கள் எல்லாம் கூட அனுதாபம் தெரிவிப்பார்கள் என்பது முன்னாலே எனக்குத் தெரிந்திருப்பது கொஞ்சம் மகிழ்ச்சிக்குரியதுதான்.

இப்படி அண்ணா எழுப்பியதற்குப் பதில் ஏதும் கூறாமல் கருதிருமன் வேறொரு பிரச்சினைக்குச் செல்லுகின்றார். அவர் பேசும் போது அரசியல் என்றால் நாகரிகம் இருக்கவேண்டுமே தவிர மனம் புண்ணாகும்படி நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். காமராஜ் அவர்கள் வந்து நின்றது அவர்களது சிலையை பாதுகாப்பதற்காக என்று சொல்வது நல்ல பண்பாடா என்று தெரியவில்லை என்றார்.

அண்ணா மீண்டும் எழுந்து தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டார். அவரால் இப்படிப்பட்ட காரியத்தைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. உண்மைக்கு மாறான தகவல்களையே எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது அவருக்குப் பிடித்தமாகத் தோன்ற வில்லை. எனவே மீண்டும் முதலில் கூறியதையே அழுத்தம் திருத்தமாக மனத்தில் சற்றுக் கீரலுடன் பேசத் தொடங்கினார். அது வருமாறு: கருப்புத்துண்டுகள் வீசுவதும், முக்காடு போட்டுக் கொண்டுப் போவதும்

அனுதாபம் காரணமாக செய்யப்படுவது என்பது நம் சம்பிரதாயமாகும். அது நாடு முழுவதும் எந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது அப்படி அல்ல. நீங்கள் ரொம்ப நல்லவர்கள் தான், ஆனால் உங்கள் கூட இருக்கிறவர்கள் உங்களைக் கெடுக்கிறார்கள். உங்களைக் கவிழ்த்துவிடப் போகிறவர்கள் என்பதைத் தான் அது தெரிவிக்கிறது என்றுச் சொன்னார்கள்.

உள்ளபடியே அவர்கள் நெஞ்சில் கை வைத்து உள்ளபடியே நாம் சட்டமன்றத்தில் இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு கருப்புத்துண்டுகள் போடுவதும், முக்காடு இட்டுக்கொண்டு ஊர்வலம் போவதும் சரிதானா, முறையானதுதானா நாகரிகமானது தானா, பண்பாடு நிறைந்தது தானா என்பதை அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் முன்னதாகவே வேண்டுமென்றே இப்படிசெய்யவேண்டும் என்றுதான் அண்ணாவின் மனதைப் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர் உடல் நலம் சரியில்லாத காலத்திலும் இப்படிப்பட்ட அருவருக்கத் தக்கச் செயலை மேற் கொண்டார்கள் என்பதை அண்ணா சுட்டிக் காட்டுகிறார்.

தவறாக சிலர் செய்துவிட்டார்கள் என்பதற்காக சமாதானத்தை சிலர் தேடிக் கொண்டிருப்பது அது அவர்களுக்கும் நல்லதல்ல. இவர்களுக்கும் நல்லதல்ல. அந்தச் சிலை எதிரில் அப்படிச் செய்ய வேண்டுமென்று கருதித்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே நீங்கள் தயாராக கருப்புத்துணியோடு வாருங்கள். என்ன செய்யப்படவேண்டும் ஏன்பது அந்த நேரத்தில் தான் அறிவிக்கப்படும். முன் கூட்டியே அதைக் கேட்காதீர்கள்.

எல்லோரும் கருப்புத் துணியை எடுத்து வாருங்கள் என்ற அறிக்கையை முதலில் கொடுத்துவிட்டு முக்காடு

இட்டுக் கொண்டு செல்லுங்கள். கருப்புத் துண்டுகளை கீழே வீசுங்கள் என்று அந்த இடத்திற்கு வந்தவுடன் அவர்கள் கட்டளைகள் பிறப்பித்து அந்தச் சிலையைச் சுற்றி கருப்புத் துண்டுகள் வீசப்பட்டன. சாதாரணமாக ஒரு பிண ஊர்வலம் நடைபெற்று அதற்குப் பிறகு அந்தப் பாதை வழி போனால் என்னென்ன சின்னங்கள் வெளியே தெரியுமோ அவை அத்தனையும் தெரியவேண்டும் என்பதற்காக செய்ததே தவிர நண்பர் சொல்கிறபடி என்னிடத்தில் ஒரு பெரிய மதிப்பு வைத்து என் கூட இருக்கிறவர்கள் என்னைக் கெடுத்து விடுகிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை உருவாக்குவதற்காகத்தான் அப்படி செய்யப்பட்டது என்பதைப் பள்ளியில், படிக்கக்கூடிய பிள்ளைகூட நம்புவதற்குத் தயாராக இருக்கமாட்டான்.

அதன்பிறகும் எதிர்கட்சித் தலைவர் "நான் ஏற்கெனவே சொன்னேன். கருப்புக் கொடி காட்டுவது, ஜனநாயக முறைப்படி ஏற்றுக்கொண்ட ஒரு நிலை" என்றார். அப்போது கருணாநிதி குறுக்கிட்டு "கருப்புக் கொடி காட்டியதற்கல்ல கருப்புக் கொடி போட்டதற்குத் தான்" என்று விளக்கம் அளிக்க, கருத்திருமன் "கஷ்டம் என்று நினைத்தால் அந்த மன்னிப்பை நான் கோருகிறேன். அது ஜனநாயக முறைப்படி அல்ல என்று கருதினால் நீங்கள் மனம் புண்பட்டால் அதை ஏற்றுக்கொள்ள" என்று பேச்சைத் தொடரும் போது அண்ணாவின் அலை பாய்ந்த உள்ளம் மீண்டும் குறுக்கிட்டு "உள்ளபடியே முதலில் சொல்லியபடி அவர்கள் பல் ஊர்வலங்களுக்குச் சென்றிருப்பார்கள். பெரியவர்கள் இறந்து போனால் அந்த ஊர்வலங்களுக்குச் சென்றிருப்பார்கள். அப்பொழு தெல்லாம் சட்டையிலே கருப்புத் துணியைச் சுற்றிக் கொண்டோ அல்லது கையிலோ கருப்புப் பட்டைகளை கட்டிக் கொண்டோ செல்வது வழக்கம். கருப்புக் கொடிக் காட்டுவதற்கும் கருப்புத் துணி அணிந்து கொள்வதற்கும்

வித்தியாசம் உண்டு. கருப்புத் துண்டு போடப்பட்டது உள்ளபடியே சொல்கிறபடி ஜனநாயகத்திற்கு செய்யப் பட்டது அல்ல. என்னிடத்திலே மதிப்பு வைத்து செய்யப் பட்டது அல்ல. ஊர்வலத்தை நடத்தியவர்களின் தொண்டர்களும் தோழர்களும் இறந்து விட்டதாகக் கருதிக் கொண்டு போடப்பட்டது என்று வருத்தம் தெரிவிக்கும் தொனியில் கூறினார்.

இதுதான் கடைசியாக அண்ணா நீண்ட உரையாற்றிய கூட்டம். அதன்பிறகு அண்ணா இரண்டு நாள் இடைவெளி விட்டு 31.8.68 அன்று பேரவைக் கூட்டத்தில் கல்ந்து கொண்டு உரிமைப் பிரச்சினை மீது பதிலளித்தார். அதன்பிறகு அவர் கூட்டத்திற்கே வரவில்லை.

நோய்வாய்ப்பட்டு அமெரிக்கா சென்றார். மீண்டும் சென்னை திரும்பினார். ஜனவரியில் தொடங்கிய பேரவைக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை.

15

சுவையான உரைகள்

படியரிசித் திட்டம்

அண்ணா அவர்கள் அரசின் பணி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது ஆகும் என்பார். அவற்றுள் எவையெவைக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்பதை தம் சட்டமன்றப் உரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

"வாயார உணவு,
மானத்திற்கு ஆடை,
அறிவுக்குக் கல்வி,
நோய் தீர மருந்து,
செய்வதற்குத் தொழில்,
தொழிலால் போதுமான அளவு கூலி.
கூலியை வைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால்
விலைவாசி ஏறாமல் இருக்கக்கூடிய
அளவிற்கு உணவுக் கட்டுப்பாடு
ஆகியவற்றை செய்து தரப்படவேண்டும்.
வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உபயோகப்
படுத்தக் கூடிய பணம் போக, மிச்சத்தை
முதலீட்டுக்கு பயன்படுத்துவது என்ற அளவுக்குத்
திட்டமிடப் படவேண்டும்."

மற்றொரு முறை அவர் பேசும் போது,

"நாள் ஒன்றுக்கு மூன்று வேளை சோறு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி விற்கப்படவேண்டும்."

1967ஆம் ஆண்டு தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்ட நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் "நாங்கள் நாட்டை நல்ல முறையில் ஆண்டு கொண்டிருக்கிறபோது எங்களை எதிர்பார்ப்பானேன் என்று பேசினார்கள். அதற்கு நான் பதில் சொல்கிற போது சொன்னேன். ஜனநாயகத்தில் ஆளும் கட்சி. எதிர்க்கட்சி என்று இரண்டு கட்சிகள் இருந்து தீர வேண்டும் என்ற முறையில் எதிர்க்கிறேன். அப்படித்தான் நீங்கள் செய்யக் கூடிய காரியம் இல்லாமலா போய்விட்டது? அரிசி விலை ஏறியிருக்கிறதே, இப்போது கூட சொல்லுகிறேன். ரூபாய்க்கு மூன்று படியரிசி போடுவதாகச் சொல்லுங்கள். எங்களுடைய கழகம் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளும் என்று சொன்னேன். இந்த மூன்றுபடி ஆரம்பமானது இதிலிருந்துதான். உடனே காங்கிரஸில் சிலர், "என்னால் தயாரிக்கப்பட்டவர்கள் கூட அவர்கள் காங்கிரஸ் மேடையில் ஏறி, மூன்று படி அரிசி போடுவதாக முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள். அது முடிகிற காரியமா? என்றார்கள், அது இரண்டாவது கட்டம். அடுத்த காங்கிரஸ் மேடையில் அது முடிகிற காரியம் என்றால் போடட்டுமே" என்று வளர்ந்தது.

எங்கள் தேர்தல் அறிக்கையிலோ, மாநாட்டுத் தீர்மானங்களிலோ ரூபாய்க்கு மூன்று படி போடுவோம் என்று இல்லை. ஆனால் அதே நேரத்தில் இன்னொன்றை யும் அவசரமாகச் சொல்லுகின்றேன். மூன்று படி அரிசி போடவே முடியாது என்று நான் சொல்லவில்லை. மூன்று படி அரிசி போடுவது என்பது சாத்தியமானதுதான். ஆனால் அதற்குச் சில சூழ்நிலைகள் அமையவேண்டும். அமையுமானால், ரூபாய்க்கு மூன்றுபடி என்பது இயலாத

காரியமல்ல. 8 படி அரிசி, 12 படி அரிசி என்றெல்லாம் இருந்த நிலைக்கு போக முடியாவிட்டாலும் யுத்தத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைப்படி ரூபாய்க்கு மூன்று படி என்ற அளவுக்குப் போகமுடியும என்பதுதான் எனக்கு நம்பிக்கை, அந்த நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, முன்னால் இருந்த காங்கிரஸ் அமைச்சரவையில் அவர்கள் மதுவிலக்கு வந்த ஒரு வருடத்திற்கெல்லாம் படி அரிசி 14 அணாவாக வந்தது. அப்போது அமைச்சராக இருந்த ஜோதி அம்மையார் சொன்னது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. இன்னும் 6 மாதத்திற்குள் எங்களால் ரூபாய்க்கு 2 படி அரிசி போடமுடியும் என்று சொன்னார்கள். அப்படி உற்பத்தி நல்ல முறையில் பெருகி, அது பகிரும் அளவுக்குப் பெருகி, பகிர்ந்து போடுவதும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு, பதுக்கல், கள்ளக் கடத்தல் தடுக்கப் பட்டால், உணவு உற்பத்தி வளர வரை சுலபமாக ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அதே போன்று தாம் "படியரிசித் திட்ட"த்தை சென்னை நகருக்கும், கோவைக்கும் மட்டும் நிறைவேற்ற ஆணையிட்டதைக் குறித்த விமரிசனங்களுக்கு, அண்ணா அவர்கள் மிகச் சிறப்பான பதிலை தந்தார்.

> "எல்லா இடங்களுக்கும், படியரிசி போடுவதுதானே, சென்னைக்கும் கோவைக்கும் மட்டும்தானா என்று கேட்பவர்களுக்கு அதில் இருக்கின்ற பொருளாதார தத்துவத்தை மட்டும் நான் விளக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். சென்னையில் உள்ளவர்களிடத்தில் எனக்கு விருப்பம். கோவையில் உள்ளவர்களிடத்தில் எனக்கு விருப்பம். திருமங்கலத்திலும், உசிலம்பட்டியிலும் உள்ளவர்களிடத்தில் எனக்கு வெறுப்பு என்று அர்த்தமல்ல. நகரத்தாரிடத்தில் விருப்பம். கிராமத்தாரிடத்தில் விருப்பம் இல்லை

என்று பொருள் அல்ல. ரேஷன் வைப்பதானாலும், மானியம் கொடுப்பதானாலும், பொருளாதாரத்தில் Vulnerable sector என்பார்கள். அதாவது எந்த சமூகம், பகுதி உடன்டியாக இந்தப் பிரச்சினையில் ஈர்ப்பு சக்தி பெற்றிருக்கிறதோ அதை கவனிக்க வேண்டும் என்பதுதான் பொருளாதாரத் தத்துவம். அதை விளக்க ஒன்று சொல்கிறேன். இப்போது சென்னையில் படியரிசித் திட்டம் இல்லாமல், ரேஷனும் இல்லாமல் எங்கிருந்தும் அரிசி வரலாம் என்ற உத்தரவு இருக்குமேயானால், செங்கற்பட்டு வடாற்காடு, தென்னார்க்காடு ஆகிய மூன்று மாவட்ட அரிசி முழுவதையும் எந்த விலை கொடுத்தும் சென்னையில் வாங்கிக் கொள்வார்கள். அப்படி வாங்கிக் கொள்வார்களேயானால், அந்த மூன்று மாவட்டத்திலேயும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். அதைப் போலவே, கோவையில் படியரிசித் திட்டம் இல்லாமல், நீங்கள் இஷ்டப்பட்ட இடத்தில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று விட்டுவிட்டால் திருச்சி, தஞ்சை இந்த இரண்டு மாவட்டங்களில் உள்ள அரிசி முழுவதும் கோவை செல்லும். அது கோயம்புத்தூரோடு நிற்காது. நமது நண்பருக்கேத் தெரியும். கோவையிலிருந்து அது எந்த ரூபத்தில் எந்தெந்த இடத்திற்கு எல்லாம் போகும் என்பது எல்லாம் அவருக்குத் தெரியும்." என்றார்.

படியரிசி திட்டம் நாட்டு மக்களுக்கு 15.5.1967 முதல் கொடுக்கப்பட்டது. மக்களுக்கு உணவு அளித்த பிறகுதான் தாங்கள் சம்பளம் பெறுவோம் என்ற அண்ணாவின் கூற்றுக்கு ஒப்பு, அதற்கு அடுத்தநாள், 16.5.67 முதல்தான் தமிழக அமைச்சர்கள் தங்களது சம்பளத்தைப் பெற்று வந்தனர்.

16

மதுவிலக்குக் கொள்கை

மனித இனத்தைப் பற்றுவதற்காக, இயற்கை படைத்த மிகச்சிறந்த வஞ்சப் பொறியே மது சிந்க்ளேர்

மதுவிலக்கு நமது நாட்டில் அமலாக்கப்பட வேண்டும் என்பதில் அண்ணா மிக மிக உறுதியாக இருந்தார். அதனால் மக்களுக்கு ஏற்படும் தீமைகளை பல இடங்களில் அவர் பேரவை உறுப்பினர் என்ற வகையில் பேசும் போதும் எடுத்துக் காட்டினார். அதேபோல் அவர் முதலமைச்சராக விளங்கிய போதும், தமது நிலையை மாற்றிக் கொள்ளாமல் சமூக நீதிக்கு மதுவிலக்கு அவசியம் என்ற கருத்தையே வலியுறுத்தினார். இதை சிந்திக்கும் போது, "நன்நடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" என்ற புற நானூற்று வரி சிந்தனைக்கு வருகின்றது.

அண்ணா அவர்கள் 1958-ஆம் ஆண்டு பேரவையில் உரையாற்றுகையில் "நூற்றுக்கு அறுபது பேர் கல்வியறிவும், நல்ல நாகரீக மனப்பான்மையும், நாகரிகமான வாழ்க்கைப் பெற்றான பிறகு மதுவிலக்கு தேவையா இல்லையா என்பதை அப்போது தீர்மானித்துக் கொள்வதில் சிக்கல் இருக்காது".

"ஒரு குறிப்பிட்ட கொள்கையில் எல்லா கட்சிகளும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கின்றன என்றால், அது மதுவிலக்குத் திட்டம் நம் நாட்டில் வெற்றிகரமாக

நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கொள்கைதான் ஆகும். இந்தக் கொள்கைக் குறித்து எல்லா கட்சிகளும் ஒருமித்த கருத்து கொண்டிருக்கும்போது, சில கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான ஷரத்துக்கள் ஆளும் கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவில் புகுத்தப்பட்டிருப்பது சரிதானா என்பது பற்றியும், அந்த ஷரத்துகள் கொண்ட மதுவிலக்குச் சட்டம் வெற்றியடையுமா என்பது பற்றியும் நாட்டு மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிவதற்காக, சில காலத்திற்கு மசோதாவை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரி எதிர்க்கட்சியினர் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொண்டால், அது மதுவிலக்குச் சட்டம் குறித்து இந்த நாட்டில் எல்லாக் கட்சியினரும் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உலகம் அறிவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை உண்டு பண்ணும்.

இன்றைய தினம் மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடத்தப்படவேண்டும் என்பதில் எதிர்தரப்பில் இருக்கும் யாரும் சந்தேகப்படவில்லை. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களிலே மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களே சென்ற கிழமையே கூட, ராஜ்ய சபாவில் பேசிய மாஜி மந்திரி ராஜ்குமாரி அம்மையார் அவர்கள் மறுபடியும் தம்முடைய வேறுபாட்டைத் தெரிவித்து இருக்கிறார்கள். இவ்வளவு உயர்பதவியில் உள்ளவர்கள் அடிக்கடி மதுவிலக்குச் சட்டம் தவறானது, தோற்று விட்டது என்று சொல்கிற நேரத்தில், அது நாடடிலே பரவினால் அது மதுவிலக்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வருபவர்களுக்கு எவ்வளவு பெரிய சங்கடத்தை விளைவிக்கும் என்று உணராமல் பேசிக் கொண்டிருக் கிறார்கள்.

இந்த சர்க்காருக்கு நான் குறிப்பாகச் சொல்வேன். மது விலக்குச் சட்டத்தில் அவர்கள் பெற்றிருக்கிற வெற்றியை ஒரு வகையிலே நான் பாராட்டக் கடமைப்

பட்டிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்ற காரணத்தால்தான், இன்றைய தினம் நாம் வீதிகளிலே குடிகாரனைக் காணமுடியவில்லை. குடித்து விட்டுச் செய்யும் சில்லறைக் கலவரங்களும் நாட்டில் பெருவாரியாக அடங்கிவிட்டன. அவை வெகுவாகக் குறைந்ததற்கு அமைச்சரவையை மட்டுமல்ல, நாட்டு மக்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார்.

மேலும் அண்ணா மேலை நாடுகளுக்கும், நம் நாட்டிற்கும் இக்கொள்கையில் உள்ள பொருத்தத்தை சுட்டிக் காட்டிய சொற்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும்.

> மேனாடுகளில் குடிப்பது என்பதற்கும் குடிகாரன் என்பதற்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. Drinking என்பதற்கும் Drunkedness என்பதற்கும் எழுத்தில் மட்டுமல்ல; பொருளிலேயும் வித்தியாசம் இருக்கிறது, இந்த அளவு வித்தியாசம் நம் நாட்டில் இல்லை. ஆகையால் மதுவிலக்குச் சட்டம் இந்நாட்டில் தேவை"

1967ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சிப் பொற்றுப்பினை ஏற்ற பிறகு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் மது விலக்குக் கொள்கையை கைவிட்டு நாட்டில் வருவாய் பெருக்கத்திற்கு மது விற்பனையை அனுமதிக்கலாமென ஒரு சட்டமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார். உடனே அண்ணா, "விழியை இழந்து - விற்று சித்திரம் வாங்கும்படி நண்பர் சொல்கிறார் விழியை இழந்தாலும் பரவாயில்லை. மதியை இழந்து மதுவிலக்கை ஏற்றுக் கொள்ள மாட்டேன்" எனக் குறிப்பிட்டார். இதிலிருந்து நாட்டுமக்கள் நலனில் அவர் காட்டிய முக்கியத்துவத்தை நம்மால் உணர முடிகிறது.

இதே போன்ற பிரச்சினையை, 1968 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் என். என். வி.

சித்தன் எழுப்பினார். "நிறைய வருமானம் வரும் என்பதற்காக மது விலக்கை எடுப்பது பற்றி யோசிக்கிறீர்களா?" என்ற கேள்வியை விவாதத்தின் ஊடே உறுப்பினர் எழுப்ப, அண்ணா அவர்கள் கூறிய பதிலுரையில் தம் நிலையான கொள்கையை ஆணித் தரமாக எடுத்துக்காட்டினார்.

> "அவர்களைப் போன்று கருதிக் கொண்டவர்கள் தான் காங்கிரஸ் மாநிலத்திலே மது விலக்கை எடுத்து விட்டார்கள். நான் சொல்வது வருமானம் வருவதை மட்டுமல்ல, தரம் உயரும் என்பதற்காகவும் சொன்னேன். உடனே காங்கிரஸ்காரர்கள் முன்னாலே உள்ளதை விட நல்ல தரமுள்ள மதுவைத் தயாரிக்கலாம் என்று சொல்கின்றனர், உறுப்பினர் சொன்ன யோசனையை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை"

இதிலிருந்து அரசுக்கு வருவாயையோ செலவையோ பெரிதாகக் கருதவில்லை. மக்களின் சேவையையே பெரிதெனக் கருதி செயலாற்றினார் என்பது தெளிவாகிறது, சட்டமன்றத்தில் அரசின் திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகைகள் பற்றிக் குறிப்பிடும் போது, "திட்டங்களுக்கு செலவு செய்கிற தொகை முக்கியமல்ல. தொக்கி நிற்கின்ற சமூக நீதிதான் முக்கியம்" என்று அண்ணா கூறினார்.

இது குறித்து மாநிலங்கள் அவைத் தலைவரும், இந்திய குடியரசின் துணைத் தலைவருமான டாக்டர் வி.வி. கிரி கூறியதாவது;

இந்த மாநில முதலமைச்சர் (அறிஞர் அண்ணா) மதுவிலக்குக் கொள்கையில் மிகவும் உறுதியாக இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். மதுவிலக்குக் கொள்கையை கடைபிடிப்பதனால் ஏழெட்டு கோடி ரூபாய்க்கு மேல் வரி வருமானம் போய் விடுகிறது என்றாலும், உறுதியுடன் அதை கடைபிடிக்கும் கொள்கையைப் பாராட்டுகிறேன். மதுவிலக்கினால்

மக்களுக்கு நன்மை உண்டு என்று தெரிகின்ற காரணத்தால் தான் மாநில முதலமைச்சர் மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருக்கின்றார். பிற மாநிலங்கள் மது விலக்குத் திட்டத்தை விட்டுவிட்டு ஓடும் போது கூட மது விலக்கில் உறுதியாக இருக்கும் அண்ணா அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் குறித்து அண்ணா வெளியிட்ட கருத்துக்கள் அண்ணா இறக்கும் வரை தி.மு.கவின் கொள்கையாக இருந்தது.

S-21.17.

17

பேருந்து போக்குவரத்தினை நாட்டுடமையாக்குதல்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் கழகம் ஆட்சி பீடம் ஏறினால், பஸ் போக்குவரத்தினை தேசிய மயமாக்கும் என அண்ணா அவர்கள் விருகம் பாக்கம் மாநாட்டில் அறிவித்தார். அதற்கிணங்க 75 மைல்களுக்கு மேற்பட்ட பெருந்தொலைவில் வழித் தடங்களில் விடப்படும் பேருந்துகள் அனைத்தையும் நாட்டுடமையாக்கினார் முதலமைச்சர் அண்ணா அவர்கள். இது குறித்து 17.6.67 அன்று பேரவையிலும் மேலவையிலும் தாக்கல் செய்யப்பட்ட வரவு – செலவு திட்டத்தில் அண்ணா அவர்கள் தெரிவித்ததாவது:

"இவ்வரவு செலவுத் திட்டம் செயல்படுத்த முற்படு முன் மற்றொரு முக்கிய கொள்கை பஸ் போக்குவரத்தினை நாட்டுடமையாக்குவதாகும். 120 மைல்களுக்கும் அதற்கும் மேற்பட்டுள்ள நெடுந் தொலைவு பஸ் வழித்தடங்கள் தவிர, இப்போது அரசினர் போக்குவரத்துத்துறை பெரும்பாலும் சென்னை மாநகரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுமே பஸ்களை நடத்தி வருகிறது.

இவை நீங்கலாக இத்துறை முழுதும் தனியாருக்கு விடப்பட்டுள்ளது. பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு சிறந்த பணியாகவே சாலைப் போக்கு வரத்து உள்ளது. தனியாரின் ஊக்கத்திற்கும் முயற்சிக்கும்

முதன்மையிடம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் பலவற்றிலும், சாலைப் போக்குவரத்துப் பணியினை அந்த நாட்டு அரசும், ஊராட்சி மன்றங்களும் பெரும்பாலும் மேற் கொண்டு செயல்படுத்தி வருகின்றன. நம் நாட்டிலும் கூட பல மாநில அரசுகள் சாலைப் போக்குவரத்தினை மிகப் பெரும் அளவிற்கு நாட்டுடமையாக்கியுள்ளன. மக்கள் தொகை மிக நெருக்கமாகவும், நல்லதொரு சாலை அமைப்பைக் கொண்டதாகவும் உள்ள தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுந்தொலை பஸ் போக்கு வரத்து அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாய் இருக்கவேண்டும். ஆனால், இப்பொழுது நாம் ஆராயத் தேவையற்ற சில காரணங்களுக்காக சாலைப் போக்குவரத்துப் பணியை நாட்டுடமையாக்குவதற்கு முனைப்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வரியில்லா வருமான இனங்களைப் பெருக்குவதன் மூலமாகவே மக்களின் வரிச்சுமைகளை நியாயமான எல்லைக்குள் நிற்குமாறு செய்து வளர்ச்சிப் பணிகளுக்கு மிக அவசியமாக தேவைப்படும் நிதி வசதிகளை மேலும் திரட்ட முடியுமென இன்றைய அரசு கருதுகிறது.

ஏற்கெனவே, 75 மைல்களுக்கும் அதற்கு மேலுமுள்ள பஸ் வழித்தடங்களனைத்தையும் தமிழக அரசு போக்கு வரத்துத்துறை மேற்கொள்ள வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. இந்த பஸ் வழித்தடங்களின் தற்போதைய அனுமதி சீட்டுகள் முடிவடையும் தருணத்தில் அவற்றை அரசு மேற்கொள்ளும்.

தவிர, சென்னை மாநிலத்திலிருந்து தொடங்குகின்ற அல்லது முடிவுறுகின்ற வழி தடங்கள் அனைத்தையும் தற்போதைய பஸ் வழித்தடங்கள் அனுமதி சீட்டுகள் முடிவடைந்தவுடன் நாட்டுடமையாக்க வேண்டுமென்றும் அரசு கருதியுள்ளது.

அன்றியும் கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லை களை தொடுகின்ற வழித்தடங்கள் அனைத்தையும் அந்தந்த

பஸ் முத்லாளிகளின் பஸ் அனுமதி சீட்டுகள் முடிவடையும் போது படிப்படியாக மேற்கொள்வதன் மூலம் அங்கு பஸ் போக்குவரத்தினை நாட்டுடமையாக்குதல் முழுமை காண அரசு கருதுகின்றது.

இம்மூன்று வகை வழித்தடங்களின் வளர்ச்சியும் இனி அரசின் தனிப்பொறுப்பாக இருக்கும். இதற்காக அரசு மூலதன முதலீடாக இரண்டரை கோடி ஒதுக்கியது.

சமதர்ம திட்டத்தின் முதற்கட்டமே நாட்டுடமை யாக்கும் திட்டமாகும். நாட்டுடமையாக்கும் முதல் பஸ் வழித்தடமாக சென்னை ஆரணி மார்க்கம் தேர்ந்தெடுக்கப் பட்டு 1.8.1967 ஆம் நாள் கலைஞர் கருணாநிதி தலைமையில் அண்ணா தொடங்கி வைத்தார்.

18

உலகத்தமிழ் மாநாடு

அண்ணாவின் நாட்டுப்பற்றுக்கும் மொழிப் பற்றுக்கும் எடுத்துக்காட்டாய் அமைந்தது சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாடாகும். ஆளுநர் உஜ்ஜல்சிங் 1968ஆம் ஆண்டு இரு அவைகளும் இணைந்தக் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி மாநாட்டின் சிறப்பினை குறிப்பதாக அமைந்தது. அது வருமாறு:

என்றுமே கண்டிராத மக்களின் உற்சாகத்திற்கும், ஈடு பாட்டிற்கும் இடையே நம் பெருமதிப்பிற்குரிய குடியாட்சித் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹூசேன் அவர்களால் துவக்கப் பட்ட இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழ் நாட்டின் பண்டைய பெருமையினை, மாட்சியைத் தமிழகத்தின் கண் முன்னே எடுத்துக் காட்டிற்று.

உலகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த நுண்ணறிவாளர்களும், புலவர் பெருமக்களும் கலந்து கொண்ட இந்த மாநாடு நமது தமிழ் மொழி, காலத்திற் கிணங்க புத்தம் புதிய கலைகளைத் தெற்றென விளக்கும் திறனும் வளனும் வன்மையும் வாய்ந்த விழுமிய மொழி என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

கவிதை - தத்துவம் - கலை - சிற்பம் போன்ற பல துறைகளில் தமிழ் கூறும் நல்லுலகம் எய்தியுள்ள சாதனைகள் அம்மாநாட்டிற்கு தொடர்பான பற்பல

விழாக்களிலே குன்றின் மேலிட்ட விளக்கே போல், குவலயத்தார்க்கு எல்லாம் எடுத்துக் காட்டப்பட்டன.

சென்ற காலத்தை சிந்தை செய்யும்போது, உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும், வருங்காலத்தை எண்ணும் போது இடையறாத ஒரு நம்பிக்கையையும், இன்றைய இன்னல்களுக்கு இடையிலும் தமிழர்களின் உள்ளத்திலே இவ்விழாவில் நிகழ்ச்சிகள் ஏற்றி வைத்திருக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு தொட்டே வளமார் பண்பாடும் உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டில் இத்தகைய வெற்றியினை நாம் எதிர்பார்த்தல் இயல் பானதே."

மொழி மக்களின் உள்ளத்தை ஈர்க்கவல்லது என்பதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தக்கதொரு சான்றாக அமைந்துள்ளது. எனவே தத்தம் மொழிகளின் பால் மக்களுக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மதித்து நடப்பதே அரசியல் நுண்ணறிவாகும்.

பற்பல மொழிகளும் பண்பாடும் நாகரீகமும் படைத்த பல்வண்ணத் திருநாடு நமது இந்தியப் பெருநாடு. வெவ்வேறான மொழிகளும் பண்பாடுகளும் ஒருமித்து தழைத்து அவற்றின் முழுத்திறனையும் எய்துவதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர்க்குள்ள உரிமைகளும் வாய்ப்புகளும், தங்களுக்கும் உள்ளன என்ற எண்ணமும், தாங்களும் இந்நாட்டில் பொதுச் செயல்களை உருவாக்குவதில், தங்கள் முழு பங்கினையும் ஏற்கமுடியும் என்ற மனநிறைவும் மொழித் தகுதியினர் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும்.

ஒரு மொழித் தொகுதியினர் பிற மொழித் தொகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப் பட வேண்டுமென்றால், தமிழையும் பிற தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்கவேண்டும். இதற்கிணங்க,

அரசியல் அமைப்பும் ஏற்ற வகையில் திருத்தப்பட வேண்டு மென்று எனது அரசு கருதுகிறது. இவ்வாறு குறிப்பாக அரசியலமைப்பு திருத்தப்படுகிற வரையில் ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும்.

இவ்வாறு, அழகுத் தமிழில் சிறப்பு மிக்க உரையினை தயாரித்து வழங்கியவர் அண்ணா அவர்கள்.

இவ்வுரையினை மேதகு ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் 1968 பிப்ரவரி 10ஆம் நாள் இரு சட்டமன்ற அவைகளும் இணைந்தக் கூட்டத்தில் ஆற்றும் ஆளுநர் உரையின் ஒரு பகுதியாக வாசித்தார்.

இது மாநிலத்தில் ஆளுநரும், முதலமைச்சரும் இணைந்து பணியாற்றுவதற்கு ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் உறவு இனிவரும் காலங்களுக்கு ஓர் முன்னுதாரணமாக மட்டுமின்றி, கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய வரலாற்றின் எதிர்பார்ப்பும் கூட,.

பொது வாழ்க்கை கல்வித்துறை, மருத்துவம், அரசியல் ஆகிய துறைகளில், நீண்ட அனுபவமும் சிறப்பும் பெற்றிருந்தவரும், சென்னை பல்கலைக் கழக துணை வேந்தரும், மேலவை உறுப்பினருமான டாக்டர் ஏ. லட்சுண சாமி முதலியார் அவர்கள் இவ்வுரையினைக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "என்னுடைய இருபதாண்டு கால சட்டமன்ற வரலாற்றில் கவர்னர் உரை இது போன்ற கவனிப்பைப் பெறவில்லை" என ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய பெருமை பெற்ற இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்புச் செய்திகள் சிலவற்றினை, அவை தமிழ் வரலாற்றின் ஒரு பகுதியாக அமைந்தமையால் கீழே தொகுத்து வழங்குகிறோம்.

சிறப்புச் செய்திகள்

1968 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் முதல் ஒரு வார காலம் இவ்விழா சீரும் சிறப்பும் பெற்று சென்னை மாநகரில் கொண்டாடப்பட்டது.

இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர், ஜாகிர் ஹுசேன் அவர்கள் சென்னை கடற்கரையில் ஐந்து லட்சம் பேருக்கும் மேல் திரண்டிருந்த கூட்டத்தில் உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து வரலாறு காணாத மிகப் பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் தமிழக வரலாறு, பண்பாடு, பெருமை, தமிழ் மன்னர்களின் கொடை, வீரம், அறநெறி, ஆகியவற்றை விளக்கும் ஓவியக் கண்காட்சியை தாங்கி 27 அலங்கார வண்டிகள் ஊர்வலத்தில் உலா வந்து மக்களை மகிழ்வித்தன. இவை சிறப்புற அமைய ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. எஸ்.எஸ். வாசன் அவர்கள் தலைமையில் அமைந்த குழு ஏற்பாடுகள் செய்திருந்தது.

1.1.1968 அன்று சென்னை மவுண்ட் ரோடு (இன்றைய அண்ணா சாலை) அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையினை சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் திறந்து வைத்தார். அண்ணாவின் சிறப்புகளை குறிப்பிட்டு அவர் பேசுகையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்திய துணைக் கண்டத்திலேயே அண்ணா துரையின் தலைமையில் அமைந்துள்ள தமிழக அமைச்சரவை தான் உறுதியாகவும், நிதானமாகவும், நிலையாகவும், ஆட்சி செய்வதுடன் டெல்லியில் உள்ள மத்திய ஆட்சி பீடத்தின் குறிக்கீடுகளை ஒதுக்கித் தள்ளும் வல்லமை பெற்றது.

அகில இந்திய அரசியல் அரங்கில் தென்னாட்டிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு மதிப்பும் மரியாதையும் வாங்கிக் கொடுத்தப் பெருமை அண்ணாவையே சாரும். அவர் மாபெரும் தலைவர்; என் தலைவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன்" என்றார்.

மேற்கண்ட உரையினைக் குறித்து, திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தமது "தென்னாட்டு இரட்டையர்கள்" என்ற நூலில் முதல்வர் அண்ணாவை

''எனது தலைவர்'' என்று இராமசாமி முதலியார் அழைத்தது அவரது அரசியல் முதிர்ச்சிக்கும் பண் பாட்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது'' எனக் குறிப்பிடுகின்றார்,

மேலும் தமிழ் பேச்சாற்றலில் அண்ணா எல்லோரையும் மீறியவர். ஆங்கிலத்திலும் அவருக்கு இணையாளர் உலகத்தில் இல்லை. நா நலம் வாய்ந்த பேச்சாளர் அவர்.. நா நலம் வேறு சிலரிடமும் இருக்கக் கூடும். ஆனால், கருத்தாழத்துடன் கூடிய நாநலம் காண்பதரிது என்றார்.

விழாவில் மற்றொரு சிறப்பாம்சமாக சிலைகள் திறப்பு விழா நடைபெற்றது. தமிழறிஞர்களுக்கு சென்னை கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைக்கப்பட்டன. சென்னை கடற்கரைச் சாலையில் கவியரசர் கம்பனுக்கு ஒரு சிலை, கற்புத் தெய்வம் கண்ணகிக்கு ஒரு சிலை, தேம்பாவணி பாடிய இத்தாலி நாட்டு மருத்துவப் பாதிரியார், வீரமாமுனிவருக்கு ஒரு சிலை, திருவாசகம், நாலடியார், திருக்குறள் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப் அவர்களுக்கு ஒரு சிலை, சிலப்பதி காரம் ஆக்கிய இளங்கோவடிகளுக்கு ஒரு சிலை, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆராய்ச்சி நூலை எழுதிய கால்டுவெல் பாதிரியாருக்கு ஒரு சிலை, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.க்கு ஒரு சிலை. தேசக்கனல் மூட்டிய பாரதியாருக்கு ஒரு சிலை, பகுத்தறிவு பாவேந்தர் பாரதிதாசனுக்கு ஒரு சிலை, ஆக ஒன்பது சிலைகள் திறக்கப் பட்டன.

19

உதகையில் சட்டமன்றக் கூட்டம்

உதகமண்டலத்தில் மேலவைக் கூட்டங்களை நடத்துவது என்பது வெள்ளையர்கள் நடைமுறை படுத்திய ஒரு வழக்கமாகும். 1834 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்திய மேலவையின் முதல் கூட்டம் உதக மண்டலத்தில் தான் நடைபெற்றது. ஆயின், அந்நாளில் கல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டுதான் ஆங்கிலேய அரசு செயல்பட்டுக் கொண்டு வந்தது. கூட்டம் நடைபெற இருந்த போது, கவர்னர் ஜெனரல் பெண்டிங் பிரபு உதகையில் தங்கியிருந்ததால் அக்கூட்டம் உதகையில் நடந்ததும், அக்கூட்டத்தில் சட்டமியற்றுவதற்காக நியமிக்கப்பட்ட நான்காவது உறுப்பினர் மெக்காலே இக் கூட்டத்தில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் 1861 ஆம் ஆண்டு டென்னிசன் சென்னை ஆளுநராக விளங்கிய போது ஆளுநர் உதகைக்குச் சென்றால் அங்கு தங்குவதற்கு பிஷப் மாளிகையை விலைக்கு வாங்கிட முடிவு செய்து இங்கிலாந்திலுள்ள அரசு செயலாளருக்குக் கடிதம் எழுதினார். ஆனால் அதே நேரத்தில் வேறொரு கழகத்தில் சென்னை நகரில் இயங்கும் அரசு அலுவலகங்களை கோடை காலத்தில் உதகைக்கு மாற்றி அங்கு தங்க வேண்டுவதற்காக அனுமதி கோரப்பட்டது.

இரண்டாவது கடிதத்திற்கு, அரசுச் செயலாளர் ஒப்புதல் தர மறுத்துவிட்டார். அரசின் இருப்பிடம்

சென்னையாகத்தான் இருக்க வேண்டும். அது மாற்றப்படக் கூடாது. ஆளுநர் உடல்நிலைக் காரணமாக உதகைச் சென்று தங்க வேண்டுமென்றால், அதற்கானச் செலவை ஆளுநர் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, உதகையிலுள்ள பிஷப் மாளிகையை வாங்குவதற்காக கேட்ட அனுமதியையும் 'உட்' அவர்கள் மறுத்தார்கள். இருப்பினும் டென்னிஸன் மீண்டும் ஒரு கடிதம் எழுதி தற்போது ஆளுநர் தங்கியிருக்கும் மாளிகை கூவம் நதிக்கரையோரமாக இருப்பதால் கொசுத் தொல்லை அதிகமாக உள்ளது. ஒரு ஆளுநர் மலேரியாக் காய்ச்சலால் இறந்து பட்டதைச் சுட்டிக்காட்டி அனுமதி கோரினார். பின்னர் அரசுச் செயலாளர் உட் அனுமதி அளிக்க முன் வந்தார். 1862 ஆம் ஆண்டு சட்டப்படி மேலவைத் தொடங்கப்பட்டவுடன் கோடை காலத்தில் மேலவைக் கூட்டம் உதக மண்டலத்தில் நடத்த முடிவு செய்யப் பட்டது. ஸ்டோன் ஹவுஸ் பங்களாவில் மேலவை கூடி வந்தது. இவ்வழக்கம் 1909 வரை நீடித்தது.

1909 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் உறுப்பினர்களுக்கு பேச்சுரிமை மற்றும் மேலும் அதிகரிக்கச் செய்யப்பட்டதின் விளைவாக மேலவை உறுப்பினர்கள் தீர்மானங்கள் வாயிலாக அரசு அலுவலகங்கள் உதகைக்குச் செல்வதை எதிர்த்து விவாதிக்க ஆரம்பித்தனர். 1910 ஆம் ஆண்டு உறுப்பினர் எம். ராமசந்திர ஐயர் ஒரு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டபோது அவைக்கு தலைமை தாங்கிய ஆளுநர் சர் ஆர்தர் லாலி அத்தீர்மானத்தை எதிர்த்து 30 நிமிடங்கள் பேசினார். உதகை செல்வது உகந்ததே என வாதிட்டார். பின்னர் 1920ஆம் ஆண்டு வரை இந்நடை முறை தொடர்ந்து வந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் கோடை காலத்தில் மேலவையின் கூட்டங்கள் உதகமண்டலத்தில் நடைபெறுவது மட்டுமின்றி சென்னை அரசு தலைமைச் செயலகங்கள் சற்றேறக்குறைய நான்கு மாதங்கள் உதகையில் இருந்தே செயல்படத் தொடங்கின.

1920 ஆம் ஆண்டு நீதிக்கட்சி அமைச்சரவை ஆட்சி பொறுப்பேற்றவுடன் உதகை சென்று மேலவை கூடும் வழக்கம் கைவிடப்பட்டது. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு 1959 ஆம் ஆண்டு காங்கிரஸ் அமைச்சரவை இயங்கிய போது காமராஜர் காலத்தில் சட்டமன்ற மேலவை-பேரவை இரு அவைகளும் உதக மண்டலத்தில் ஏப்ரல்-மே திங்களில் கூடலாமென முடிவு செய்யப்பட்டது. அதற்கு அண்ணா அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். மேலவை - பேரவையின் கூட்டங்கள் சென்னையிலேயே செயல்படுவது சாலச் சிறந்தது எனக் குறிப்பிட்டார். மேலும் அப்படி உதகமண்டலத்தில் கூடுமேயானால் திராவிட முன்னேற்றக் கழகம் அக்கூட்டங்களில் கலந்து கொள்ளாது என அறிக்கையும் வெளியிட்டார். இப் பிரச்சினைக் குறித்துப் பேரவையில் 10.4.1958 அன்று பேசியதாவது.

"இந்த மன்றம் உதகமண்டலத்தில் நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை நம்முடைய நண்பர் மாதா கவுடர் அவர்கள் மிக உருக்கமாகவும், ஆத்திரமாகவும், கோபமாகவும், கடைசி நேரத்தில் கொஞ்சம் கண்ணீரும், கலக்கமும் கூட வந்ததாக கருதக் கூடிய அளவிலே எடுத்துச் சொன்னார்கள. நான் மெத்த வருந்துகிறேன். உதக மண்டலத்தின் வளர்ச்சி இந்த மாமன்றம் அங்கே கூட போவது காரணமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை,. உதகமண்டலம் வளர்ச்சி அடையவேண்டும் என்று மாதா கவுடர் அவர்கள் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். ஆனால் இந்த மாமன்றம் அங்கே கூடப் போவது அதன் காரணமாக அமையும் என்று சொல்லக் கூடிய அந்த வாதத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

அவர்கள் தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து நாங்கள் அங்கே வரமாட்டோம் என்று சொல்லுகிறோம். உதக மண்டலத்தில் இருப்பவர்கள் தமிழர்கள் அல்லவா? என்று கேட்டார்கள். எங்களுடைய தரப்பில் உள்ள யாரும்

தமிழர்களுடைய நலம் உத்தேசித்து உதகமண்டலம் வர மாட்டோம் என்று சொல்லவில்லை. எனக்கு கவனம் சரியாக இருக்குமானால் கனம் மாதா கவுடர் அவர்கள் ஒரு முறை இந்த மன்றத்திலேயே நான் தமிழனல்ல. கன்னடக்காரர் என்று கூறியிருக்கிறார். இன்றைய தினம் நான் குறிப்பிடுவதற்கு காரணம் யார் தமிழன் யார் தமிழர் இல்லை என்று சொல்வதற்காக இல்லை. நீண்ட காலத்திற்கு முன்னாலேயே தமிழர்கள் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற விரிந்த மனப்பான்மையை வைத்துக் கொண்டிருந்து இருக்கிறார்கள். நன்மை அடைகிறார்களா என்றப் பிரச்சினை இங்கு எழவில்லை. இந்த மன்றம் உதக மண்டலத்தில் கூடுவதால் அங்கே வளர்ச்சி ஏற்படும் என்பதில் எனக்குக் கருத்து மாறுபாடு இருக்கிறது. ஆகவே தான் உதகமண்டலத்தில் இந்த மன்றம் கூடுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அது நிறுத்தப்படுகிறது என்று வருத்தத்தோடு சொன்னார் மாதா கவுடர் அவர்கள். நான் அவருக்குச் சொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய ஒப்புதலைக் கேட்டப் பிறகுதான் அப்படிப்பட்ட காரியங்கள் நடத்தப்பட வேண்டுமென்று அரசாங்கம் கொண்டிருக்கிற பெருந்தன்மையை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி ஒரு குறிப்பிட்ட கட்சியாகிய நாங்கள் சொல்லுகிற தமிழ்நாடு என்ற பெயரை அரசாங்கம் இந்த மாநிலத்திற்கு வைக்காமல் இருக்கும் காரணத்தினால் அவர்களுக்கு யோசனை சொல்லி, தமிழ்நாடு என்று பெயர் வைக்கும்படி அவர்களுக்கு சிபாரிசு செய்வார்களேயானால், தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்ட மறுநாளே உதகமண்டலம் வருவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புதலை அளிக்கும். ஏதோ பேரம் பேசுவதாக இதைச் சொல்வதாக கருதவேண்டாம். உங்களால் ஆட்சியாளரை மாற்றமுடியாது என்பதை குறிப்பிட்டு காட்டுவதற்குத்தான் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தாலும் நீங்களே சொல்லுகின்ற கோரிக்கைகளை கூட

ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற அரசியல் நிலைமையைக் கவனிப்பதற்குத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். ஆகையால் இந்த மாமன்றம் உதகமண்டலத்தில் கூடுவதால் அதிக நன்மைகள் வந்து விடாது" என்றார்.

இருப்பினும் பேரவை - மேலவைகளின் கூட்டம் உதக மண்டலத்தில் கூடியது. அப்போது ஜெய்ப்பூர் அரசரிடமிருந்து வாங்கப்பட்ட "ஆரண்மூர் பேலஸ்" எனும் அரண்மனையில் 1959 ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்களில் நடைப்பெற்றது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இக் கூட்டத்தை யொட்டி, பிரத்தியேகமான தார்ச்சாலைகள் போடப் பட்டன. ஜெய்ப்பூர் மகாராஜாவின் "கோட் ஆப் ஆர்ம்ஸ்" மாற்றப்பட்டு அரண்மனையில் "சென்னை அரசாங்கத் தின்'' சின்னம் பொறிக்கப்பட்டது. கட்டிடத்தைச் செப்பனிட ரூ, 1,20,000/- ஒதுக்கப்பட்டது.

மக்கள் விருப்பத்துக்கு எதிராக நிகழ்ந்த இச்செயலின் எதிரொலியாக அந்த நேரத்தில் நடைபெற்ற மாநகராட்சி மன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு தி.மு.க சென்னை மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்றியது. முதல் மேயராக அ.பொ. அரசு பதவியேற்றார். அண்ணாவின் அறிவுரைக்கிணங்க, நீதிக்கட்சித் தலைவர் தியாகராய செட்டியார் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

அதற்குப் பின்னர் - உதகமண்டலத்தில் பேரவை - மேலவைக் கூட்டங்கள் கூடுவது காங்கிரஸ் அரசால் கைவிடப்பட்டது.

20

மேலவை தேவை

வரலாற்றில் மூத்தது பழமை வாய்ந்தது சட்டமன்ற மேலவைதான். எனினும் சட்டமன்றப் பேரவை என்ற மக்கள் சக்தி வாய்ந்த ஓர் அவை உருவான பின் மாமனிதர் களை மட்டுமே உள்ளடக்கிய மேலவை அவசியந்தானா என்ற கேள்வி பாராளுமன்ற முறை மக்களாட்சி நடைமுறையில் உள்ள அனைத்து நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கின.

பேரவை மேலவை குறித்து சூடான விவாதங்களும் நடந்துள்ளன. இந்த விவாதங்களுக்கெல்லாம் ஆதாரமாக அந்நாளில் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனுக் கும், அரசியல் மேதை தாமஸ் ஜெபர்சனுக்கும் இடையே நடந்த சுவையான விவாதம் ஒன்றை அனேகமாக எல்லா வரலாற்று ஆசிரியர்களும் எடுத்துக்காட்டுவதுண்டு.

அதே கருத்தை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் அண்ணா எடுத்து வைத்து மேலவை அவசியம் தேவை என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினர். அது வருமாறு:

"மேலவை, கீழவை என்று இரண்டு வேண்டுமா என்பதைப் பற்றி பல இடங்களில் விவாதங்கள் நடைபெற்ற நேரத்தில் நான் அதைப் பற்றி பல ஏடுகளில் படித்து இருக்கிறேன். ஒரு ஆங்கில ஏட்டில் பார்த்தேன். மேலவை எதற்கு என்று ஒருவர் கேட்க மற்றவர் பதிலளித்து இருக்கின்றார், நீங்கள் காபி அருந்துகிற போது, காபி ஊற்றி வைத்திருக்கின்ற கோப்பை இருக்கும் போது அக்கோப்பை

யைத் தாங்குவதற்கு ஒரு சாசர் வைத்து இருக்கிறார்களே அது எதற்கு என்று கேட்டார். காபி கொஞ்சம் சூடாக இருந்தால் அதை சாசரில் ஊற்றி ஆர வைக்கவும், காபி குடிக்கின்ற பொழுது கோப்பையில் இருந்து சிந்திவிட்டால் அது உடையில் படாமல் தாங்கிக் கொள்ளவும் சாசர் இருக்கிறது என்று மற்றவர் சொன்னார்,

அதேபோல் மேலவை இருப்பதும் அதற்காகத்தான், கொஞ்சம் கொதிப்பு ஏற்பட்டால் அதைக் சுகப்படுத்து வதற்கும் அதை நல்ல முறையிலே ஆராய்ந்து பார்ப்பதற்கும் இருப்பதுதான் மேலவை மேலவை இதற்காகத்தான் இருக்கிறது என்று பதிலளித்தார் என்று படித்தேன்.

இதை நான் படித்த நேரம் மேலவைகள் எல்லாம் இருக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரம். நானே அந்த மேலவையின் தயவில்தான் மந்திரி சபையில் இருக்கமுடியும் என்ற எண்ணம் ஏற்படாத நேரத்தில், மேலவையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த அரிய கருத்துக்கள் இந்த மேலவையில் வீற்றிருக்க நேரிட்ட இந்த ஓராண்டு காலத்தில் இன்னும் அதிகமான முறையில் உறுதி பட்டிருக்கின்றன" என்றார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ள கப் அண்ட் சாசர் உரையாடல்தான் ஜார்ஜ் வாஷிங்டனுக்கும் தாமஸ் ஜெபர்சனுக்கும் இடையில் நிகழ்ந்த நிகழ்வாகும்.

21

மேலவை முன்னவர்

சட்டமன்ற வரலாற்றில் மேலவை முனைவரின் பணி மகத்தான ஒரு பணியாகும். அரசின் கொள்கைகள் அனைத்தும், அவையின் உள் விவகாரங்களைப் பொறுத்த அளவிலும் அதன் நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் முன்னவரைக் குறியாகக் கொண்டே விளங்கும். அரசு அலுவல் இவர் நிர்ணயித்தவாறு நடைபெறும். எனவே அவையின் அன்றாட நிகழ்ச்சி நிரல் முன்னவரின் இசைவுடன் மேலவைத் தலைவரின் ஒப்புதல் பெற்று செயலாளரால் உறுப்பினர்களுக்கு சுற்றனுப்பப்படும்.

மேலவை முன்னவர், பாராளுமன்ற மரபு குறித்த மேலவை அலுவல்கள் சுலபமாக நடைபெற, ஏதாவது சங்கடமான நிலமைகள் ஏற்படுமானால் அதனைத் தவிர்க்க இவரது உதவி தலைவருக்கு அதிகம் தேவைப்படும். இதனால் அவையில் முழு நேரமும் அவை முன்னவர் இருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். இவருக்கு எப்போது வேண்டுமானாலும் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேச உரிமையுண்டு. குறிப்பாக ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அரசின் சார்பில் பதிலுரை வழங்குவது, உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்படும்போது, அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராளுமன்ற மரபுகளை சுட்டிக் காட்டிப் பேசுவதற்கும், தலைவர் அவர்கள் மேலவை முன்னவரின் யோசனையே கேட்பார்.

மேலவைக்குப் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப் படும் போது அவரை அழைத்துச் சென்று சிம்மாசனத்தில் அமரச் செய்பவர் மேலவை முன்னவரும் மேலவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவருமே ஆவர்.

1967ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சராக அரியணை ஏறியபோது அவர் சட்டமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராக இல்லை. எனவே, மேலவை உறுப்பினராக சிவசங்கர மேத்தா இருக்கத் தகுதியற்றவர் என்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டதனால் மேலவையில் ஒரு வெற்றிடம் இருந்தது. சென்னை மேயராக தி.மு.க. துணையுடன் பதவியேற்ற இவர், அதே நாளில் மேயர் அறையை அலங்கரித்த அண்ணாவின் படத்தை நீக்கினார். அவர் நீக்கப்பட்ட சென்னை மாநகராட்சித் தொகுதியிலிருந்து போட்டியின்றி அண்ணா வெற்றி பெற்று மேலவை உறுப்பினர் ஆனார்.

அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற அன்றே மேலவை முன்னவராக யாரை நியமிக்கலாமென அண்ணாவுக்கு ஒரு கோப்பு அனுப்பப்பட்ட நேரத்தில் தன்னையே மேலவே முன்னவராக நியமித்துக் கொண்டார். அண்ணா இரண்டாண்டு காலமே அப்பொறுப்பினை வகித்தாலும் மேலவையின் சிறப்புக்குப் பெருமை சேர்த்தார் எனலாம்.

இட ஒதுக்கீடு

அண்ணாவின் பெருந்தன்மைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட நிகழ்வினைக் கூறலாம். 1966 ஆம் ஆண்டு சென்னை சட்டமன்ற மேலவையில் ஒரு நிகழ்வு நடந்தேறியது. ஏ.எல். முதலியாரை தலைவராகக் கொண்ட ஐக்கிய கட்சியின் பலம் ஐந்தாகக் குறைந்தது. க. அன்பழகன் அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் ஆறாக உயர்ந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பி இருந்தால்

அண்ணா விரும்பி இருந்தால் - க. அன்பழகன் எதிர்க் கட்சித் தலைவராக ஆகியிருக்கலாம்., எதிர் வரிசையில் முதல் இடத்தை பெற்றிருக்கமுடியும்.

ஆனால் தலை சிறந்த பாராளுமன்றவாதியான டாக்டர் ஏ,எல். முதலியார் அவர்களே எதிர் கட்சித் தலைவராக விளங்க க. அன்பழகன் ஒப்புக் கொண்டார். தாம் மூன்றாவது இடத்திலேயே அமர்ந்து இருந்தார். இந்தச் செயல் தான் அன்பழகன் அவர்கள் பெருந்தன்மைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் பரந்த மனப்பான்மை மட்டும் அல்ல அருள் உள்ளத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது.

குழுக்கள்

அண்ணா அவர்கள் மேலவை உறுப்பினராக இருந்த நேரத்தில் உரிமைக் குழு அமைக்கப்பட்டது. அதற்குத் தலைவராக அறிஞர் அண்ணா அவர்களையே எம். ஏ. மாணிக்கவேலு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். பொதுவாக ஆய்வுக் குழுக்களுக்கு மட்டுமே, அச்சட்டமுன் வடிவிற்கு பொறுப்பான அமைச்சரோ, முதலமைச்சரோ தலைவராக இருக்க வேண்டும் என்பது விதியாகும். ஆனால் உரிமைக் குழுவில், மேலவை விதிகளின்படி, மேலவை முன்னவர், அக்குழுவில் அலுவல் முறையால் உறுப்பினராக பணியாற்ற வேண்டும் என்பது விதி. அக்குழுவிற்கு எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்தான் தலைவராக விளங்குவார். பல ஆண்டு காலம் டாக்டர் ஏ,எல். முதலியார் உரிமைக் குழுவின் தலைவராக விளங்கினார். பின்னர் மேலவை துணைத் தலைவர் தலைவராக விளங்க வழிவகை செய்யப்பட்டது. அண்ணா முதலமைச்சராக இருந்த ஒரு ஆண்டு காலத்தில் தான் உரிமைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார். அது ஒரு சாதனையாகும். அண்ணாவுக் காக அண்ணாவின் அணுகுமுறையை மனதில் கொண்டு அவர் அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

22

நேருவுக்குக் கருப்புக்கொடி

பண்டித ஜவஹர்லால் நேரு, பிரதம மந்திரி. அவர்கள் தமிழ்நாட்டுத் தலைவர்களை கிழடுகள் என்றும், நாடு கடத்தப்பட வேண்டியவர்கள் என்றும் முட்டாள்கள் என்றும் கூறியதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அவர் சென்னைக்கு 6.1.58 அன்று வரும் போது அவருக்குக் கருப்புக் கொடி காட்டப்பட வேண்டுமென்று 29.1.1957ல் நாகர்கோவிலில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில் 3.11.1958 அன்று அண்ணா சம்பத், ஆசைத்தம்பி, செரியன் கடற்கரைக்குச் செல்லும் வழியில் கோட்டை ரயில் நிலையம் அருகே கைது செய்யப் பட்டனர். இருப்பினும் 6.1.58 அன்று கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் விமான நிலையத்தின் அருகில் காட்டப் பட்டது.

அன்று மாலை மவுண்ட் ரோடு வழியாக பண்டித நேரு வருவதாக இருந்தது. திட்டமிட்டபடி அவர் அவ்வழியாக செல்லாமல் வேறு வழியாக அரசினர் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார்.

கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக முடிந்ததாக திமுக அறிவித்தது. ஆனால் பலாத்காரம் தலை தூக்கியது என்று அரசு அறிவித்தது, பின்னர் நேரு சென்னையில் இருந்து திரும்பிச் சென்ற பிறகு அண்ணாவும் மற்றவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர், ஜனவரி

10ஆம் தேதி ஒரு விளக்கப் பொதுக் கூட்டம் நட்த்தப் பட்டது. அன்று அண்ணா பேசியபோது அடக்கு முறையால் எங்களைப் பிடித்து கூண்டிலே தள்ளி விடுவதால் எங்கள் கொள்கையை பறித்துவிடலாம் என்று நினைப்பவர்கள் ஏமாறுவார்கள். நாம் கடமையிலிருந்து சிறிதும் நழுவி விடக் கூடாது.

அண்ணாதுரைக்கு இந்நாட்டில் ஒரு சக்தியை வளர்த்து விடத்தான் தெரிந்ததே தவிர அதைக் கட்டிக் காக்கமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். கட்டிக் காக்க என்னால் முடியும் என்பதை - நமக்குள் உள்ளக் கட்டுப்பாட்டை உணர்த்தும் வகையில் நான் "எழுந்தி ருங்கள்" என்று சொல்வேன் - நீங்கள் எல்லாம் உடனே எழுந்திருக்கவேண்டும். "உட்காருங்கள்" என்பேன். "உட்கார வேண்டும். உடனே அண்ணா கடற்கரையில் கூடியிருந்த லட்சோப லட்ச மக்களைப் பார்த்து "எழுந்திருங்கள்" என்றார். உடனே மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் எழுந்து நின்றனர். பின்னர் "உட்காருங்கள்" என்றார். மக்கள் அனைவரும் "உட்கார்ந்து விட்டனர்" இது வரை எந்தத் தலைவனும் இப்படிப்பட்ட காரியம் ஏதும் செய்யத் துணிந்ததில்லை. தம்பிகள் அனைவரும் அண்ணாவின் கட்டளைக்கு ராணுவத் தலைவர் இடும் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கும் ராணுவ வீரர்கள் போன்று கட்டுப் பட்டனர் என்பதை அன்றைய நிகழ்ச்சி தமிழகத்திற்கு எடுத்துக்காட்டியது.

மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இந்தப் பின்னணியுடன் அண்ணா அவர்கள் ஆளுநர் பேருரைமீது பேரவையில் பேசிய பேச்சின் சுருக்கத்தைக் காணும் போது அவர் மக்களின் எண்ணத்தை எப்படி அவையில் எதிரொலிக்கிறார் என்பதையும் ஜனநாயகக் கடமைகளில் அவர் எந்த அளவுக்கு சரிவர செயல்படுகிறார் என்பதையும் அறியலாம்.

கவர்னர் பெருமான் பேருரை மூன்று விஷயங்களைப் பற்றி மிகப் பெரிதாக எடுத்துச் சொல்லி இருக்கிறது. மூன்று தனிப்பட்டவர்களைப் பற்றி இந்திய துணைக் கண்டத்து பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைப் பற்றியும் இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் கவர்னர் ஜெனரலாகிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் பற்றியும் பேசியதுடன் அவ்வளவு பெரியவர் களுடன் என்னையும் இணைத்து மிக நீண்டதொரு விவாதத்திற்கு ஆளாக்கினார்கள் என்று எடுத்த எடுப்பிலேயே ஆளுநர் உரையில் உறுப்பினர்கள் பேசியதை வகைபடுத்தி கூறினார்.

முதலில் அவர் அடைக்கப்பட்டிருந்த கொட்டடி குறித்து கூறி நாங்கள் உங்களோடு உட்காரக் கூடியவர்கள் எங்களை இவ்வாறு நடத்தினீர்களே என்று கேட்கும் முகத்தான் கூறியதாவது;

நாங்கள் அடைக்கப்பட்டிருந்த கொட்டடி 10' × 8' என்று போடப்பட்டிருநந்த கொட்டடி. ஒன்றில் ஆறு பேர்களும், இன்னொரு கொட்டடியில் ஐந்து பேர்களும் அடைக்கப்பட்டிருந்தோம். கீழே கடப்பாக்கல் போட்ட கொட்டடி. இரவு நேரத்தில் எவ்வளவு ஜிலுஜிலுப்பாய் இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். மூக்குக் கண்ணாடியை பறித்துக் கொண்டார்கள். சப்ஜெயில் அரை ஞாண் கயிரைப் பறித்துக் கொள்ளவில்லை. மற்றவற்றை யெல்லாம் எடுத்துக் கொண்டார்கள்.

மாநில புனரமைப்பு குறித்து படாஸ்கர் அறிக்கை வந்தவுடன் போலீஸ் அமைச்சர் என்னை வரவழைத்துப் பேசினார்கள். இந்த விஷயத்தில் என்னை வரவழைக்க வில்லை. பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டப் போகிறோம் என்று சொல்லும்பொழுது அந்த நேரத்தில் நீங்கள் எங்களை அழைத்துப் பேசியிருந்தால் இந்த நிலை வந்திருக்காது.

காமராஜ் முதலமைச்சர்: அப்போது நான் இங்கு இல்லை வெளியூருக்குப் போய்விட்டேன்.

அண்ணா: முதலமைச்சர் அவர்களுக்கு நல்ல சமாதானம் இருக்கிறது. அன்றைய தினம் அவர் இல்லை யென்று சொன்னார்கள். ஆனால் மற்ற அமைச்சர்கள் இருந்தார்கள். இதற்கு முன்னால் அவருக்குத் தெரியுமோ தெரியாதோ திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப் பட்ட வுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தை பக்தவச்சலம் அவர்கள்தான் இரகசியமாக ஆரம்பித்து வைத்து இருக்கிறார்கள் என்று வேறு பலர் எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவு சொந்தம் இருக்கின்ற என்னை ஏன் அழைத்துப் பேசி இருக்கக் கூடாது.

பக்தவச்சலம், உள்துறை அமைச்சர்; திமுக. தலைவர்கள் நாகர்கோவிலில் கூடி முடிவெடுத்தபிறகு அந்தத் திட்டத்தை மாற்றிக் கொள்வது அரசியல் ரீதியில் சரி இல்லை என்று தான் அழைத்துப் பேசவில்லை.

அண்ணா: தீர்மானத்தை மாற்றிக் கொள்ளச் சொல்லி அழைத்துப் பேசச் சொல்லவில்லை. அனுபவம் உள்ளவர் கள் ஆயிற்றே. இன்னின்ன விதமாக பிடித்தால் பலாத்காரம் வராது என்று சொல்லி இருக்கலாமே. இதற்கு முன்னால் காங்கிரஸ்காரர் எத்தனையோ முறை கருப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள்.

உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் நடத்திய கிளர்ச்சியிலேயே செளரி செளராவில் கலகம் நடந்து விட்டது.

ஜனநாயக உள்ளம் படைத்தவர் நாங்கள்

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பல கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதை அறிந்துதான், நாங்கள் பணியாற்றி வருகிறோம், எங்களைக் கொடுமைப்படுத்த வில்லையென கனம் போலீஸ் அமைச்சர் சொன்னார். சில அங்கத்தினர்கள் உனக்கு மட்டும் என்ன தனிச்சலுகை

என்று கேட்டார்கள். எனக்கு மட்டும் தனிச்சலுகை கேட்கிறேன் என்று அர்த்தம் அல்ல, அவர்களிடம் நான் சொல்லவிரும்புகிறேன்,. நாங்கள் உங்களோடு உட்காருகிற வர்கள். சட்டமியற்றும் இந்த மாமன்றத்திலிருந்து வந்து உங்களோடு உட்காருகிறவர்கள். நாங்கள் தகுதி குறைவுள்ள வர்களாகவும், சமூக அந்தஸ்தில் உங்களைவிட தாழ்ந்தவர் களாகவும் இருக்கக்கூடும். உங்களைப் போன்று நாங்களும் ஜனநாயக உளளம் படைத்தவர்கள். ஜனநாயக உள்ளம் படைத்த எங்களை உங்களைவிடக் குறைவாக நடத்துவது சரியா?

கருப்புக் கொடி காட்டிய போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் பலாத்காரத்தில் இறங்கியது என்று சொல்லமுடியாது. கருப்புக் கொடி காட்டிய ஒவ்வொரு நேரத்திலும் அவசரப்பட்டும், ஆத்திரப்பட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் முன்னாலேயே கைது செய்யப்பட்டு விட்டதன் விளைவாக மனித உள்ளங்களில் உள்ள மிருக உணர்ச்சிகள் தட்டி எழுப்பப்பட்டனவே தவிர, எங்களைக் கைது செய்யாமல் இருந்திருந்தால், பலாத்காரம் ஒரு துளியும் தலைகாட்டியிருக்காது. பலாத்காரம் ஏற்படக் கூடும் என்று நான் எதிர்பார்த்து இருந்தால் இயக்கங்களை வாபஸ் பெற்று இருப்பேன்" என்றார்.

23

சீனப் பிரச்சினை

1962ஆம் ஆண்டின் கடைசி பகுதியில் இந்திய எல்லைப் பகுதியை சீனா ஆக்ரமித்துக் கொண்டது. அப்போது வானொலியில் நேரு உரையாற்றுகையில், "நேர்மையும் மனசாட்சியும் இல்லாத பலம் பொருந்திய எதிரியுடன் நாம் போராட வேண்டி இருக்கிறது. நாடு சுதந்திரம் பெற்றபின் இதுவரை ஏற்பட்டிராத பேராபத்து சீனரின் ஆக்ரமிப்பின் மூலம் இப்பொழுது ஏற்பட்டிருக் கிறது. இந்த அபாயத்தை உறுதியுடன் சமாளிப்பதற்கு கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கொதித்து எழ வேண்டும். சிறுசிறு தோல்விகள் ஏற்பட்டாலும் இறுதியில் சீனரின் ஆக்ரமிப்பை முறியடிப்போம். போரின் இறுதி முடிவு இந்தியாவுக்கு சாதகமாகவே இருக்கும் என்றார்.

இந்த ஆக்ரமிப்பு நடைபெற்ற நேரத்தில் விலைவாசி போராட்டத்தின் விளைவாக மாநிலங்களவை உறுப்பினரான அறிஞர் அண்ணா ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டு இருந்தார். அப்போது பிரதம மந்திரி நேருவிடம் இருந்து சீனப் பிரச்சினை குறித்து விவாதிக்க கூட்டப் பட்டிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தை வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அண்ணாவிடம் சேர்ப்பிக்க அதற்கு பதில் தந்தியை ஆட்சித் தலைவர் மூலமாகவே அனுப்பி வைத்தார் அண்ணா. அந்தந்திச் செய்தி வருமாறு:

"உங்கள் தந்திக்கு நன்றி. நான் சப்ஜெயில் வைக்கப் பட்டு இருப்பதால் வர இயலாமைக்கு வருந்துகிறேன். நிலமையை எளிதாக்க தகுந்த முறைகளைக் கையாளும் உங்கள் திறமையில் எனக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

அண்ணா சிறையிலிருந்து வந்தவுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் "இந்திய எல்லைக்குள் சீன ஆதிக்க வெறியனை விரட்டியடிக்கும் வரை எனக்கு வரவேற்போ பாராட்டுரையோ தேவை இல்லை, இந்தியா வின் எல்லையில் சீன ஆக்ரமிப்பு ஒழிக்கப்படுகிற வரை திராவிட நாடு பிரிவினை பற்றி பேசமாட்டோம். நாங்கள் நினைப்பதை சொல்வோம். சொல்லியதைச் செய்வோம்.

சீன ஏகாதிபத்தியம் மண்ணாசைக் கொண்டிருக் கிறது. ஒரு கோடி பேரை பலியிட்டேனும் ஒரு கை பார்த்து விடுவது என்று நினைக்கிறது. அந்த ஏகாதிப்த்திய வெறி கும்பல் மக்களின் கண்களைக் கட்டி ஆளும் காட்டுமிராண்டி சர்வாதிகார வெறிதான் பிக்கிங்கில் இருப்பது. அந்தச் சர்வாதிகாரம் தான் இப்போது ஜன நாயகத்தைத் தாக்குகிறது. இருந்தாலும் ஜனநாயகம் நிலைக்கும்.

மக்களைப் பார்த்து அண்ணா கூறுகையில்;

பட்டாளத்தில் சேர முடிந்தவர் சேருங்கள். பண உதவி அளிக்க முடிந்தவர்கள் அளியுங்கள். போர்ப் பீதி ஏற்படாமல் மக்களுக்குத் தெளிவூட்டக் கூடியவர்கள் அதைச் செய்யுங்கள்.

லடாக் பகுதியிலும், வடகிழக்குப் பகுதியிலும், கடுங் குளிரில் போரில் அடிபட்டு குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடக்கும் நமது படை வீரர்களுக்கு இரத்தம் செலுத்தினால் தான் பிழைக்கமுடியும். அதற்கு நிறைய ரத்தம் தேவைப் படும். அதுவும் நல்லவர்கள் ரத்தம் தான் தேவை, திராவிட

முன்னேற்றக் கழக ரத்தம் தேவை" என்ற எழுச்சியுரை யாற்றினார்.

அடுத்து ஒரு நாள் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா பேசுகையில் – மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் போர் நிதிக்கு ரூ. 75,000 கொடுத்தார் என்ற செய்தி கேள்விப்பட்டதும் முதல் காணிக்கை முன்னேற்றக் கழகத்தானுடையதுதான். எல்லைப் போரில் முதல் பிணமும் தமிழனுடையது தான். தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வராசு போரிலே மாண்டான் என்ற தந்திச் செய்தி வந்துள்ளதாக பொதுக் கூட்ட மேடையில் அண்ணா அறிவித்தார்.

மாநிலங்கள் அவையில் சீனப் பிரச்சினைத் தொடர்பாக ஒரு தீர்மானம் உள்துறை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களால் மொழியப்பட்டு விவாதிக்கப் பட்டது. அத்தீர்மானம் வருமாறு;

"இப்புனித இந்திய மண்ணில் இருந்து ஆக்ரமிப் பாளர்களை வெளியே விரட்டியடிப்பதற்கு எவ்வளவு நீண்ட காலம் ஆனாலும், அதற்குரிய போராட்டம் எவ்வளவு கடினம் நிறைந்ததாக இருப்பினும் வெளியேற்றியே தீருவோம் என்று இந்திய மக்கள் மேற் கொண்டுள்ள முடிவை இம்மன்றம் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் உறுதி செய்கிறது."

விவாதத்தில் கலந்து கொண்டு தீர்மானத்தை ஆதரித்து அண்ணா ஆற்றிய உரை அவரது நாட்டுப் பற்றினை, தமிழனுக்கே உரிய தனி குணத்தை பறை சாற்றுவதாக அமைந்தது. அதன் சுருக்கமாவது:

சீனரை இந்த மண்ணில் இருந்து விரட்டுவதில் எனது கட்சி பரிபூரண ஒத்தழைப்பு அளிக்கும். எனது கட்சியின் பிரிவினை இயக்கம் நியாயமானதே. இருந்தாலும் தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த சமயத்தில் நாங்கள் எந்தவிதமான கிளர்ச்சியிலும், ஈடுபட மாட்டோம். இந்தச் செய்தியை உறுப்பினர் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

மேலும் பேசுகையில் எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் கிளர்ச்சியினையும் அற்ப பூசல்களையும் நிறுத்திவிட வேண்டும்.

விரிவான சிறப்பு அதிகாரங்களை அரசுக்கு வழங்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு மனதாக ஒப்பி இருக்கின்ற ஒன்றே நாட்டின் மதிப்பையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார். உயர்ந்த குறிக் கோளுக்காகத் தங்களுக்கு இடையே இருந்து விடக் கூடிய அரசியல் வேற்றுமைகளை புறக்கணித்து விட வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது என்பதை மெய்ப்பிக்க போதுமானதாகும்.

நெருக்கடியான இத்தருணத்தில் நாடு முழுவதும் பிரதம மந்திரி பின்னால் திரண்டு நிற்கிறது என்பதில் ஐயம் இல்லை. பிரதம மந்திரி நேரு நாட்டின் பாதுகாவலர் என்பதை சந்தேகிப்பவர் எவருமில்லை.

அரசு கடைப்பிடித்து வருகின்ற நடு நிலைக் கொள்கையை கைவிட்டுவிட வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் நடுநிலை கோட்பாடானது நாட்டின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிக்கு தடைக்கல்லாக அமைந்துள்ளது.

தத்துவ அடிப்படையில் நடுநிலைமை கோட்பாட்டில் குறை காண்பதற்கு ஏதுமில்லை. இருந்தாலும் இக் கோட் பாடு செயல் உருவம் பெறுகின்ற போது அது பலரிடம் பெரும் ஐயப்பாட்டை உருவாக்கி இருக்கிறது.

எதிர்க்கட்சி உட்பட மக்களவை உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றுமுள்ள நட்பு நாடுகளுக்கு அனுப்பி படைக் கலன்களை நமக்கு உதவுவதற்குரிய அமைப்பு ஒன்றை நிறுவ முயல வேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் துணிகின்ற வெளி நாட்டினரைத் திரட்ட

வேண்டும் என்று கூட நான் விரும்புகிறேன். நிதியும் படைக் கலன்களும் பெறுவதுடன் சீனர்களை எதிர்த்துப் போரிட வெளிநாட்டினரைத் திரட்டினால் நடுநிலைக் கொள்கை யானது வெறும் எதிர்மறையானதல்ல. நலன் பயக்கும் உடன்பாடு உடையதே என்பதை அறிவுறுத்த இயலும்.

கனம் அமைச்சர் கோபால் ரெட்டி அவர்கள் போராதரவு விளம்பரத்திற்குப் பத்திரிகைகள் இலவச இடம் ஒதுக்கித் தர வேண்டுமென கேட்டுக் கொண்டார். என் கட்சியினர் நடத்தும் நாளிதழ்கள், கிழமை இதழ்களில் அமைச்சர் கேட்டுக் கொண்டபடி இலவச இடம் ஒதுக்கிட ஏற்பாடு செய்கிறேன்.

சீனர்கள் சமாதானப் பேச்சு மூலம் புதிய தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். எனவே இப்போது நமது பிரச்சாரம் உயிரூட்டம் உள்ளதாக இருக்கவேண்டும் என்று பேசினார்.

சீன ஆக்ரமிப்பை முறியடிக்க உறுதி பூண்டு அரசாங்கத்திற்கு எல்லாக் கட்சிகளும் ஆதரவளிப்பதை உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி வரவேற்றார். முக்கியமாக திமுக தலைவர் திரு அண்ணா துரை மனப் பூர்வமாக ஆதரவளிப்பது குறித்து சந்தோஷப்படுவதாகவும் சாஸ்திரி பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த சீன ஆக்ரமிப்பின் விளைவாக அரசு ஒரு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.. அந்த நேரத்திலேயே நாட்டுப் பிரிவினை பேசுவது குற்றமாகும் என அரசு ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அடுத்த ஜனவரி திங்களில் நிறைவேற்றியது. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கழகக்காரர்களைப் பார்த்து கேலியும் கிண்டலும் செய்த போது அப்போது பதட்டமடைந்த கழகத் தோழர்களுக்கு அண்ணா கூறிய அறிவுரை

> "இப்போது நாங்கள் போராதரவு முயற்சிக்கு எமது ஒத்துழைப்பைத் தந்து வருகிறோம். போர்க்கோலம் நீக்கப்பட்டு, அமைதியும் மகிழ்ச்சியும் அரசோச்சும்

காலம் ஏற்படுகிற வரையில் எமக்குள்ள பணி அதுதான் என்று அவர்களுக்குக் கூறுங்கள்'' என்பதாகும்.

இதுதான் அண்ணாவின் விவேகம்.

வெளிநாட்டுப் பிரச்சினையால் அண்ணாவின் அணுகுமுறை பற்றி நாம் பார்ப்போமேயானால் வியத்தகு தன்மையினதாகும். 1966 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மாநிலங்களவையில் ஆற்றிய உரையே இதற்கு ஒரு சான்றாக அமையும்.

"நாம் வெளிநாடுகளுடன் தோழமை கொண்டிருக்க விரும்பினால் புதிதாக உருவாக்கியுள்ள ஆப்பிரிக்க நாடுகளுடன் தோழமை உறவை வளர்த்திருக்க வேண்டும். நாம் தென் கிழக்கு ஆசிய நாடுகள் காமன் வெல்த் ஒன்றை ஏற்படுத்தி இருக்கவேண்டும். ஜப்பான் நாட்டு தொழிலதிபர்கள், ஜப்பான் நாட்டுப் பொருளாதார வல்லுனர்கள் பேரில் நாம் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்"

இந்த உரையினைக் கேட்ட அவையில் அமர்ந்திருந்த அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் திகைப்படையக் கூடிய வகையில் இருந்தது.

24

டாக்டர் பட்டம் பெற்ற அண்ணா

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அறிவுலக மேதை. ஜனநாயகத்தின் காவலன். அவருக்கு அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகம் "டாக்டர்" பட்டம் அளித்து கௌரவித்தது. இந்தியாவிலேயே இதுவரை டாக்டர் பட்டம் அந்த பல்கலைகழகம் வழி பெற்றவர் வேறு யாரும் இல்லை. அண்ணா ஒருவருக்கு மட்டுமே அப்பெருமை கிடைத்தது.

அப்பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்து தம்மை கௌரவிப்பது குறித்து அண்ணா கூறியதாவது;

"அமெரிக்கா என்னைக் அழைத்தாலும் "யேல்" பல்கலைக்கழகம் என்னை அழைத்தாலும் - உள்ளபடியே அன்றொரு நாள் தமிழகத்தில் இருந்து சென்ற பரிசு பொருள்கள்தாம் என்னை அங்கு அழைப்பதாகக் கருதுகிறேன். "யேல்" பல்கலைக்கழகத்தில் தங்கி மாணவர்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்து இருப்பது பற்றி நான் சில விவரங்களை அறிந்த போது என்னை அழைத்ததின் பொருளையும் பொறுத்ததையும் அறிந்து கொண்டேன்.

அந்தப் பல்கலைக்கழகம் சாதாரண நிலையில் கல்லூரியாக இருந்து நடத்தப் படமுடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அந்தக் கல்லூரிக்கு நன் கொடை வேண்டி உலகின் பிற பகுதிகளுக்கு அன்புக் கடிதங்கள் விடுத்தார்கள். அப்போது சென்னை கவர்னராக "யேல்"

என்பவர் இருந்தார். அவருக்கு அக்கடிதம் கிடைத்தது. உடனடியாக பணம் அனுப்ப முடியாமல் - மூன்றுப் பொதி பருத்தியையும், படங்களையும் புத்தகங்களையும் அனுப்பி அவற்றை ஏலத்திற்கு விட்டுப் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று எழுதியிருந்தார். ஏலத்திற்கு விடப் பட்டதன் மூலம் பெரும் பணம் கிடைத்தது. அதை வைத்து கல்லூரி துவக்கப்பட்டது. அது விரிவடைந்தது. பல்கலைக் கழகமாக மாறியது.

அண்ணாவின் அறிவுப் பணிக்கு இது ஒரு சான்றாகும். இந்தியாவிலேயே நேருவுக்கு அடுத்து மக்கள் உள்ளம் கவர்ந்த மாபெரும் தலைவர் என்று அண்ணாவுக்கு பல்கலைக்கழக சஞ்சிகை புகழாரம் சூட்டியது. சென்னை மாகாண கவர்னராக 1687 முதல் 1692 வரை "யேல்" என்பவர் விளங்கினார்.

அமெரிக்கா செல்லும் வழியில் அண்ணா போப் அவர்களை வாடிகன் நகரில் சந்தித்து திருக்குறள் பரிசளித்து மகிழ்ந்தார்.

25

எதிர்கட்சியைப் பாராட்டும் பண்பு

எதிர்க்கட்சியைப் பாராட்டும் பண்புள்ளம் கொண்டவர் அண்ணா. உதாரணத்திற்கு ஒன்றினை நாம் காண்போம்.

"நம்முடைய பாலசுப்ரமணிய ஐயர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்பு இந்த அவையிலே எடுத்துக் கூறியதை நான் படித்துப் பார்த்தேன். என்னுடைய வேலையில் பெரும் பகுதியை நிறைவேற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். இன்று இருக்கும் பொருளாதார சூழ்நிலை மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்க வேண்டிய தொடர்புகள், மாநில அரசு பெற வேண்டிய வாய்ப்புகள் சலுகைகள், நிதி கமிஷன் ஆற்ற வேண்டிய கடமை, அதற்கு இந்திய அரசியல் சட்டத்திலுள்ள பிரிவுகள் அந்தப் பிரிவுக்கு இருக்கவேண்டிய விளக்கங்கள் அவைகளை எப்படி நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்கிற விஷயங்களையெல்லாம் அவர்கள் தமது உரையில் மிகத் தெளிவாக எடுத்துக்கூறி விட்டமையால் நான் அவற்றை மீண்டும் பேச வேண்டும் என்று விரும்பவில்லை.

நான் சொல்ல வேண்டும் என்று எண்ணி இருந்த பல கருத்துக்கள் அவர்களுடைய உரையில் இடம் பெற்றிருப்பது கண்டு உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய பாலசுப்ரமணிய ஐயர் அவர்களைப் பற்றி இந்த அவையில் மட்டுமின்றி எந்த அவையில் உள்ளவர்களும் அவர்களுடைய அருங்குணங்களைப்

பாராட்டாமல் இருக்க முடியாது. 1957-58ல் எல்லாம் கீழ் சபையில் இருந்த நேரத்தில் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் மேலவைக்கு வருகிற போது யார் பேசுகிறார்கள் என்று கேட்கிற நேரத்தில் பாலசுப்ரமணிய ஐயர் பேசுகிறார் என்றால் மிகுந்த ஆவலோடு வந்திருந்து அவர் பேச்சைக் கேட்பது வாடிக்கை.

"ஏதும் தெரியாத மாதிரி எழுந்திருப்பார், யாருக்கும் தெரியாததையெல்லாம் விளக்குவார். எல்லா விவரங்களையும் பேசுவார், ஆனால் இடை இடையே ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன் என்று அவை அடக்கத்தோடு சொல்லுவார்கள், அந்தப் பெருந்தன்மைக்கு அவர்தான் இலக்கணம்"

எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லுபவர்கள் எதையும் தெரிந்து இருக்கமாட்டார்கள். எனக்கு ஏதும் தெரியாது என்பவர்கள் தான் எல்லாவற்றையும் தெரிந்து இருப்பார்கள். சிலர் எல்லாவற்றையும் தெரிந்து இருப்பார்கள் ஆனால் எடுத்துச் சொல்லுகின்ற போது பலவற்றை சொல்ல முடிவதில்லை. ஆனால் நண்பர் பால சுப்ரமணிய ஐயர் அவர்கள், எதைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறாரோ அதைத் தெளிவாக, விளக்கமாகச் சொல்லி நம்மை வேறு பலவற்றைப் பற்றி சிந்திக்க வைக்கின்றவர். ஒருவர் எடுத்துப் பேசுவது மற்றொருவர் மனதில் புகும்படியாக பேசுவது மிகக் கடினம். ஆனால் ஒருவர் பேசுவதைக் கொண்டு அதைக் கேட்கின்றவர்கள் இன்னும் பல சிந்தனைகளைப் பெறுகின்றார்கள் என்றால் மிக திறமைசாலிகளான சிந்தனையாளர்களையும் பேச்சாளர்களையும் அந்த வரிசையில் வைத்துப் பார்க்க முடியும். அந்த முறையில் நம்முடைய நண்பர் பாலசுப்ர மணியம் ஐயர் அவர்கள் தான் பேசுவதன் மூலமாக மற்றவர்களை சிந்திக்க வைக்கின்றார்கள்.

1000 கோடி ரூபாய் திட்டம்

ஒருமுறை நான் கீழவையில் உறுப்பினராகவும், அவர் மேல் அவை உறுப்பினராகவும் இருந்த போது, மூன்றாவது

ஐந்தாண்டுத் திட்டத்தில் 1000 கோடி ரூபாய் தர வேண்டும் என்றேன். எல்லோரும் அதை எதிர்த்தார்கள். அது எப்படி ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தால் செலவழிக்க முடியுமா என்று சிலர் கேட்டார்கள். நமது ஐயர் அவர்கள் அதைப்பற்றி இந்த அவையில் பேசுவதை நான் கேட்டுக் கொண்டு இருந்தேன். அவர்கள் சொன்னார்கள். இப்படி அண்ணாத்துரையைக் கேட்டார்கள். எங்கிருந்து அந்த 1000 கோடி ரூபாயை எடுப்பது என்று சிலர் கேட்டார்கள். நான் சொல்கிறேன். அதற்கு இடம் நீங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய், 9000 கோடி ரூபாய் எங்கிருந்து எடுக்கப் போகிறீர்களோ, அங்கிருந்து தான் இந்த ஆயிரம் கோடி ரூபாயையும் எடுக்கவேண்டும். இதற்கு என்று தனி இடமா? என்றார்கள். உள்ளபடியே நான் அதைக் கேட்ட போது மெய் சிலிர்த்துப் போனேன்.

ஆயிரம் கோடி ரூபாய் எங்கிருந்து கொடுப்பாய் என்று கேட்ட பொழுது என்ன சொல்லலாம் என்று நான் திகைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இங்கே அவர்கள் பேசியது உங்களுக்கு மூன்றாவது கூட்டத்திற்கு பணம் எங்கே கிடைக்குமோ அங்கே தான் இதுவும் கிடைக்கும். அங்கே எடுக்கலாம் என்றார்கள், எப்படி செலவழிக்க முடியும் என்று கேட்டதற்கு சொன்னார்கள். இதில் என்ன சந்தேகம் என்றார்கள். மிக எளிதான முறையில் பேசியதாக கருதுவார்கள். ஆனால் அதற்குப் பின்னால் மிகப் பெரிய பொருளாதாரத் தத்துவம் அடங்கி இருக்கிறது.

தம்மைப் பற்றி தாமே

அண்ணா அவர்கள் தம்மைப் பொறுமைக்கு இலக்கணமாக விளங்குவதாக பல உறுப்பினர்கள் சொன்னதை மனதில் வைத்து மேலவையில் பேசும் போது பொறுமைக்கான காரணத்தை மிக அழகாக சுவைபட உண்மை நிலையை ரத்தின சுருக்கமாக மேலவையில் விளக்கினார்.

நான் மிகவும் பொறுமையாக இருக்கிறேன் என்று நம் எதிர்கட்சித் தலைவர் பலமுறை சொல்லியிருக்கிறார். நான் நெசவாளிக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக் கொள்வேன்.

நெசவாளியாகப் பிறந்தவர் யாரும் பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. எத்தனைத் தடவை அறுந்த நூலை இணைத்துப் பார்க்கிறோம். அது எத்தனை தடவை வருகிறதோ இல்லையோ என்று பார்க்கிறோம். எத்தனை முடிச்சுகளை அவிழ்த்து இருக்கிறோம். எத்தனைச் சிக்கல்களைப் பிரித்து இருக்கிறோம்.

ஆகவே நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தவர்கள் நெசவாளியாக இல்லாவிட்டாலும் நெசவாளிக் குடும்பத்திற்கு இயல்பான பொறுமை குணத்தை நிரம்பப் பெற்றுக் கொள்வார்கள்.

26

உணர்வாலும் செயலாலும் ஜனநாயகவாதியே

ஆட்சி முக்கியமல்ல, ஐக்கியமும் ஜனநாயகமும் முக்கியம் என்றும், கட்சிகளிடையே ஒற்றுமையின் அவசியம் குறித்தும் அண்ணா பலமுறை பேசியிருக்கிறார்கள். அவரது உள்ளக் கிடக்கையை அவரது உரை தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. அது வருமாறு;

"தேசியத்திற்கு ஒத்துழைக்கும் படி கேட்டுக் கொள்கிறேனே தவிர என்னுடைய கட்சி வளர ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டால்தான் தவறாகும். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக இதில் (நிதி நிலை அறிக்கையில்) சொல்லப்பட்டிருக்கின்ற பலவற்றில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க இடமிருக்கிறது. அதிலும் பொறுப்பு மிகுந்த காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்கும் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை. மிகுந்த நம்பிக்கை உண்டு. அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். காமராஜர் அவர்கள் சொல்லுகிறார்களே என்று சொன்னார்கள். காமராஜ் என்னிடம் சொல்லியது மட்டுமல்ல, பொதுக் கூட்டத்திலும் சொல்லி இருக்கிறார்கள்.

அவருடைய கட்சி மேடைகளில் சில "இன்னும் எத்தனை நாள் (ஆளப் போகிறாய்) அடுத்த மாதம் பாருங்கள்" என்று சொல்லுவதை கேட்ட பின்னர், எங்கே அவர்களுடைய ஆசை வளர்ந்துவிடுமோ என்று பயந்து

அதைத் தடுப்பதற்காகவே அடிக்கடி "இந்த அரசு நிலைத்திருக்க வேண்டும், யாராவது அதை கலைப்பதற்கு வந்தாலும் தடுப்பேன்" என்று சொல்லுகிறாரே தவிர வேறு பொருள் கொள்ளவில்லை, கூட உள்ளவர்களைத் தடுப்பேன் என்ற பொருளில்தான் சொல்வதாக நான் கருதுகிறேன். வால்டேர் ஒரு முறை சொல்லியதாக நினைவுக்கு வருகிறது. "I will look after my opponents of, god save me from my friend" அந்தப் பழமொழி நினைவிற்கு வருகிறது.

என்னுடைய இயல்பு அவருக்கு (காமராஜருக்கு) நன்றாகத் தெரியும். ஆட்சியில் இருந்தே தீர வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவன் நான் என்பதை அவர் அறிந்து கொண்டிருக்கிறார், அவருடைய ஆலோசனை கிடைப்பது பாராட்டத்தக்கதாகும். அந்த அளவுக்கு காங்கிரசுக்கும், கழகத்திற்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் பகை நீங்கவேண்டும். எத்தனை தடவை நண்பர் ராஜாராம் நாயுடு அவர்கள் எதிரில் உட்கார்ந்தால்தான் என்ன? நான் காங்கிரஸ்காரனாகி விடமுடியுமா? அல்லது அவர் என் எதிரில் உட்காருவதால் கழகத் தோழனாகி விடப் போகிறாரா? இல்லை.

அண்ணா அவர்கள் எப்போதும் தமது உரையில் பலப்பல உதாரணங்களைக் காட்டிப் பேசுவார்., அதனால் அந்த உதாரணத்தில் சொல்லப்படும் கதையோ கருத்தோ அவை உறுப்பினர்களைக் கவர, அவர் பின்னால் கூறவிருக்கும் கருத்துரை உறுப்பினர்கள் உள்ளத்தில் ஆணித் தரமாக பதிந்து விடுகின்றது.

இங்கிலாந்தில் ஹவுஸ் ஆப் காமன்ஸில் கூட எந்த அளவுக்கு உட்கார வைத்திருக்கிறீர்கள் என்றால், இந்தப் பக்கத்தில் ஒருவர் வாளை உருவி அந்தப் பக்கத்தில் ஒருவர் வாளை உருவினால் இந்த இரண்டு வாள்களும் சந்திக்காத அளவுக்கு இருவருக்கும் இடைவெளி வைத்து

இருக்கிறார்கள். இங்கே அந்த இடம் கூட இல்லை. ஒருவர் ஒருவரைத் தொட்டுக் கொண்டால் தழுவிக் கொள்ளும் அளவில் இருக்கிறோம்.

கட்சி மாச்சர்யங்களை விட்டுவிட்டால் நம்முடைய ஜனநாயகம் வளப்படும். வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் விரோதம் இருந்த காலத்தில் இரண்டு பக்தர்களும் ஒருவர் சொல்வது மற்றவர் காதில் விழக் கூடாது என்பதற்காக தங்கள் காதுகளில் மணிகளைக் கட்டிக் கொள்வார்களாம். சைவர் சிவ சிவா என்றால், இவர் மணியை ஆட்டிக் கொள்வார். வைணவர் சொன்னால் சைவர்கள் மணி ஆட்டிக் கொள்வார்கள்.

அவரவருடைய கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை மென்மையான விளக்கம், சுமூகமான நேசம் இவை இருக்குமானால் அவரவர்களுடைய கொள்கையும் இருக்குமானால் இங்கிலாந்து நாட்டு அரசியல் இன்று எப்படி ஜனநாயக நாடுகளிலே பாராட்டப்படுகிறதோ அந்த அளவுக்கு தமிழக அரசியல் உலகத்தில் மெச்சப்படும். அதற்கு இப்போதுதான் நல்ல வாய்ப்பு கிடைத்து இருக்கிறது.

மேற்கண்ட உரை இன்றும் அனைவராலும் ஏற்கக் கூடியதாக அமைந்துள்ளது அல்லவா?

27

முதலுரையும் முடிவுரையும்

1957ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக பதவி ஏற்றவுடன் ஆற்றிய முதல் உரை சட்டமன்றப் பேரவைத் தலைவராக டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டி பேசியதாகும். அது வருமாறு:

"சட்டமன்றத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களே, தங்களது கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கை யும், இதிலே பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான் மாணவனாக இருந்த பருவத்திலும், அரசியல் நடவடிக்கை களை கவனித்துப் பார்த்த காலத்திலும் நன்கு அறிந்து இருக்கிறேன். தங்களைப் போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவது தான் பொறுத்தமானது என்றாலும் ஜனநாயக அமைப்பிலே சில பல தவிர்க்க முடியாத கடமைகளுக்கு உட்பட்டுப் போட்டியிருந்தது என்றும், அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப்படுத்துவதாக முடிந்தது என்பதையும் அறிவோம்.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் தங்களுடைய அறிவையும் ஆற்றலையும் அறிந்திருக்கக் கூடிய எங்களுக்கு அதிலே அதிகமாக அனுபவம் இல்லாததை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் தாங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பது போலவே தாங்கள் ஈடுபட்டிருக்கிற மருத்துவத் துறையிலும் யார் யார் தங்களிடம் இளைத்து வருகிறார்களோ அவர்களுக்கு பலமூட்டுகின்ற காரியத்தில் நீங்கள் நீண்ட நாளாக ஈடுபட்டு இருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலம் ஊட்டுவதைப் போலவே அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டும்.

அரசியல் உலகத்தில், நம் நாட்டு ஜனநாயக ஆட்சியில் என் போன்றோர்களுக்கு இத்தகைய சட்ட மன்றத்தில் அனுபவம் இல்லாதது மட்டுமல்ல, பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு ஜனநாயக முறையில் செயல் படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்து இருக்கிறோம்.

இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள் இந்தப் பக்கத்திலுள்ள எங்களில் சிலர் யாராவது சில சமயங்களில் கொஞ்சம் குறும்பாக குழந்தைத்தனமாக நடந்து கொண்டாலும், தாய் போன்று எங்களை அன்புடன் அணைத்து, அதிகமாக அடிக்காமல் கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்."

குழந்தைப் பருவம் ஜனநாயகம் பண்பு குழந்தைத் தனமான உறுப்பினர்கள், தாயான சபைத் தலைவர் என்று அண்ணா அவையடக்கத்துடன் கூறிய மணியான வாசகங்களை இனி என்றும் யாரும் கூறிட இயலாது. ஜன நாயகப் பண்பு நிறைந்தவர்கள் நாங்கள் என்று தங்கள்

செயற்பாட்டில் உறுதி செய்கிறார். கருணையோடு சீராட்டி பாராட்டி வளர்க்க வேண்டுமெனவும் விளம்புகிறார். மேற் கண்ட உரைதான் அண்ணாவின் சட்டமன்றப் பிரவேசத்தில் முதல் உரையாகும்.

முதல் உரையில் முதல் வாசகத்திலேயே பேரவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கரைக் காட்டி நாங்கள் செயல் படுவோம் என்றார்.

அண்ணா அவர்கள் கடைசியாக பேசியது 1968ஆம் ஆண்டு ஆகஸ்ட் தி ிகள் 31ஆம் நாள் அன்று ஒரே பிரச்சினை குறித்து மூன்று உரிமைப்பிரச்சினைகள் நான்கு பத்திரிக்கைகளின்மீது எழுப்பப்பட்டது. அதில் அண்ணா அவர்கள் சொன்னதாவது:

''இப்பொழுது எழுப்பப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்சினை நான் பேசாத ஒன்றை சில பத்திரிக்கைகள் வெளியிட்டதும் அதை வைத்துக்கொண்டு சில பத்திரிகைகள் விமர்சனம் எழுதியதுமாகும். அதற்குத்தான் நான் சொன்னேன். அன்றைய தினமே கூட யாராவது ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்திருந்து "தங்கள் கட்சியிலே யாரும் அப்படிப் பேசவில்லை, அப்படி செய்யவில்லை என்று சொல்லியிருந்தால் உடனே அந்தப் பேச்சை நான் தொடர்ந்திருக்க மாட்டேன். நான் அதிலே கூட மிக எச்சரிக்கையாக சொல்லி இருக்கிறேன். "கேள்விப்பட்டேன் என்று சொல்லி இருக்கிறேனே தவிர அங்கே பார்த்தேன் என்று சொல்லவில்லை. அப்போதே நான் எதிர்பார்த்தேன்.

சபைக் குறிப்பிலே வரவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். "நாங்கள் வேண்டுமென்றே தவறு செய்து விடட்டும் என்று விட்டுவிட்டோம்" என்று சொல்லு கிறார்கள். அதைச் சுட்டிக் காட்ட வேண்டியது எதிர் கட்சியினுடைய கடமை. நான் (முதலமைச்சர்) தவறான காரியத்தில் ஈடுபட்டால் அல்லது தவறான பேச்சுப் பேசினால் அதை உடனுக்குடன் சுட்டிக் காட்டாமல் அந்தத் தவறுகளையெல்லாம் அவர்கள் செய்யட்டும் என்று

விட்டுவிடுவதற்காக எதிர்க்கட்சியில்லை. அது எதிர் கட்சியினர் செய்யவேண்டிய கடமையில் இருந்து கூட தவறுவது ஆகும்.

நான் சொல்லாத ஒன்றை சொன்னதாக ஒரு பத்திரிகை வெளியிடுவதும் அதை வைத்துக்கொண்டு இன்னொரு பத்திரிக்கை விமர்சனம் செய்வதும் சரியா, சரியில்லையா என்பது பிரச்சினை..."

பிறிதொரு இடத்தில் குறுக்கிட்டு அண்ணா பேசிய வாசகம் தான் அவரது கடைசி சட்டமன்றப் பேரவையின் பேச்சாகும். அதாவது,

"மற்றப் பத்திரிகைகளுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது போல் இந்தப் பத்திரிகைக்கும் ஒரு வாய்ப்பு அளித்து, சட்டமன்றத்திலேயே சில நாட்களாகவே வரைமுறை யற்றுப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சபையின் கண்ணி யத்தை குலைக்கும் முறையில் எழுதியதற்கு, ஒரு திருத்தம் வெளியிட்டு, வருத்தம் தெரிவித்துக் கொள்வதற்கு அந்தப் பத்திரிகைக்கும் தலைவர் அவர்கள் ஒரு வாய்ப்பு அளிப்பது தான் முறை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்."

இந்த கடைசி வைரவரிகள்தான் அண்ணாவின் பேருரையின் முத்தாய்ப்பு உரையாகும். அதில் அவர் சட்டமன்றத்தின் கண்ணியம் காப்பாற்றப்பட என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்து கின்றார். அவருடைய முதல் உரையில் முதல் வாக்கியத்திலேயே அவையின் கண்ணியத்தைக் காப்பதில் நாங்கள் என்றும் தயங்கோம் என்று உறுப்பினராகக் கூறிய அதே வாசகத்தை முடிவாகக் குறிப்பிட்டது ஒரு பெரிய பொருத்தமாகும். அதே நேரத்தில் அதற்கு சற்று முன்பு எதிர்க்கட்சிகள் எப்படி அவையில் நடந்து கொள்ள வேண்டும் அவைகளின் கடமை என்னென்ன அவையின் எதிர்க்கட்சித் தலைவர் எப்படி கடமையாற்ற வேண்டும் என்பதை அவைத் தலைவர் மூலமாகக் கூறுகின்றார். முதல்

உரையில் தாமும் தமது கட்சியும் எப்படி கடமையாற்றப் போகிறோம் என்பதை அவைத்தலைவருக்கு எடுத்துக் காட்டினார்.

17.3.1957ல் அவை உறுப்பினராக ஆற்றிய உரையில் அவையின் கண்ணியத்தைக் காப்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்று பெருமை பட சட்டமன்றத் தலைவரை நோக்கி தமது உரையைத் துவக்கிய அண்ணா, 31.8.1968 அன்று சட்டமன்றப் பேரவையின், கண்ணியத்தைக் காப்பதற்காக பத்திரிகைக்கு ஒரு வாய்ப்புத் தர வேண்டும் என்று பேரவைத் தலைவரை நோக்கி முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள் விடுத்து தமது பேருரையை முடிக்கின்றார். என்னே அண்ணாவின் திறன் என்று வியக்கத் தோன்றுகின்றது அல்லவா?

சட்டமன்றப் பேரவை, மேலவை, மாநிலங்கள் அவையின் உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக அவை முன்னவராக முதலமைச்சராக என பல்வேறு பொறுப்புகளில் விளங்கிய அண்ணா எனும் ஒரு வெற்றி சகாப்தம், ஒரு பெரும் பேறு, சட்டமன்ற உரிமைகள் காக்கப்படுவதில்தான் ஜனநாயக செயற்பாடு விஞ்சும் என உணர்ந்திருந்தார் என்பதை நாம் எண்ணிப் பெருமைப் படுவோமாக.

அவருடைய சட்டமன்ற செயற்பாடுகளை கவனித்துப் பார்க்கும் நேரத்தில் அவர் என்றென்றும் தமது பேருரை ஒவ்வொன்றிலும் ஜனநாயகம் காப்பாற்றப் பட வேண்டும் அதற்கு சட்டமன்றத்தின் கண்ணியம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் உறுப்பினர்கள் அவையின் புகழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற வகையில் தான் தமது உரையை வகுத்து, வகைப்படுத்தி, முறையுடன், உறுப்பினர் கடமை அவையின் கண்ணியம் ஆகியவற்றைக் கட்டுப்பாடுடன் எடுத்து வைத்து அவைக்கு விளக்குவது மட்டுமின்றி நாட்டு மக்களுக்கும் அதன் மூலம் செய்திகளை தெரிவித்து வந்த பெருந்தகை அறிஞர் அண்ணா ஆவார்.

மக்கள் குரலே மகேசன் குரல் என்று அடிக்கடி கூறிடும் அண்ணா, அம்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் 29.1.1969 அன்று கூடியபோது காலை 11 மணிக்கு அண்ணாவின் உடல் நிலை பற்றிய அறிவிப்பை அமைச்சர் மாதவன் வெளியிட்டார். "முதலமைச்சர் அண்ணாவுக்கு திடீரென்று ரத்த அழுத்தம் குறைந்து போய் விட்டதாக..." என்று தொடங்கிய போது துக்கத்தால் மேற்கொண்டு பேச முடியாமல் விம்மினார். அவையில் பல உறுப்பினர்கள் 'அண்ணா, அண்ணா' என்று கதறினார்கள். ஓமலூர் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பழனி மயக்கம் போட்டு விழுந்தார்.

உடனே கே. வினாயகம் எழுந்து சட்டசபைக் கூட்டத்தைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்போது அவர் கண்களில் கண்ணீர் வடிந்தது. சட்ட சபைக் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது. உறுப்பினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக கலைந்து சென்றனர்.

3.2.1969 விடியற்காலை 12.20 மணிக்கு அண்ணா எனும் தீபம் – சுடரொளி அணைந்தது. கடமை கண்ணியம் கட்டுப்பாடு என முழங்கிய தலைமகன், தமிழ்மகன், தம்பி தம்பி என்று தனது கருத்துகளை வாரி வழங்கிய அண்ணன், ஜனநாயகத்தின் காவலர் நாங்கள் எனப் பெருமை பேசிய அண்ணா, சட்டமன்றத்தின் மூலம் தான் எங்கள் கொள்கையை பறைசாற்ற முயல்கின்றோம் என்று குரல் கொடுத்த அண்ணாவின் உயிர் பிரிந்தது. மனித நேயத்தின் இதய நாதம் அண்ணாவைப் பற்றி சர். ஏ. இராமசாமி முதலியார் கூறியதாவது:

"எவரையும் கவர்ந்திடும் கருத்து காந்தம்!
நிறைவின் ஈர்ப்பு மையம்!
பேரியக்கக் கதிரொளியின் ஒளிப்பிழம்பு!
அவர்தான் அண்ணா என அனைவராலும் பாசத்துடன்
அழைக்கப்படும் முதலமைச்சர் அண்ணாதுரை.
அவர்தான் இன்றைய காலதேவன்!

கட்டளைக் கோமான் !
எப்பிணியும் போக்கிடும் சமயசஞ்சீவி."

"எதையும் தாங்கும் இதயம் படைத்த அண்ணா புகழ் ஓங்குக ! அவர்வழி நின்று பாடுபடுவோமாக !"

□ □ □

அறிஞர் அண்ணாவின் நூல்கள்

அண்ணாவின் கடிதங்கள்
அண்ணாவின் சிறுகதைகள்
உலகப் பெரியார் காந்தி
வேலைக்காரி
ஓர் இரவு
சட்டசபைச் சொற்பொழிவுகள் I
சட்டசபைச் சொற்பொழிவுகள் II
பார்வதி பி.ஏ.
குமாஸ்தாவின் பெண்
சந்திரமோகன்
தமிழரின் மறுமலர்ச்சி
நீதிதேவன் மயக்கம்

பதிப்புச் செம்மல் பதிப்பித்த பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்

குடும்ப விளக்கு

பாண்டியன் பரிசு

அழகின் சிரிப்பு

இருண்ட வீடு

தமிழியக்கம்

இசையமுது

இளைஞர் இலக்கியம்

காதல் நினைவுகள்

ஆத்திசூடி

பாரதிதாசன் நாடகங்கள்

மணிவாசகர் பதிப்பகம்

மணிவாசகர் பதிப்பகம் வெளியிடும்
மறைமலை அடிகள் நூல்கள்

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை
பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை
சாகுந்தல நாடகம்
தமிழர் மதம்
வாழ்வும் வழிபாடும்
தனித்தமிழ் மாட்சி
மக்கள் நூறாண்டு வாழ்க்கை
தொலைவிலுணர்தல்
முற்காலப் பிற்காலத் தமிழ்ப்புலவோர்
தமிழ்நாட்டாரும் மேலை நாட்டாரும்
யோகநித்திரை - மெஸ்மரிசம் நூல்
மரணத்தின் பின் மனிதர் நிலை
வேளாளர் நாகரிகம்
அறிவுரைக் கொத்து



நூலாசிரியர் ந. முடிகோபதி தம் முதல் நூலான 'தமிழ்நாடு சட்டமன்ற மேலவை'க்கு, கலைஞர் அவர்களிடம் முதல் பரிசு பெறுதல் (15-1-98)